2937

T.N.C.A Debates

Official Report

Vol 24 No 4

30th April 1886

VR11,31 N86
N86.24.4
364.89

126482
சென்னை-600 008.

## உள்ளடக்கம்

### 30—4—1986

| | பக்கங்கள். |
|---|---|
| **அரசினர் தீர்மானம் :** | |
| விதி 32-ஐத் தளர்த்தல் .. .. .. | 443 |
| **வினாக்கள்-விடைகள் :** | |
| உடுக்குறியிடாத வினாக்கள் .. .. | 443—470 |
| **ஒத்திவைப்புத் தீர்மானம் :** | |
| இராயபுரம் ஸ்டான்லி செவிலியர் விடுதியிலுள்ள சிலர் உடல் நலம் பாதிக்கப்பெற்றுள்ளதும் மற்றும் "எய்ட்ஸ்" நோய் பரவாமல் தடுப்பதும் குறித்து .. .. | 471—491 |
| 4 கவன ஈர்ப்பு : | |
| (அ) உதகையில் குடிநீர்த் தட்டுப்பாடு .. | 491—498 |
| (ஆ) மதுரைப் பால் பண்ணையிலிருந்து வெளியேறும் கழிவுநீரால் சுகாதாரக் கேடு ஏற்படுவதைத் தடுப்பது குறித்து | |
| 5 அறிக்கைகள் அளித்தல் : | |
| (அ) பொதுக் கணக்குக் குழு .. .. | 498—499 |
| (ஆ) பொது நிறுவனங்கள் குழு .. .. | 499 |
| 6 வரவு-செலவுத் திட்டம், 1986—87 வாக்கெடுப்பு—(தொடர்ச்சி)— | |
| (அ) கோரிக்கை எண். 1—நிலவரித்துறை<br>(ஆ) கோரிக்கை எண். 11—மாவட்ட நிர்வாகம் .. .. .. ..<br>(இ) கோரிக்கை எண். 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்து .. .. ..<br>(ஈ) கோரிக்கை எண். 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் (தொடர்ச்சி) .. .. | 499—532 |

(உ) கோரிக்கை எண். 36—நீர்ப்பாசனம்
(ஊ) கோரிக்கை எண். 37—பொதுப்பணிகள்—கட்டடங்கள் .. .. ..
(எ) கோரிக்கை எண். 38—பொதுப்பணிகள்—பணியாளரமைப்பும் கருவிகளும்—தளவாடமும் .. .. ..
(ஏ) கோரிக்கை எண். 52—பாசனம் குறித்த மூலதனச் செலவு .. .. ..
(ஐ) கோரிக்கை எண். 53—பொதுப்பணிகள்—கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு .. .. .. .. } 534—642

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 499—531
மாண்புமிகு திரு. யா.சை.மு. யூசுப் : 534—537
616—640
திரு. பெ. செங்கோட்டையன். 538—543
*திரு. வே. இரா. ஜெயராமன். 543—547
*திரு. குமரி அனந்தன். 547—555
திரு. மா. மீனாட்சி சுந்தரம். 555—562
*திரு. எப். எம். இராசரத்தினம். 562—566
திரு. பொ. உத்திராபதி. 566—570
திரு. யு. பி. மாதையன். 570—573
*திரு. த. புஷ்பராசு. 574—578
திரு. வி. சுப்பிரமணியன். 578—580
திரு. எஸ். டேனியல்ராஜ். 580—585
திரு. வி. இரா. கிருஷ்ணசாமி. 586—587
திரு. ஜே. ஹேமச்சந்திரன். 587—596
*திரு. அ. வெங்கடாசலம். 597—601
திரு. என். சண்முகம். 601—606
*திரு. சு. திருமலைச்சாமிக்கவுண்டர். 606—609
*திரு. டி. வெங்கடரெட்டி. 609—615

அமைச்சரின் அறிக்கை :

விதி 111-இன் கீழ் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத் தொழிலாளர்கள் குறித்து வேளாண்மைத் துறை அமைச்சரின் அறிக்கை .. .. .. .. 533—534

அறிவிப்பு :

பேரவை அலுவல் .. .. .. 642—644

பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 644—645


## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1986, ஏப்ரல் 30, புதன்கிழமை.

சித்திரை 17, அக்ஷய, திருவள்ளுவர் ஆண்டு—2017

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9—00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

"பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளும்
திறன்தெரிந்து கூறப் படும்."

மற்றவனைப்பற்றிப் புறங்கூறுகின்றவன், அவனுடைய பழிகள் பலவற்றிலும் நோகத்தக்கவை ஆராய்ந்து கூறிப் பிறரால் பழிக்கப்படுவான்.

### 1. அரசினர் தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்தல்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"ஒவ்வொரு நாள் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு விடையளிப்பதற்கென்று ஒதுக்கப்பெற வேண்டும் என்றுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ இன்று (30—4—1986) தளர்த்த வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

[1986 ஏப்ரல் 30

## 2. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

1—

#### உரிமம் பெறாமல் சாராயம் விற்றதாக தொடரப்பட்ட வழக்குகள்

வினா 272—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு ஆயத் தீர்வை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உரிமம் பெறாமல் சாராயம் விற்றவர்களின் மேல் வழக்கு ஏதேனும் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எண்ணிக்கை எவ்வளவு ?

(இ) தண்டனையில் முடிந்த வழக்குகள் எத்தனை ?

விடை—

(அ) ஆம்.

| | 1983 | 1984 | 1985 (31–10–1985-ல் உள்ளபடி). |
|---|---|---|---|
| (ஆ) | 9,186 | 8,217 | 6,975 |
| (இ) | 30 | 32 | 17 |

2—

#### வெட்டாற்றில் பாலம் அமைக்கும் பணி

வினா 1446—திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

"திருவாரூர், கீவளூர் ஊராட்சி ஒன்றியம், ஓர்குடியில் வெட்டாற்றில் பாலம் அமைக்கும் பணி எந்த நிலையில் உள்ளது?".

விடை—

வினாவில் குறிப்பிடப்படும் பாலப் பணிக்கு அரசின் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. எனினும் இப்பாலத்தை அமைப்பதுடன் அதையொட்டி வெட்டாற்றின் கரையிலுள்ள பற்பல கிராமங்களுக்கும் போக்குவரத்து வசதி ஏற்படுகிறது. எனவே, மதிப்பீடுகள் திருத்தி செய்யும் தேவையும் உள்ளன. அனைத்துப் பணிகளும் விரைவில் அமைக்கப்பட்டு முடிக்கப்படும்.



1986 ஏப்ரல் 30]

3—

#### கம்பிளியம்பட்டி கிராமத்தில் மயானப்பாதை அமைத்தல்

வினா 1685—திரு. மெ. ஆண்டிஅம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, சாணார்பட்டி யூனியன், கம்பிளியம்பட்டி கிராமம் கஸ்பாவில் மயானத்திற்குச் செல்ல மயானப் பாதை அமைக்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

விடை—

சாணார்பட்டி ஊராட்சி ஒன்றிய கம்பிளியம்பட்டி கிராம மயானம், கம்பிளியம்பட்டியிலிருந்து 3 பர்லாங் தூரத்தில் உள்ளது. இம்மயானப் பாதை வண்டிப்பாதையாகும். இப்பாதையைச் சாலையாக அமைக்கும்போது, சாலையில் இருபுறமும், பட்டா நிலம் உள்ளதால், பட்டா நிலச் சொந்தக்காரர்கள் சாலை அமைக்க பட்டா நிலத்தில் நிலம் ஒதுக்கி வசதி செய்து கொடுத்தால் சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியத்திலிருந்து 1986–87ஆம் ஆண்டு தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலமாக இதனை எடுத்துச் செயல் படுத்த முடியும்.

4—

#### சென்னை—தஞ்சை சாலையில் இரயில்வே மேம்பாலங்கள்

வினா 2116—திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை-தஞ்சை சாலையில் தற்போது இரயில் பாதை குறுக்கிடும் இடங்களில் எத்தனை மேம்பாலங்கள் உள்ளன ?

(ஆ) எங்கெங்கு இல்லை ?

(இ) இல்லாத இடங்களில் கட்டுவது குறித்து மைய அரசுக்கு பரிந்துரை ஏதும் செய்யப்பட்டுள்ளதா ?

(ஈ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

விடை—

(அ) சென்னை-தஞ்சை சாலையில் தற்போது 4 இரயில்வே மேம்பாலங்கள் உள்ளன.

(ஆ) தேசிய நெடுஞ்சாலை எண். 45-இல் கி.மீ. 54/6லும் மற்றும் விக்கிரவாண்டியிலிருந்து பிரிந்து செல்லும் சென்னை-கும்பகோணம்-தஞ்சாவூர் மாவட்டப் பெருஞ்சாலையில் கி.மீ. 160/6, 177/0, 201/2, 282/10 மற்றும் 285/6-ல் குறுக்கிடும் 6 இருப்புப் பாதைக் கடவுகளில் மேம்பாலங்கள் இல்லை.

(இ) இல்லை.

(ஈ) இக்கேள்விக்கு இடமில்லை.

5—

சந்திரபாடி கிராமத்தில் ஆற்றின் குறுக்கே பெரிய பால வேலைகள்

வினா 2281—திரு. என். விஜயபாலன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதியில் சந்திரபாடி கிராமத்தில் ஓடும் ஆற்றின் குறுக்கே கட்டப்படும் பெரிய பாலம் எப்போது கட்டி முடிக்கப்படும் ?

(ஆ) அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) வினாவில் குறிப்பிடும் பால வேலைகள் விரைவில் முழுமையாக முடிக்கப்படும்.

(ஆ) இப்பாலப் பணியுடன் சாலை மேம்பாட்டுக்கும் அனுமதியளிக்கப்பட்டு தாம்போகி கட்டும் பணியில் வேரிங்கோட் தவிர அனைத்து பணிகளும் முடிவடைந்து விட்டன. சாலைப் பணியில் 100 மீ. வரை மண் வேலை நடைபெற்றுள்ளது. கி.மீ. 0/7-1/0 வரை நில ஆர்ஜிதம் முடிவுற்ற பிறகு சாலை அமைக்கப்பட உள்ளது. வேலையைத் துரிதமாக முடிக்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

6—

கீர்த்திமான் ஆற்றின் குறுக்கே பெட்—டாம் அமைத்தல்.

வினா 2359—திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தொகுதியில் பவுன்ரீகபுரம் ஊராட்சியில் வரும் கீர்த்திமான் ஆற்றின் குறுக்கே பெட்—டாம் அமைக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது தொடங்கும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



7—

பூச்சாத்தனூர் பீமன் வாய்க்கால் பராமரிப்பு

வினா 2442—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடந்தை ஒன்றியம் 39 நீ. சேங்கானூர், பூச்சாத்தானூர் கிராமத்தில் செல்லும் பீமன் வாய்க்கால் சரிவர பராமரிப்பு செய்யப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இவ்வாய்க்காலுக்கு உடனடியாகத் தேவைப்படும் பராமரிப்பு வேலைகள் பராமரிப்பு நிதியிலிருந்து செய்து முடிக்கப்படும்.

8—

கல்வி பயின்றுவரும் சிறைவாசிகள்

வினா 2444—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள சிறைச்சாலைகளில் தற்போது கல்வி பயின்று வருவோர் எண்ணிக்கை எத்தனை ?

(ஆ) அவர்களில் பட்டப்படிப்பு படிப்போர் எத்தனை பேர்?

விடை—

(அ) தமிழ்நாட்டில் உள்ள சிறைச்சாலைகளில் தற்போது கல்வி பயின்று வரும் சிறைவாசிகளின் மொத்த எண்ணிக்கை 1,259.

(ஆ) அவர்களில் பட்டப்படிப்பு பயிலுவோர் 22 பேர்.

9—

### சுந்தரப்பெருமாள் கோயில் இரயில்வே பாதையையொட்டி புறச்சாலை அமைக்கும் திட்டம்

வினா 2445 – திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடந்தைக்கு அருகேயுள்ள சுந்தரப்பெருமாள் கோவில் ஊரில் இரயில்வே பாதையை ஒட்டி உத்தானி கேட் முடிய புறச்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு ?

(இ) வேலை எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ரூ. 40 இலட்சம் ஆகும்.

(இ) 1986–87 ஆம் ஆண்டில் பாகம்-2 திட்டத்தின் கீழ் இப்பணி தலைமைப்பொறியாளரால் பரிந்துரைக்கப்பட்டு அரசின் ஆய்வில் உள்ளது.

10—

### முதலியார் ஊற்றுப்பகுதி மலையில் வரையாடுகளை வேட்டையாடுவதைத் தடுத்தல்

வினா 2539—திரு. இரா. தர்மரைக்கனி : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, அழகர்கோவில் அருகே உள்ள முதலியார் ஊற்றுப்பகுதி மலையில் உள்ள வரை ஆடுகளை வேட்டையாடுவதைத் தடுக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கை யாது ?

(ஆ) 1980 முதல் 1984 முடிய எத்தனைபேர் மீது வழக்கு தொடரப்பட்டது ?





விடை—

(அ) வரையாடுகள் கள்ளத்தனமாக வேட்டையாடப்படுவதைத் தடுக்கவும் பிற வன விலங்குகளைப் பாதுகாக்கவும் அழகர்கோவில் பகுதியில் ஒரு வனவிலங்குக் காவலர் உள்ளார். (அவர் பொறுப்பில் உள்ள வனச் சிப்பந்திகள், பாதுகாப்புப் பணி புரிகின்றனர்) இப்பகுதியில் வனவிலங்குச் சரணாலயம் அமைக்க திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) 1982–83 ஆம் ஆண்டில் மட்டும், வரையாடொன்றைச் சுட்ட குற்றத்திற்காக வழக்கு தொடரப்பட்டு குற்றவாளிக்கு ரூ. 100 அபராதம் விதித்து ஒரு மாத சிறைத் தண்டனையும் அளிக்கப்பட்டது. மற்ற ஆண்டுகளில் குற்றம் ஏதும் கண்டுபிடிக்கப்படவில்லை.

11—

### திருவில்லிபுத்தூரில் சலவைத் துறை கட்டுதல்

வினா 2557—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, திருவில்லிபுத்தூர் டவுன் மம்சாபுரம், கான்சாபுரம் ஆகிய இடங்களில் உள்ள சலவைத் தொழிலாளிகளுக்கு ''டோபிகானா'' கட்டிக் கொடுக்கும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : திருவில்லிபுத்தூர் தொகுதி மம்சாபுரம் பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததால் சலவைத் துறை கட்டுவதற்கு சாத்தியக்கூறு இல்லையென்று பேரூராட்சி அலுவலர் தெரிவித்துள்ளார். கான்சாபுரத்தில் சலவைத் துறை கட்டுவது சம்பந்தமான பிரேரணை ஏதும் வரப்பெற்றால் பரிசீலிக்கப்படும்.

12—

## குறிச்சி பேரூராட்சியில் கழிப்பிடம் கட்டும் பணி

வினா 2878—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் குறிச்சி பேரூராட்சியில் குறிச்சி 4-வது வார்டு பகுதியில் கழிப்பிடம் கட்ட திட்டமிடப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், மதிப்பீடு எவ்வளவு ?

(இ) திட்டம் நிறைவேற காலதாமதத்திற்கு காரணம் யாது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ரூ. 19,500.

(இ) ஒப்பந்தக்காரரின் தாமதம் இருப்பினும் கட்டிடம் கட்டி மேற்கூரை அமைக்கப்பட்டுள்ளது. பேசின் பதித்து தரை மற்றும் சுவர்களுக்கு பூச்சு வேலை செய்ய வேண்டியுள்ளது. இப்பணியை விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

13—

## சிறைச்சாலைகளில் அடிப்படை வசதிகளுக்கு மைய அரசு உதவி

வினா 2934—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறைச்சாலைகளில் தண்ணீர் வசதி, மின் இணைப்பு முதலிய வசதிகள் செய்வதற்காக மைய அரசிடமிருந்து நிதி உதவி பெறப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், 1934–85 ஆம் ஆண்டில் எவ்வளவு பெறப்பட்டது ?



விடை—

(அ) ஆம்.

(ஆ) 1984–85 ஆம் ஆண்டில் மத்திய அரசின் நிதி உதவி புதிய திட்டத்திற்கு தனியாக எதுவும் பெறவில்லை. ஏழாவது நிதி உதவிக் குழு காலம் 1979–84 அளிக்க வேண்டிய மூலதனச் செலவு ரூ. 862 இலட்சம். அவற்றில் 1979 முதல் 1984 வரை மைய அரசு இவ்வரசுக்கு அளித்தது ரூ. 530.54 இலட்சம். மீதமுள்ள தொகை ரூ. 331.46 இலட்சம் 1983–84 ஆம் ஆண்டிலேயே அளிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இத்தொகை ரூ. 331.46 இலட்சம் 1984–85 ஆம் ஆண்டில்தான் அளிக்கப்பட்டது. இத்தொகை சிறைகளில் கூடுதல் கட்டிடங்கள், நீரடிக் கழிப்பிடம் போன்ற அடிப்படை வசதிகள் செய்ய பயன்படுத்தப்பட்டு வருகிறது.

14—

## கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட சாலைகள்

வினா 2961—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 1983–84, 1984–85 ஆம் ஆண்டுகளில் எத்தனை சாலைகள் அமைக்கப்பட்டன?

(ஆ) வரும் ஆண்டில் எத்தனை சாலைகள் அமைக்கப்பட உள்ளன ?

விடை—

(அ) கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 1983–84 ஆம் ஆண்டில் 23 சாலைகளும், 1984–85 ஆம் ஆண்டில் 31 சாலைகளும் அமைக்கப்பட்டன.

(ஆ) 1985–86 ஆம் ஆண்டில் 21 சாலைகள் அமைக்கப்பட உள்ளன.

15—

## விறகுக்காக வளர்க்கப்படும் காடுகள்.

வினா 3037— திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டுதோறும் விறகுக்காக எவ்வளவு காடுகள் வளர்க்கப்படுகின்றன ?

(ஆ) எவ்வளவு காடுகள் அழிக்கப்படுகின்றன ?

விடை—

(அ) வனத்துறையில் ஆண்டுதோறும் சுமார் 25,000 முதல் 30,000 எக்டேர் நிலப் பரப்பில் விறகு மரங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. 1985–86 ஆம் ஆண்டு கீழ்க்கண்ட திட்டங்களின் கீழ் விறகு மரங்கள் எழுப்பப்படுகின்றன :—

| | எக்டேர். |
|---|---|
| (1) சமூகக் காடுகள் திட்டம்—தொகுதி நடவு (ஏரி உள்வாய், புறம்போக்கு நிலங்கள்) .. .. | 17,000 |
| (2) விறகு மரத் தோட்டங்கள் (காப்புக் காடுகளில்) | 3,575 |
| (3) அழிந்த காடுகளில் மீண்டும் மரங்கள் வளர்த்தல் (காப்புக் காடுகளில்) .. .. .. .. | 2,500 |
| (4) ஊரக விறகு மரத் தோட்டங்கள் (காப்புக் காடுகளுக்கு வெளியே) .. .. .. .. | 3,500 |
| மொத்தம் .. | 26,575 |

(ஆ) விறகுக்காக காடுகள் வெட்டுதலும் அழிக்கப்படுவதும் இல்லை. 1982 ஆம் ஆண்டிலிருந்து காடுகளில் விறகு மரம் வெட்டுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால், விறகுக்காக எழுப்பப்பட்ட தோட்டங்கள் அவற்றின் உரிய வெட்டுக் காலத்தில் (Ration Age) அறிவியல் நீதிப்படி, வனயியலின் முறைப்படி வெட்டப்படுகின்றன. ஆண்டுக்கு சுமார் 3,000 எக்டேர் சமூக நலக் நாடுகள் வெட்டப்படுகின்றன. அவைகளும் வன இயலில் நிர்ணயிக்கப்பட்ட (coppice system)-த்தின் கீழ் வெட்டப்படுவதால் தோட்டங்கள் முழுவதுமாக அழிக்கப்படுவதில்லை.

16—

### தெய்வநாயகப்பேரி பகுதியில் மடை அமைக்கும் பணி

வினா 3292—**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** (பேரவைத் துணைத் தலைவர்) மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கரிசல்பட்டி கிராமம் தெய்வநாயகப்பேரி பகுதியில் புஞ்சை சாகுபடிக்கென மடை ஒன்று அமைக்கும் பணி எப்போது துவங்கும் ?



1986 ஏப்ரல் 30]

விடை—

திருநெல்வேலி மாவட்டம், கரிசல்பட்டி கிராமம் தெய்வநாயகப்பேரி பகுதியில் புஞ்சை சாகுபடிக்கென மடை அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

17—

### பிள்ளைக்குளம் பகுதியில் தனி மடை அமைக்கும் பணி

வினா 3294—**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** (பேரவைத் துணைத் தலைவர்) மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், சேரன்மாதேவி தொகுதி, பிள்ளைக்குளம் பகுதியில் கங்கனாங்குளத்திற்கு கீழ் பக்கத்தில் உள்ள குளத்திற்கு தனி மடை அமைக்கும் பணி எப்போது துவங்கும் ?

விடை—

திருநெல்வேலி மாவட்டம், சேரன்மாதேவி தொகுதி, பிள்ளைக்குளம் பகுதியில் கங்கனாங்குளத்திற்கு கீழ் பக்கத்தில் உள்ள குளத்திற்கு தனி மடை அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

18—

### ஈஸ்வரன் குளத்திற்கு மணிமுத்தாறு கால்வாயிலிருந்து நீர் வழங்கல்

வினா 3295—**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** (பேரவைத் துணைத் தலைவர்) மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், பத்தமடை கிராமம், மணிமுத்தாறு பாசனம் புனைமணவாளன் குளத்திற்கு ஈஸ்வரன் குளத்திலிருந்து மணிமுத்தாறு கால்வாய் நீரினைப் பெறச் செய்யும் பணி எப்போது துவங்கும் ?

விடை—

திருநெல்வேலி மாவட்டம், பத்தமடை கிராமம், மணிமுத்தாறு பாசனம் புனைமணவாளன் குளத்திற்கு ஈஸ்வரன் குளத்திலிருந்து மணிமுத்தாறு கால்வாய் நீரினை எடுத்துச் செல்லும் கருத்துரு எதுவுமில்லை.

### அன்னவாசல் ஒன்றியச் சாலைகளில் பாலங்கள்

வினா 3396—திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) குளத்தூர் தொகுதி, அன்னவாசல் ஒன்றியம் பி. எஸ். கே. சாலை—பனம்பட்டி சாலையில் 1/0-½-1/6-லும், பரவெட்டி வயல் சாலை—வாசல்பட்டி சாலையில் 0/4-லும் பாலங்கள் அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : (1) பி. எஸ். கே. பனம்பட்டி சாலையில் கி.மீ. 1/0 மற்றும் 1/8-ல் சிறு பாலங்கள் கட்டுவதற்கு ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்பட்டு பணிகள் இந்த ஆண்டுக்குள் கட்டி முடிக்கப்படும்.

(2) பரவெட்டிவயல்—வாசல்பட்டி சாலை தரம் பிரிக்கப்படாத சாலையாகும். இச்சாலையில் கி.மீ. 0/4-ல் பாலம் கட்ட சுமார் ரூ. 15,000 தேவைப்படும். இப்பணியை எடுத்து செயல்படுத்துவது பற்றி பரிசீலிக்கப்படும்.

20—

வினா 3406—திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, அன்னவாசல் ஒன்றியம் ஊரப்பட்டி மெய்வழிச் சாலையில் 0/4, 0/8-ல் ஒரு பாலமும் ஊரப்பட்டி நார்த்தாமலை சாலையில் 0/2-ல் ஒரு பாலமும அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.



21—

### மாத்தூர்—இலுப்பூர் சாலை

வினா 3401—திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) குளத்தூர் தொகுதியில் மாத்தூரிலிருந்து (திருச்சி) ஆவூர் வழியாக இலுப்பூர் சாலையை தார்ச்சாலையாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், வேலை எப்பொழுது முடியும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : வினாவில் குறிப்பிடும் சாலையை 1985–86 ஆம் ஆண்டு பராமரிப்பு நிதியிலிருந்து மேம்பாடு செய்ய மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு, சாலை நன்கு பராமரிக்கப் பட்டு வருகிறது.

22—

### சடங்கி அருகே கானூர் கால்வாயின் குறுக்கே பாலம்.

வினா 3686—திரு. க. பரமலை : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா —

மானாமதுரைத் தொகுதி, திருப்புவனம்—கானூர் சாலையில் சடங்கி என்ற ஊருக்கு அருகில் கானூர் கால்வாய் செல்லும் இடத்தில் ஒரு பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை —

தற்பொழுது அத்தகைய திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

23—

### அருவருக்கக்கூடிய காட்சிகள் உள்ள சுவரொட்டிகளைத் தடை செய்தல்

வினா 3733—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ஆபாச சினிமாவையும், ஆபாச சுவரொட்டிகளையும் தடை செய்ய வேண்டி அரசிற்கு வேண்டுகோள் வந்ததா ?

(ஆ) ஆம் எனில், அரசு அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

விடை —

(அ) ஆம்.

(ஆ) திரைப் படங்களைப் பொறுத்த வரையில், 1952 ஆம் வருட திரைப்படச் சட்டம் விதி 4-ன்படி ஏற்படுத்தப்பட்ட தணிக்கைக் குழு (Board of Censors) அதற்காக ஏற்படுத்தப்பட்ட வழி முறைகளைப் பின்பற்றி, தணிக்கைசெய்து திரைப்படம் வெளியிட அனுமதி வழங்குகிறது. தமிழ் நாட்டில் பொது இடங்களிலும், சாலை ஓரங்களிலும், பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்படும் திரைப்பட சுவரொட்டிகள், பேனர்கள், செய்தித் தாள்களில் வெளியிடப்படும் திரைப்பட விளம்பரங்கள் ஆகியவற்றில் அருவருக்கக்கூடிய காட்சிகளும் சென்சாரில் அனுமதிக்கப்படாத காட்சிகளும் இடம் பெறுவதை தடுக்கும் நோக்கத்துடன் திரைப்பட விளம்பரங்களை தணிக்கை செய்ய சட்டம் இயற்றும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

24—

## கோவில்பட்டி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்தமைத்தல்

வினா 4108—திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவில்பட்டி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பிரிக்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

25—

## இந்து அறநிலையத்துறை பெற்றுள்ள உதவித்தொகை மற்றும் தணிக்கைக் கட்டணம்

வினா 4279—திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்து அறநிலையத்துறையால் Contribution மற்றும் Audit fees எனத் தனித்தனியாக பெறப்பட்ட தொகை எவ்வளவு ?



விடை—

கடந்த ஐந்து ஆண்டுகளில் பெறப்பட்ட உதவித் தொகை மற்றும் தணிக்கைத் தொகை விவரம் வருமாறு :—

| ஆண்டு. | உதவித் தொகை. | தணிக்கைக் கட்டணம். |
|---|---|---|
| (1) | (2) ரூ. பை. | (3) ரூ. பை. |
| 1980–81 .. | 64,17,493.46 | 17,59,589.00 |
| 1981–82 .. | 63,51,518.50 | 16,77,563.80 |
| 1982–83 .. | 1,08,84,766.93 | 29,18,581.48 |
| 1983–84 .. | 1,35,52,491.34 | 35,23,228.11 |
| 1984–85 .. | 1,32,22,643.01 | 29,52,619.98 |
| மொத்தம் .. | 5,05,28,913.24 | 1,28,31,582.37 |

26—

## வெள்ளலூரில் பொது கழிப்பிடம் கட்டுதல்.

வினா 4356—திரு. ஆ. நடராஜன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை மாவட்டம் வெள்ளலூர் பொது மக்கள் கழிப்பிடம் இல்லாமல் துன்பப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதை நீக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இப்பேரூராட்சியில் நான்கு இடங்களில் கழிப்பிடங்கள் உள்ளன.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

27—

## கருத்தபுளியம்பட்டி கோழி விஸ்தரிப்பு நிலையம்.

வினா 4371—திரு. க. வெ. வீராளம்பலம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் சட்டமன்றத் தொகுதி மேலூர் கருத்த புளியம்பட்டியில் தற்போது இயங்கி வரும் கோழி விஸ்தரிப்பு நிலையம் லாபத்தில் இயங்கி வருகின்றதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

28—

## தமிழ்நாட்டில் ஓட்டல்களில் அளவுச் சாப்பாடு.

வினா 4376—திரு. க. வெ. வீராளம்பலம் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஹோட்டல்களில் "ஜனதா" சாப்பாடு போட அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) தமிழ்நாட்டில் ஹோட்டல்களில் அளவுச் சாப்பாடு போட அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

(ஆ) ஹோட்டல் பண்டங்களின் விலையுயர்வு குறித்து உணவு அமைச்சர் அவர்கள், 8–8–1985 அன்று தலைமைச் செயலகத்தில் ஹோட்டல் உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புச் சங்கங்களின் பிரதிநிதிகளோடு பேச்சுவார்த்தை நடத்தினார். அப்பேச்சு வார்த்தைகளின் பலனாக சென்னை நகரத்தில் சாதாரண மக்கள் விரும்பிச் சாப்பிடும் இட்லி, சாதா தோசை, காபி, டீ, அளவுச் சாப்பாடு போன்ற ஐந்து உணவுப் பண்டங்களுக்கு அரசு அறிவித்துள்ள விலைகளில்



விற்பதற்கு ஹோட்டல் உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகள் தாமாக முன் வந்து ஒப்புக் கொண்டனர். அளவுச் சாப்பாடு இரண்டு ரூபாய்க்கு வழங்க ஒப்புக் கொண்டனர். அதில் சமைத்த உணவு, ஒரு பொரியல், சாம்பார், ரசம், மோர், ஊறுகாய் முதலியன அடங்கும். மாவட்டங்களிலும் இவ்வாறு ஹோட்டல் உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகளின் கூட்டத்தைக் கூட்டி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் விலைகளை நிர்ணயித்து உள்ளார்கள்.

29—

## முத்துப்பேட்டை சாலையிலுள்ள பாலம்.

வினா 4558—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை கோட்ட பெருவழித்துறை மயிலாடுதுறை முத்துப்பேட்டை சாலையில் நாட்ட வாய்க்கால்(கொல்லுமாங்குடி) பாலம் உடைந்து பேருந்து போக இடையூறாக இருப்பது அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

விடை—

(அ) மற்றும் (ஆ): வினாவில் குறிப்பிடப்படும் பாலம் சுண்ணாம்புக் கலவையுடன் கூடிய செங்கற்களால் கட்டப்பட்ட மிகப் பழைய வளைவு பாலமாகும். இதன் வளைவு மையப் பகுதியில் விரிசல் உண்டானது. தற்போது அது சரி செய்யப்பட்டு வேகத் தடைகள் அமைக்கப்பட்ட பின்னர் குறைந்த வேகத்தில் போக்குவரத்துக்கள் அனுமதிக்கப்பட்டு உள்ளன. மாற்றுப் பாலம் ஒன்று கட்டப்படவேண்டியது அவசியமாக இருந்தாலும், அதற்கு ரூபாய் 8.20 இலட்சம் தேவைப்படுவதால் அரசின் நிதிநிலை காரணமாக இப்பணியை நிறைவேற்ற முடியாத சூழ்நிலை உள்ளது.

30— [1986 ஏப்ரல் 30

ஆண்டிப்பந்தல்—திருவாரூர் சாலை.

வினா 4570—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் துணைக் கோட்டத்தில் உள்ள மாப்பிள்ளை குப்பம் ஆண்டிப்பந்தல் வரை (திருவாரூர் சாலை) உள்ள சாலையில் உள்ள வளைவுகள் காரணமாக போக்குவரத்து தடை படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) வினாவில் குறிப்பிடும் சாலையின் சரியான பெயர் ஆண்டிப்பந்தல்—நன்னிலம் சாலை. இச் சாலையில் 1.2 கி.மீ. தூரம் மாப்பிள்ளை குப்பம் கிராமத்தில் குடியிருப்புகள் வழியே செல்வதால் அகலப்படுத்த முடியாத நிலை உள்ளது. இச் சாலைக்குப் பதில் மாற்று வழிப் பாதை அமைக்க ரூ. 5·00 இலட்சம் தேவைப்படுவதால் அரசின் குறைந்த நிதி வசதி காரணத்தால் உடனடியாக எடுத்து செய்ய இயலாது.

31—

வினா 4571—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை கோட்டத்திற்கு உட்பட்ட நன்னிலம் திருவாரூர் சாலையில் மாப்பிள்ளை குப்பம் தெரு மிக குறுகலாக இருப்பதால் போக்குவரத்து இடர்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இருப்பினும் இச்சாலையின் இருபுறமும் குடியிருப்புகள் உள்ளதால் இதை அகலப்படுத்த முடியாத நிலை உள்ளது. இச் சாலைக்கு மாற்று வழிப் பாதை அமைக்க வேண்டுமாயின் நில ஆர்ஜிதம் செய்வதற்கு சுமார் ரூ. 4·00 இலட்சம் தேவைப்படும். அரசின் குறுகிய நிதி வசதி காரணத்தால் தற்சமயம் இப்பணியை எடுத்துச் செய்ய இயலாத நிலை உள்ளது.



1986 ஏப்ரல் 30]

32—

மேட்டுப்பாளையம்—உதகமண்டலம இரயில் போக்குவரத்து

வினா 4620—திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூடுதல் திறன் கொண்ட என்ஜினும் நவீன வசதி செய்யப்பட்ட பெட்டிகளும் கொண்ட இரயிலை மேட்டுப்பாளையத்திலிருந்து உதகமண்டலத்திற்கு விடுவதற்கும் இரயில் பாதையை சீர்படுத்துவதற்கும் மத்திய அரசிடம் மாநில அரசு பரிந்துரை ஏதும் செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : சுற்றுலாப் பயணிகளின் வசதிகளுக்காகவும் மற்றும் பல்வேறு தொழிற்சாலைகளில் பணி புரிவோரின் போக்குவரத்திற்காகவும், நீலகிரி மலை இரயில் பாதையை மேம்படுத்தி புதிதாக பாதை அமைக்கவும் புதிய என்ஜின்கள் வாங்கவும் ஆவன செய்யுமாறு இரயில்வே துறையை (தென்னக இரயில்வே) இவ்வரசு கேட்டுக் கொண்டுள்ளது. அதற்கிணங்கி, நீலகிரி மலை இரயில் பாதையில் டீசல் கார்களை இயக்குமாறு இரயில்வேத் துறையைச் சேர்ந்த ஆராய்ச்சிப் பிரிவை மத்திய அரசின் இரயில்வே அமைச்சகம் பணித்துள்ளதாகவும், இப்பகுதியில் டீசல் கார்களைப் பயன்படுத்துவது பயணிகள் போக்குவரத்திற்கு உகந்ததாயிருக்கும் என தெரிய வந்ததால், தற்போதைய ஏற்பாட்டிற்கு இது ஒரு தகுந்த மாற்றாக அமையுமென்று இரயில்வே தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார். மேலும் நீலகிரி மலைத் தொடர் இரயில் பாதையில் தற்போதைய போக்குவரத்தை தற்போது கைவசமுள்ள என்ஜின்களை வைத்துக் கொண்டு சமாளித்து வருவதாகவும், இதில் எவ்வித இடர்பாடுமில்லையெனவும் தென்மண்டல இரயில்வே பொது மேலாளர் தெரிவித்துள்ளார்.

33—

மோட்டார் வாகனங்களுக்குப் பதிவு எண்கள்.

வினா 4976—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : பேரவைத் துணைத் தலைவர் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மோட்டார் வாகன சொந்தக்காரர்கள் குறிப்பிட்ட எண் தங்களுக்கு கிடைக்கக் கோரினால் சிறப்புக் கட்டணம் வசூலிக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) மோட்டார் வாகனங்களுக்கு பதிவு எண் வழங்க சிறப்புக் கட்டணம் என்று ஒன்றும் கிடையாது. தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் விதிகளில் விதி 52-ஏ (3)-ன் படி ஒவ்வொரு வாகனத்திற்கும் பதிவு எண் ஒதுக்கீடு செய்ய 22-12-1985 வரை ரூ. 100 வசூல் செய்யப்பட்டது. தற்பொழுது மாற்றியமைக்கப்பட்ட விதிகளின்படி 23-12-1985 லிருந்து ரூ. 500 வசூல் செய்யப்படுகிறது.

34—

### நாமகிரிப்பேட்டை—புதுச் சத்திரம் ஒன்றியங்களைப் பிரித்தமைத்தல்.

வினா 5241—திரு. பி. ஜெயப்பிரகாசம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், நாமகிரிப்பேட்டை, புதுச் சத்திரம் ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிக்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

விடை—

சேலம் மாவட்டம், நாமகிரிப்பேட்டை, புதுச் சத்திரம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிப்பது தொடர்பான திட்டம் எதுவும் இல்லை.

35—

### பறிமுதல் செய்யப்பட்ட சந்தனக் கட்டைகள்.

வினா 5342—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1984–85ஆம் ஆண்டு பறிமுதல் செய்யப்பட்ட சந்தனக் கட்டைகளின் மதிப்பு எவ்வளவு?

விடை—

ரூ. 21,11,846 மதிப்புள்ள 60,596 கிலோ சந்தனக் கட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டன.



36—

### மீன்பிடி படகு கட்டும் நிலையங்கள்.

வினா 5417—திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் எந்தெந்த இடங்களில் மீன்பிடி படகு கட்டும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன?

விடை—

தமிழகத்தில் தற்சமயம் அரசின் கட்டுப்பாட்டில் படகு கட்டும் தளங்கள் ஏதுமில்லை.

37—

### சைதாப்பேட்டை நீதிமன்றத்திற்குப் புதிய கட்டிடம்

வினா 5424—திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சைதாப்பேட்டை 'நீதிமன்றத்திற்கு' புதியதாக கட்டிடம் கட்டுகின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

38—

### மாங்காட்டில் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே பாலம்

வினா 5532—திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு தாலூக்கா மாங்காடு என்ற இடத்தில் தாமிரபரணி ஆற்றில் தற்போதுள்ள சப்பாத்தை மாற்றி பாலம் கட்டும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவங்கும்?

விடை—

(அ) மற்றும் (ஆ): இந்த தாம்போகி நல்ல நிலையில் உள்ளது. இது இன்னும் பல ஆண்டுகளுக்குப் பயன்படக்கூடியதாக இருக்கும். ஆகவே உயர்மட்டப் பாலம் தேவையில்லை என்று கருதப்படுகிறது.

[1986 ஏப்ரல் 30

39—

### சிறைகளிலுள்ள தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்படும் தொழில்கள்

வினா 5562—திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தமிழ்நாட்டில் எந்தெந்த சிறைச்சாலைகளில் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன ?

(ஆ) என்னென்ன பொருட்கள் உற்பத்தி செய்யப்படு கின்றன?

(இ) இவற்றின் ஆண்டு மதிப்பு எவ்வளவு ?

விடை—

(அ) தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மத்திய சிறைகளிலும், (சென்னை, வேலூர், கடலூர், திருச்சி, மதுரை, பாளையங் கோட்டை, கோவை, சேலம்), மாநில மகளிர் சிறை, வேலூர், பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை மற்றும் ஆண்கள் பிற் காப்பு இல்லம், புழல் ஆகிய இடங்களில் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன.

(ஆ) சிறையிலுள்ள தொழிற்சாலைகளில் மரச்சாமான் கள், பினாயில், கூர் நாடா (இணை நூல்-Tag) அரக்கு, முறுக்கு நூல் புத்தகம் கட்டுதல், முத்திரை அரக்கு, காலணி, காக்கி துணி, அலுமினிய சாமான்கள், கைமுறை காகிதம் (Hand Made Paper) உலோகப் பொருட்கள் செய்யப்படு கின்றன.

(இ) இவற்றின் ஆண்டு (1984) மதிப்பு ரூ. 1,56,09,516.90 ஆகும்.

40—

### விக்கிரமசிங்கபுரம்—மதுரா கோட்ஸ் மில் புதிய பாலம்

வினா 5673—திரு. எஸ் பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியில் விக்கிரமசிங்கபுரத்தி லிருந்து மதுரா கோட்ஸ் மில்லுக்கு செல்லும் வழியிலுள்ள தாமிரபரணி ஆற்றின் மீது பாலம் கட்டுவது சம்பந்தமாக மனு ஏதும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதுபற்றி எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?



1986 ஏப்ரல் 30]

விடை —

(அ) மற்றும் (ஆ): சட்ட மன்ற வினாவில் குறிப்பிடப்படும் பாலம் அமைப்பது பற்றி மதுரா கோட்ஸ் நிர்வாகத்திடமிருந் தும் கோரிக்கை வரப்பெற்றுள்ளது. இது அரசின் பரிசீலனை யில் உள்ளது.

41 —

### சிறைகளில் பணியாற்றும் வார்டர்கள்.

வினா 5877—திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழகத்திலுள்ள சிறைகளில் பணியாற்றும் வார்டர் களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) அவர்களின் வேலை நேரம் எவ்வாறு வரையறுக்கப் பட்டுள்ளது?

விடை—

(அ) தமிழகத்திலுள்ள சிறைகளில் பணியாற்றும் வார்டர் களின் மொத்த எண்ணிக்கை :

| | | |
|---|---|---|
| (1) முதல் நிலைக் காவலர் | .. | 312 |
| (2) 2-ம் நிலைக் காவலர் | .. | 1,976 |

(ஆ) அவர்களின் வேலை நேரம் ஒரு நாளைக்கு தோராய மாக 15 மணி நேரம் பணிபுரிய வரையறுக்கப்பட்டுள்ளது.

42—

### ஒன்றியங்களில் கலை அரங்குகள்.

வினா 5915—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள் ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

தமிழ்நாட்டில் ஒன்றியங்கள் தோறும் கலை அரங்குகளை கட்ட அரசு முன்வருமா?

விடை—

ஊராட்சி ஒன்றியங்கள் தோறும் கலை அரங்குகளை கட்டும் உத்தேசம் ஏதும் இல்லை.

[1986 ஏப்ரல் 30

43—

## திருவாடானை பேருந்து நிலையம்.

வினா 6026—திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானையில் உள்ள பேருந்து நிலையத்தை புதுப்பிக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

இல்லை.

44—

## கோவை மாவட்டத்தில் அரசு உதவி வழக்குரைஞர்கள்.

வினா 6053—திரு. க. பாரமலை : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் மொத்தம் அரசு உதவி குற்றவியல் வழக்குரைஞர்கள் எத்தனை பேர் பணிபுரிகின்றனர்?

(ஆ) அதில் தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்கள் வகுப்பைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் ?

(இ) கோவை நகரத்தில் மட்டும் எத்தனை பேர் பணி புரிகின்றனர் ?

விடை—

(அ) 16 பேர்.

(ஆ) ஒருவரும் இல்லை.

(இ) 7 பேர்

45—

## தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் பெரியோர் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி.

வினா 6621—டாக்டர் அ. பொன்னுசாமி, திரு. அ. பெரியசாமி, திரு. யு. பி. மாதையன், மற்றும் திரு. கா. செ. பழனிசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டத்திற்கு தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் (NREP) கீழ் 1985–86-க்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவு ?

(ஆ) எந்தெந்த பணிகள் எடுக்கப்பட்டுள்ளன?



1986 ஏப்ரல் 30]

விடை—

(அ) பெரியார் மாவட்டத்திற்கு 1985-86 ஆம் ஆண்டிற்கு தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்தத் தொகை (அரிசியின் மதிப்பு உட்பட) ரூ. 226.20 இலட்சம் ஆகும்.

(ஆ) பெரியார் மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியம் மற்றும் பேரூராட்சிகளில் எடுக்கப்பட்டுள்ள பணிகள் மற்றும் அவற்றின் மதிப்பீடு பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

| வரிசை எண்ணும் மற்றும் பணிகளின் விவரமும். | எண்ணிக்கை. | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| (1) ஊராட்சி ஒன்றியப் பணிகள் : | | |
| 1 சமூகக் காடுகள் வளர்ப்புப் பணி .. | 345 | 40.80 |
| 2 சமுதாயக் கூடங்கள் .. .. | 87 | 41.70 |
| 3 பள்ளிக் கட்டிடங்கள் .. .. | 41 | 37.63 |
| 4 ஊராட்சிக் கட்டிடங்கள் .. | 22 | 14.47 |
| 5 கால்நடைப் பட்டிகள் மற்றும் கிராமச் சாவடிகள். | 17 | 3.54 |
| 6 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மலைவாழ் மக்களுக்கான வீடுகள். | 588 | 35.91 |
| 7 தரைமட்ட நீர்தேக்கத் தொட்டி. | 8 | 2.45 |
| 8 குடிநீர்க் கிணறுகள் ஆழப்படுத்துதல் | 20 | 2.10 |
| 9 வங்கி கட்டிடம் மற்றும் பிற்பட்டோர் நல மாணவர் விடுதி. | 1 | 1.81 |
| 10 தடுப்பு அணை (Checkdam) .. | 3 | 1.00 |
| 11 வெள்ளத் தடுப்புச் சுவர் மற்றும் வடிகால். | 41 | 5.27 |
| 12 ஊரக மருந்தகம் மற்றும் கால்நடை மருந்தகம் மற்றும் அறுவைச் சிகிச்சை கட்டிடம். | 10 | 8.26 |
| 13 சாலைப்பணி மற்றும் கசிவு நீர்க் குட்டை பராமரிப்பு. | 2 | 1.15 |
| | 1,186 | 1,96.09 |

| பணிகளின் எண்ணும் மற்றும் பணிகளின் விவரமும். | எண்ணிக்கை. | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| (2) பேரூராட்சி பணிகள் : | | |
| 1 ஊராட்சிக் கட்டிடங்கள் .. | 9 | 8.70 |
| 2 கிடங்குக் கட்டிடம் (உபகரணங்கள் வைக்க). | 6 | 3.50 |
| 3 கடைகள் கட்டுதல் (Shopping Complex) | 6 | 6.90 |
| 4 சமூகக் காடுகள் வளர்ப்புப் பணி | 24 | 6.80 |
| 5 வடிகால் கட்டுதல .. .. | 19 | 3.78 |
| 6 கழிப்பிடங்கள் கட்டுதல்.. .. | 8 | 1.65 |
| 7 குடிநீர்க்கிணறுகள் ஆழப்படுத்துதல் | 10 | 1.00 |
| 8 பயணியர் நிற்குமிடம் .. .. | 2 | 1.50 |
| | 84 | 33.83 |

46—

பெண்களுக்கு கடலில் மீன் பிடித் தொழிலில் பயிற்சி.

வினா 6788—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலில் மீன் பிடிக்க பெண்களுக்கு பயிற்சி அளிப்பது பற்றி அரசு பரிசீலித்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ) : பெண்களுக்கு கடலில் மீன் பிடிக்கும் பயிற்சி அளிக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.



47—

கிராமப்புற பெண்களுக்கு மீன் பதனிடும் முறைகள் பற்றி பயிற்சி.

வினா 6801—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீன் பதன முறைகள் குறித்து கிராமப்புற பெண்களுக்குப் பயிற்சி அளிக்க அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ) : தூத்துக்குடியில் உள்ள மீனவ கல்லூரி மூலம் மீன் பதனிடும் முறைகள் பற்றி மீனவ மகளிருக்குப் பயிற்சி அளிக்கத் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

48—

வண்டலூரில் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா.

வினா 6821—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவை மேலும் விரிவுபடுத்துவது பற்றி அரசு பரிசீலித்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் யாது?

விடை—

(அ) சென்னை மாநகராட்சி மிருகக்காட்சி சாலையை வண்டலூருக்கு மாற்ற முடிவெடுத்தபோது பூங்காவில் திட்டமிட்ட பரப்பளவு 350 ஏக்கர் மட்டுமே. பின்னர், அங்குள்ள 776 ஏக்கர் காப்புக் காடுகள், 38.74 ஏக்கர் அரசு மற்றும் தனியார் நிலங்கள் ஆகியவற்றைச் சேர்த்து மொத்தம் 814.74 ஏக்கர் பரப்பில் இப்பூங்காவை அமைக்கத் திட்டமிடப்பட்டது. வனவிலங்குகளின் தீவனப் பயிர் வளர்ப்புக்காக மேலும் 300 ஏக்கர் நிலம் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இறுதியாக, பூங்காவின் பிற்கால விரிவுக்காகவும் "சிங்க சஃபாரி" பூங்கா அமைப்பதற்காகவும் 150 ஏக்கர் நிலம் சேர்த்துக் கொள்ளப்பட்டு தற்போது மொத்தம் 1,275 ஏக்கரில் அமைப்புப் பணிகள் நடைபெறுகின்றன. எனவே, பூங்காவை மேலும் விரிவுபடுத்தும் திட்டம் ஏதும் அரசு பரிசீலனையில் இலலை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

49—

**சுவர்க்கல்—நித்தியகல்யாணி தோட்டம் சிறிய பேருந்துப்பணி.**

வினா 6996—திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு போக்கு
வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை
யளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் சுவர்க்கல் மவுண்ட் சூரட்டி
யிலிருந்து நித்தியகல்யாணி எஸ்டேட் வரை சேரன் போக்கு
வரத்துக் கழக பஸ் (மினி) விடும் திட்டம் அரசின் செயற்குறிப்பில்
உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது விடப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிட்டுள்ள வழித்தடத்
தின் நீளம் 16 கி.மீ. ஆகும். இப்பாதை பொள்ளாச்சி—வால்
பாறை பாதையிலிருந்து சுவர்க்கல் அருகே பிரிந்து செல்கின்றது.
தற்போது இப்பாதை வாகனப் போக்குவரத்துக்கு
உகந்ததாக இல்லை. பேருந்துகள் பாதுகாப்பாக கடக்க
முடியாத நிலையில் பாதையில் மூன்று குறுகிய மரப்பாலங்கள்
உள்ளன. பாதையின் சீரமைப்புக்கான செலவு மிக அதிக
மாகும். ஆகவே இப்பாதையில் சிறிய பேருந்து (மினி பஸ்)
விடுவதற்கான செயற்குறிப்பு எதுவும் தற்சமயம் இல்லை.

50—

**விவசாயத்திற்கு கொடுக்கப்பட்ட மின் இணைப்புகள்.**

வினா 6962—டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு மின்
துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் 1985 நவம்பர் முடிய விவசாயத்திற்குக்
கொடுக்கப்பட்டுள்ள மின் இணைப்புகள் எத்தனை?

விடை—

தமிழகத்தில் 1985 நவம்பர் முடிய விவசாயத்திற்குக்
கொடுக்கப்பட்டுள்ள மின் இணைப்புகளின் எண்ணிக்கை
10,57,560.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்
பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது
என்பதைக் குறிக்கும்.]



**3. ஒத்திவைப்புத் தீர்மானம்.**

இராயபுரம் ஸ்டான்லி செவிலியர் விடுதியிலுள்ள சிலர் உடல்நலம்
பாதிக்கப் பெற்றுள்ளதும் மற்றும் 'எய்ட்ஸ்' நோய் பர
வாமல் தடுப்பதும் குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருவாளர்கள் ப. பொன்னு
ரங்கம், பரிதி இளம்வழுதி, கு. ரமணி, வி. பி. சிந்தன், பி. கே.
எம். முத்துராமலிங்கம், அ. ரகுமான்கான், கு. சுப்பராயன்,
பொ. உத்திராபதி, சு. பாலன் மற்றும் என். எஸ். வி. சித்தன்
ஆகியோர், "சென்னை இராயபுரம் ஸ்டான்லி நர்சஸ் குவார்ட்
டர்சில் தங்கி பயிற்சி பெறும் செவிலியர்கள் அண்மையில் அங்
குள்ள கிணற்று நீரை சமையலுக்குப் பயன்படுத்தியதால் உயிருக்கு
மன்றாடிய நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள
தால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர
அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை
மொழிய அனுமதி கோரி முன் அறிவிப்புகள் கொடுத்துள்ளனர்.
இதே பொருள் குறித்து டாக்டர் கே. பி. இராமலிங்கம், டாக்டர்
அ. பொன்னுசாமி, திருவாளர்கள் எஸ். என். இராமசாமி, கு.
சுப்பராயன், பொ. உத்திராபதி, மு. இராமநாதன், டாக்டர் ந.
மாசிலாமணி, திரு. சைதை. சா. துரைசாமி ஆகியோர் கவன
ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப்
பொது முக்கியத்துவம்' வாய்ந்தது என்பது குறித்து மிகச்
சுருக்கமாகக் கூறும்படி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.
'எய்ட்ஸ்' நோய் பரவுவதைப்பற்றி கொடுத்ததையும் சேர்த்து
எடுத்துக் கொள்கிறேன். பேசுபவர்கள் அதையும் சேர்த்து
பேசி விடுங்கள்.

**திரு. ப. பொன்னுரங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே,
கொடுத்த வாய்ப்புக்கு நன்றி. ஸ்டான்லி மருத்துவமனை என்
னுடைய தொகுதியில் அமைந்திருக்கின்ற மருத்துவமனை.
"எய்ட்ஸ்" நோயைப்பற்றியும் பேசச் சொன்னதற்காக நன்றி
தெரிவித்துக் கொள்கிறேன். ஸ்டான்லி மருத்துவமனையில் நூற்
றுக்கணக்கான ஸ்டூடன்ட்ஸ் நர்சுகளும், எம்.பி.பி.எஸ். படிக்
கின்ற மாணவர்களும், சில டாக்டர்களும் தங்கியிருக்கின்ற அந்த
ஹாஸ்டல் விடுதியிலே ஏற்பட்ட கோளாறுகளினால் வந்தது.
மருத்துவமனை என்றாலே நோய் போக்கும் இடம் என்றுதான்
நான் நினைத்திருந்தேன். ஆனால் இப்போது புதிய வரலாறு
வந்திருக்கிறது. மருத்துவமனை என்றாலே நோய் உண்டாக்கும்
இடமாக வந்திருக்கிறது. நான் அமைச்சர் அவர்களிடமிருந்து
தெரிந்து கொள்ள விரும்புவது, அங்குள்ள தண்ணீரைப் பயன்
படுத்தியதனால்தான் நோயினால் பாதிக்கப்பட்டு 11 ஆம் தேதி
அட்மிட் ஆகி இருக்கிறார் ரெஜினா என்ற மாணவி. 17 ஆம்

தேதி வரை அது என்ன நோய் என்றும்—அவருக்கு உரிய சிகிச்
சையை முறையாக அளிக்காத காரணத்தால் அவர் இறக்க
வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்.

இரண்டு வார காலமாக ஸ்டூடன்டு நர்சுகளிலிருந்து,
நர்சுகளிலிருந்து, எம்.பி.பி.எஸ். படிக்கின்ற அந்த
மாணவர்களிலிருந்து, டாக்டர்களிலிருந்து எல்லாம் படிப்படியாக
அங்கே அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்கள் இந்த நோயால் பீடிக்
கப்பட்டு. இந்த நோய் வெளியே எங்கிருந்தும் வந்த நோய்
அல்ல அங்கே குடிக்கின்ற கிணற்று நீரில் இருந்தோ,
ஸம்ப் நீரிலிருந்தோதான் உருவான நோய அது. நான் உட்பட
பல மாண்புமிகு உறுப்பினர்கள், ஆளும்கட்சி உறுப்பினர்கள் உட்
பட பல்வேறு துறைகளில் மெயின்டனன்ஸ் ப்ராப்பர் ஆக இல்லை
என்று குறைபட்டு மன வருத்தப்பட்டு சொல்லியிருக்கிறோம்.
அந்த நிலையில் பார்க்கிறபோது இந்தத் துறையில் மருத்துவ
மனையில் எந்த அளவுக்கு மெயின்டெனன்ஸ் இருக்
கிறது என்பதை நாம் கவனிக்க வேண்டும். மருத்துவ
மனையில் இருக்கிற டாக்டர்களுக்கே, நர்சுகளுக்கே, ஸ்டூடன்டு
நர்சுகளுக்கே இந்த கதி என்றால் மருத்துவ மனையில் சிகிச்சைக்
காக செல்லுகின்ற பொதுமக்களுக்கு எப்படிப்பட்ட கதி ஏற்
படும் என்பதை அருள்கூர்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆகவே முறையான மெயின்டெனன்ஸ் இருந்து இருந்தால்
இதைத் தவிர்த்து இருக்கலாம். எலிகள் பல கொத்து கொத்தாக
வயிறு வெடித்து, செத்து, குடிக்கும் நீரில் கிடந்து இருக்கிறது.
அதனால் வந்த நோய்தான் இந்த நோய். அதனால் ஏற்பட்ட
வியாதி தான் இந்த வியாதி என்று சொல்லப்படுகிறது. மெயின்
டெனஸ் மட்டும் ஒழுங்காக இருந்திருந்தால் ஸம்ப்பை சுத்தம்
செய்து இருந்தால், கிணற்றை தூர் எடுத்து இருந்தால் இந்த
நோயைத் தவிர்த்து, சாவை தவிர்த்து இருக்கலாம்.
இந்த சாதாரண வேலையைக்கூட செய்யாமல் நாம்
sophisticated equipments, கொண்டு வருகிறோம், மிஷன்
எல்லாம் வாங்குகிறோம் என்று சொல்லுவதில் என்ன
நியாயம் இருக்கிறது என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்பு
கிறேன்.

மேலும் 11 ஆம் தேதியே பாதிக்கப்பட்டவர்கள் அனுமதிக்
கப்பட்டு இருக்கிறார்கள். அந்த வாட்டர் சம்பந்தப்பட்ட
வரையில் துரித நடவடிக்கை இதுவரை எடுத்தார்களா என்றால்
எடுத்தார்கள்—ரொம்ப வேகமாக 2 வாரம் கழித்து எடுத்தார்கள்.
மருத்துவ மனையில் அந்த பாதிக்கப்பட்ட இடங்களுக்கு
Metro Water Supply செய்வது 2 வாரத்திற்குப் பிறகு நடவடிக்கை
எடுத்தார்கள். நல்ல காரியம்.



அதுவும் ரெஜினா இறந்த பிறகு. அதற்கு என்ன காரணம்
சொல்லப்படுகிறது என்றால், proper diagnosis கிடையாது.
ஒழுங்காக diagnosis செய்யவில்லை. மருத்துவமனைக்கு
வரும் நோயாளிகளை கவனிக்கும் இந்த ஸ்டாப் நர்சுகளுக்கும்,
நர்சுகளுக்கும் இந்த கதி என்றால், பொதுமக்களுக்கு எப்படி
இருக்கும் என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இந்த மாதிரி ஏற்பட்டு விட்ட பிறகு சம்பந்தப்பட்ட,
பாதிக்கப்பட்ட ஸ்டாப்புகள் எல்லாம் நாங்கள் எல்லாம் இரத்த
பரிசோதனை செய்து கொள்ளவேண்டும் என்று வருகிறபோது
அதையும் மறுத்து இருக்கிறார்கள். காரணம் என்ன என்றால்
அங்கே உள்ள அனைவருக்கும் டெஸ்ட்டு செய்ய முடியாது என்று
சொல்லப்படுகிறது ஒரு குறிப்பிட்ட அளவுக்குத்தான் ஒரு
நாளைக்கு செய்ய முடியும் என்று சொல்லப்படுகிறது. 15, 20
நாட்களாக இப்படிப்பட்ட சூழ்நிலையில் இருக்கும் அந்த
மருத்துவமனையில் வேறு கருவி வேறு மருத்துவமனை
கருவி இல்லையா? அதைக் கொண்டு வந்து உடனடி
யாக வைத்து டெஸ்டு செய்து இருக்கக்கூடாதா? ஆக
துரித நடவடிக்கை எடுக்கக்கூட இந்த அரசு தவறி விட்டது
என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த நிலை
ஏற்பட்ட உடனே மருத்துவமனையில் இருக்கும் அதிகாரிகள்,
மேலே இருக்கும் அதிகாரிகள் உடனடியாக அந்த மருத்துவமனை
யில் இருக்கிற அனைத்து ஸ்டாப்புகளுக்கும் மற்றும் நோயாளி
களுக்கும் அட்வைஸ் செய்து இருக்க வேண்டாமா? குடிக்கின்ற
நீரை கொதிக்க வைத்து குடியுங்கள் என்று தகுந்த அட்வைஸ்
செய்து இருக்கவேண்டாமா? செய்தார்களா? இல்லை. ஆக
இப்படி பொறுப்பற்ற முறையில், இந்தத் துறை இயங்கு
கிறது என்ற காரணத்தால் இது போன்ற சாவுகள் ஆஸ்பத்திரி
களில் எல்லாம் தாராளமாக நடைபெறுகின்றன.

அதுமட்டும் அல்ல, இன்னொரு வினோதம். அதிகாரிகளும்,
அரசும்தான் அட்வைஸ் செய்யத் தவறி விட்டது என்றால்
அந்த ஸ்டூடன்டுகளே போஸ்ட்டர் எழுதி ஆஸ்பத்திரியில் ஒட்டிக்
கொண்டு காய்ச்சிய குடிநீரை சாப்பிடுங்கள் என்று முன்னெச்
சரிக்கை நடவடிக்கையை எடுத்து இருக்கிறார்கள். காரணம்
நம்முடைய அதிகாரிகளும், நம்முடைய அரசாங்கமும் இவ்வளவு
தான் செய்யும் என்று அந்த ஸ்டூடன்டுகளே அந்த முன்னெச்
சரிக்கை நடவடிக்கையை செய்தார்கள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது இதில்
பயப்பட ஒன்றும் இல்லை என்று தகவல் தெரிவித்து இருக்
கிறார்கள். நான் அறிந்த வரையில் பாதிக்கப்பட்ட டாக்டர்கள்
ஆனாலும், ஸ்டூடன்டு நர்சுகள் ஆனாலும் அவர்கள் பொது
மக்களோடு தொடர்பு கொள்ளக் கூடாது. ஏன் என்றால் அது
Infectitious அப்படி இருக்கும்போது, அந்த மருத்துவ

மனையில் அனுமதிக்கப்பட்டு இருக்கிற அந்த நோயாளிகளை அவர்கள் அணுகக் கூடாது. அவர்கள் தொடர்பு கொண்டார் களா இல்லையா என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்பு கிறேன்.

(முற்பகல் 9-10)

தொடர்பு கொண்டார்கள் என்பதற்காகக் கூட என்னிடம் ஆதாரம் இருக்கிறது. அந்த பாதிக்கப்பட்டவர்கள் இன்னும் அப்பெக்ட் ஆகி இருந்தாலும்கூட, தொடர்ந்து வேலை செய் யுங்கள். ஏனென்றால் ஒரேயடியாக அவர்களுடைய பளுவைக் குறைத்துவிடக் கூடாது. அதை நான் ஒத்துக் கொள்கிறேன். வெளி மருத்துவ மனைகளிலுள்ள டாக்டர்களைக் கொண்டு போகக் கூடாதா? அதுவும் இல்லாமல் ஸ்பேஸ் இல்லாத காரணத் தால் பாதிக்கப்பட்டவர்கள் அனுமதிக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். ஒரே ஆஸ்பத்திரிதான் தமிழகத்தில் இருக் கிறதா? ஸ்பேஸ் அங்கே தான் இருக்கிறதா? இது போன்ற முறைகேடுகள், பொறுப்பற்ற காரியங்கள் நடைபெறுகின்றன என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடுகள்) முக்கியமான விஷயம். அதுவும் என்னுடைய தொகுதி விவகாரம். ஆகையால் நான் முதலிலேயே கொடுத்திருக்கிறேன்.

மேலும் பாதிக்கப்பட்டவர்களில் இருவர் ஸ்டுடெண்ட்ஸ். அவர்கள் நேற்று நடைபெற்றிருக்கக் கூடிய பரீட்சை எழுதி யிருக்க வேண்டும். அவர்களுக்கு இந்த சர்க்கார், இந்தத் துறை அல்லது அமைச்சர் என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என் பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஒரு விரும்பத்தகாத, எதிர்பார்க்காத விஷயமாக ஒரு விபத்து நடந்திருக்கிறது. அதை டாக்டர்கள் உடனே டெஸ்ட் பண்ணி இருக்க வேண்டாமா? இப்படி அரசு ஊழியர்கள், அரசாங்கத்தில் பயிற்சி, மிக முக்கிய மான பயிற்சி பெறுகின்ற நபர்கள் இந்த அளவிற்கு பாதிக்கப்பட் டிருக்கிறார்கள் என்றால், உடனடியாக டெஸ்ட் செய்து கண்டு பிடித்தாக வேண்டும். அதற்காக பேனல் போட்டிருக்கிறார்களா? அந்தப் பேனலை எப்போது போடுகிறார்கள் என்றால், நோயாளி கள் பாதிக்கப்பட்டு இரண்டு வாரம் கழித்து, ஒரு டாக்டர் பேனல் அமைக்கப்படுகிறது. இது முறைதானா? சரிதானா என்பதை தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஏ.ஐ.டி.எஸ். செக்ஸ் சம்பந்தப்பட்ட ஒரு டிசீஸ், நான் கூட காலையில் வரும்போது, காரிலே ஒரு டாக்டரோடு பேசிக்கொண்டு வந்தேன். பணக்காரர்களுக்கு வருகின்ற ஒரு நோய். ஆக பணக்காரர்களால் அந்த நோய் இங்கே மிகுந்திருக்கிறது என்று நான் சொல்லவில்லை. நேற்றைய தினம் முதலமைச்சர்கள் கூட்டத்தில் பிரதம அமைச்சர் ராஜீவ் காந்தி அவர்களாலே தமிழ் நாட்டில் இந்த விநோதமான நோய் பரவியிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நோயைத் தடுப்பதற்கு தமிழக அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.





அதுமட்டுமல்ல. பார்லிமெண்ட்டில் கூட, நம்முடைய ஹெல்த் மினிஸ்டர், மோஷினா கித்வாய் சொல்லியிருக்கிறார்கள் தமிழ் நாட்டில் இப்படி இருப்பது உண்மைதான். அது இங்கு இல்லாமல் செய்யப்படவேண்டும என்று சொல்லியிருக்கிறார்கள். நாம் எதெதெற்கெல்லாமோ பரிசுகள் பெற்றிருக்கிறோம். குடும்பக் கட்டுப்பாட்டில் இந்தியாவில் பரிசு வாங்கியிருக்கிற மாநிலம் கூட தமிழகம் தான். ஆனால் வெளி நாட்டிலிருந்து இந்த நோயை, பணக்காரர்கள் மூலமாக வாங்கிக் கொண்டிருப் பதுகூட தமிழகம்தான் முதல் மாநிலம் என்கிற அளவிற்கு நாம் ஆளாக்கப்பட்டிருக்கிறோம் என்பதை வருத்தத்தோடு, தெரிவித்துக் கொள்ளாமல் என்னால் இருக்க முடியாது.

விபத்து நடந்து விட்டது. பாதிக்கப்பட்டவர்களில் சம்பந்தப் பட்ட பெண் மிக ஏழை. அந்த ஏழைப் பெண்ணின் பாடியை இங்கிருந்து இராயபுரத்திலிருந்து கன்னியாகுமரிக்கு எடுத்துச் செல்ல பணம் இல்லை. அரசு இதற்கு ஏற்பாடு செய்தார்களா? நான் அறிந்த மட்டில் பணிபுரிந்து வந்த ஸ்டூடண்ட் நர்சுகள் பணம் கலெக்ட் செய்து–அவர்கள் பார்ப்பதற்காக டி.வி. வாங்க வேண்டுமென்று அந்தப் பணத்தை வைத்திருந்தார்கள். டி.வி. வாங்க வைத்திருந்த பணத்தைச் செலவு செய்து பாடியை கன்னியாகுமரிக்கு எடுத்துச் சென்றிருக்கிறார்கள். ரூ. 3,000 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ரூ. 3,000–ஐ அத்தியாவசியமான இதற்கென்று ஒதுக்கியிருக்கிறதா என்றால் இல்லை. ...... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் இந்த விவகாரத்திற் குள்ளே வராதீர்கள். இதெல்லாம் விவாதத்தில் வராது.

**திரு. ப. பொன்னுரங்கம் :** எனவே நான் சொல்லிக்கொள்வது இதுபோன்ற முறைகேடுகள் நடைபெற்றிருக்கின்றன. பிற்காலத் திலாவது இந்த மருத்துவமனையைப் பொறுத்தவரையில் இந்த மாதிரியான குற்றச்சாட்டுக்கள் வராதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஆபரேஷன் செய்யும்போது மின்சாரம் இருப்பது இல்லை. ஜெனரேட்டர்கள் முறையாக இயங்காமல், அதனால் பல ஆபரேஷன்கள் போஸ்ட்போன் செய்யப்பட்டிருக்கின்றன.

அதுமட்டுமல்லாமல், டெட் பாடியை வைக்கின்ற அந்த கோல்ட் ஸ்டோரேஜ் மிகவும் மோசமாக இருக்கிறது. அங்கு வருகின்ற டெட் பாடிகளை, அங்கே வைத்துக் கொள்ள முடியாமல், ஜி.ஹெச்சிற்குக் கொண்டு போவதாக தகவல் கிடைத்திருக்கிறது. இப்படிப்பட்ட முறைகேடுகள் நடந்து, அதனால் அங்கேயிருக்கின்ற ஸ்டூடண்ட்ஸ் எல்லாம் கூட இறுதி யாக ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக் கையை மட்டும் படித்து விட்டு, நான் முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 14 நிமிடங்களாக நீங்கள் ஒருவர் மட்டும் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். மற்றவர்கள் பேச வேண்டும்.

***திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நேற்று நான் ஸ்டான்லி மருத்துவமனைக்குச் சென்றி
ருந்தேன். ஏராளமான நர்ஸ்களும் ஹவுஸ் சர்ஜன்களும் மாணவர்
களும் 3, 4 அறைகளில் அங்கே போடப்பட்டு இருப்பதை நான்
பார்த்தேன். அவர்களிடம் பேசினேன். ஆனால், அந்த இடத்திலே
மூச்சுத்திணறுகிற அளவுக்கு நிலை இருந்தது. நுழைந்து பார்க்க
முடியாத அளவுக்கு அந்த அறைகள் இருந்தது.

முக்கியமாக நான் இந்த அவையை ஒத்திவைத்து இதை
விவாதிக்க வேண்டுமென்று சொல்வதற்குக் காரணம் 11ஆம்
தேதி ரெஜினா என்ற ஒரு நர்ஸ் அங்கே அனுமதிக்கப்பட்டிருக்
கிறார். உடல்வலி, காய்ச்சல் முதலிய சிம்டங்களோடு அனு
மதிக்கப்பட்டும் அவருக்கு பிளட் டெஸ்ட் நடத்தப்படவில்லை,
எந்தவிதமான தீவிரமான பரிசோதனைக்கும் அவர் உள்ளாக்கப்
படவில்லை. 17ஆம் தேதி அந்த நர்ஸ் இறந்து போகிறார்.
இறப்பதற்குச் சற்று முன் நடத்தப்பட்ட சோதனையில் அது
LeptoSpirosis என்று ரெக்கார்ட் இருக்கிறது.

Lepto spirosis virus என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அப்படி
ரெக்கார்ட் ஆனதற்குப் பிறகு அதற்காக 74 மணி நேரத்திற்
குள்ளாக Crystaline penicillin போட்டிருந்தால் அந்த
உயிரை பாதுகாத்திருக்க முடியும். அப்படி 74 மணி
நேரத்திற்குள்ளாக போடவில்லை. அது Leptospirosis என்று
கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அதற்கான ரெக்கார்ட்
உண்டு. ஆனால், அந்த மருத்துவ மனை அதிகாரி அந்த ரெக்
கார்ட் அப்படியல்ல என்று புதிய வியாக்கியானம் கொடுத்துக்
கொண்டிருக்கிறார். இது நான் இதைப்பற்றி விவாதிக்கவேண்டு
மென்று சொல்வதற்கான ஒரு முக்கியமான காரணம் .

நான் சொல்கிற இரண்டாவது காரணம், ஹெல்த் டிபார்ட்
மெண்டில் இருந்து அந்த மருத்துவ மனைக்குச் சென்ற மேல்
அதிகாரிகள் அந்த தண்ணீர்த் தொட்டி வைத்திருப்பது சரியாக
இல்லை என்று எச்சரிக்கை செய்தும்கூட அந்த மருத்துவ மனை
யின் அதிகாரி நீங்கள் தலையிடாதீர்கள், எங்களுக்குத் தெரியும்
என்று சொல்லி எந்தவிதமான முன்னேற்பாடும் செய்யவில்லை.
மூன்றாவதாக நான் சொல்கிற காரணம் அந்த மருத்துவமனை
மட்டுமல்ல, வட சென்னைப் பகுதியிலே சில இடங்களிலே இந்த
வியாதி ஏற்பட்டிருக்கிறது. அந்த மருத்துவ மனையிலே Micro-
Biology Departmentக்குச் சென்று பார்த்தால் போதுமான டெஸ்ட்
டியூப்புகளையும் கருவிகளையும் அங்கே வாங்கிவைக்கவில்லை
என்ற நிலைமை இருக்கிறது. அங்கே மாணவர்கள் வெயிட்டிங்
லிஸ்டில் இருக்கிறார்கள். நர்சுகள் வெயிட்டிங் லிஸ்டில் இருக்
கிறார்கள். பல டெஸ்ட்கள் நேற்று மாலை வரை செய்யப்பட
வில்லை. இவ்வளவும் " Criminal Neglect " என்றே நான்
சொல்ல விரும்புகிறேன். அந்த அதிகாரிகள் சரியான முறை
யிலே செயல்படாமல் இருக்கிறார்கள். நான் பொது நிலைக்குப்





போகாவிட்டாலும் குறிப்பாக ஆபத்தான சூழ்நிலை இருப்பதைப்
பற்றி சொல்கிறேன். ஏற்கெனவே நம்முடைய சென்னையிலே
மெட்ரோ வாட்டர் துறை 60 இடங்களில உள்ள தண்ணீரை
பரிசோதனை செய்து பார்த்ததில் 56 இடங்களில் தண்ணீர்
அசுத்தமாக இருக்கிறது என்று அறிக்கை கொடுத்திருக்கிறார்
கள். இது சம்பந்தமான முழுமையான விவாதத்தை நடத்த வேண்
டும். தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டும். இது ஒரு
epidemical form தொத்துநோய் என்று அறிவிக்க வேண்டும். வேண்
டிய ஆராய்ச்சியைச் செய்து தேவையான நடவடிக்கை எடுக்க
வேண்டுமென்பதை வலியுறுத்துவதற்காகத்தான் இந்த அவையின்
மற்ற அலுவல்களை ஒத்திவைக்கவேண்டுமென்று அனுமதி கோரு
கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கு. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இன்றைய அலுவல்களை ஒத்திவைக்கவேண்டுமென்று
நான் சொல்வதற்கு மிக முக்கியமான காரணம் நோயகளைத்
தீர்ப்பதற்காக இயங்கக்கூடிய மருத்துவமனையிலே நோயை உண்
டாக்குவதற்கான பணியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். ஒரு நர்ஸ்
இறந்திருக்கிறார் என்பதும், டாக்டர்கள், பயிற்சிபெறும் டாக்டர்
கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பதும் தமிழ்நாட்டிலே ஏற்
பட்டிருப்பது ஒரு அசாதாரண நிகழ்ச்சியாகும். நோய்களைத்
தீர்க்க வேண்டிய மருத்துவ நர்ஸே நோய்க்குப் பலியாகியிருப்பது
ஒரு விஷயம். இரண்டாவது அங்கே இருக்கிற மருத்துவ ஊழி
யர்களும் நோயாளிகளும் பயன்படுத்துகின்ற குடிநீரில் நோய்
ஏற்படுத்துகிற கிருமிகளின் தோற்றம் இருந்திருப்பது மிகக் கடு
மையான விஷயம் ஆகும். இது அந்த ஸ்டான்லி மருத்துவ
மனையிலே மட்டும் நடந்திருக்கிற விஷயமாகக் கருதிவிட முடி
யாது. இந்த அவையை ஏன் ஒத்திவைக்கவேண்டுமென்று நான்
சொல்வதற்கு முக்கியமான காரணம் ஊருக்குத் தெரிந்த பிறகு
தான் அரசுக்குத் தெரிகிற நிலைமை இருக்கிறது. ஸ்டான்லி
மருத்துவ மனையிலே உள்ள தொட்டியிலே எலி விழுந்து செத்து
ஊறி ஊறி மிதந்திருக்கிறது என்ற செய்தி பரவலாக வந்த
தற்குப் பிறகு அங்கே அதனால் ஒரு உயிர் பலி ஆனதற்குப் பிறகு,
அங்கே கடுமையான பாதிப்பு ஏற்பட்டதற்குப் பிறகுதான் அர
சாங்கத்திற்குத் தெரிகிற நிலை இருக்கிறது. ஆக, இது
மாதிரியான தவறுகள் நிகழ்ந்ததற்குப் பிறகுதான், ஒரு உயிர்ப்
பலி ஏற்பட்டதற்குப் பிறகுதான் தெரிந்துகொள்ளவேண்டிய துர்
பாக்கியமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது, தமிழ்நாட்டிலே அதி

*(முற்பகல் 9-20)*

லும் குறிப்பாக சென்னை மாநகரத்திலே குடிதண்ணீரோடு கழிவு
நீரும் கலந்து விடுகின்ற பேரபாயம் இருக்கின்றது என்று பொறுப்

[திரு. கு. சுப்பராயன்] [1986 ஏப்ரல் 30

புள்ள அதிகாரிகளே சொல்லியிருந்தும்கூட, அதுபற்றி உரிய கண்காணிப்பு செய்யவோ, கழிவுநீரை வெளியேற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆகவே, இது ஸ்டான்லி மருத்துவமனையோடு முடிந்து போகின்ற விஷயம அல்ல. தமிழ்நாடு முழுவதும் இப்படிப்பட்ட விஷயம் நிலவிக்கொண்டிருக்கிறது.

அதிலும், குறிப்பாக மருத்துவமனைகளைப் பொறுத்தவரையில், நோயாளிகளின் படுக்கைக்கு அருகிலே, பக்கத்திலேயே சுத்தம் செய்யப்படாத கழிவறைகள் இருக்கின்றன. அதில் உள்ள கொடூரமான துர்நாற்றத்தின் மூலமாக அங்கே நோய்கள் கடுமையாக ஏற்பட வாய்ப்புக்கள் இருக்கின்றன. இதைப்பற்றியும் முழுவதுமாக விவாதிக்க வேண்டிய அவசியமும் இருக்கிறது.

அதைப்போலவே, டெல்லி நாடாளுமன்றத்திலே ஒரு செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. நாடாளுமன்றத்திலே சுகாதார அமைச்சர் அவர்கள் ஒரு செய்தியை வெளியிட்ட பின்னர்தான் தமிழ்நாட்டிற்கு அந்தச் செய்தி தெரிந்திருக்கிறது. உலகத்தையே குலைய வைக்கின்ற எய்ட்ஸ் என்ற அந்த நோய் இந்தியாவிலேயே முதன் முதலாகத் தமிழ் நாட்டிலேதான் ஆறு பெண்களுக்கு ஏற்பட்டிருப்பதாகவும், தமிழ்நாடு அரசின் துணையோடு நடவடிக்கை எடுத்துவருவதாக— தமிழ்நாடு சட்டமன்றத்தில் அல்ல, தமிழ்நாடு சுகாதாரத் துறையில் அல்ல, டெல்லி நாடாளுமன்றத்திலே சொல்லப்பட்ட பிறகு, அது பத்திரிகையிலே வெளிவந்த பிறகுதான் இங்கே கூடத் தெரிந்திருக்கிறது என்றால் இந்த மாநில அரசு, இந்த சுகாதாரத் துறை என்ன செய்துகொண்டிருக்கிறது ? சுகாதாரத் துறை தமிழ்நாட்டிலே இயங்கிக் கொண்டிருக்கிறதா ? மத்திய நாடாளுமன்றத்திலே அமைச்சரால் அறிவிக்கப்பட்ட பிறகு,—தமிழ்நாட்டு அதிகாரிகள் அறிவித்திருப்பதாகச் சொல்கிறார்கள். அது பற்றி எங்களுக்குத் தகவல் இல்லை என்று சுகாதார அமைச்சர் நாடாளுமன்றத்தில் சொல்கிறார், தமிழக அரசின் துணையோடு நோய்த் தடுப்புக்கு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதாக— ஆனால் மாநில அரசாங்கத்தின் அதிகாரிகள் என்ன சொல்கிறார்கள் என்றால் அது பற்றித் தகவல் இல்லை என்று சொல்லி இருப்பதாகப் பத்திரிகைகளிலே செய்திகள் வந்திருக்கின்றன. இப்படி முன்னுக்குப்பின் முரணான வகையிலே செய்திகள் வந்துகொண்டு இருக்கின்றன.

மிகவும் காலதாமதமாக இந்த விஷயத்தில் தலையிட்டு தற்போது இந்த மாநில அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருவதானது. உயிரைப் பலியிட்ட கிரிமினல் நடவடிக்கையாக இருக்கிறது என்பதால் இதைப்பற்றி முழுமையாக விவாதிப்பதற்காக பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று நான் வலியுறுத்துகின்றேன்.



1986 ஏப்ரல் 30]

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத்
தலைவரவர்களே, தமிழகத்திலே நிலவுகின்ற அதிர்ச்சி தரத்தக்க
இரண்டு முக்கியமான விஷயங்களைக் குறித்து பேரவையின இதர
அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்பதற்காக நாங்கள்
தீர்மானங்களைக் கொடுத்திருக்கின்றோம். எனக்கு முன்னால்
பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினரவர்கள் சொன்னதைப்
போல, சட்டப் பேரவைக் கூட்டம் நடந்து கொண்டிருக்கும்
இந்தக் கால கட்டத்திலேயே தமிழ்நாட்டின் தலைநகரமாக
விளங்கக்கூடிய இந்தச் சென்னை மாநகரத்திலே, அதுவும் நோய்
தீர்க்கும் இடமாக இருக்கின்ற ஸ்டான்லி மருத்துவமனையிலே,
நோயைத் தீர்ப்பதற்காகப் பணியாற்றிக் கொண்டிருந்த ஒரு செவி
லியருக்கும், அவருக்குத் துணையாக அங்கே பணியாற்றிக் கொண்
டிருந்த சற்றேறக்குறைய அறுபதுக்கும் மேற்பட்ட செவிலியர்
களுக்கும், ஏன் வைத்திய மாணவர்களுக்கும் நோயினால் பாதிப்பு
ஏற்பட்டதாக ஏடுகளில் செய்திகள் வந்திருக்கின்றன.
இது வேறு ஏதோ நோயாக இருக்குமோ என்று கருதிக்கொண்
டிருந்த நேரத்தில், நல்ல வேளையாக இந்த நோய் குடிதண்ணீ
ரால் வந்தது என்ற செய்தி சற்று ஆறுதலைக் கொடுத்திருக்கிறது.
சென்னை போன்ற பெரு நகரங்களிலேயும், இன்னும் பல்வேறு
நகரங்களிலேயும் நோய்களைத் தீர்ப்பதற்கான பணியிலே ஈடுபட
வேண்டிய இந்தச் சூழ்நிலையிலே, சாதாரண இந்தக் குடிநீர்த்
தேக்கத்தொட்டி சரிவர பராமரிக்கப்படவில்லை ; கண்காணிக்
கப்படவில்லை என்ற நிலைதான் இருக்கிறது.

சாதாரணமாக குடிநீர்த் தொட்டியைக் கண்காணிப்பதற்கு
ஒரு நாளைக்கு இரண்டு மூன்று நிமிடங்கள் எடுத்துக்
கொண்டால் போதுமானது. இப்படி இதைத் தீவிர
மாகப் பார்த்து அந்தக் குறைகள் களையப்பட்டிருந்
தால் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டிருக்காது. பல நாட்
களாகக் குடிநீர்த் தேக்கத் தொட்டியைப் பார்க்காத காரணத்
தினால்தான், எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பின
ரவர்கள் குறிப்பிட்டதைப் போல, எலிகள் செத்து, ஊதி,
வெடித்து சிதறி— சொல்வதற்கே அருவருப்பாக இருக்கிறது. இப்
படிப்பட்ட குடிநீர்த் தேக்கத் தொட்டியைச் சரிவர பார்க்காத
காரணத்தினால், குடிதண்ணீர் பாதிக்கப்பட்ட காரணத்தினால்,
ரெஜினா என்ற செவிலியர் இறந்திருக்கிறார் ; இன்னும் சில
பேர் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தி
களெல்லாம் வருகின்றன. நான் கேள்விப்படுகிறேன், தமிழகத்
தின் பல்வேறு பெரிய நகரங்களிலேயும், சிற்றூர்களிலேயும் எலி
களைப் பிடிப்பதற்கு முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன.
ஆனால், சென்னைப் பெரு நகரத்தைப் பொறுத்த வரையில்
நம்முடைய மாநகராட்சியானது எலிகளைப் பிடிப்பதற்கு அதிக
மான அக்கறையைச் செலுத்தவில்லை என்று கேள்விப்படுகிறேன்.
எலி மருந்து வைத்துப் பிடிப்பது, எலிப்பொறி வைத்துப் பிடிப்பது,
எலிகளைக் கட்டுப்படுத்துவது ஆகிய பொறுப்பு மாநகராட்சிக்கு
இருக்கிறது. அதைப்போல ஒவ்வொரு ஆண்டும் வருகின்ற

வெள்ளம், வறட்சி போன்ற காலங்களில் எலிகள் பெருகி நோய்களைப் பரப்புவதைத் தடுப்பதற்கு அந்தத் துறையும் மாநகராட்சியும், ஏனைய துறைகளும் அதிக அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக மேல்நிலைத் தொட்டிகளைச் சரிபார்க்கிற நேரத்தில் — மாண்புமிகு உறுப்பினர் அவர்கள சொன்னது போல் குடிநீரும் சாக்கடை நீரும் கலக்கக்கூடிய ஒரு அபாய நிலை ஏற்படுவது எதிர்காலத்தில் தவிர்க்கப்பட வேண்டும். தமிழகத்தில் நடைபெற்ற இவ்வாறான சாவு கடைசிச் சாவாக இருக்க வேண்டும், அதற்கான முழு முயற்சிகளையும், ஏற்பாடுகளையும் முன் எச்சரிக்கையாக அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் முதலாவதாகக் கேட்டுக்கொளகிறேன். அதைப்பற்றி விவாதிக்க இந்தச் சபையின் இதர நிகழ்ச்சிகளை ஒத்திவைக்க வேண்டுமென்று முதலாவதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, நம்முடைய நெஞ்சங்களை உருக்குகிற செய்தியாக இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழகத்தில் தான் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகவும், ஆறு பெண்களுக்கு இந்த 'எயிட்ஸ்' (AIDS) நோய் என்று சொல்லக்கூடிய நோய் வந்திருப்பதாக இன்றைய செய்தி ஏடுகளில் செய்திகள் வந்திருக்கின்றன. அதில், நேற்றையதினம் டெல்லி மாநகரில் கூடிய தேசீய வளர்ச்சிமன்றக் கூட்டத்தில் மேன்மைக்குரிய பிரதமர் திரு. ராஜீவ் சாந்தி அவர்கள் இதைப்பற்றிக் குறிப்பிட்டு மாநிலங்களில் இருக்கிற எல்லா முதல் அமைச்சர்களும் இதில் அதிக அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்வதிலிருந்து இந்தப் பிரச்சினையின் கடுமை நமக்குத் தெரிகிறது. ஆகவே, இந்த வியாதி அல்லது நோய் தமிழகத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லும்போது ஏன் அது இந்த அவையில் முதலாவதாகத் தெரிவிக்கப்படவில்லை என்ற வினாவை என்னால் எழுப்பாமல் இருக்க முடியவில்லை. ஒரு கட்டத்தில் நமது வைத்தியர்களால், நம்முடைய துறை அதிகாரிகளால் இந்தியாவில் முதன்முறையாக இந்த நோய் தமிழகத்தில் கண்டு பிடிக்கப்பட்டதை நான் பாராட்டுகிறேன். ஒரு பெரிய மாநிலத்திலே ஆறு பேர்களுக்குத் தான் நோய் கண்டிருக்கிறது என்று சொல்லும்போது அதுபற்றிய முழுமையான ஆராய்ச்சி நடந்திருக்கிறதா என்ற சந்தேகம் எழுகிறது. அவசர உணர்வோடு இந்த நோயைத் தடுப்பதற்கான இந்த முயற்சிகளை எடுத்துக்கொள்ள வைத்தியத்துறைக்கு ஒரு சவாலாகவும் இந்த நோய் இன்று இருந்துகொண்டிருக்கிறது. ஆறு பேர்களுக்கு மட்டும்தான் இந்த நோய் வந்திருக்கிறதா அல்லது நிறையப் பேர்களுக்கு இருக்கிறதா, அதில் எந்தளவிற்கு இந்த அரசாங்கம் எப்படிப்பட்ட பரிசோதனையை மேற்கொள்ள இருக்கிறது, அப்படி நோய்வாய்ப்பட்டவர்கள் இருப்





பார்களேயானால் எந்த முறையில் அதைத் தடுக்க இருக்கிறார்
கள் என்பதைப்பற்றியெல்லாம் விரிவாக விவாதிக்க இந்தச்
சபையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும். இல்லை
என்று சொன்னால் இன்னொரு சமயத்தில் இதுகுறித்து ஒரு
அரைமணி நேர விவாதத்தை வைத்துக்கொள்ள வேண்டும்.
அல்லது பூர்வாங்கமான அறிக்கை ஒன்றை— இன்று மாண்புமிகு
மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லப்
போகிறார்கள். ஒரு விரிவான வெள்ளை அறிக்கையை இந்த
மன்றத்திற்குக் கொடுப்பார்களேயானால் அதன்மூலம் தமிழகத்
தில் இருக்கிற மக்களும் இந்தத் துறையில் இருப்பவர்களும்
இதை எண்ணிப்பார்த்து எதிர்காலத்தில் இப்படி ஏற்படுவதைத்
தடுப்பதற்கான முறைகளை மேற்கொள்ள இயலும் என்று
சொல்லிக்கொள்கிறேன். இன்றைய செய்தி ஏடுகளைப் பார்க்
கும் போது சென்னையில் உள்ள ஒரு அபய நிலையத்தில் கூட
ஒரு சிலருக்கு இந்த வியாதி வந்திருப்பதாகச் சொல்கிறார்கள்.
ஆகவே இந்த நோயை எப்படியும் கட்டுப்படுத்தியே தீர
வேண்டும். உலக சுகாதார சபை சொன்ன ஒரு சில கருத்துக்
களை இங்கே சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று நான்
கருதுகிறேன்.

I quote, "However, though the risk of infection with the virus during
casual contact may be extremely remote, infection is clearly not impos-
sible. The people should therefore take steps to protect themselves
against possible contamination just as they would when coming into
contact with other infected persons. This means observing high
standards of hygiene and cleanliness which, in the home, would include
washing dishes in hot, soapy water rather than simply running them
under the tap : washing hands thoroughly after contact between people
that might involve the exchange of any body fluid, particularly blood and
thorough laundering or safe disposal of soiled materials."
என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இந்த நோய் பரவாமல்
தவிர்க்கப்பட வேண்டும். அதுவும் வளருகிற சமுதாயத்தில்
இருக்கிறவர்களுக்கு இந்த நோயினால் எந்த அளவிற்கு பாதிப்பு
ஏற்பட்டிருக்கிறது என்று புரியவில்லை. இன்னும் சொல்லப்
போனால் இந்த நோய் .............. (மணியடிக்கப்பெற்றது)
வெளிநாடுகளிலிருந்து குறிப்பாக அமெரிக்கா போன்ற நாடுகளி
லிருந்து வருகிறது என்று சொல்கிறார்கள். ஆகவே வெளி
நாட்டுப் பயணிகள் இங்கே வருகிற நேரத்தில் அவர்களை
சரியான முறையில் பரிசோதனை , முறையான பரிசோதனை
செய்து, இன்னும் கொஞ்சம் கடுமையான அளவில் பரிசோதனை
செய்து அவர்கள் மூலம் பரவாமல் இருப்பதற்கும், இந்த
நோயை அறவே தடுப்பதற்கான முயற்சியை மேற்கொள்ள
வேண்டும் என்பதைப்பற்றியெல்லாம் விரிவாக விவாதிக்க
இந்தச் சபையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டு
மென்று கேட்டு அமர்கிறேன்.

(திரு. என். எஸ். வி. சித்தன்) [1986 ஏப்ரல் 30

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு.
பொன்னுரங்கம் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு.
வி. பி. சிந்தன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்ப
ராயன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. என். எஸ். வி.
சித்தன் அவர்களும் இங்கே இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை
மொழிந்து வழிமொழிந்து சில கருத்துக்களை பேசியிருக்கிறார்
கள். இதற்கான சில விளக்கங்களை நான் கொடுப்பது பொருத்த
மாக இருக்கும் என்று கருதுகிறேன். முதலாவதாக,
ஸ்டான்லி மருத்துவமனையில் நடைபெற்ற சம்பவத்
தைப்பற்றி இங்கே சொல்லியிருக்கிறார்கள் அபாயமாக
அங்கே எலிகள் இருந்திருக்கின்றன என்பதையெல்லாம் இங்கே
சொன்னார்கள். இந்த 'லெப்டோஸ்பைரோஸிஸ்' வியாதியைப்
பொறுத்தவரையில் எலிகளின் மூத்திரமும் அதே நேரத்தில்
குடிக்கக்கூடிய தண்ணீரானும் மலமும் அசுத்தமான பொருள்
கள், மலம், ஹியூமன் எக்ஸ்கிரீட்டா, எலி எக்ஸ்க்ரீட்டா
என்று இப்படிப்பட்ட சில பொருள்கள் கலந்து கொள்வதன்
காரணமாக அப்படிப்பட்டதொரு நிலைமை ஏற்படும். இந்த
'லெப்டோஸ்பைரோஸிஸ்' டயக்னோஸிஸ்-ஐப் பொறுத்த
வரையில் அதை அங்கே இருக்கக்கூடிய ஆஸ்பத்திரியில் இல்லை
என்று மறைக்கப் பார்த்தார்கள் என்ற ஒரு கருத்தை மாண்பு
மிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் சொல்லி
யிருக்கக்கூடிய கருத்தில் ஒரு பகுதியில் உண்மை ஒரு பகுதி
என்றால் அதிலே உள்ள சில உண்மைகளை இங்கே நான்
சொல்ல விரும்புகிறேன்.

[முற்பகல் 9-30]

டீன் அவர்களிடம் அப்படிப்பட்ட அறிக்கையை நீங்கள்
கொடுத்தீர்களா என்று கேட்டேன். அப்படி ரிப்போர்ட்
கொடுத்தீர்களா என்று கேட்டதற்குக் காரணம், இப்படிப்
பட்ட விஷயங்களை நாம் மக்களிடம் சொல்வதுதான் நல்லது.
அப்படி சொன்னால்தான் அங்கிருக்கக்கூடிய மக்கள் எச்சரிக்கை
யோடு இருக்க முடியும் என்பதற்காக நேற்றைய தினம் என்னு
டைய அறைக்கு டீன் அவர்களை அழைத்துக் கேட்டேன்.
"மெனிஞ்ஜிடிஸ்" என்பதால் இறந்தார்கள் என்று சொன்
னேன். 'லெப்டோஸ் பைரோஸிஸ்' என்று சொன்னார்கள்.
Let us leave it and that
'லெப்டோஸ் பைரோஸிஸ்' என்பது உண்மையா என்பதற்கு
என்ன அடையாளம்? மைக்ரோஸ்கோப் மூலமாகப்
பார்த்து, இதை எளிதாகக் கண்டுபிடிக்க முடியும். டார்க்
ரூமில் மைக்ரோஸ்கோப் மூலம் கண்டுபிடிக்க முடியும்.



1986 ஏப்ரல் 30] [டாக்டர் எச். வி. ஹண்டே]

இன்னொரு கருத்தையும் சொன்னார்கள். ஒரு மருத்துவ
மனையில் செய்வதைவிட பல்வேறு மருத்துவமனைகளை
பயன்படுத்திக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். இந்த
கருத்து நல்லது என்று எங்களுக்கும் தோன்றியது. உடனடி
யாக, மெட்ராஸ் மெடிகல் காலேஜில் இருக்கக்கூடிய மைக்கு
ரோஸ்கோப்பையும், வெடர்னரி காலேஜில் உள்ள மைக்ரோஸ்
கோப்பையும் பயன்படுத்தி இன்னும் துரிதமாக 'பிளட்
சாம்பிள்ஸ்' எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன்.
சென்ற சில நாட்களாக எடுக்கப்பட்ட கணக்கைப் பார்த்தால்,
25—4—1986 அன்று 25 பிளட் சாம்பிள்களும், 26—4—1986
அன்று 41 சாம்பிள்களும், 27—4—1986 அன்று 18 சாம்பிள்
களும், 28—4—1986 அன்று 43 சாம்பிள்களும், 29—4—1986
அன்று 38 சாம்பிள்களும் எடுக்கப்பட்டன. ஒவ்வொரு பிளட்
சாம்பிளுக்கும் கிட்டத்தட்ட, 10, 15 நிமிடங்கள் ஏற்படு
கின்ற காரணத்தினாலும், இன்னும் புதிதாக எல்லா செக்ஷன்
களுக்கும் எடுக்க வேண்டியிருப்பதாலும் இன்னும் துரிதமாக
செய்ய வேண்டியிருக்கிறது. மேலும், அங்குள்ள மாணவர்கள்
எல்லோருக்கும் இதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்
கொண்டார்கள். இப்படிச் செய்தால், அவர்கள் எல்லோரும்
பரீட்சை முடிந்த பிறகு வீட்டிற்குச் செல்ல வசதியாக இருக்கும்
என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த வகை
யிலே உடனடியாக துரிதமாக இதனைச் செய்ய வேண்டுமென்று
சொல்லியிருக்கிறோம்.

அடுத்தும் இன்னொரு கருத்தையும் சொன்னார்கள். நகரத்தி
லுள்ள பல இடங்களிலுள்ள மெட்ரோ வாட்டர் பைப்புகளை
பரிசோதனை செய்ய வேண்டும் என்று சொன்னார்கள்.
மெட்ரோ வாட்டரில் 60 இடங்களில் எடுத்தோம். அதிலே 56
இடங்களிலே கன்டாமினேஷன் இருக்கிறது என்று சொன்னார்
கள். நீங்கள் சொல்வதுபோல் அப்படிப்பட்ட நிலைமை
இல்லை. மற்றும் சில இடங்களில் 'புவர் குவாலிடி' யாக
இருக்கிறது என்று சொன்னார்கள். அதனை உடனே பரிசீலனை
செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, அண்ணா பூங்காவைப் பற்றிச் சொல்லப்
பட்டது. அந்த அண்ணா பூங்கா சோர்சைப் போய் பார்த்ததிலே,
அது ஓ. கே. என்ற தகவல் கிடைத்திருக்கிறது. இவைகளை
எல்லாம் செய்து கொண்டிருக்கிறோம் என்பதை நான் இந்த
நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே இன்னொரு கருத்தும் சொல்லப்பட்டது. அது
என்னவென்றால், அந்த நர்சுகளுக்கு, செவிலியர்களுக்கு
பணம் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். அங்கே
ஏற்கனவே ஒரு டெலிவிஷன் இருக்கிறது என்ற தகவல் கிடைத்
திருக்கிறது. There is already a big colour T. V. in the

recreation lounge of the Nurses' Hostel. So, the information that the money collected for the T.V. was used for transporting the dead body is not correct. Nobody has approached any of the authorities for any assistance. என்ற குறிப்புகள் எல்லாம் இங்கே வந்திருக்கிறது. இருந்தாலும் இவைகள் எல்லாம் நல்லபடியாக கவனிக்கப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்த மாணவியைப் பொறுத்தவரையில், 11—4—1986 அன்று One student nurse by name Selvi Regina was admitted with fever in the Nurse Sick Room, Government Stanley Hospital, Madras-1, on her return from Kanniyakumari. She was immediately given all possible treatment. She showed signs of cerebral damage and mid-brain damage and passed into Stuper Coma for three days and was therefore treated in the Intensive Medical Care Unit. Inspite of the treatment, the student-nurse died. Investigation reveals that the death reported is not due to A.I. DS. (Acquired Immuno Deficiency Syndrome). The blood of the student-nurse was positive for both LEPTOSPIRA and malarial parasite. The possibility of other infections also could not be ruled out, as it is difficult to isolate organisms from the blood of patients who have already consumed antibiotics. The death could be said to be due to MENINGITIS followed by CARDIAC RESPIRATORY ARREST, which could have been due to LEPTOSPIRA or other organisms. என்ற தகவலை மாமன்றத்திற்குச் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்பதற்காகச் சொல்லுகிறேன். இன்னும் என்ன நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைச் சுருக்கமாகச் சொல்கிறேன். Government Stanley Hospital authorities have started bacteriological examination of serum and urine of all the persons reporting even mild sickness leading to suspicion of LEPTOSPIROSIS. சந்தேகத்திற்கு உரிய நிலைமை இருந்தால்கூட எல்லோரையும் பரிசோதனை செய்யவேண்டும் என்று சொல்லியிருக்கிறேன்.

இரண்டாவதாக, The patients are treated daily with CRYSTALINE PENICILLIN TETRO CYCLINE CAPSULES, with ERYTHROCIN tablets and, injection STREPROMICIN. அந்த மருந்துகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

மூன்றாவதாக, Madras Metropolitan Water Supply and Sewerage Board has taken steps to chlorinate the water pipes, sumps and overhead tanks on a war footing action.



Fourthly, all Doctors, House Surgeons, Medical students, Nursing staff and students and other paraprofessionals have been advised to consume boiled water and take presumptive treatment.

Fifthly, a panel of nearly 20 doctors including 6 Chief Physicians with 18 Assistant Professors of Medicine and Nephrologist and Professor of Neurology has been formed to maintain surveillance. அந்த வகையிலே ஒரு குழு அமைத்திருக்கிறோம். Taking the House into confidence இன்னொரு நடவடிக்கையை எடுத்திருக்கிறேன், அதனை இந்தமன்றத்திலே சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன். ஏனென்றால் இங்கே தவறு செய்யக்கூடிய அதிகாரிகளுக்கு வக்காலத்து வாங்குவதற்கு அமைச்சர் இல்லை என்பதையும் யாராவது தவறு செய்யக்கூடிய அதிகாரிகள் இருந்தாலும் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகவும் மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் சொன்ன மாதிரி, அதிகாரிகள் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகவும் சொல்கிறேன்.

I have asked the Health Secretary to take action against the concerned officials if there is any neglect after holding an enquiry. என்கிற வகையிலே, அதனை நாம் ஏற்படுத்தியிருக்கிறோம், செய்ய இருக்கிறோம். ஏனென்றால், அவர்களை இங்கே பாதுகாத்து பேசுவதற்காக அமைச்சர் யாரும் இல்லை என்பதற்காக நான் இதனைச் சொல்கிறேன். அந்த வகையிலே நாம் நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 'எய்ட்ஸ்' என்ற பிரச்னை இங்கே எழுப்பப்பட்டிருக்கிறது. Acquired Immuno Deficiency Syndrome என்ற ஒரு வியாதியைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது.

This disease was first discovered in 1981 in USA, in male homosexuals. The immune system is severely damaged and the person gets repeated and severe infections. Mortality rate is very high. The cause of this disease has been discovered in USA and France, to be due to a virus infection. The virus is called Lymphadenopathy associated virus (LAV) or Human Lymphotropic type 3 virus (HTLV III). In African countries HTLV-III infection is common among some population groups. This virus infection is transmitted through 4 channels.

1. Sexual contact. Both homosexual and heterosexual contact can transmit infection.
2. Blood transfusion and injection of some blood products.
3. Contaminated needles, as seen in intravenous drug abuses.
4. Mother to infant.

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1986 ஏப்ரல் 30

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் சொன்னதற்காகச் சொல்கிறேன். இது பொதுவான கருத்து. ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் கொஞ்சம் வேகமாகச் சொன்னார்கள். அது 'நாச்கால்'. ஆனால் நிலைமை என்னவென்றால், முற்றிலும் மாறான நிலைமையிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய அரசாங்கம் 1985 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் எல்லா மாநிலங்களுக்கும் தாக்கீது அனுப்பினார்கள். அக்டோபரில் தான் ஹெபடைடிஸ் என்று ஆய்வு அதிலே பார்த்துக்கொண்டது எல்லோருக்கும் பத்திரிகை வாயிலாகத் தெரியும். அக்டோபர் 1985-க்குப் பிறகு, டிசம்பர் மாதம் இதனைப் பற்றி எல்லா மாநிலங்களுக்கும் தாக்கீது அனுப்பினார்கள். ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் அதுபற்றி எல்லோரும் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன், 1985 ஆம் ஆண்டு மெடிக்கல் ஜர்னல்ஸ் மூலமாக நாம் தெரிந்து கொண்டவுடனே, Director of Medical Education-க்கு சொல்லி, எல்லோருக்கும் தாக்கீது அனுப்பி, உடனடியாக நீங்கள் ஒரு கமிட்டி ஏற்படுத்த வேண்டுமென்று இங்கே ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டது. To watch and monitor the incidence and prevalence of AIDS, before it becomes a Global news. தாக்கீது வந்தது, டிசம்பர் மாதம். எந்த இடத்திலே நமக்குக் [illegible]யிருந்து? ஐ.சி.எம்.ஆர். என்ற மத்திய அரசினுடைய பெரிய அமைப்பு—அதனுடைய தலைவர் டாக்டர் இராமலிங்கசாமி—மூலமாக வந்திருக்கிறது. அவர் எழுதி இருக்கக்கூடிய தாக்கீதில், ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு கமிட்டி அமைக்க வேண்டுமென்று எல்லா மாநிலங்களுக்கும் அனுப்பினார்கள். நாங்கள், நீங்கள் சொல்வதற்கு முன்பாகவே, ஒரு கமிட்டி ஏற்படுத்தி இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறோம்.

(முற்பகல் 9-40)

அது மட்டுமல்ல, நேற்றையதினம் ஒரு ரெவியூ மீட்டிங் டெல்லியில் நடத்தினார்கள். அந்த ரெவியூ மீட்டிங்கில்,

The officials there said that in one State it has taken serious stage. ஒரு ஸ்டேட் மட்டும்தான், ஒரு மாநிலம் மட்டும்தான், உடனடியாக கமிட்டி ஏற்படுத்தி, அதைக் கண்டு பிடிப்பதற்காக ஏற்பாடுகள் செய்திருக்கின்றது என்று சொன்னார்கள். நாம் இங்கே கமிட்டி அமைத்தது மட்டுமல்லாமல் வல்னரபுள் செக்ஷன் எங்கெங்கே இருக்கிறது என்று பார்த்து அவர்கள் ரத்தத்தை எல்லாம் பரிசோதனை செய்ய ஆரம்பித்திருக்கிறோம்.



"About the middle of 1985 a Committee with the Director of Microbiology as Convenor with the following members was constituted under instructions of Tamil Nadu Government to gather information and plan for a study of the incidence of AIDS.

1. Dr. C. S. Lakshminarayana, Director of Microbiology MMC.
2. Dr. Sarada Shanmugasundaram, Director, King Institute.
3. Dr. Sunithi Solomon,
4. Dr. Gopalakrishnan,
5. Dr. Padmanabhan,
6. Dr. Kantharaj.

ICMR sent a circular about the need to study further and established centres in Poona, Vellore and New Delhi for screening blood.

என்ன செய்திருக்கிறார்கள் என்றால் 3 இடங்களிலே அவர்கள் பரிசோதனை செய்வதற்கு அமைப்புகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஒரு இடம் வேலூரில் டாக்டர் ஜேகப் ஜான் என்பவருடைய தலைமையில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இரண்டாவது இடம் புனாவில் இருக்கிறது. இந்த இரண்டு இடங்களும் ரெபரிங் இடங்கள். மூன்றாவது இடம் ஐ.சி.எம்.ஆர். உள்ளேயே டெல்லியிலேயே ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

Being aware of the significance and the possible complications of this problem and pending the sanction of adequate staff and equipment, our officers were requested to take up this work. As special project blood samples from 200 persons were collected at random from representative areas where conditions of prospective virus population was possible. These areas include restricted population where promiscuity was expected. Every attempt has been made to identify homosexual, heterosexual and common modes of person to person serum transmission by instruments, habits or perversities as injections, promiscuous behaviour or altered mental behaviour. Out of 200 specimen 126 were subjected to sophiscated Elisa (Enzyme Linked Immunosorbent Assay). . இம்மாதிரி இது ஜாஸ்தியாக இருக்கக்கூடிய இடங்களை எல்லாம் பார்த்து மானிட்டர் செய்து, ரேடார் பார்க்கின்ற மாதிரியாக 200 இடங்களை எடுத்து ப்ளட் சேம்ப்புள் எடுத்ததற்கு பிறகு 126 ப்ளட் சாம்புள்களை பிகரஸ் என்று சொன்னால் எலிசா (Enzyme Linked Immunosorbent Assay) செய்திருக்கிறோம். —126 were subjected to sophiscated ELISA test which was done at CMC

Vellore, which is one of the Regional centres set up by ICMR. Out of this, 11 samples from positive cases were sent to USA for con- rmation tests of Western blot at National Institute of Health.

இந்த 126-லே நமக்கு 11 பாசிட்டிவ் கேசஸ் கிடைத்திருக்கின்றன. அந்த 11 சாம்பிள்ஸ் நாம் என்ன செய்தோம் என்றால் மீண்டும் ஐ.சி.எம். ஆரில் கொடுத்து நீங்கள் அமெரிக்காவிற்கு அனுப்புங்கள் என்று சொன்னோம். அவர்களும் அதை உடனடியாக அமெரிக் காவுக்கு அனுப்பினார்கள். எந்த இடத்திற்கு என்றால்

National Institute of Health, Bethesda (U.S.A.). It is near Washington Six of these were confirmed positive. All the six cases are under surveil lance, they are being clinically followed up for evidence of any disease- and attempts are being made to enlarge the studies on vulnerable groups. Necessary equipment and staff are being provided to Microbiology Department of Madras Medical College for a Statewide screening. The Government of Tamil Nadu has made arrangements to take care of these positive cases and for prevention of spread of the disease. Procedures have been established to screen blood from suspected donors before transfusion. இந்த 6 பாசிட்டிவ் கேசஸ் நம்முடைய அரசாங்கத்தினுடைய உயர் மட்ட அதிகாரிகள் பார்வையிட்டிருக்கிறார்கள். ஒரு கேள்வி எழுப்பலாம். நீங்கள் இத்தனை நாட்கள் மௌனமாக இருந்துவிட்டு மத்திய அரசாங்கம் சொன்னதற்கு பிறகு, நாங் கள் இங்கே கேள்வி கேட்ட பிறகு நீங்கள் எங்களுக்கு தகவல் கொடுக்கிறீர்களே, முன்பே கொடுத்து இருக்கலாமே என்று கேட்கலாம். இது நியாயமான கேள்வி. நான் முதலமைச்சர் அவர் களிடம் சொன்னேன். We are constantly keeping him informed. இதை உடனடியாக சட்டசபையில் அறிவிக்கலாமா என்ற பிரச் சனை வந்தபோது இதற்கு, சம்மந்தப்பட்ட ஐ. சி, எம். ஆர் தலைவர் டாக்டர் இராமலிங்கசாமி விரைந்து சென்னைக்கு வந்தார்கள்,

சென்னைக்கு வந்து அவர் சொன்ன கருத்தைச் சொல் கிறேன். ப்ரைம் மினிஸ்டர் பலமுறை கேட்கிறார்கள்—எல்லா மாநிலத்திலிருந்தும் கேட்கிறார்கள். ஏதாவது செய்தி வந்தி ருக்கிறதா என்று. ஆனால் நீங்கள் சுறுசுறுப்பாகப் பார்த்துச் சொல்லியிருக்கிறீர்கள், இதனைப் பல இடங்களில் யாரும் சீரியஸாக எடுத்துக்கொண்ட மாதிரி தெரியவில்லை என்கிற வகையில் நாம் சுறுசுறுப்பாக நடவடிக்கை எடுத்துக்கொண்ட தற்காகப் பாராட்டினார்கள். அதற்குப் பிறகு நாங்கள் தகவல் சொல்லிவிடலாமா என்றுசொன்னபோது இருங்கள் என்று சொன் னார்கள். நீங்கள் கொடுத்திருக்கிற அந்த 6 பாஸிட்டிவ் கேஸஸ் பொறுத்தவரையில் மீண்டும் டெல்லியில் டெஸ்ட் செய்து





Lymphotropic particles எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறது
என்று பார்க்கவேண்டும். அது பாதிக்கப்படவில்லை என்றால் நாம்
பீதியை மக்களிடத்திலே பரப்பவேண்டிய தேவையில்லை.
"Please hold on for three more days before announcing in the Assembly
or in any other place''. என்று டாக்டர் இராமலிங்கசாமி அங்கே
சென்று அங்கேயிருந்து தொலைபேசி மூலமாகத் தெரிவித்தார்கள்.
நேற்று காலையில் அவர்கள் என்ன செய்தார்கள் என்றால்
அவர்களுடைய ஐ. சி. எம். ஆர். இன்ஸ்டிட்யூட்டிலே
Lymphotropic particles பாதிக்கபபட்டிருக்கிறது என்று கண்டு
பிடித்து இருக்கிறார்கள். நேற்று காலையில் கண்டுபிடிக்கும்போது
10 மணி இருக்கும் என்று நினைக்கிறேன். உடனடியாக
இங்கே இருந்து அங்கே அனுப்பப்பட்ட டாக்டர்கள் மற்றும்
மேலே இருந்த டாக்டர் ஜேக்கப் ஜான் எல்லோரும் டெல்லிக்குச்
சென்று நேற்று மாலை 6 மணிக்கு அனவுன்ஸ் செய்யலாம்
என்று சொன்னார்கள். Central Government—I.C.M.R. Chairman
அங்கே இருக்கிறார்கள். அவர்கள் உடனடியாக மத்திய அர
சுக்குத் தகவல் கொடுத்து உடனடியாக மாண்புமிகு திரு.
மோஷினா கித்வாய் அவர்கள் பார்லிமெண்டிலே அறிவித்தார்
கள். இதை நான் எதற்காக சொல்கிறேன் என்று சொன்னால்
இங்கே தமிழகத்தில் தாமதம் கடைப்பிடிக்கப்படுகிறது என்று
இங்கே சொல்லப்பட்டதால்தான். அதற்குப் பதிலாக தமிழகம்
எச்சரிக்கையாக இருக்கின்ற காரணத்தால் பல இடங்களில் ஏதோ
தமிழகத்திற்குப் பரிசு தமிழகத்திற்குப் பரிசு என்று நம்மை நாமே
இழிவுபடுத்திக்கொள்ள வேண்டிய தேவையில்லை. இது உலகத்
தில் பல்வேறிடங்களில் இருக்கிறது. வளரும் நாடுகள் பலவற்றில்
இருக்கின்றன. இருந்தாலும் கூட நாம் எச்சரிக்கையாக இருந்து
கவனம் செலுத்துகிறோம். நேற்றைய தினம் அங்கேபோய்
இருக்கக்கூடிய அதிகாரிகளை எல்லாம் பார்த்து அங்கே இருக்கக்
கூடிய செயலாளர் அவர்கள் அதாவது அடிஷனல் ஹோம் செக்க
ரட்டரி திரு. உமாசங்கர் அவர்கள் நாம் சொன்னதைக் கேட்டு,
சீரியஸாக எடுத்துக்கொண்டிருக்கிறீர்களே, உங்களைப் பாராட்டு
கிறேன் என்று சொல்லக்கூடிய அளவுக்கு நிலைமை இருக்கிறது.
இங்கே வியாதி இருப்பதைப்பற்றி நான் சொல்லவில்லை,
வியாதிகள் பல்வேறிடங்களில் இருக்கின்றன, பெரிய நகரங்களில்
கூட இந்த வியாதி இல்லாமல் இல்லை, இருந்தாலும் கூட
இதை நாம் கண்டுபிடித்து We have opened the eyes of the entire
country to be careful.ஏன் என்றால் நம்முடைய நாட்டிலே இது
வரவே வராது என்ற அலட்சிய மனப்பான்மை இருக்கக்கூடாது
என்பதற்காகத்தான் நாம் இதைச் செய்து இருக்கிறோம்.

I should be apologetic அதாவது அவர்கள் சொன்னதற்குப்
பிறகுதான் நாம் சொல்லியிருக்கிறோம் என்பதற்கான விளக்கத்
தைத்தான் நான் சொன்னேன். நான் இதைச் சொல்லவேண்டும்
என்று இரண்டு முறை எண்ணினேன். 28 ஆம் தேதி மானியக்

கோரிக்கை வந்தபோது கூட நாம் சொல்லிவிடலாமே என்று
கூட நினைத்தேன். ஹோல்ட்ஆன் என்று சொன்னார்கள். ஆகவே
we held up. They are the Controlling Authority. Controlling Authority
என்ற அளவிலே மானிட்டர் செய்து கொண்டிருக்கிறார்கள்.
ஃபைனல் க்ளியரன்ஸ் அவர்கள் கொடுத்தார்கள். They are being
clinically followed up for evidence of any disease and attempts
are being made to enlarge the studies on vulnerable groups. Necessary
equipment and staff are being provided to Microbiology Department of
Madras Medical College for a Statewide screening. The Government
of Tamil Nadu has made arrangements to take care of these positive
cases and for prevention of spread of the disease. Procedures have been
established to screen blood from suspected donors before transmis-
sion வேலூரிலே ஒரு இடத்திலே இருந்தால் மட்டும் போதாது.
அதற்கான கிட் எல்லாம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொண்டிருக்கிறோம். வெளியே இம்போர்ட் செய்வதாக இருந்
தால் ஒரு கிட்—க்கு ஒரு பேஷன்ட்டுக்கு பரிசோதனை செய்வதற்கு
80 ரூபாய் ஆகும். எனவே நமக்கு கிட் எல்லாம் கொடுக்க
வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அதற்கு அவர்கள்
ஒத்துக்கொண்டு இருக்கிறார்கள். மாண்புமிகு பாரதப் பிரதமர்
அவர்கள் முதலமைச்சருக்குச் சொன்னதாகச் சொன்னார்கள்.
நேற்றைய தினம் கூட எனக்கு மாண்புமிகு முதலமைச்சர்
புரட்சித் தலைவர் அவர்கள் தகவல் அனுப்பினார்கள். இப்படி
அங்கே சொல்லப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள்....
(குறுக்கீடு). அந்த வகையில் இங்கே ஸ்க்ரீனிங் செய்வதற்கு ஏற்பாடு
செய்து கொண்டு வருகிறோம். ஸ்க்ரீனிங் என்பதைப் பொறுத்த
வரையில்—ப்ளட் கொடுக்கிற நேரத்தில் இரண்டு வகை வரு
கிறது. ஒன்று, high list donors இரண்டாவது சாதாரணமாகச்
செய்வது. அதற்காகத்தான் இந்த டோனர்ஸ் என்பதைப்
பொறுத்தவரையில் நாம் சொல்லியிருக்கிறோம்; இலவசமாகக்
கொடுக்கக்கூடியவர்கள் ஹைலிஸ்ட் டோனர்ஸ் அல்ல; பணத்
தைப் பெற்றுக்கொண்டு இரத்தத்தைக் கொடுக்கக்கூடிய
வர்கள் ஹைலிஸ்ட் டோனர்ஸ் ஆக வருகிறார்கள். ஆகவே,
இலவசமாகக் கொடுக்கக்கூடியவர்கள் ஹைலிஸ்டிலே வரமாட்
டார்கள். அந்த வகையில் அதற்கான ஏற்பாடு செய்ய வேண்டு
மென்று நாம் சொல்லியிருக்கிறோம். ஆனால், இங்கே எல்லா
வகையிலும் நாம் தாமதமாகச் செய்திருக்கிறோம் என்று சொன்
னார்கள். குறிப்பாக நம்முடைய திரு. ஜேக்கப் ஜான் என்று
சொல்லக்கூடிய வேலூரிலே இருக்கக்கூடிய டாக்டர், நான் ஏற்
கெனவே சொன்னேனே அந்த டீம் ஆஃப் டாக்டர்ஸ் ஆகிய
அவர்கள் எல்லாம் ஒவ்வொரு நாளும் ரொம்பப் பிரயாசைப்
பட்டு பண்ணியதற்காக அகில இந்தியாவே அவர்களுக்கு நன்றி
செலுத்தக்கூடிய அளவுக்கு அவர்களுடைய பணிகள் அமைந்
திருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்
கிறேன். தலைவர் அவர்களே, இங்கே கொண்டு வந்திருக்கக்கூடிய





லெப்டோஸ்பைரசிஸ்க்கும், இதற்கும் எந்த தொடர்பும் இல்லை.
அது முழுக்க முழுக்க வேறு விஷயம். இது முழுக்க முழுக்க
வேறு விஷயம். அவைகள் எல்லாம் தீர்ப்பதற்கு துரித நட
வடிக்கை எடுக்கப்படும் என்பதை மட்டும் சொல்லி, அவையின்
இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டாம் என்று சொல்லிக்
கொள்கிறேன்.

(முற்பகல் 9—50)

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, நீங்கள்
தீர்ப்புச் சொல்லிவிட்டால் இதில் பேச முடியாது. ஆகவே,
கேட்கிறேன். அந்த நோயைத் தீர்க்க என்ன நடவடிக்கை என்று
சொல்லவேயில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வேண்டுமானால் விவர
அறிக்கையை அது குறித்து அவையில் வைக்கச் சொல்லுகிறேன்.

**மாண்புமிகு டாக்டா எச். வி, ஹண்டே :** மாண்புமிகு தலை
வர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.எஸ்.வி.
சித்தன் அவர்களுடைய கோரிக்கையை நிச்சயமாக கவனிப்ப
தற்கு நம்முடைய இலாகா தயாராக இருக்கிறது. வேண்டுமா
னால், தெளிவான விவரமான அறிக்கை அது குறித்து இந்த
அவையில் வைப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு மக்கள் நல்
வாழ்வுத் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின்
இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவா
திக்கத் தேவையில்லையென்பதால் இதற்கு இசைவு மறுக்கப்
பெறுகிறது.

## 4. கவன ஈர்ப்பு

### (அ) உதகையில் குடிநீர்த் தட்டுப்பாடு

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் கே. உச்சி,
மா. சின்னராசு, மு. இராமநாதன், கே. கல்லன் ஆகியோர்
ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ள
னர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு வேளாண்மைத் துறை
அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. கே. கல்லன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, "நீலகிரி மாவட்டம், உதகை நகரத்தில் போதிய மழை
யின்மை காரணமாக குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால்,
கோடைக்காலத்தில் அங்கு சென்று தங்கும் உல்லாசப் பயணிகளுக்
கும், அந்நகரப் பொது மக்களுக்கும் ஏற்பட்டுள்ள இடர்ப்பாடு
கள் மற்றும் அதனைப் போக்க மேற்கொள்ளப்பட வேண்டிய
அவசர நடவடிக்கைகள் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம்
வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்
சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[1986 ஏப்ரல் 30

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :—

அறிக்கை

நீலகிரி மாவட்டத்திலுள்ள உதகமண்டலத்தில் கீழ்க்கண்ட நீர் ஆதாரங்கள் உபயோகத்தில் உள்ளன :—

| தண்ணீர் தேக்கத்தின் பெயர். | மொத்த கொள்ளளவு. (மில்லியன் காலன்கள்.) | மொத்த ஆழம் (அடிகளில்) | தற்போதைய நீர்மட்டம் (அடிகளில்.) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. பார்சன்ஸ் பள்ளத்தாக்கு .. .. | 4,250.000 | 70.00 | 70.00 |
| 2. மார்லிமண்ட் ஏரி | 54.500 | 23.60 | 3.00 |

| தண்ணீர்த்தேக்கத்தின் பெயர். | மொத்த கொள்ளளவு. (மில்லியன் காலன்கள்.) | மொத்த ஆழம். (அடிகளில்.) | தற்போதைய நீர்மட்டம். (அடிகளில்.) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 3. டைகர்ஹில் ஏரி .. | 30.500 | 39.00 | 18.10 |
| 4. கோரிசோலா .. | 15.000 | 36.00 | 7.00 |
| 5. மேல்தொடபெட்டா | 4.500 | 31.00 | 21.60 |
| 6. மேல்கொடப்பமண்டு | 1.500 | 12.00 | 10.50 |
| 7. கீழ்தொடபெட்டா | 0.500 | 14.00 | 6.00 |
| 8. கீழ் கொடப்பமண்டு | 0.117 | 13.00 | 5.50 |
| 9. பழைய ஊட்டி ஏரி | 0.096 | 6.00 | 3.50 |
| 10. கிளன்ராக் ஏரி | 0.012 | 7.00 | 7.00 |

ஒரு நாளைக்கு 50 காலன் தண்ணீர் வீதம் 1,05,000 மக்களுக்கு நாள் ஒன்றுக்கு 15,75,000 காலன் தண்ணீர் தேவைப்படுகிறது. சாதாரண சூழ்நிலையில் மேற்கண்ட ஏரிகளிலிருந்து





நாள் ஒன்றுக்கு 15,50,000 காலன் தண்ணீர் கிடைக்க வேண்டும். ஆனால், தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை போது மான அளவுக்குப் பெய்யாததால் மேற்கண்ட ஏரிகள் பலவற்றில் தண்ணீர் மட்டம் மிகவும் குறைந்துள்ளதாலும், சிலவற்றில் நீர் வறண்டு விட்டதாலும், உதகை நகரில் தண்ணீர் பற்றாக் குறை ஏற்பட்டுள்ளது.

மேலும் பார்சன் பள்ளத்தாக்கிலிருந்து நாள் ஒன்றுக்கு 10 இலட்சம் காலன் தண்ணீர் கிடைக்கிறது. இதில் 2.5 இலட்சம் முதல் 3 இலட்சம் காலன் வரையிலும் வெலிங்டனில் உள்ள பாது காப்புத் துறைக்கு கொடுக்கப்படுகிறது. எஞ்சியுள்ள தண்ணீர் உதகை நகராட்சிக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

குழாய்கள் மூலம் தண்ணீர் விநியோகம் செய்ய இயலாத இடங்களுக்கும், மேடான பகுதிகளுக்கும், ஏரிகள் வறண்டுபோன பகுதிகளுக்கும், உதகை நகராட்சிக்குச் சொந்தமான டாங்குகள் பொருத்திய 5 லாரிகள் மற்றும் 3 வாடகை லாரிகள் மூலமாகவும் தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது.

உதகை நகரில் தண்ணீர் பற்றாக்குறையை தீர்ப்பதற்காக பார்சன்ஸ் பள்ளத்தாக்கிலிருந்து நாள் ஒன்றுக்கு 20 இலட்சம் காலன் தண்ணீர் கிடைக்கக்கூடிய, பார்சன் பள்ளத்தாக்கு இரண் டாவது திட்டம் 500 இலட்சம் ரூபாய் செலவில் துவக்கப் பட்டுள்ளது.

இங்கே குழாய்க் கிணறுகள் தோண்ட முடியாத மலைப்பாங் கான நிலமாதலால் 9 திறந்த வெளிக் கிணறுகள் அமைக்கும் திட்டம் ஒன்றை நீலகிரி மாவட்ட ஆட்சியாளர் இந்த ஆண்டில் வறட்சி நிவாரணப் பணியின் கீழ் எடுத்துக்கொள்ள அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார். இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. கல்லன் : பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம் முழுவதும் குறிப்பாக உதகைப் பகுதியில், அறிக் கையில் குறிப்பிட்ட அளவுக்கு மேல் குடிதண்ணீர் தட்டுப்பாடு உள்ளது என்பது மறுக்க முடியாதது. மேலும், நீர்த்தேக்கங்களில் தற்போதுள்ள நீர் அளவு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதற்கும் குறைவாகவே தற்போது உள்ளது. கடுமையான வறட்சி நிலவுகிறது. மிகவும் ஏழைகள் வசிக்கும் பகுதிகளில் லாரிகள் மூலமாக வழங்கப்படும் குடிதண்ணீர் 3 அல்லது 4 நாட்களுக்கு ஒரு முறைதான் வழங்கப்படுகிறது. மாறாக வசதி படைத்த வர்களுக்கு லாரிகளில் கொண்டு வரப்பட்டு 250 ரூபாய்க்கு விற் கப்படுகிறது. அந்த நிலை மாற வேண்டும். 20 இலட்சம் காலன் தண்ணீர் கிடைக்க பார்சன் வேலி இரண்டாவது திட்டம்

கொண்டு வருவதற்கு அனுமதித்ததைக் குறித்து அரசுக்கு நன்றி
தெரிவித்துக்கொள்கிறேன். அதைத் துரிதமாகச் செயற்படுத்தி
யிருந்தால் அந்தப் பகுதியின் வறட்சி நிலையை ஓரளவிற்கு
குறைத்திருக்க முடியும். எனவே, நீலகிரி மாவட்டத்தை வறட்சிப்
பிரதேசமாக அறிவிக்க அரசு முன் வருமா ? அப்படி அறிவித்து
அரசு மற்றும் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள விவசாயக் கடன்
களைத் தள்ளுபடி செய்ய, உரிய துறைகளோடு ஆலோ
சித்து நல்ல முறையில் அறிவிக்குமா என்பதையும் அறிய விரும்புவ
தோடு, உதகை மாநகரத்தில் குதிரைப் பந்தயம் என்னும் சூதாட்
டத்தினால் பல்லாயிரக்கணக்கான மக்கள் அங்கு வருவதால் தண்
ணீர்ப் பஞ்சம் அதிகமாகிவிடுமாகையால், அந்த குதிரைப்
பந்தயத்தை தள்ளிப்போட அரசு முன் வருமா என்பதோடு,
ஏழைகளுக்குத் தண்ணீர் வழங்குவதில் முன்னுரிமையை அரசு
வழங்குமா எனவும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே,
தண்ணீர் என்பது காற்றைப் போல எல்லோருக்கும் பொது
வாக கிடைக்கப் பெற வேண்டிய ஒன்று. ஏழை பணக்காரர்
என்ற வேறுபாடு அதில் இல்லை. நாம் நிறைவேற்றுகின்ற குடி
தண்ணீர்த் திட்டங்கள் எல்லாமே ஊட்டியில் வாழ்கின்ற
அத்தனை பேர்களுக்கும் குடிதண்ணீர் அளிக்கப்பட வேண்டும்
என்ற அடிப்படையில்தான் போடப்படுகின்றன. பார்சன்ஸ்
பள்ளத்தாக்கு இரண்டாவது திட்டம் நிறைவேற்றுவதில் காலதாம
தம் ஏற்பட்டிருக்கிறது. வனத்துறையிடமிருந்து அனுமதி பெறு
வதற்காக காத்துக் கொண்டிருந்தது. இப்போது வேறு வகை
யிலே திருத்தி அமைக்கப்பட்டு அந்த முயற்சிகள் எடுத்துக் கொள்
ளப்பட்டிருக்கின்றன. ஆகவே, குடிதண்ணீரை மக்களுக்குக்
கொடுப்பதற்கு எந்தெந்த வகையிலே முயற்சிகள் மேற்கொள்
ளப்பட வேண்டுமோ அந்த அளவுக்கு முயற்சிகளை அரசு எடுக்
கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. இராமநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த மன்றத்திலே வைத்திருக்கிற அறிக்கையிலே
நீலகிரி மாவட்டம் உதகைப் பகுதிகளுக்கு தண்ணீர் வழங்கு
கின்ற விவரங்களைப் பற்றி, நீர்த்தேக்கங்களைப் பற்றி 10
பெயர்கள் குறிப்பிட்டுக் கொடுத்திருக்கிறார்கள். அதில் திரா
விட முன்னேற்றக் கழக அரசு இருந்த போது 40 இலட்சம்
செலவில் பார்சன்ஸ் பள்ளத்தாக்கு முதல் திட்டத்தை நிறை
வேற்றியது. இரண்டாவது திட்டத்தைப் பற்றி அமைச்சர் அவர்
கள் சொல்கிறபோது அதிலே காலதாமதம் எதனால் ஏற்பட்டது
என்று சொல்லிய போதிலும் கூட, உதகை நகரத்தினுடைய
முக்கியத்துவத்தை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். இப்போது
லாரிகள் மூலம் அங்கே தண்ணீர் சப்ளை செய்யப்படுவதாக
வும், அதில் 3 வாடகை லாரிகள் மூலமாகவும் தண்ணீர் கொடுக்
கப்படுவதாகவும் சொன்னார்கள். இவ்வளவு நெருக்கடியான



ண்ணீர்ப் பஞ்சத்தை சமாளிப்பதற்குச் சொந்தமாகக் கூட
-தகை நகராட்சி லாரிகள் எல்லாம் பெற்று தண்ணீர் சப்ளை
செய்யக் கூடிய வகையில் ஏற்பாட்டைச் செய்யலாம். ஒன்பது
றந்தவெளி கிணறுகளைப் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்
ில் சொல்லியிருக்கிறார்கள். அவை எத்தனை லிட்டர் தண்
ணீர் கெபாசிட்டி உள்ள கிணறுகளாக இருக்கும் ? ஒரு நாளைக்கு
0 காலன் தண்ணீர் வீதம் 1,05,000 மக்களுக்கு நாள் ஒன்
ுக்கு 15,75,000 காலன் தண்ணீர் தேவைப்படுகிறது. இப்
போது உதகையில் சீசன் காலமாக இருப்பதால் வெளியே இருந்து
மக்கள் அதிக அளவில் வருவார்கள். ஆகவே, நீலகிரியின் முக்
ியத்துவத்தை உணர்ந்து அங்கே வாழ்ந்து வரும் மக்கள் மற்றும்
வெளியேயிருந்து வருகிற பல்லாயிரக்கணக்கான மக்கள், சுற்று
லாப் பயணிகள் பயன்பெறுகின்ற அளவிற்கு அமைச்சர் அவர்கள்
போர்க்கால அடிப்படையில் என்ன திட்டத்தை மேற்கொண்
டிருக்கிறார்கள் ? ஒரு நாளைக்கு 50 காலன் தண்ணீர் ஒரு
குடும்பத்திற்கு கொடுக்க என்ன நடவடிக்கையை அரசு மேற்
கொண்டிருக்கிறது என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமநாதன்
அவர்கள் குறிப்பிட்டதைப் போல பார்சன் பள்ளத்தாக்குத்
திட்டத்தினுடைய இரண்டாவது திட்ட வேலைகள் விரைவில்
தொடங்கப்பட இருக்கின்றன. இப்போது பெருமளவில் மக்கள்
கூடுகிறதால் இப்படிப்பட்ட குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டி
ருக்கிறது. ஆகவே, இதைப் போக்குவதற்கு நகராட்சி மூலமாக
வும், குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகவும், நாம் எந்த
அளவிற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமோ அந்த
அளவிற்கு மேற்கொள்ளவிருக்கிறோம். தேவைப்பட்டால்
லாரிகள் மூலமாக குடிதண்ணீரைக் கொண்டு வருவதற்கான
ஏற்பாட்டை அரசு செய்யும்.

### (ஆ) மதுரை பால் பண்ணையிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் சுகாதாரக் கேடு ஏற்படுவதைத் தடுப்பது குறித்து

**திரு. ஆர். சிவக்குமார் :** தலைவர் அவர்களே, ''மதுரை
சமயநல்லூர் தொகுதிக்கு உட்பட்ட மதுரை பால் பண்ணையில்
இருந்து வெளியேறும் கழிவு நீரால் சுகாதாரக் கேடு ஏற்படு
வதால், அப்பகுதி வாழ் மக்களின் கவலை குறித்த'' அவசரப்
பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள்
நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரு
கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** தலைவர் அவர்களே.
பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

[டாக்டர் கா. காளிமுத்து] [1986 ஏப்ரல் 30

அறிக்கை.

மதுரையில், மதுரை-சிவகங்கை சாலைக்கு அருகில் சாத்த மங்கலத்தில் மதுரை கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத் தின் கீழ் இந்த பால் பண்ணை அமைந்துள்ளது. இப் பால் பண்ணை, மாதம் ஒன்றுக்கு 45 லட்சம் லிட்டர் பால், 180 டன் வெண்ணெய், 9 டன் நெய், 240 டன் பால் பவுடர் தயாரிக் கிறது. அன்றாட உபயோகம் மற்றும் தொழிற்சாலை உப யோகத்திற்கு நாளொன்றுக்கு முறையே 20,000 லிட்டர் மற்றும் 3 லட்சம் லிட்டர் நீரைப் பயன்படுத்துகிறது. பால் பண்ணை வளாகத்தில் உள்ள சொந்தக் கிணற்றிலிருந்தும், வைகை ஆற்றுப் படுகையில் உள்ள ஆழ்குழாய்க் கிணற்றிலிருந்தும் இது நீரைப் பெறுகிறது. ஆற்றுப் படுகை நீர் தொழிற்சாலை உபயோகத் திற்கும், கிணற்று நீர் குளிரூட்ட மற்றும் கொதி கலனுக்கும் பயன்படுகிறது. பால் பண்ணையிலிருந்து நாளொன்றுக்கு கழிவு நீர் 20,000 லிட்டரும், தொழிற்சாலைக் கழிவு நீர் 3 லட்சம் லிட்டரும் வெளியிடப்படுகிறது. பால் பண்ணையில் காலி பாட்டில்களைக் கழுவுவதினாலும், பால் பதனிடும் இயந் திரங்களைக் கழுவுவதினாலும் இயந்திரங்களிலிருந்து ஏற்படும் கசிவுகளாலும், தொழிற்சாலைக் கழிவு நீர் உண்டா கிறது. தொழிற்சாலைக் கழிவு நீரில், எண்ணெய் மற்றும் கொழுப்புப் பொருள்களும், உயிர் இரசாயன உயிரகத் தேவையும் (பி.ஓ.டி), கரைந்துள்ள திடப் பொருள்கள், மிதக்கும் திடப் பொருள்களும் உள்ளன. சுத்திகரிக்கப்படாத கழிவு நீர் நிலத் திலோ அல்லது நீர்நிலைகளிலோ வெளி விடப்பட்டால், துர் நாற்றம் ஏற்படவும், நீர்நிலைகள் மற்றும் நிலத்தடி நீர் மாசு படவும் காரணமாகும்.

கழிவு நீர், நச்சுத் தடைத் தொட்டியில் சுத்திகரிக்கப்படு கிறது. தொழிற்சாலைக் கழிவு நீர் தொட்டியில் சேகரிக்கப் பட்டு, சிறிது நேரம் காற்று செலுத்தப்பட்டு பின்பு ஒரு வடி கால் மூலம் வைகை ஆற்றில் சேருகிறது. 10–4–1986 அன்று பால் பண்ணையைப் பார்வையிட்டபோது, போதுமான சுத்தி கரிப்பு நிலையத்தை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும், சுத்திகரிப்பு செய்யப்பட்ட கழிவு நீரை, மாநகராட்சியின் வடிகால் குழாய்களில் வெளியேற்ற இருப்பதாகவும் கூறப்பட் டது. 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 26-வது பிரிவின்படி, பால் பண்ணை, தனது சாக் கடைநீர் மற்றும் தொழிற்சாலைக் கழிவு நீரை வெளியேற்ற தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் அனுமதி பெற வேண்டும். இதன்படி, பால் பண்ணை, வாரியத்தின் அனுமதி கேட்டு விண்ணப்பித்துள்ளது. விண்ணப்பம் வாரியத்தின் பரி சீலனையில் உள்ளது.



1986 ஏப்ரல் 30] [டாக்டர் எச். வி. ஹண்டே]

பால் பண்ணைக்கு அனுமதி வழங்கும்போது, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நிர்ணயித்துள்ள வரைமுறைகளுக்கேற்ப கழிவுநீரை சுத்திகரிப்பு செய்து வெளியிட வேண்டுமென்ற நிபந் தனையுடன் அனுமதி வழங்கப்படும்.

திரு. என்.எஸ்.வி. சித்தன் : தலைவர் அவர்களே, அறிக்கை அவையில் வைக்கப்படவில்லையென்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை அவையில் நேற்றைய தினம் எடுத்துக் கொள்வதாக இருந்தது. ஆகவே நேற்றைய தினமே அவையில் அறிக்கை வைக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப் பட்டிருக்கிறது.

திரு. ஆ. சிவக்குமார் : தலைவர் அவர்களே, இந்தப் பால் பண்ணை ஆரம்பித்து பல ஆண்டுக் காலம் ஆகிறது. ஆனால், ''10–4–1986 அன்று பால் பண்ணையைப் பார்வையிட்ட போது, போதுமான சுத்திகரிப்பு நிலையத்தை அமைக்க திட்டமிடப் பட்டுள்ளதாகவும், சுத்திகரிப்பு செய்யப்பட்ட கழிவு நீரை, மாநக ராட்சியின் வடிகால் குழாய்களில் வெளியேற்ற இருப்பதாகவும் கூறப்பட்டது'' என்று அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தச் சுத்திகரிப்பு நிலையம் வெகுவிரைவில் அமைக்கப்படுமா? அதற்கு கால அளவு ஏதாவது நிர்ணயிக்கப்பட்டுள்ளதா? அதற் கான திட்ட மதிப்பீடு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர் களே, இந்த விவர அறிக்கை நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இந்தப் பால் பண்ணை 10–4–1986 அன்று பார்வையிடப்பட்டது என்ற அறிக் கையை, பார்த்துப் படித்துதான் மாண்புமிகு உறுப்பினர் சிவக் குமார் அவர்கள் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். ஆகவே வெகுவிரைவில் எல்லாவிதமான ஏற்பாடுகளையும் செய்ய வில்லையென்றால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கான மதிப்பீடு பற்றிய தகவல் என்னிடத்தில் கொடுக்கப்படவில்லை. ஆகவே அந்த விவரம் என்னிடத்தில் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. ஆ. சிவக்குமார் : மாண்புமிகு தலைவர் அவர்களே, விவர அறிக்கை என் கையில் இருக்கிறது. அதை வைத்துத் தான் நான் கேள்வி கேட்கிறேன். தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரி யத்தின் அனுமதியைப் பெற விண்ணப்பம் எப்போது அனுப்பப் பட்டது? அந்த அனுமதியைப் பெற அரசு விரைவில் நடவடிக்கை எடுக்குமா? ஏனென்றால் இந்தக் கழிவுநீர் செல்கிற தாசில்தார்

நகர், சதாசிவ நகர், வண்டியூர், சௌராஷ்டிராபுரம், இந்திரா நகர் போன்ற பகுதிகளில் மிகுந்த துர்நாற்றம் அடிப்பதால் அந்தப் பகுதி மக்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அதனை சீர்படுத்தி, செம்மைப்படுத்தி செய்ய பாதாள சாக்கடை மூலமாக கழிவு நீரை அப்புறப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டர்க்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, கழிவு நீரைப் பொறுத்தவரையில், oil, grease, B.O.D., floating solid, dissolved solid, suspended solid என்று பல பொருள்கள் அதில் இருக்கின்றன. அவை தரையில்வெளியே வருகிற நேரத்தில் துர்நாற்றம் அடிக்கிறது. அதுமட்டுமல்லாமல் அதனால் பல தொல்லைகளும் ஏற்படும். ஆகவே அதற்காக ஒரு 'செப்டிக் டாங்க்' ஏற்படுத்தி அதற்குள் அந்தக் கழிவுநீரை விட வேண்டும்.

(முற்பகல் 10–00)

சில நாட்களுக்குப் பிறகு, அந்த B. O. D. Conten's தெரிந்ததற்குப் பிறகுதான் வெளியேற்ற வேண்டும் என்று சொல்லி இருக்கிறோம். அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்—

Uner Section 26 of the Water Prevention and Control of Pollution Act, 1974, the Unit has to obtain the consent of the Board to discharge the effluents.

அவர்களுக்கு அந்த கன்சென்ட், அந்த அனுமதி மறுக்கப்படக்கூடிய அளவிற்கு, உத்தரவு போடக்கூடிய அளவிற்கு நாம் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவைகளையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

## 5. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொது கணக்குக் குழு

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் பின்வரும் மூன்று அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கிறேன்:—

(அ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1979–80, 1980–81 மற்றும் 1981–82 ஆம் ஆண்டுகளுக்கான வருவாய் வரவினங்கள் அறிக்கைகளில் வனம்-மீனளத் துறை தொடர்பான பத்திகள் மீதான மேற்படி குழுவின் முப்பத்தி இரண்டாவது அறிக்கை.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





(ஆ) 1979–80 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் கணக்குகள் மற்றும் அவ்வாண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (சிவில்) அறிக்கையில் ஊரக வளர்ச்சித் துறை தொடர்பான பத்தி எண் 3.12—பணிக்கான ஊதியத்தை உணவுப் பொருளாக வழங்கும் திட்டம் குறித்த மேற்படி குழுவின் முப்பத்தி மூன்றாவது அறிக்கை.

(இ) 1981–82 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் கணக்குகள் மற்றும் அவ்வாண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் (சிவில்) தொழிலாளர் துறை தொடர்பான பத்திகள் மீதான மேற்படி குழுவின் முப்பத்தி நான்காவது அறிக்கை.

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

திரு. கோ. இரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் சார்பில், கீழ்க்கண்ட அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கிறேன்:—

(அ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1981–82 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (வணிகம்) தொழில் துறை பற்றிய பத்திகள் மீதான மேற்படி குழுவின் முப்பத்தொன்றாவது அறிக்கை.

(ஆ) பொது நிறுவனங்களின் ஆண்டுக் கணக்குகளையும், அவற்றின் மீதான தணிக்கை அறிக்கைகளையும் சட்டமன்றத்தில் வைப்பதில் ஏற்படும் கால தாமதம் குறித்த மேற்படி குழுவின் முப்பத்தி இரண்டாவது அறிக்கை.

## 6. வரவு செலவுத் திட்டம் 1986-87 வாக்கெடுப்பு

[தொடர்ச்சி.]

(அ) கோரிக்கை எண் 1—நிலவரித் துறை,

(ஆ) கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம்.

(இ) கோரிக்கை எண் 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு.

(ஈ) கோரிக்கை எண் 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலவரித் துறை, மாவட்ட நிர்வாகம், இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு மற்றும் இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்—ஆகியவை பற்றிய மானியக் கோரிக்கைகளின் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர்கள், வருவாய்த் துறையினுடைய பல்வேறு ஆக்கப் பணிகள் பற்றியும், வருவாய்த் துறை மேற்கொண்ட மேம்பாட்டுத் திட்டங்கள் பற்றியும், இது பற்றிய சீரமைப்புப்

பணிகள் பற்றியும், இதிலே மேற்கொள்ள வேண்டிய பல்வேறு
சிறப்பான பணிகள் பற்றியும், இதிலே ஆங்காங்கு நிலவுவதாகக்
கருதப்படுகின்ற குறைபாடுகள் பற்றியும், தங்களுடைய கருத்
துக்களையும் பரிந்துரைகளையும் இங்கே வழங்கி இருக்கின்றார்
கள். ஆக, வருவாய்த் துறையினுடைய முக்கியத்துவத்தைப்
பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் இங்கே எடுத்துக்
குறிப்பிட்டு இருக்கின்றார்கள். அதற்குப்பிறகு பாசனத் துறை
யினுடைய மானியக் கோரிக்கை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள
வேண்டுமென்பதன் காரணமாக இதிலே நீண்ட நேரம் எடுத்துக்
கொள்வதற்கு வாய்ப்பு இல்லை என்பதையும் நான் உணருகி
றேன். ஏனென்றால், இந்த வருவாய்த் துறையையொட்டிய
கோரிக்கையின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு சிறப்புக்
குரிய கருத்துக்களைச் சொல்கின்றபோது வருவாய்த் துறை
யினுடைய பல்வேறு ஆக்கப் பணிகள் பற்றியும் இங்கே எடுத்துக்
குறிப்பிட்டார்கள்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

கிழக்கு இந்தியக் கம்பெனியினர் ஆண்டபோதும் சரி, அதற்
குப்பிறகு ஆங்கிலேயரின் ஆட்சிமுறையின் அடிப்படையில் ஆட்
சியை எடுத்துக்கொண்டபோதும் சரி அரசுக்கு வருவாயை ஈட்
டித் தருகின்ற ஒரு பெரும் துறையாக இந்த வருவாய்த் துறை
தான் இருந்தது. ஆகவேதான் அதற்குப் பெயரே வருவாய்த்
துறை என்று வைத்தார்கள். ஆகவே, இந்த வருவாயை கவ
னிக்கின்ற அளவுக்கு அமைந்த தன்மையின் காரணமாகத்தான்
மாவட்டந்தோறும் அமைகின்றவர்களை டிஸ்ட்ரிக்ட் கலெக்டர்
என்றும் பெயர் கொடுத்தார்கள். ஆகவே, கலெக்ஷனிலே, வரு
வாயை வசூலிப்பதிலே முனைந்து நிற்க வேண்டும் என்ற பெய
ரோடுதான் அது அமைக்கப்பட்டது என்றாலும் கூட இப்போது
மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இருக்கின்ற பொறுப்புகளும்,
கடமைகளும், அவர் ஏற்று செய்ய வேண்டிய பணிகளும் விரிவு
அடைந்திருக்கின்றன; மாறுபட்டிருக்கின்றன; மேம்பாடுற்று
இருக்கின்றன. அந்த வகையிலே காணுகின்றபோது ஆங்கிலே
யன் ஆண்டபோது, வருவாய்த் துறைக்கு ஒரு விதத்திலே ஒரு
முக்கியத்துவம் அமைந்திருந்தது என்றாலும், அதற்குப் பிறகு,
நாடு விடுதலை பெற்றதற்குப் பிறகு முக்கியத்துவம் வேறு
வகையிலே அமைந்து மற்ற எல்லாத் துறைகளையும் உடன்
அழைத்துச் செல்லக்கூடிய ஒரு வகையிலேயும், எல்லாத்துறை
களுடைய கூட்டுறவையும், கூட்டு ஒத்துழைப்பையும் பெற
வேண்டிய தன்மையிலேயும் வருவாய்த் துறை, மாவட்டந்தோ
றும், வட்டந்தோறும், குறுவட்டந்தோறும், சிற்றூர்கள்தோறும்
பணியாற்ற வேண்டிய அத்தகைய பொறுப்பிலே இன்றைக்கும்
இருந்து கொண்டிருக்கிறது.



13648

இன்றைக்கும் எல்லாத்துறைகளுடைய பொறுப்பையும் ஏற்று
ஒவ்வொரு மாவட்டத்திலேயும் நிகழ்கின்ற எல்லா நிகழ்ச்சிகளுக்
கும் பொறுப்பேற்று அரசுக்கும், தலைமைச் செயலகத்துக்கும்
பதில் சொல்ல வேண்டிய பொறுப்புடையவர்களாக மாவட்ட
ஆட்சித் தலைவர்கள் தான் இன்றைக்கும் இருந்துகொண்டிருக்கின்
றார்கள். ஆகவேதான் பொருத்தமான பெயராக இருக்க வேண்
டும் என்று சொல்லி '' டிஸ்டிரிக்ட் கலெக்டர் '' என்ற ஆங்கிலச்
சொற்றொடருக்குப் பதிலாக தமிழாக்கம் செய்கின்றபோது
இதற்கு '' மாவட்ட ஆட்சித் தலைவர் '' என்று, மாவட்டத்தி
னுடைய ஆட்சி முழுவதும் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்
திலே இருப்பதன் காரணமாகவும், எந்தத் துறையில் எந்த நிகழ்வு
நடைபெற்றாலும் அது மாவட்ட ஆட்சித் தலைவரின் மூலமாகத்
தான், அமைச்சகமோ, செயலகமோ அல்லது தலைமைச் செய
லகமோ அறிய வேண்டியதன்மையில் இருப்பதன் காரணமாகவும்,
சட்ட ஒழுங்குப் பிரச்சனையாக இருந்தாலும், வறட்சி துயர்
தணிப்புப் பணியாக இருந்தாலும், வெள்ளத் தணிப்புப் பணி
யாக இருந்தாலும், மேம்பாட்டுப் பணியாக இருந்தாலும், திட்
டங்களை நிறைவேற்றுவதாக இருந்தாலும், குடும்பநலத் திட்
டத்தை நிறைவேற்றுவதாக இருந்தாலும், சுகாதார மேம்பாட்
டுப் பணிகளை மேற்கொள்வதாக இருந்தாலும், வறட்சிப் பணி
யைக் கண்காணிப்பதை நடைமுறைப்படுத்துவதாக இருந்தாலும்,
தன்னிறைவுத் திட்டங்களெல்லாம் ஒழுங்காக நடைபெறுகிறதா
என்று கண்காணிப்பதாக இருந்தாலும், இவை அனைத்தையும்
மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலேயும், அதன் சார்புடைய
வருவாய்த்துறை அதிகாரிகளிடத்திலேயும் ஒப்படைத்திருக்கின்ற
னர். அந்தத் தன்மையிலே பார்க்கின்றபோது ஒரு காலத்திலே
வருவாய்த்துறையாக இருந்தது இப்போது முக்கியத்துவம் பெற்று
'' போவாய் '' துறையாகத்தான் இருக்கிறதே தவிர இது வரு
வாய்த்துறை என்ற பெயர் பெறுகின்ற நிலையிலே இல்லை.
ஒருகாலத்திலே அதிகமாக வருவாய் ஈட்டித் தருகின்ற ஒரு துறை
யாக இருந்து இப்போது அதிகமான செலவுகளுக்கு காரணமாக
இருக்கிற ஒரு துறையாகவும் இப்போது 3,600 கோடி ரூபாய்
வரவு-செலவு நடத்துகின்ற இந்த தமிழக அரசுக்கு நிலவரியின்
மூலமாக 20 கோடி ரூபாய்தான் ஆண்டொன்றுக்கு வருகின்ற
அளவுக்கு இருக்கிறது.

(முற்பகல் 10-10)

தண்ணீர் தீர்வை, மற்றவைகள் மூலமாக 4½ கோடியிலிருந்து
5 கோடி ரூபாய் வருகின்ற நிலை இருக்கிறது. இருந்தாலும்
மற்ற பல பணிகள் விரிவு அடைந்து இருப்பதன் காரணமாக
இது முக்கியத்துவம் பெற்றிருக்கின்ற தன்மையைப் பெறுகி
றோம்.

V211,31 N86
N86-244

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 ஏப்ரல் 30

'' ஆகாறு அளவுஇட்டிது ஆயினும் கேடுஇல்லை
போகாறு அகலாக் கடை ''

என்று வள்ளுவப் பெருந்தகை கூறியதற்கு இணங்க வருகின்ற
வருவாயினுடைய வழி குறுகியதாக ஆனாலும் பரவாயில்லை,
ஆனால் போகின்ற வழி அகலாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்
என்று வள்ளுவர் ஒரு அரசுக்கு அறிவுரை கூறினார். ஆனால்,
இப்போது வளர்ந்து இருக்கின்ற பணிகளை, மேம்பாட்டுத் திட்
டங்களை நிறைவேற்றுகின்ற இந்தக்காலத்தில்

'' ஆகாது அளவுஇட்டிது ஆயினும் ஏற்கத்தான் வேண்டும்
போகாறு அகன்று போயினும் ''

என்று மாற்றிக்கொண்டு பணிகளை ஆற்ற வேண்டிய அத்தகைய
கட்டத்தில் தான் நாம் இருந்து கொண்டு இருக்கிறோம்.

ஆகவே, மாவட்டத்தைப் பொறுத்த வரையில் இதனுடைய
பணி சீர்படவேண்டும் என்பதையும் பொதுமக்களுடைய கோரிக்
கைகளையும் அவர்களுடைய விண்ணப்பங்களையும் ஜனநாயகப்
பண்புகளும், முறைகளும் வளர வளர அவற்றை மனுக்கள்
மூலமாகத்தான் தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொள்ள
வேண்டும் என்ற பேராவலும் முயற்சிகளும், முனைப்புள்ளமும்
எல்லோருக்கும் வளர்ந்து இருக்கிற அத்தகைய நிலையில் அவற்றை
உடனடியாகத் தீர்க்க வேண்டும் என்ற கருத்தை மாண்புமிகு
உறுப்பினர்கள் பலரும் இங்கே எடுத்துச் சொன்னார்கள்.

அந்த வகையில் தான் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எல்லாம்
வாரத்திற்கு ஒரு நாள் மனு நீதி நாள் என்ற வகையிலும் சில பல
இடங்களில் 15 நாட்களுக்கு ஒருநாள் என்றும் ஒரு நிலையை
வைத்து ஆங்காங்கே மனுக்களைப் பெற்று—அதிலே சொல்லப்
படுவது மனுக்களை வாங்குவது மட்டுமே மனு நீதித் திட்டம்
என்று அமைக்கப்படவில்லை. மனுக்களை வாங்கிப் பார்த்து
அங்கே இருக்கிற அதிகாரிகள் மற்றவர்களை வைத்துக்கொண்டு
உடனுக்குடன் உடனே தீர்க்க வேண்டிய பிரச்சினைகளை அங்
கேயே தீர்த்து விடலாம் என்றும், பிறகு ஆய்ந்து முடிவு எடுக்க
வேண்டியதற்கு ஆய்ந்து முடிவு எடுக்கக்கூடிய சூழ்நிலையை ஏற்
றுக்கொள்ளலாம் என்றும் எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

அது மட்டும் அல்லாமல் வளர்ச்சி மன்றங்கள் என்று
டெவலப்மெண்ட் கவுன்சில் வைத்து, மாவட்ட அளவில்—
திங்களுக்கு ஒரு முறை என்று கருதுகிறேன்—திங்களுக்கு ஒரு
முறை ஆங்காங்கே இருக்கின்ற சட்டமன்றப் பேரவை
உறுப்பினர்களும், மேலவை உறுப்பினர்களும் மற்றைய
ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மற்றவர்கள் இடம் பெறுவார்
கள் என்று கருதுகிறேன். இவர்கள் எல்லாம் கலந்து கொள்ளு



1986 ஏப்ரல் 30] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

கின்ற அந்தக் கூட்டத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்
கள் தலைமை தாங்குகிறார்கள். உரிய அதிகாரிகள் எல்லாம்
அங்கே இருக்கிறார்கள். அதற்கு என்று தனியாகக் கூடுதல் அதி
காரம் வழங்கவேண்டும் என்று சில மாண்புமிகு உறுப்பினர்கள்
எடுத்துச் சொன்னார்கள். அது ஒரு ஸ்டேச்சுட்டரிபாடி அல்ல.
ஆனாலும் கூட மாவட்டத்தில் என்ன நடைபெறுகிறது என்
பதை அறிந்து கொள்ளவும், என்ன நடக்க வேண்டும் என்று
எடுத்துச் சொல்லவும் அதற்கு அரசு வழியாக என்ன உரிய
பதில் கிடைக்கின்றது என்று தெரிந்து கொள்ளவும் சட்டமன்றப்
பேரவை உறுப்பினர்களுக்கும், மேலவை உறுப்பினர்களுக்கும், மக்க
ளால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கும் ஒரு வாய்ப்பு ஏற்
பட வேண்டும் என்று கருதி அந்த அந்த மாவட்டங்கள் பொறுத்த
வரையில் அவர்கள் வினாக்களை எழுப்புவதன் மூலம் அந்த
அந்தத் திட்டங்கள் அல்லது அந்த அந்த முறைகள் இந்த நிலை
மையில் இருக்கின்றன என்ற விளக்கம் சொல்லுகின்ற வகையில்
மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமை தாங்குகிறார்
கள். அங்கே அமர்ந்து இருக்கின்ற அதிகாரிகள் விளக்கம் தர
வும் முற்படுவார்கள். ஆகவே, சில பல வகைகளில் அரசு முயற்
சிகளை எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படும். அந்த
வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் எடுத்துச் சொல்லுகின்ற கருத்
துக்களின் அடிப்படையில் இவை அரசுக்கு அனுப்பி வைக்கப்
படும். அரசு பரிசீலனை செய்து முடிவு எடுத்த பிறகு அந்த
முடிவுகள் அறிவிக்கப்படும் என்று எடுத்துச் சொல்லுகிறார்கள்.
அந்த அளவுக்கு அவர்களுக்கு உரிமைகள் வழங்கி இருப்பதன்
வாயிலாக அதிகமான அதிகாரங்கள் கொடுக்க வேண்டும் என்
றால் அவர்களுக்கு பணமும் ஒதுக்கீடு செய்ய வேண்டிய அவசிய
மும் அதை நிறைவேற்றுகின்ற அதிகாரமும் அவர்களுக்குத் தர
வேண்டிய தன்மைகளும் ஏற்படும். ஆகவே, இது ஒரு ஆலோ
சனைக் கூட்டமாகவும், அரசுக்கும் பொது மக்களுடைய பிரதி
நிதிகளுக்கும், அந்த மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கும் இடை
யில் இருந்து கொண்டு காரியங்களைப் புரிந்து கொண்டு நிலை
மைகளை விளக்குவதற்கு பயன்படுகிற ஒரு மன்றமாகவும் இருக்
கிறது. அது ஓரளவுக்கு நிலைமைகளை புரிய வைக்கவும், அந்த
மக்களுடைய நிலைமைகளை அரசு ஆராய்ந்து தக்க முடிவுகளை
எடுத்துக்கொள்ளப் பயன்படும் அளவுக்கு இந்த வளர்ச்சி மன்றம்
நன்கு பயன்பட்டு வருகின்றது. இதில் மேலும் எல்லா மாண்பு
மிகு உறுப்பினர்களும் அக்கறையோடு, ஆர்வத்தோடு கலந்து
கொண்டு சிறந்த பரிந்துரைகளைச் செய்வார்களானால் அது
அரசுக்கு ஆங்காங்குள்ள மக்கள் பிரதிநிதிகள் மூலம் வருகிறது
என்ற அடிப்படையில் நாம் சிந்திக்கிறபோது அதிலே நல இழப்பு
பற்றி நாம் ஆராய்ந்து அறிந்து மக்களுக்கு நலம் பயக்கும் வகை
யில் நடைமுறையைச் செய்வதற்கான முயற்சிகளை நாம் மேற்
கொள்ளலாம்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 ஏப்ரல் 30

மேலும், நிர்வாகத்தைச் செம்மைப்படுத்த வேண்டும், ஒழுங்குபடுத்த வேண்டும், விரிவுபடுத்த வேண்டும் என்ற வகையில் பெரிய பெரிய மாவட்டங்களை எல்லாம் சிறிய அளவில் ஆக்க வேண்டும் என்ற முயற்சியை நாம் அண்மைக் காலங்களில் மேற்கொண்டு வந்து இருப்பதும், மேற்கொள்ள இருப்பதும் இந்த மன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். 1977 ஆம் ஆண்டு 15 மாவட்டங்களாக இருந்த இடத்தில், இன்றைக்கு பெரிய மாவட்டங்கள் சிறிய மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டதன் விளைவாக, இப்போது 19 மாவட்டங்களாக விளங்குகின்றன. கோவை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, நாம் பெரியார் மாவட்டம், கோவை மாவட்டம் என்று அழைக்கிறோம். இராமநாதபுரம் மாவட்டப் பிரச்சினை நீண்ட நெடுங்காலமாக இருந்தது. அதை மூன்றாகப் பிரிப்பதன் மூலம், அந்தப் பிரச்சினை ஒருவேளை தீரும் என்ற அடிப்படையில் இராமநாதபுரம், காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கம் என்று பிரிக்கப்பட்டு, அந்த வகையில் இன்றைக்கு 19 மாவட்டங்கள் ஆயின.

இந்த ஆண்டு நெல்லை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, தூத்துக்குடி தலைநகராக ஆக்கப்பட்டு, புதியதொரு மாவட்டம் உருவாக்கப்படும் என்று ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டது. அதன் அடிப்படையில் வ.உ.சி. அவர்களின் பெயரால் கப்பலோட்டிய தமிழன் அவர்களுடைய பெயரை, அவர்களுடைய புகழை நிலைநிறுத்த வேண்டுமென்ற அளவிற்கு அவருடைய பெயரால் அந்த மாவட்டம் அமையும். வ.உ.சி.யினுடைய பிறந்த நாள் செப்டம்பர் 5 ஆம் தேதி வருகின்ற காரணத்தால் அந்த செப்டம்பர் 5 ஆம் தேதியையொட்டி ஒரு விழா எடுக்கப்பட்டு, நடத்தவேண்டுமென்று அறிவிக்கப்பட்டது. மாவட்டம் உருவாக்கப்பட்டு, செப்டம்பர் 8-ஆம் நாளிலிருந்து உருவாவதற்குரிய நடவடிக்கைகள், முயற்சிகள் எல்லாம் நடந்து கொண்டு வருகின்றன. ஆக தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, முன்னேற்பாடுகளாக என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமோ அவைகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டு, முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

அதற்குப் பிறகு வடாற்காடு மாவட்டத்தை இரண்டாகப்
பிரித்து, திருவண்ணாமலையைத் தலைநகராகக் கொண்டு ஒரு
மாவட்டம் உருவாக்கப்படவேண்டுமென்று சொன்னார்கள்.
உள்ளபடியே இப்போது அமைந்திருக்கின்ற மாவட்டங்களை
இரண்டு, இரண்டாகப் பிரிப்பதைவிட, இன்னும் கூட, 3, 4
மாவட்டங்களை ஒன்றாகச் சேர்த்து, அதை 5, 6 மாவட்டங்
களாகப் பிரிக்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்படுமானால், மாண்புமிகு
உறுப்பினர்கள் சொன்னது போல், ஒரு மாவட்டத்திலிருந்து கூட,
இன்னொரு மாவட்டத்திற்குச் சில தாலுக்காக்களைக் கொண்டு
சேர்த்து செய்யலாம். ''ஜியோகராபிகல் பொசிஷன்'' புவி



1986 ஏப்ரல் 30] [டாக்டர் இரா். நெடுஞ்செழியன்)]

யியல் அடிப்படையில் ஏரி பாசனம், நஞ்சை, போக்குவரத்துச்
சாதனங்கள் ஆகியவற்றின் அடிப்படையில்கூட, அதைச் செய்
வதற்கு இயலும். இருக்கின்ற மாவட்டங்கள் எப்படியோ
முன்பே அமைந்துவிட்டன. எப்படி எப்படியோ அமைந்துவிட்ட
மாவட்டங்களைப் பிரிப்பதைவிட, 4, 5 மாவட்டங்களை இன்
றைக்கு இணைத்துக்கூட, 7, 8 மாவட்டங்களாக வைத்திருக்
கின்ற ஒரு கணக்கின்படி, சூழ்நிலைகளைப் பெறுவோமானால்,
அதற்கு மைய இடமாகத் தலைநகர் அமைய, சுற்றியிருக்கிற
போக்குவரத்துச் சாதனங்கள் இவைகளோடு தொடர்பு கொள்
கின்ற அளவிற்கு வாய்ப்புகளை மாண்புமிகு உறுப்பினர்கள்
பலபேர் எடுத்துச் சொன்னார்கள். இங்கேகூட, மாண்புமிகு
உறுப்பினர் சித்தன் அவர்கள் சொல்கின்றபோது, முகவை மா
வட்டத்தைச் சேர்ந்த சில பல கிராமங்களைச் சிவகெங்கை
மாவட்டத்திற்குச் சேர்த்து விடுவார்களேயானால், அது
சிவகெங்கை மாவட்டத் தலைநகரோடு தொடர்பு கொள்வதற்கு
வாய்ப்பாக இருக்கும் என்று சிலபல யோசனைகளையெல்லாம்
எடுத்துச் சொன்னார்கள். ஆக மக்களுடைய வசதிக்கும், நிர்
வாகத்திற்கேற்றதாக அமையவேண்டும் என்பது தான் நோக்கம்.
அந்த அடிப்படையிலே இவைகள் எல்லாம் பரிசீலிக்கப்படும் என்
பதை இந்த வாய்ப்பிலே கூறிக்கொள்கிறேன்.

அதுபோன்று, பல்வேறு மாவட்டங்களைப் பிரிக்கவேண்டும்
என்று சொல்கிறார்கள். ஒரு நியதியினுடைய அடிப்படையிலே
ஒரு சூழ்நிலையினுடைய அடிப்படையிலே தான் நாம் மாவட்டங்
களைப் பிரிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஒரு மாவட்
டத்தைப் பிரிக்கிறோம் என்றால், ஒரு இடத்தைத் தலைநகராக
ஏற்படுத்துகிறோம் என்றால், ஏற்கெனவே இருக்கின்ற மாவட்
டத் தலைநகரிலிருந்து, குறைந்தது 35 துறைகளின் அந்த
மாவட்டத் தலைமையகங்களை, அந்த மாவட்டத் தலைநகருக்கு
நகர்த்த வேண்டியவர்களாகவும் இருக்கிறோம். மாவட்ட ஆட்சி
யாளர்களை நியமிக்க வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவ
ருடைய தலைமையகமும் நாம் அமைக்க வேண்டும், அந்த வகை
யில் ஒரு தொடராச் செலவாக 3, 4 ஆண்டுகளில் ரூ. 11
கோடியை அந்த விலைவாசியினுடைய அடிப்படையில் நாம் செல
வழிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அப்படி செலவழிக்
கப்பட்ட பின்னர், தொடர் இனச் செலவாக, ''ரெக்கரிங்
எக்ஸ்பெண்டிச்சர்'' ஆக ரூ. 3½ கோடி இன்றைக்கு நமக்குக்
கூடுதலாக ஆகும். இருந்தாலும் கூட, மக்களுடைய நன்மை
களைக் கருதி, இந்தப் பணிகளை எல்லாம் ஆற்றிக்கொண்டிருக்
கிறோம்.

1977-லே கோட்டங்களைப் பொறுத்த வரையிலும், 48
கோட்டங்களாக இருந்த இடத்தில், படிப்படியாக கோட்டங்
களை விரிவாக்கி, விரிவாக்கி, இப்போது 57 கோட்டங்கள் தமி
ழகத்தில் இன்றைக்குப் பணிபுரிந்து வருகின்றன.

வட்டங்களைப் பொறுத்தவரையில், 1977-லே 133 வட்டங்களாக இருந்த நிலையை மாற்றி, ஆங்காங்கு இருக்கின்ற சௌகர்யங்களை எண்ணி ஆங்காங்கு இருக்கின்ற மக்களுடைய நலன்களைக் கருதி, வட்ட ஆடசிப்பணிகள் நடைபெற வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையில், இப்போது 167 வட்டங்களாகஆக்கியிருக்கிறோம். 133 இருந்த இடத்தில் 167 வட்டங்களாக ஆக்கி, கிட்டத்தட்ட 34 வட்டங்களை அதிகமாக உருவாக்கியிருக்கிறோம்.

(முற்பகல் 10-20)

குறு வட்டங்களைப் பொறுத்தவரையில், 1977-ல் 774 இருந்த இடத்தில், இப்போது 1098 குறு வட்டங்கள் இருக்கின்ற நிலையில் மாற்றியிருக்கிறோம். இப்போதும் மேலும் சில பல வட்டங்களைப் பிரிக்கவேண்டி மாண்புமிகு உறுப்பினர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அவைபற்றி சிறப்பு ஆணையரகத்திலேயும் வருவாய்த் துறையிலேயும் ஆராய்ந்து அறிந்த பிறகு அரசு தக்க முடிவைச் செய்யும். இந்த ஆண்டு, வருகின்ற 1—7—1986 ஆம் நாளிலிருந்து கிருஷ்ணகிரி வருவாய்க் கோட்டம் புதிய வருவாய்க் கோட்டமாக அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போலவே ஏற்கெனவே தர்மபுரி கோட்டமாக இருந்தது, இரண்டாகப் பிரிக்கப்பட்டு கிருஷ்ணகிரி கோட்டம் என்றும் ஹோசூர் கோட்டம் என்றும் தர்மபுரி கோட்டம் என்றும் தர்மபுரி மாவட்டம் 3 கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஹோசூர் கோட்டம், ஹோசூர், டெங்கனிக்கோட்டை ஆகிய வட்டங்களாகவும் கிருஷ்ணகிரி கோட்டம் கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை, பாலக்கோடு ஆகிய வட்டங்களாகவும் தர்மபுரி கோட்டம் தர்மபுரி, பெண்ணாகரம், அரூர் ஆகிய வட்டங்களாகவும் பிரித்து அதற்கேற்றபடி மக்கள் தொகை, பரப்பளவு, கிராமங்கள் இவற்றைக் கணக்கு வைத்து இது 1—7—1986 ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மதுராந்தகம் வட்டத்தைப் பிரிக்கவேண்டுமென்று நீண்ட நாட்களாக மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துத் தெரிவித்ததற்கு இணங்க செய்யூர் என்ற புதிய வட்டத்தை அமைத்து அதுவும் 1—7—1986 லிருந்து நடைமுறைக்கு வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த அளவில் மதுராந்தகம் வட்டம் என்றும் செய்யூர் வட்டம் என்றும் இரண்டு வட்டங்களாகப் பணியாற்றும் என்பதை நான் இந்த வாய்ப்பிலே கூறிக் கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சித்தன் மற்றவர்கள் எல்லாம் வெள்ள நிவாரணப் பணிகளைப் பற்றியெல்லாம் விரிவாக எடுத்துச் சொன்னார்கள். இங்கேயும் பல தடவைகள் நாம் அதை எடுத்து விளக்கி இருக்கிறோம். வெள்ள நிவாரணப் பணிகளைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே பழுது





பட்டிருக்கிறவற்றைப் பழுதுபார்க்கிற பணிகள் மட்டுமல்லாமல்
ஆக்கப் பணிகளையும் புதிதாக பணிகளையும் நிலையான
பணிகளையும் செய்வதற்காக 187 கோடியாவது தரவேண்டு
மென்று நாம் கேட்டோம். ஆனால் மத்திய அரசு பாதிக்கப்பட்ட
பணிகளையும், சீர்கேடுகளையும், துயர்களையும் துடைக்கின்ற
பணிகளையும் செய்வதற்குத்தான் இதைச் செலவிடலாமே தவிர
புதிதாகச் செய்கின்ற பணிகளுக்கு பிறகு போடுகிற திட்டங்
களிலே பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லிவிட்டார்கள்.
அந்த அடிப்படையில் அவர்கள் 66 கோடியே 81 லட்ச ரூபாய்
செலவிடலாம் என்று ஒப்புதல் தந்தார்கள். நான் ஏற்கெனவே
நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டதைப்போன்று சென்ற ஆண்டு,
59 கோடியே 31 லட்சம் ரூபாய் மார்ச் திங்கள் வரை
யில் செலவிட்டோம். அதற்கு 3 மாதத்திற்கு அதிகமாக
நாம் மத்திய அரசிடத்திலே அனுமதி கேட்டு மீதித் தொகையைச்
செலவிட்டு வருகிறோம். காலம் வேண்டும், இல்லாவிட்டால்
அவசரக்கோலத்தில் அள்ளித் தெளித்துவிட்டால் பணிகளை
விரைவாக நிறைவேற்றிமுடிக்கவேண்டுமென்ற வகையிலே அவர்
கள் எப்படியாவது மணலை வாரி முடித்து அதன்மூலம் கேடுறக்
கூடாது என்ற காரணத்தினால் சில பல பணிகளை உடனடியாக
முடிக்கமுடியும், சிலபல பணிகளை ஆறஅமரத்தான் செய்ய
வேண்டும், ஆகவே கொஞ்சம் காலத் தாழ்வு ஏற்பட்டாலும்
பரவாயில்லை, மத்திய அரசு அனுமதி கொடுக்கவேண்டுமென்று
கேட்டு அவர்களும் அதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.
வீடுகள் இரையாக்கப்பட்ட, பாழாக்கப்பட்ட வசதியற்றவர்களுக்கு
மட்டும் தருகிறவகையில் மத்தியத் திட்டக்குழு ஒப்புக் கொள்கிற
வகையிலே 16 கோடியே 35 லட்சம் அவர்களுக்கு மானியமாகத்
தந்திருக்கிறோம். சென்னை மாநகராட்சிக்கு நிவாரணப் பணி
களுக்கு 15 கோடியே 15 லட்சம் தந்திருக்கிறோம். நீர்ப்பாசனத்
திற்கு 4 கோடி ரூபாய். சாலைகளைப் புதுப்பிக்கவும், செம்மைப்
படுத்தவும் 12 கோடியே 10 லட்சம் ரூபாயும் மீனவர்களுக்கு
நிவாரணப் பணிகளுக்கு 16 லட்ச ரூபாயும் செலவிட்டு இருக்
கிறோம். நெசவாளர்களுக்கு 27 லட்சமும் பொதுச் சுகாதாரத்
திற்கு 30 லட்சமும் சிலபல இடங்களிலே இடிந்து விழுந்த
கட்டடங்களைச் சீர்செய்யவும் செம்மைப்படுத்தவும் 31 கோடியே
60 லட்சம் செலவிட்டு இருக்கிறோம். விவசாயி நிலங்களில் பயிர்
பாழ்பட்டுவிட்டால் அதனால் விவசாயிகள் வளரமுடியாத நிலை
இருந்தால் அப்படிப்பட்ட இடங்களிலே அவர்களுக்கு 1 கோடியே
99 லட்சம் மானியமாக வழங்கி இருக்கிறோம். அதைத் தவிர
இதர காரியங்களுக்காக மற்றவர்களுக்காக 5 கோடியே 35
லட்சம் ரூபாய் செலவிட்டிருக்கிறோம். இனி நாம் ஆற்ற
இருக்கிற செலவுகளிலே கூட சாலைபோடுவதற்கு ஒன்றரைக்
கோடியும் நீர்ப்பாசன மேம்பாட்டிற்காக 3 கோடியும் ஊரணி
களைச் சீர்படுத்த, செம்மைப்படுத்த ஒரு கோடி ரூபாயும்
அடையாறு கரைகளைச் சீரமைப்பதற்கு மத்திய அரசு தரு
கின்ற 2 கோடி ரூபாயும், அது தவிர மாநில அரசு மூலமாக 88

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 ஏப்ரல் 30.

இலட்சம் ரூபாயும் ஆக 2 கோடியே 88 இலட்சம் ரூபாயிலே சீர்மைக்கலாம் என்று கருதிக்கொண்டிருக்கிறோம். இருந்தாலும் அதனுடைய தொகையை இன்னும் கொஞ்சம் கூட்ட வேண்டுமென்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதை மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, மாநில அரசும் அதற்கான தக்க முடிவுகளை மேற்கொள்ளும் என்பதை இந்த வாய்ப்பிலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

குடிநீர்ப் பிரச்சினையைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் இங்கே சுட்டிக்காட்டினார்கள். அந்தந்தப் பகுதிகளுக்குத் தேவை ஏற்படுகின்ற சூழ்நிலைகளை இங்கே சுட்டிக்காட்டினார்கள். அரசும் அதிலே கவனம் செலுத்தி ஏற்கனவே ஒரு அளவை எடுத்து எந்தெந்தப் பகுதிகளிலே என்னென்ன நிலைமைகள் இருக்கின்றன என்று முறைப்படுத்தியும், வகைப் படுத்தியும் வைத்திருக்கிறது. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்களும் இந்தக் குடிநீர்ப் பிரச்னை வருகின்றபொழுது விரிவாக ஏற்கனவே பல கட்டங்களிலே அதைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர்களும் எடுத்துச் சொன்னார்கள். இந்த அரசும்கூட, தன்னிறைவுத் திட்டமானாலும் சரி, வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் மூலமும் கிராமங்களுக்கு வசதி வாய்ப்புகளை ஏற்படுத்துகின்ற தன்மையிலேயானாலும் சரி, குடிநீருக்கு முன்னுரிமை தர வேண்டும்; ''நீரின்றி அமையா யாக்கைக் கெல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'' என்கின்ற அந்தப் பழம்பெரும் கருத்துக்கிணங்க உயிர் வாழ்க்கைக்கு குடிநீர் மிகமிக இன்றியமையாது இருப்பதன் காரணமாக நாம் முதலிடம் தந்து, அதற்கான ஆக்கப்பணிகளில் ஈடுபட்டுக்கொண்டு வருகிறோம்.

நேற்றுகூட மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் எடுத்துச் சொல்லியது, அவ்வப்பொழுது ஏற்படுகின்ற வறட்சியின் காரணமாகவும், வெள்ளப்பெருக்கின் காரணமாகவும் ஏற்படுகின்ற நிவாரணப் பணிகளுக்கு உடனடியாகச் செய்ய வேண்டியவைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகவும் மற்றவர்கள் மூலமாகவும் செய்கின்ற அளவிற்கு ஒதுக்கப்பட்ட பணத்தைத் தான் அதிலே நாம் குறிப்பிட்டிருந்தோம். ஆனால் வேறு பல வகைகளிலே நாம் அளவு எடுத்து வைத்திருக்கின்ற வகையிலேகூட சாதாரணமாக நல்ல குடிநீர் ஆதாரம் கிடைத்து, மக்களுக்குக் குடிநீர் கிடைக்கின்ற அளவிற்கு நாம் கணக்கெடுத்துப் பார்க்கின்ற வகையில், தமிழகம் முழுவதும் 28,908 குடியிருப்புகளில் மக்கள் வாழ்கின்ற குடியிருப்புப் பகுதிகளில் போதுமான அளவிற்கு குடிநீருக்கு வசதிகளும் வாய்ப்புகளும் இருக்கின்றன.

ஆனால், குடியிருப்புகளுக்குள்ளே நல்ல நீர் நிலைகள் இல்லமலும், ஒரு கிலோ மீட்டர் சென்றால்தான் நல்ல நீரைப் பெற முடியும் என்ற அளவிற்கும் இருக்கின்ற கிராமங்கள் கிட்டத்தட்ட



986 ஏப்ரல் 30] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

1,107 கிராமங்கள்—குடியிருப்புகள் இருக்கின்றன. ஆகவே
அந்த ஒரு கிலோ மீட்டருக்கு அப்பால் கிடைக்கின்ற தண்ணீர்
கிடைக்கின்ற நிலையில், மக்களுக்குக் குடிநீர் வேண்டும் என்கின்ற
வகையில் கொண்டு வந்து சேர்ப்பதற்கான முயற்சிகளிலே நாம்
ஈடுபடுகிறோம்.

குடிப்பதற்கு ஏற்றும், மற்றும் அனைத்து பருவங்களிலேயும்
நீர் கிடைக்கும் குடியிருப்புகளாக இருப்பினும் நீர் நிலைகள்
தனியாருக்குச் சொந்தமானது அல்லது பாதுகாக்கப்படாத நீராக
இருப்பதன் காரணமாக—அதாவது நீர் நிலைகள் இருக்கின்றன,
நல்ல நீராகவும் இருக்கிறது, தனியாருக்குச் சொந்தமாக இருக்கி
கிறது, பாதுகாக்கப்படாமல் இருக்கிறது, அங்கே அதற்கான
நடவடிக்கைகளை எடுத்து, அப்படிப்பட்ட குடியிருப்புகள் மட்டும்
4,955 என்று கணக்கிட்டு வைத்திருக்கிறது.

குடிக்கத் தகுதி உள்ள நீர் ஆதாரங்கள் இருப்பினும் அனைத்
துப் பருவத்திலேயும் குடிநீர் வசதி பெற முடியாத குடியிருப்புகள்,
அதாவது ஆதாரங்கள் இருக்கின்றன, ஆனால் வறட்சியான
கோடை வந்து விடுமேயானால் குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டு
விடும் என்ற அளவிற்குக் கணக்கிடக்கூடிய கிராமங்கள் 6,487
கிராமங்கள் இருந்து கொண்டு இருக்கின்றன.

குடிக்கத் தகுதி அற்ற நீர் ஆதாரங்கள்—அதாவது நீர்
ஆதாரங்கள் இருக்கின்றன, அந்தக் குடிநீரை மக்கள் குடிக்க
முடியாது என்கின்ற தன்மைகள் இருப்பதனால் குடிக்கக்கூடிய
தண்ணீரைக் கொண்டு வந்து சேர்க்கக் கூடிய அளவிற்கு 2,051
கிராமங்கள் என்று மொத்தத்திலே நாம் முதலிலே கணக்கிட்
டோம்.

நீர் ஆதாரங்களே இல்லாமல் 10 மைல், 15 மைல், 20 மைல்,
30 மைலுக்கு அப்பால் ஒரு பெரும் ஆற்றுப் படுகை அல்லது
வேறு இடத்திலிருந்து தண்ணீர் கொண்டு வர வேண்டுமென்ற
அளவிற்கு மட்டும் குடியிருப்புகள் 3,567 இருக்கின்றன.

இவைகளுக்கெல்லாம் திட்டமிட்டுக் கொண்டு வருகின்ற
வகையில் நாம் ஏற்கனவே பல திட்டங்களைப் போட்
டிருக்கிறோம். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே கூட திட்டக்
குழுவினுடைய உதவியிலேயும், மத்திய அரசினுடைய உதவி
யிலேயும், மாநில அரசினுடைய உதவியிலேயும் பல்வேறு திட்டங்
களை நாம் நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம். அந்த
வகையிலே ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே மட்டும் குடிநீர்
வசதித் திட்டத்தினுடைய அடிப்படையிலே 198 கோடியே மூன்று
இலட்சம் ரூபாய் செலவழித்து அடிப்படைத் தேவை பெற திட்
டத்தினுடைய அடிப்படையிலே 63 கோடி ரூபாயும், ஊரக
குடிநீர் வரவு திட்டத்தினுடைய அடிப்படையிலே 55 கோடியே

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 ஏப்ரல் 30

19 இலட்சம் ரூபாயும், தன்னிறைவுத் திட்டத்தின் கீழே 89
கோடியே 84 இலட்சம் ரூபாயும் ஆக தமிழகம் முழுவதும் ஊரகப்
பகுதிகளிலே குடிநீர் கிடைக்க மொத்தம் ஆறாவது ஐந்தாண்டுத்
திட்டக் காலத்தில் 396 கோடியே 6 இலட்சம் ரூபாயை செல
வழித்து இருக்கிறோம்.

மேலும் கிடைக்காத பகுதிகளுக்குக் கிடைப்பதற்கான வகையி
லே செய்ய வேண்டியிருக்கின்றன. அவைகளையெல்லாம் ஏழா
வது ஐந்தாண்டுத் திட்டத்திலே ஓரளவிற்கு எடுத்துக் கொள்ளும்
அளவிற்கு முயற்சியை எடுத்து ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்
திலே திட்டத்தினுடைய அடிப்படையில் ஒரு பதினாயிரம்
குடியிருப்புகளுக்காவது பாதுகாக்கப்பட்ட குடிநீர் எப்பொழுதும்
கிடைக்கத் தக்க அளவிற்குச் செய்ய வேண்டுமென்ற தன்மை
யினுடைய அடிப்படையில் இதற்கு திட்டத்திலே 175 கோடி
ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்
தில், இதற்கு மத்திய அரசினுடைய மானியமாக மேற்கொண்டு
நமக்கு 100 கோடியாவது கிடைக்கும் என்று நாம் எதிர்பார்க்
கிறோம். நாம் திட்டத்திலே ஒதுக்கியது 175 கோடி; மத்திய
அரசிடமிருந்து எதிர்பார்த்து அது தரும் என்று எதிர்பார்க்கிற
அளவிற்கு 100 கோடியும் கிடைக்குமானால் 275 கோடிக்கு
ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நாம் நிறைவேற்ற முடியும்.
அடிப்படைத் தேவைத் திட்டத்தின் கீழ், இவை அல்லாமல்
ரூ. 24 கோடியே 68 இலட்சம் செலவிடப்படவும் இருக்கிறது.
மைய அரசின் மானியமாக, விரைவுபடுத்தப்பட்ட ஊரகக்
குடிநீர்த் திட்டம் என்ற ஒன்று வைத்திருக்கிறார்கள். அந்தத்
திட்டத்தின் கீழே ரூ. 20 கோடியே 7 இலட்சம் மைய அரசு
ஒதுக்கித் தந்திருக்கிறது. இவை அத்தனையையும் வைத்துக்
கொண்டு 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற
பொழுது, குடிநீர்ப் பற்றாக் குறை இருக்கிற அல்லது, குடிநீர்
இல்லாத பல குடியிருப்புகளுக்குக் குடிநீர் தருகின்ற அளவுக்குக்
கொண்டு வந்து சேர்க்கவும் முடியும். 1986-வது ஆண்டு பிப்ரவரி
வரையில், 2,286 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கும் பணிகள்
முடிக்கப்பட்டு இருக்கின்றன. அதன் மூலமாக, 8.10 இலட்சம்
பேர்கள் பலன் பெறுகிறார்கள்.

(முற்பகல் 10-30)

சென்னை மாநகரைப் பொறுத்தவரையிலும் கணக்கிட்டுப்
பார்த்தாலும், 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் குடிநீர் வழங்கு
வதற்காக 15.43 கோடியும், கழிவு நீர் அகற்றுவதற்காக,
ரூ. 20.18 கோடியும் நாம் ஒதுக்கிச் செலவழித்திருக்கிறோம்.
1981—83 ஆம் ஆண்டுகளில் வறட்சிக்காகத் தனியாக சென்னை
மாநகராட்சி மன்றப் பகுதிகளில் குடிநீர் வழங்குவதற்கு ரூ. 10.11
கோடி ஒதுக்கீடு செய்திருக்கிறோம். 1986-87 ஆம் ஆண்டில்,
திட்டப் பணிகளுக்கென்று ரூ. 9.29 கோடியும், குடிநீர்த் திட்டத்



1986 ஏப்ரல் 30] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

தினுடைய அடிப்படையிலே கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்தையும்
சேர்த்து, அதற்கு ஒதுக்கீட்டுத் தொகையையும் சேர்த்து ரூ.
47.50 கோடியும், செயற்கை மழைத் திட்டத்திற்கு, ரூ. 13
இலட்சமும் ஒதுக்கியிருக்கிறோம்.

புழலேரிப் பகுதியிலேயும், செங்குன்றம் பகுதியிலேயும் மற்றும்
சத்தியமூர்த்தி சாகர் பகுதிகளிலும் செயற்கைமழை
பெய்விப்பதன் மூலமாகவும் குடிநீர் கொஞ்சம் அதிகப்படுத்தி
சென்னை நகருக்குத் தரலாம் என்ற அளவுக்கு ரூ. 13 இலட்சம்,
ஆக, ரூ. 56.92 கோடி அந்த வகையிலே ஒதுக்கீடு செய்வதற்கு
நாம் முனைந்திருக்கிறோம் என்பதையும் இந்த வாய்ப்பிலே
நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இந்த வறட்சி நிலைமைகளால் ஏற்பட்டிருக்கிற
சூழ்நிலைகளையெல்லாம் பல்வேறு மாவட்டங்களிலிருந்து வந்
துள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் ஆங்காங்கு சுட்டிக் காட்டி
னார்கள். இந்த வறட்சி ஏற்பட்டதன் காரணமாக, எங்கெங்கு
பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் விவசாயம் நடைபெற
வில்லையென்றும் ஆகவே, வரி முதலியவைகளைக் கட்ட முடி
யாத நிலைமையில், ஆங்காங்கு உழவர் பெருமக்கள் தவிக்
கிறார்கள் என்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு வாய்ப்பு
களில் கேள்விகளின் மூலமாகவும் பிறகு மானியக் கோரிக்கை
களில் விவாதம் நடைபெறுகிற பொழுதும் எடுத்துச் சொல்லி
யிருக்கிறார்கள். அப்பொழுதெல்லாம் நானும்கூட குறிப்பிட்
டிருக்கிறேன், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அந்த, அந்த
மாவட்டத்தினுடைய சூழ்நிலையைப் பற்றி அரசுக்குத் தகவல்
தெரிவிக்கும் படியாகவும், எந்த, எந்த வகையிலே நிவாரணப்
பணிகள் மேற்கொள்ள வேண்டுமென்று விளக்கங்கள் தெரிவிக்
கும்படியாகவும் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அந்த வகையிலே
பல மாவட்டங்களிலேயிருந்து விளக்கங்கள் வந்திருக்கின்றன.

காமராஜர் மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும், பாதிக்
கப்பட்ட வட்டங்கள் 6 என்றும் அதிலே பாதிக்கப்பட்ட
சிற்றூர்கள் என்ற அளவிலே 578 சிற்றூர்கள் என்றும் நஞ்சை
நிலம், புஞ்சை நிலம் ஆகிய இரண்டும் சேர்ந்து 3,24,703
ஹெக்டேர் நிலம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்றும் அதன் காரண
மாக, மாவட்ட ஆட்சித் தலைவர் அரசுக்குப் பரிந்துரை செய்
திருப்பது, ரூ. 43,52,466.45 தள்ளுபடி செய்ய வேண்டிய
அவசியம் இருக்கிறது என்று எழுதியிருக்கிறார்கள். அரசு பரி
சீலித்து அதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம்
இருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுக் கூறிக் கொள்ள விரும்பு
கிறேன்.

மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும் ஏழு வட்டங்
களிலே 355 சிற்றூர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்றும்
அதன் காரணமாக, மொத்தம் பாதிக்கப்பட்ட, நஞ்சை, புஞ்சை

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 ஏப்ரல் 30

நிலங்கள் மட்டும் 3,86,261 ஏக்கர் நிலம் என்றும் அதற்காக வரி வஜா செய்கின்ற வகையில் ரூ. 34,28,994 தள்ளுபடி செய்ய வேண்டி வரும் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் குறிப்பு அனுப்பியிருக்கிறார்கள். அதுபற்றியும் அரசு தக்க நடவடிக்கை எடுத்து, அதனை நிறைவேற்றி வைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடும்.

பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தைப் பொறுத்த வரையிலும் 5 வட்டங்களில் 385 சிற்றூர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்றும் மொத்தம் 1,39,660 ஹெக்டேர் நிலம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்றும் அங்கே வஜா செய்கின்ற தொகை ரூ. 34,32,573.34 வரும் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அறிக்கை வைத்திருக்கிறார். அதுபற்றியும் அரசு தக்க நடவடிக்கை எடுத்திருக்கிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னவருடைய பேச்சிலே குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் அந்த பசலி 2 மாதம்தான், இந்த வரி வசூல் சம்பந்தமாக. ஜனவரி மாதத்திலிருந்து நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். அங்கே வரி வஜா வேண்டுமென்ற கோரிக்கை தந்திருக்கிறார்கள். நியாயமான கோரிக்கையும் கூட. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொல்லும்போது கூட ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் என்ன பரிசீலனை வேண்டியிருக்கிறது? இன்றைக்கு அறிவிக்கலாம் அல்லவா? அப்படி அறிவிக்கப்படாத காரணத்தினால் கிராமங்களிலே அவை முனைப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இரண்டு மாத காலம் அதற்கான கெடு இருக்கிறது. இன்றைக்கு அறிவித்து விட்டால் கூட ஓரளவிற்கு காப்பாற்றலாம். இன்னும் பரிசீலனை செய்தால் அதற்குள் வரி வசூல் முடிந்துவிடுமே. ஆகவே இன்றைக்கே அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, அறிவித்து விடலாம். பொதுக்கணக்குக் குழுத் தலைவராகிய திரு. சித்தன் அவர்கள் ஏன் இதை கவனிக்கவில்லை? ஏன் அதைக் கவனிக்கவில்லை? ஏன் இதைப் பரிசீலனை செய்யவில்லை என்று கேள்வி கேட்பார்கள். இதற்கெல்லாம் இடம் இல்லாத வகையில் திட்டவட்டமாக தெளிவாகச் செய்ய வேண்டும் என்பதற்காக செய்திருக்கிறோமே தவிர வேறொன்றுமில்லை. ஆகையினால் காலம் கடக்கிறது என்பதற்காக யாரும் பணத்தைக் கொண்டு வந்து கொடுத்து விடுவதில்லை. கெடுபிடி இப்போது செய்யச் சொல்லவில்லை. வறட்சி ஏற்பட்ட இடங்களில் ஜப்தி செய்ய வேண்டாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் சொல்லியிருக்கிறோம். வறட்சியினுடைய அறிக்கை



986 ஏப்ரல் 30] [திரு. என். எஸ். வி. சித்தன்]

வந்திருக்கிறது. இவ்வளவு கணக்கு வஜா செய்ய வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அரசுக்கு அனுப்பி, அரசு இதற்கு யோசித்துக் கொண்டிருக்கிறது. இது வருவாய்த் துறையிலிருந்து நிதித்துறை ஏற்றுக் கொள்ள வேண்டும். சில சடங்குகள் இருக்கின்றன. ஒரு சடங்கை விட்டாலும் கூட திரு. சித்தன் அவர்கள் விடமாட்டார்கள். முறைப்படி நடைபெற வேண்டும். விரைவாக நடைபெற வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்கிறேன். இன்றைக்கே என்று அவர்கள் சொல்கிறார்கள். இன்றைக்கு இயலாது என்பதைத் தெரிவித்து விரைவாக நடைபெறும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

அண்ணா மாவட்டத்தைப் பொறுத்த வரையில் 63 கிராமங்களில் 1,01,903 ஏக்கர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதன் மூலம் 7,57,553 ரூபாய் தள்ளுபடி செய்ய வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எழுதியிருக்கிறார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 405 கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அங்கே மொத்தம் 1,90,594 ஏக்கர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. 48,84,335 ரூபாய் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பரிந்துரை செய்திருக்கிறார்கள். தஞ்சாவூர் மாவட்டத்தில் நஞ்சை, புஞ்சை நிலங்கள் 9,51,283 ஏக்கர் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்றும் இதன் மூலமாக அங்கே 2,28,238 ரூபாய் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் அவர்கள் எழுதியிருக்கிறார்கள். பெரியார் மாவட்டத்தினுடைய அறிக்கை எதிர் பார்க்கப்படுகிறது. வேறு மாவட்டங்களினுடைய அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றின் மீது தக்க நடவடிக்கை விரைவிலே எடுப்பதற்கு அரசு முயற்சி செய்யும் என்பதை இந்த வாய்ப்பிலே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் :** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய விளக்கத்திலே குறிப்பிட்டார்கள். விவசாயிகளுடைய கடன் வசூலிப்பதிலே ரெவின்யூ நிதிவசூல் மாத்திரம் அல்லாது விவசாயிகள் கூட்டுறவுக் கடன் வசூலிப்பதிலே மிகவும் கெடுபிடி செய்து ஜப்தி நடவடிக்கை செய்திருக்கிறார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய மாவட்டத்திலே, என்னுடைய தொகுதியிலே 3 ஆண்டுகளாக பருவமழை பொய்த்து, நல்ல செழிப்பாக இருந்த கிராமத்தில் வாழை, தென்னை, பாக்கு மரங்கள் எல்லாம் காய்ந்து, அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அரசாங்கத்திலே ரெவின்யூ போர்ட் அதிகாரி ஒருவரை அனுப்பி அவர் பார்வையிட்டு அந்தப் பகுதியெல்லாம் சேதங்கள் ஏற்பட்டதற்கு அரசாங்கத்திற்கு ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார்கள். அங்கு ஜப்தி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட நடவடிக்கை இல்லாமல்

கூட்டுறவுச் சங்கம் ரெவின்யூ கடன்கள், அரசாங்கக் கடன்கள் வசூலிப்பதிலே ஜப்தி நடவடிக்கை இல்லாமல் இருக்குமாறு பார்த்துக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே, இப்பொழுது நிலவரியைப் பொறுத்தவரையில், புஞ்சை நிலங்களுக்கு நிலவரி கிடையாது நீண்ட நாட்களாக. நஞ்சை நிலங்களுக்கு 5 ஏக்கருக்குக் கீழே நிலவரி கிடையாது. இது சாதாரணமானது அல்ல. நிலமே இல்லாதவர்கள் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். நிலம் இல்லாத விவசாயத் தொழிலாளர்கள் பலர் இலட்சக் கணக்கில், கோடிக்கணக்கில் இருக்கிறார்கள். 5 ஏக்கருக்கு மேல் இருப்பவர்களுக்குத் தான் நில வரி இருக்கிறது. அந்த நிலவரி விகிதம் கூட 37-லே என்ன விதித்தோமோ அந்த விகிதம் தான். மற்றவைகளிலெல்லாம் மாறுதல்கள் ஏற்பட்டு இருக்கின்றன. நிலவரி ஒன்றில் தான் மாறுதல் ஏற்படாமல் அன்றிலிருந்து இன்றுவரை அப்படியே இருக்கிறது. இந்த நிலவரி கொடுக்க வேண்டியவர்கள் 5 ஏக்கருக்கு மேலே இருக்கின்ற வசதி படைத்தவர்கள்,

(முற்பகல் 10–40)

இன்னும் ஒன்று சொல்ல விரும்புகிறேன். வசதி குறைவாக இருப்பவர்களிடத்திலே இருந்து ஒழுங்காக நிலவரி வந்து சேர்வதாகக் கணக்கு இருக்கிறது. ஆனால் வசதி படைத்தவர்கள் தங்கள் வசதியை வைத்துக் கொண்டு எதையும் செய்யலாம் என்ற அளவுக்குக் கொடுக்காமல் இருக்கிறார்கள். 5 ஏக்கருக்கு மேலே உள்ள வசதி படைத்தவர்கள் 1937 ஆம் ஆண்டிலே இருந்து நிலவரியைக் கூட கொடுக்காமல் இருந்தால்—மொத்தத்தில் சொன்னால் 20 கோடி ரூபாய்தான் வருகிறது. இதைக்கூட கொடுக்க மறுக்கிறார்கள். ஆகவேதான் வசதி ஏற்படும்போது கொடுக்கட்டும். வறட்சி நிலைமையிலே தள்ளிப் போடுவது பற்றித் தடையில்லை. ஆனால் வசதி படைத்த ஆண்டுகளிலே யாவது அதைத் தரலாம் அல்லவா? இதுபற்றிய கணக்குகளை உட்கார்ந்து பேசலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. தீர்த்தகிரி போன்ற நல்லவர்கள் எல்லாம் வந்து எந்தெந்த வகையில் எந்தெந்த ஆண்டுகளில் வறட்சி இருந்தது. எந்தெந்த ஆண்டுகளில் வசதி இருந்தது என்பதைப் பற்றி எல்லாம் பேசலாம். கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்தவரையில் அது நம்முடைய அரசின் பணம் அல்ல. ரிசர்வ் வங்கியின் பணம் அது. அங்கே பொது மக்கள் போடுகிற டெப்பாசிட் பணமும் அதிலே வருகிறது. ஆகவே 60 சதவீதமாவது கொடுக்கப்பட்ட கடன் அந்தந்த ஆண்டுகளிலே திரும்ப வசூலிக்கப்பட்டால்தான் மறுபடியும் கடன் கொடுப்போம் என்று திட்டவட்டமாகவும், தெளிவாகவும் ரிசர்வ் வங்கி சொல்லியிருக்கிறது.



மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இங்கே கூறியதற்கிணங்க கூட்டுறவு வங்கிகளுக்கெல்லாம் விரைவிலே தேர்தலை நடத்தி மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்களிடத்திலே ஒப்படைத்துவிட்டால் அப்போதுதான் கூட்டுறவு வங்கிகளை நடத்துவதில் இருக்கிற தன்மைகள், சிறப்பியல்புகள் பற்றித் தெரியும். 60 சதவீதமாவது வசூல் செய்தால்தான் மறுபடியும் ரிசர்வ் வங்கி கடன் தரும். அவர்கள் கடன் தந்தால்தான் அடுத்த ஆண்டு விவசாயிகள் விவசாயப் பணிகளைச் செய்ய முடியும். இப்போது கிட்டத்தட்ட 48, 49 சதவீதம்தான் வசூல் ஆகி இருக்கிறது. அது 60 சதவீதத்திற்கு வந்து நின்றாலொழிய ரிசர்வ் வங்கி நமக்குக் கடன் தர மாட்டார்கள். அவர்கள் கடன் தரவில்லை என்றால் நம்மால் விவசாயிகளுக்குக் கடன் தர முடியாது. இவற்றை எல்லாம் எண்ணிப் பார்த்துத்தான் யோசனை செய்துதான் எந்த அளவுக்குத் தரலாம் என்று சொல்ல முடியும். ஒரு காலத்தில தமிழகம் 85 சதவீதம், 87 சதவீதம், 90 சதவீதம் என்ற அளவுக்குக் கூட்டுறவுக் கடன்களை வசூல் செய்து முதலிடம், இரண்டாம் இடம் எல்லாம் பெற்று பெருமை பெற்றிருந்தது. தமிழ்நாடும், மகாராஷ்டிரமும் அகில இந்தியாவிற்கே எடுத்துக் காட்டாக இருந்தன. இப்போது குஜராத், மகாராஷ்டிரா போன்றவை எடுத்துக் காட்டாக இருக்கின்றன. மேற்கு வங்கம், ஒரிஸ்ஸா, மத்தியப் பிரதேசம் ஆகியவை கூட 85 சதவீதம், 90 சதவீதம் என்று வசூலிக்கிறார்கள். பக்கத்திலே இருக்கிற கேரளம் கூட 80 சதவீதம், 85 சதவீதம் என்று வசூலிப்பதில் முனைப்போடு இருக்கிறார்கள். திறமை படைத்த நாம்தான் பின்தங்கி இருக்கிறோம்.

ஆகவே இதற்கு வேறு ஏதாவது மாற்று யோசனை இருந்தால் சொல்லுங்கள். இதனை வசூலிப்பதற்கான வழிவகை பற்றிச் சொல்லுங்கள். அரசு அதைக் கேட்கும். ஆனால் கொடுமைப் படுத்த வேண்டும் என்ற எண்ணம் அரசுக்குக் கொஞ்சமும் இல்லை. 60 சதவீதத்தைத் தாண்டினால்தான் கடன் கொடுக்க முடியும். அந்த நோக்கத்தை நிறைவேற்ற வேண்டுமே தவிர கெடுபிடி நடத்த வேண்டும் என்ற எண்ணத்தில் அரசு இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

***திரு. ஆர். எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, குறைந்த மழை பெய்த இடங்களுக்கெல்லாம் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதற்காக நன்றி. இரண்டு மாவட்டங்களுக்கு 6¼ கோடி ரூபாய் சிறப்பு ஆணையர் வழங்கி இருக்கிறார்கள். அதற்கும் நன்றி. இதிலே ஆறாம் பக்கத்தில் நெல்லை மாவட்டம் நீங்கலாக என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் ஒன்றைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஓட்டப்பிடாரம் தாலுக்கா மற்றும் கோயில்பட்டி, சங்கரன்கோயில் ஆகிய பகுதிகளில்

[திரு ஆர். எஸ். ஆறுமுகம்] [1986 ஏப்ரல் 30

1984-லே இருந்து மழை இல்லை. குடிக்கத் தண்ணீர் இல்லை. கடுமையான வறட்சி இருக்கிறது. அதற்குப் பரிகாரம் உண்டா? அருள்கூர்ந்து அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தினைப் பொறுத்தவரையில் ஏன் நீக்கினார்கள் என்பதற்கான காரணத்தை இப்போது தெரிவிப்பதற்கில்லை. நீக்கியதற்கான காரணம் இருக்க வேண்டும். அந்தக் காரணம் என்ன என்பது பற்றிய தகவல் இப்போது இல்லை. வேறு வாய்ப்பு ஏற்படும் போது சொல்கிறேன். ஒட்டப்பிடாரம், கோவில்பட்டி, நாங்குனேரி போன்ற பகுதிகளில் என்றைக்கு மழை பெய்தது, இன்றைக்குப் பெய்யாமல் இருக்க? உலகம் தோன்றிய காலத்திலிருந்தே அங்கே மழை பெய்வது கிடையாது. (சிரிப்பு) அவையெல்லாம் வறட்சியான பகுதிகள் என்ற பெயரைப் பெற்று விட்டன. அந்தப் பகுதிகளைப் பொறுத்தவரையில் குடிதண்ணீர் கட்டாயம் கொடுக்க வேண்டும் என்ற வகையில் திட்டம் தீட்ட வேண்டிய முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். அங்கெல்லாம் மழை எப்போதுமே குறைவுதான்.

அந்தப் பகுதிகளைப் பொறுத்தவரையில் வேறு விவசாயப் பணிகளைச் செய்ய முடியாது; விளைச்சலை ஏற்படுத்த முடியாது. மானாவாரி பூமியாகத்தான் இருக்க முடியும். ஆனால் குடிப்பதற்கு தண்ணீர் தருவதைப் பொறுத்தவரையில் அதற்கு முன்னுரிமை தரவேண்டும் என்று நாம் சொல்லி இருக்கிறோம். வறட்சிப் பகுதிதான் அது. கல் தோன்றி, மண் தோன்றாக் காலத்திலிருந்தே அங்கே சரியாக மழை பெய்ததாகத் தெரியவில்லை. (சிரிப்பு) எனவே குடிநீருக்கான முயற்சி எடுத்துக் கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து உச்சவரம்புச் சட்டம் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள்.......

**திரு. வி. பி. சிந்தன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்கு ஏற்ப ஒரு சின்ன விளக்கத்தை கேட்கிறேன். அக்ரிகல்சுரல் இன்கம்-டாக்ஸ் என்ற வகையில், நிலச் சீர்திருத்தச் சட்டத்திலுள்ள உச்சவரம்புக்கு மேல நிலம் எந்த அளவுக்கு அதிகப்படியாக வைத்திருக்கிறார்களோ, அவர்கள் மீது ஒரு இன்கம்-டாக்ஸ், ஸ்லாப் பேசிஸ்ஸில் கொண்டு வருவதற்குரிய உத்தேசம் அரசுக்கு உண்டா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.



986 ஏப்ரல் 30]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே, விவசாயத்துறையின்கீழ் அக்ரிகல்சர் இன்கம்-டாக்ஸ் என்று ஏற்கனவே இருக்கின்றது என்று நான் கருதுகிறேன். அதிகப்படியான நிலத்திற்கு அது னுடைய தன்மைக்கேற்ப சிலாப் சிஸ்டமேகூட இருக்கிறத, என்று நான் கருதுகிறேன். அது அதிகப்படுத்தப்படுமா என் பதைப் பற்றி இப்போது விவரங்கள் கூறுவதற்கு என்னிடம் குறிப்புகள் இல்லை.

இந்த நிலங்களிலிருந்து அதிகப்படியான வருவாயைப் பெறு வதற்கான சூழ்நிலையை நாம் பெற வேண்டும் என்றால் இன் னொன்றை நாம் கருத வேண்டும். சாதாரணமாக நஞ்சை நிலங்கள், நெல் போன்றவைகள் பயிரிடுவதில் இருப்பதைவிட பணப் பயிர்களுக்குத்தான் அதிகமான லாபத்தை விவசாயிகள் பெறுகிறார்கள். அந்தப் பணப் பயிர்களைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று அதிலே கொஞ்சம் அதிக வருவாய் கிடைக்குமா, இன்கம்-டாக்ஸ் போன்றவைகளை மற்றவைகளை உயர்த்த வழி இருக்குமா என்று பார்ப்போமே யானால் கூடுதலான வருமானம் வரும். அதுபற்றிகூட அரச பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்று கூறிக் கொள்ள விரும்பு கிறேன்.

நில உச்சவரம்புச் சட்டத்தின்படி உபரி நிலமாக, பங்கீட்டுக்கு உரிய உபரி நிலமாக இருப்பது, 1,37,930 ஏக்கர் ஆகும். கரும்புப் பண்ணை வாரியம், பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங் கள், விளையாடுமிடம், வாய்க்கால், தார்ச் சாலைகள் போன்ற வற்றிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது 14,017 ஏக்கர். வழக்கு மன்றத்திலே தடை ஆணைகளால் அதன் காரணமாக கையகப் படுத்தியும் பங்கீடு செய்ய முடியாமல் இருப்பவை 26,807 ஏக்கர். அந்த வழக்குகள் உயர்நீதிமன்றத்தில் முடிவிற்கு வந்த தற்குப் பிறகு, அதனை எடுத்து பங்கீடு செய்ய முடியும் என்று நான் கருதுகிறேன்.

அதில் இதுவரையில் பயன்பெற்றோர் என்ற அடிப்படையில் ஆதிதிராவிடர்கள் 42,342 பேர்களுக்கு 46,913 ஏக்கர் பரப்பளவு நிலமும், பழங்குடியினர் 77 பேர்களுக்கு 114 ஏக்கர் பரப்பளவு நிலமும், பிறர் என்ற வகையில் 53,368 நபர்களுக்கு 75,129 ஏக்கர் பரப்பளவு நிலமும், ஆக மொத்தம் 95,787 பேர்கள் பயன் அடையத் தக்க அளவுக்கு 1,22,156 ஏக்கர் நிலங்கள் பகிர்ந்து அளிக்கப்பட்டிருக்கின்றன. அதில் மேலும் நடவடிக்கை எடுத்து பங்கீடு செய்வதற்கான முயற்சிகளிலும் நாம் ஈடுபட்டிருக் கிறோம். (குறுக்கீடு).

[1986 ஏப்ரல் 3.)

திரு. பொ. உத்திராபதி ; மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அறிவிக்கின்றபோது நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட உபரி நிலங்கள் சம்பந்தப்பட்ட விவரங்களை எல்லாம் சொன்னார்கள். இதே சட்டமன்றத்திலே இன்னும் தமிழகத்திலே பினாமி பெயர்களால் வைத்திருக்கக்கூடிய நிலங்களை எடுத்து நிலம் அற்றவர்களுக்கு கொடுப்பதற்காக சட்டத்தை இயற்றி நிறைவேற்றி மத்திய சர்க்காருக்கு அனுப்பி யிருக்கிறோமே, அதை மீண்டும் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பது ஒன்று.

இரண்டாவது தஞ்சை மாவட்டத்தில் 9 லட்சம் ஏக்கர் பாதிக் கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். 14 லட்சத் திலே 9 லட்சம் ஏக்கர் பாதிக்கப்பட்டது 2 முறைகள். ஆகவே கூட்டுறவு கடனை கொடுக்க வேண்டாம் என்று சொல்லவில்லை. கொடுக்க வேண்டும். ஆனால் விவசாயிகள் நிலத்திலே போட்ட பணத்தை இழந்துவிட்டால் அது இழந்தது இழந்ததுதான். அதைத் திரும்பப் பெற முடியாது. ஆகவே நான் கேட்டுக் கொள் வது விவசாயிகளுக்கு உயர் மட்டக் குழு சிபாரிசு செய்திருக்கிறதே அந்த சிபாரிசை அரசு பரிசீலித்து இருக்கிறதா? வட்டியையாவது தள்ளுபடி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே, அதனுடைய தன்மை முழுவதும் என்ன நிலைமை என்று இப்போது நான் சொல்வதற்கில்லை. ஆனால் இவற்றை எல்லாம் தள்ளுபடி செய்து விட்டால், ரிசர்வ் பாங்கிலிருந்து சென்டிரல் பாங்க் வந்து, சென்டிரல் பாங்க் கிலிருந்து டிஸ்டிரிக்ட் பாங்க் போய், அங்கிருந்து பிரைமரி பாங்குக்கு வந்து விவசாயிகளுக்கு கொடுக்க வேண்டும் என்ற நிலையில் ஒத்தி வேண்டுமானால் போடலாமே தவிர, தள்ளு படி செய்ய இயலாது. மாண்புமிகு உறுப்பினர்கள் முதலிலே குறிப்பிட்டபடி பாதிக்கப்பட்ட இடங்களிலே வேண்டுமானால் தள்ளி வைக்க முயற்சிகளை செய்யலாம். ஆனால் அதை சாக்காக வைத்து எல்லோருமே கேட்டு, எல்லோருக்கும் தள்ளி வைக்கப்படுகின்ற நிலைமை வந்தால் 60 சதவீதம்கூட திருப்பிக் கட்டாவிட்டால், அடுத்த ஆண்டு பணமே வராது. கடனே பெற முடியாது. அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படுகிற போது, கடந்த ஆண்டுகூட சிலர் கடன் வாங்க முடியாமல் தவித் திருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்திலே அப்படி விளைச்சலே இல்லாமல் அடியோடு போய்விட்டதா என்று சொன்னால், கொள்முதல் 4 லட்சம் அல்லது 5 லட்சம் டன் என்று சொன்னால் அந்த அளவிற்கு அதைத் தந்து விட்டு, ஓபன் மார்க்கெட்டிற்கு வரும்போது அதைக் கொண்டு போய்க் கொடுத்துக் கொள்ள லாம் என்பதற்காக இன்னமும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.



1986 ஏப்ரல் 30] [டாக்டர். இரா. நெடுஞ்செழியன்]

(முற்பகல் 10–50)

ஆகவே அடுத்த ஆண்டு இந்த பர்சேஸ் லெவியும் போட்டு கொள்முதலும் செய்யலாமா என்று அந்த அளவிற்கு போடலாமா என்று பார்த்தால், இப்போது கட்டுப்பாடு விலை நிர்ணயித்து மேற்கொண்டு 35 ரூபாய்க்கு இடுபொருள்கள் தருகிற அளவிற்கு நாம் வைத்திருக்கிறோம். $4\frac{1}{2}$ லட்சம், $4\frac{3}{4}$ லட்சம் நமக்கு வசூலாகி இருக்கிறது. இப்போதும் பல பேர்களிடத்தில் இருக்கி கிறது என்ற ஒரு கணக்கு இருக்கிறது. நீக்கிவிடுவார்கள் என்று எதிர்பார்க்கிறார்கள். இன்னமும் ஒரு மாதம் கொள்முதல் 35 ரூபாய் கொடுத்து செய்யலாமென்று நாம் நீட்டியிருக்கிறோம். இந்த ஏப்ரல் மாதம் முழுவதும் நாம் நீட்டியிருக்கிறோம். ஆகவே மேற்கொண்டு நீட்ட வேண்டிய அவசியம் இருக்கிறதா என்று பரிசீலிக்கவும் வேண்டும். அறவே இல்லையென்று சொல்ல முடி யாது. ஆனால் வசதி படைத்தவர்கள் கொடுக்கலாம். வசதி யற்றவர்கள் தங்களுடைய நிலையை எடுத்துச்சொல்லி ஒத்தி வைப்பதற்கான முயற்சியை மேற்கொள்ளலாம். அதை அரசு கவனிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கு. சுப்பராயன்** : மாற்றுத் தலைவர் அவர்களே, அடிப்படையில் கொள்கைக் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிற பின்னால் நாம் கையகப் நிலச் சீர்திருத்தச் சட்டங்களுக்குப் போதுமானதாக இல்லை. படுத்திய நிலங்கள் நியாயமானதாக, முடியாமல் போனதற்குக் ஆகவே நிலத்தைக் கையகப்படுத்த எல்லாம் ரத்துச் செய்து காரணமாக இருக்கிற விதிவிலக்குகளை புதிய பினாமி பினாமிகளை கையகப்படுத்துகிற முறையில் ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு மாநில அரசு இந்தக் கூட்டத் தொடரிலேயே ஒரு மசோதாவைத் தாக்கல் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற அளவில் பரிசீலிக்கலாம். அதனுடைய அடிப்படையில் இப்போது இருக்கிற விதிமுறைகளின் மூலமாக தப்பித்துக் கொண்டிருக்கிற சூழ்நிலை இருக்கிறதா என்று ஆராய்ந்து பார்த்து செய்யலாம். இப்போது ஒரு சட்டத்தை இந்த அவையில் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி குடியரசுத் தலைவரின் ஆணையைப் பெறுவதற்கு இருந்து கொண்டிருக்கிறது. மத்திய அரசுக்கு நாம் பல தடவை எழுதியிருக்கிறோம். அங்கே போய் அங்கேயிருக்கிற வேளாண் மைத் துறைச் செயலாளர் இடத்திலும், மற்றவர்களிடத்திலும் திரும்பத் திரும்ப வற்புறுத்திக்கொண்டு வருகிறோம். அது இன்னும் கையெழுத்தாகி வரவில்லை. அது கையெழுத்தாகி விடுமானால் இந்தச் சட்டத்தை நாம் நடைமுறைப்படுத்தலாம். மாண்புமிகு உறுப்பினர் உத்திராபதி, சுப்பராயன் போன்றவர் கள் சொல்வது போன்று அப்படி ஒரு சட்டம் அங்கே இருக்கிற

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 ஏப்ரல் 30

போது வேறொரு சட்டம் கொண்டு வருவதற்கு சட்டம் இடம்
கொடுக்குமா என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும். அதைப்
பரிசீலனை செய்து அதற்கு வழியிருக்கிறதென்றால், அந்த
வழியைப் பின்பற்றுவதில் ஆட்சேபனை இல்லை. அதை ஆராய
லாம் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பொ. உத்திராபதி :** மாற்றுத் தலைவர் அவர்களே,
அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், வட்டி தள்ளு
படி செய்ய வேண்டுமென்று ஒரு பக்கம் இருந்தாலும், அபராத
வட்டிதான் விவசாயிகளை அதிகமாகப் பாதித்து வருகிறது.
அதை அரசே தள்ளுபடி செய்யலாம் என்று சொல்கிறார்கள்.
ஆகவே அந்த அடிப்படையில் அபராத வட்டியைத் தள்ளுபடி
செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாற்றுத்
தலைவர் அவர்களே, அதுபற்றி ஆராயலாம். அபராத வட்டி
யென்றால் பல ஆண்டுகளாக கட்டாமலிருந்து வந்திருக்கிறார்கள்
என்றுதான் அதற்கு அர்த்தம். குறிப்பிட்ட காலத்தில்
கட்டத் தவறியிருக்கிறார்கள். ஆகவேதான் அபராதம் வளர்ந்து
வளர்ந்து வந்திருக்கிறது என்று அதற்குப் பொருள். ஆகவே
எந்தவகையில் தீர்க்கலாம் என்பதைத் தனியாகச் சிந்திக்க
வேண்டுமென்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

***திரு. வே. இரா. ஜெயராமன் :** மாற்றுத் தலைவர் அவர்களே,
மாண்புமிகு உறுப்பினர் வி.பி. சிந்தன் அவர்கள் வேளாண்மை
வருமான வரியை அதிகப்படுத்த வேண்டுமென்ற ஒரு கருத்தைச்
சொன்னார்கள். ஏற்கனவே வேளாண்மை வருமான வரி தமிழகத்
தில் இருக்கிறது. 7½ ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேலே இருப்
பதற்கு பூராவும் காம்பவுண்டிங் செய்து கொள்ளலாம் என்று
விதிமுறைகள் இருக்கின்றன. ஏற்கனவே விவசாய வருமான வரி
மூலமாக வருகிற வருவாயைக் காட்டிலும், அதை வசூலிக்கிற
செலவுதான் அதிகமாக இருக்கிறது. ஆகவே விவசாய வருமான
வரியை அறவே நீக்குவதற்கு அரசிற்கு உத்தேசம் இருக்கிறதா
என்று அறிய விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
விவசாய வருமான வரியை அதிகப்படுத்துவதைப் பரிசீலிக்கலாம்
என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே நான் சொல்லியிருக்கிற
அந்தக் கருத்தையும் சேர்த்து வைத்து ஆராய வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாற்றுத்
தலைவர் அவர்களே, பேசிக்கொண்டிருக்கிற எனக்கும் மாண்புமிகு
உறுப்பினர்களுக்கும் தான் நேரிடையான தொடர்பு இருக்க
வேண்டும். உறுப்பினருக்கு உறுப்பினர் பேசத் தொடங்குவார்
களானால் நான் எழுந்தே கூட போய்விடலாம். ஆகவே ஒவ்



1986 ஏப்ரல் 30] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

வொருவரும் விளக்கம் பெறுகிற வாய்ப்பு வருகிறபோது
சொல்லலாம். நான் பேசுகிறபோது என்னிடத்தில் நேரிடைத்
தொடர்பு வைத்துக் கொள்ளலாம். ஆகவே அந்தவகையில் வரு
வாய்த் துறைக்கு அடுத்தபடியாக மிகமிகத் தேவையாக அத்யா
வசியமாக இருப்பது பாசனத் துறையாகும். அடுத்து பாசனத
துறை குறித்த மானியக் கோரிக்கை எடுத்துக் கொள்ளவிருக்
கிறார்கள். ஆகவே நிலப்பட்டா வழங்குவதிலே முறையாகக்
கிடைக்கிற அளவிற்கு நாம் வழங்கிக் கொண்டு வருகிறோம்.
1977–78ஆம் ஆண்டிலிருந்து 1985–86ஆம் ஆண்டு வரையிலும்
ஒரு லட்சத்து 92 ஆயிரத்து 357 ஏக்கர் நிலத்தை நாம் வழங்கி
இருக்கிறோம். அதன் மூலமாக 1,73,767 பேர்கள் பயன் பெற்று
இருக்கிறார்கள். சென்ற ஆண்டு 1985–86லே மட்டும்
5,066 பேர்களுக்கு 5,896 ஏக்கர் வழங்கப்பட்டு இருக்கிறது.
இந்த முயற்சி மேலும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு
வருகிறது என்பதை இந்த வாய்ப்பிலே நான் கூறிக்கொள்ள
விரும்புகிறேன்.

அதைப்போல வீட்டு மனைப்பட்டா வழங்குகின்ற முயற்சி
யிலே கூட இந்த அரசு 1977–78 ஆம் ஆண்டிலிருந்து 1985–86
வரையிலும் 10,28,936 ஏக்கர் நிலங்கள், உள்ளபடியே பகிர்ந்து
தந்து இருக்கிறது. ஒன்பது ஆண்டுக்காலத்திலே, மொத்தம்
இத்தனை பேர்களுக்கு வழங்கப்பட்டு இருக்கிறது. சென்ற
ஆண்டு மட்டும் 1,79,400 பேர்களுக்கு வழங்கப்பட்டு இருக்கிறது.
1985-86-ல் மொத்த வீட்டு மனைப் பட்டா 1,79,400 பேர்
களுக்கு வழங்கப்பட்டதிலே, ஆதி திராவிடர்களுக்கு மட்டும்
83,414, பழங்குடியினர்களுக்கு 4,032, மற்றவர்களுக்கு 91,954
ஆக இந்த மனைப்பட்டா வழங்குகிற இடத்திலே கூட வாய்ப்பு
உள்ள இடங்களில், புறம்போக்கு நிலத்தை வழங்குகின்ற அள
விற்கும் வசதி இல்லாத இடத்திலே அதைக் கையகப்படுத்தித்தான்
வழங்கவேண்டிய ஒரு நிலைமையும் ஏற்படுகிறது. குறிப்பாக
தஞ்சை மாவட்டம், திருச்சி மாவட்டம், சிதம்பரம் வட்டம்
போன்ற இடங்களில் நஞ்சை நிலத்தைக் கையகப்படுத்தவேண்டிய
அவசியம் ஏற்படுகிறது. ஆகவே நஞ்சை நிலத்தை
கையகப்படுத்தி வீட்டு மனையாக ஆக்குகிறோம். ஒரு
பக்கம் அணைக்கட்டுகளைக் கட்டி, நீர்ப்பாசனம் செய்து
புதிய நஞ்சை நிலங்களை சாகுபடிக்குக் கொண்டு வர
அரும்பாடு படுகிறோம். மற்றொரு பக்கம் நஞ்சை நிலங்களை
எல்லாம் தீர்த்துக் கொண்டு வருகிறோம். இந்தக் கொள்கையே
கூடாது என்று சொல்கிறார்கள். இருந்தாலும் அந்த ஊரி
னுடைய தன்மையைப் பொறுத்து, இருக்கிற சூழ்நிலையைப்
பொறுத்து, ஆதி திராவிடர்களுக்கு மட்டும், அரசு மட்டத்திலே
வந்து, அதற்கு விதி விலக்கு பெறலாம் என்று சட்டத்தை
வைத்திருக்கிறோம். பொதுவாக நஞ்சை நிலத்தை எந்தக்

காரணத்தைக் கொண்டும் மாற்றக்கூடாது என்றும் ஆதி திரா
விடர்கள் நலன் என்று வருகிறபோது, அந்த ஊரினுடைய தன்
மையைப் பொறுத்து, அரசு மட்டத்திலே வந்து விதி விலக்கு
பெறலாம் என்ற அளவிற்கு வந்து முதல் அமைச்சர் அவர்கள்
வரையிலும் வந்து, விதி விலக்கு பெற்று சில பல இடங்களில்
ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் மூலமாக அந்தப் பணி
நிறைவேற்றப்பட்டு வருகின்றது. ஆகவே ஆகஸ்டு 15, 1984-ல்
முதல் அமைச்சர் அவர்கள் ஏழ்மைக் கோட்டுக்குக் கீழே உள்ள
மக்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்க வேண்டும் என்று அறி
வித்ததற்கு இணங்க 15—8—84 முதல் 31—3—1986 முடிய,
1,14,275 குடும்பங்களுக்கு வீட்டு மனைப் பட்டா அந்த வகை
யிலே வழங்கப்பட்டு இருக்கிறது. வீட்டு மனைப் பட்டாக்கள்
மட்டும் அல்ல, வேறு பல வகைகளுக்கும் நஞ்சை நிலங்களைக்
கொடுக்கக்கூடாது என்ற தன்மை இருக்கிறது. ஒரு பக்கம்
வளர்த்துக் கொண்டு வருகிறோம், மற்றொரு பக்கம் தீர்க்கப்
பட்டு வருகிறது.

குறிப்பாக ஒன்றைச் சொல்லவேண்டும் என்றால்
நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும், சந்திப்
புக்கும் பாளையங்கோட்டைக்கும், சந்திப்புக்கும், நெல்லை
நகருக்கும் இடையிலே, அதற்குப் பெயரே திருநெல்வேலி என்பது
தான், ஆகவே நெல் வயல்களைக் கொண்ட வேலியாக கொண்ட
திருநகர் என்ற பெயரைப் பெற்றது. அழகான முறையிலே
இரண்டு பக்கமும் நெல் வயல்கள் நிறைந்த பகுதியாக இருந்தது.
இப்போது பார்ப்போமானால், 30 ஆண்டுக் காலத்திற்கு முன்பு
காட்சி அளித்த வகையிலே பார்ப்போமானால், நஞ்சை நிலங்கள்
எல்லாம் தீர்க்கப்பட்டு, 2 பகுதிகளிலும் வீடுகளாகவும், பணி
மனைகளாகவும், தொழிற்சாலைகளாகவும்,
உள்ளபடியே தாமிரபரணி ஆற்றுப்பாசனத்தின் மூலம் கிடைக்
கின்ற அத்தகைய நஞ்சை நிலங்கள் எல்லாம் பாழ்பட்டுக்
கொண்டு வருகின்றன, அதையெல்லாம் தடுக்கவேண்டும் என்ற
முயற்சி கூட நடைபெற்றுக் கொண்டு வருகின்றது. ஆகவே
அதற்கு வேறு இடங்களைப் பார்க்கலாம். கிட்டத்தட்ட சேரன்
மாதேவி பக்கம் போய்விட்டால், ஏராளமான நிலங்கள் இருக்
கின்றன. இந்தப் பக்கம் நாங்குநேரி பக்கம் திரும்பினால்,
அங்கேயும ஏராளமான நிலங்கள் இருக்கின்றன. தூத்துக்குடிக்
கும் திருநெல்வேலிக்கும் இடையிலே பார்ப்போமானால், ஏராள
மான பனைமரத் தோப்புகள் இருக்கின்றன. அங்கே விரிவு
படுத்துவதை விட்டுவிட்டு, தொழிற்சாலைகள் அங்கே போன்றவை
விட்டுவிட்டு, நஞ்சை நிலங்களைத் தீர்த்து வருகிற அத்தகைய
முயற்சிகளுக்கு இடம் கொடுக்கக்கூடாது என்றும் கடுமையாக
இருக்க வேண்டும் என்று எடுத்துச் சொன்ன கருத்துக்களைக்
கூட இந்த அரசு ஏற்றுக்கொள்கிறது என்பதைக் குறிப்பிட
விரும்புகிறேன். இருப்பது





நில ஆக்கிரமிப்பைப் பற்றிச் சொன்னார்கள். அரசுக்குத்
தேவைப்படுகின்ற, பள்ளிக்கூடத்திற்கு, பொதுமனைக்கு, என்று
தேவைப்படுகின்ற அந்த இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புக்களை
எல்லாம் நாம் அகற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

தேவைப்படுகின்ற, ஊருக்கு வெளியிலே இருக்கிற இடங்
களில், ஏழை எளியவர்களாக இருந்து, நலிந்தவர்களாக இருந்து
நீண்டகாலமாக அவர்களுடைய குடியிருப்புகள், மற்றவைகள்
எல்லாம் இருந்தால், அவற்றுக்குச் சலுகைகளைத் தந்து, அவர்
களுக்கு ஒப்படைக்கிற முயற்சியை ஒரு பக்கம் எடுத்துக்
கொண்டு வருகிறோம். ஆகவே நிலங்களைப் பொறுத்தவரை
யிலும், ஏரிகளைக் கூட, இன்றைக்கு ஆக்கிரமித்துக்கொண்டு
ஊருக்குப் பயன்படவேண்டிய, ஆயக்கட்டுகள் உள்ள ஏரிகளைக்
கூட தூர்த்துக் கொண்டு வருகிறார்கள். சில இடங்களில் கால்
வாசி ஏரிகள் அரைவாசி ஏரிகள் தூர்ந்து போய், இன்னும் சில
இடங்களில் முழு ஏரியும் தூர்ந்துபோய் ஆயக்கட்டுகளைக் கெடுக்
கிற அளவிற்கு வந்திருக்கிறார்கள். அப்படி வந்திருப்பவர்கள்
மிகமிக ஏழைகளாக இருந்தாலும் கூட பரிதாபத்தின் அடிப்படை
யிலே விட்டு விடலாம். ஆனால் அவர்கள் எல்லாம் வல்லமை
படைத்தவர்கள், அந்த ஊரையே ஆட்டிப்படைக்கின்றவர்கள்,
என்ன வந்தாலும் பார்த்துக் கொள்ளலாம் என்று
ஆள், அம்பு உடையவர்கள்தான் இப்படிப்பட்ட ஆக்கிரமிப்பை
எல்லாம் செய்கிறார்கள். இதிலே எல்லாம் கூட கடுமையாக
நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசு அத்தகைய முயற்சி
யிலே ஈடுபட்டுக்கொண்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்
துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11—00)

அடுத்து உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டத்தைப் பற்றி
எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். அதைப்
பற்றி நீண்ட விளக்கம் தரவேண்டிய அவசியம் இல்லை என்று
கருதுகிறேன். இந்தத் திட்டத்தின் மூலமாக அண்மையில் எடுக்
கப்பட்ட வகையில், 73,334 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.
ஒரு கோடியே 9 இலட்சத்து 44 ஆயிரத்து 518 நபர்கள் பய
னடைந்து இருக்கிறார்கள். அதற்கு மேலும் அவர்களுக்கு
வேலை கொடுக்கின்ற அளவுக்கு அவர்கள் 8 ஆயிரம் பேர் இருந்
தார்கள். வேலை வாய்ப்பு தற்காலிகமாக வைத்தோம். அவர்
களுக்கு மேலும் இந்த வாய்ப்பைக் கொடுக்கலாம் என்ற அளவுக்கு
13 மாவட்டங்களில், 49 வட்டங்களில் மேற்படி நில உடைமைப்
பதிவு மேம்பாட்டுத் திட்டம் 2-ஆவது கட்டமாக விரிவாக்

கப்பட்டு இருக்கிறது. 1986 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில்
துவக்கப்பட்டு இப்போது நடைபெற்றுக் கொண்டு, 1987
வரையிலும் இந்த நிலைமைகள் மேலும் போய்க் கொண்டு இருப்
பதன் மூலமாக நில அளவைகளினுடைய தன்மைகள் ஓரளவுக்குச்
சரியாக வரும், அதன் மூலமாக பதிவேடுகள் சீர்படுத்தப்பட்டு,
திட்டம் சிறப்பு பெறவும், ஒழுங்கு பெறுவதற்கும் இதன் மூலமாக
வழிவகைகள் ஏற்படுகின்றன. நில உடைமைப் பதிவு மேம்பாட்
டுத்திட்டத்தில் தயாரிக்கப்பட்ட பதிவேடுகள் சிட்டா, புலச்
சுவடி, '' ஆ '' பதிவேடு ஆகியவற்றைச் சரியாகப் பராமரிக்க
பதிவேடுகள் சீரமைப்புத் திட்டம் நிரந்தரமாகத்
தேவைப்படுகிறது. இதன் முன்னோடித் திட்டமாக 5–2–1986
முதல் 31–3–1986 வரையில் மதுரை மாவட்டம், மேலூர்
வட்டம், செங்கை மாவட்டத்தில் திருத்தணி வட்டம், சேலம்
மாவட்டத்தில் ஓமலூர் வட்டம் ஆகிய மூன்று வட்டங்களில்
செயற்படுத்தப்பட்டு உள்ளது. ஆக கணிப்பாய்வுக் குழு முன்
னோடித் திட்டம் பற்றி ஆராய்ந்து அறிந்த பிறகு இந்த மா
நிலத்தில் உள்ள பிற பகுதிகளுக்கும் இந்தத் திட்டத்தை விரி
வாக்க அரசு எண்ணிக்கொண்டு இருக்கிறது என்பதையும் இந்த
வாய்ப்பில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நில உடைமைமேம்
பாட்டுத் திட்டப் பணியாளர்கள் குறித்தும் அதனுடைய நிலை
குறித்தும் ஏற்கெனவே நான் குறிப்பிட்டேன். அவர்களை மீண்
டும் பணியில் அமர்த்தியது போக மற்றவர்களை எந்த வகையில்
அமர்த்தலாம் என்பதையும் அரசு பரிசீலித்துக் கொண்டு வரு
கிறது.

நில அளவைக்குக் கட்டணம் செலுத்துவது பற்றி மாண்புமிகு
உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள்,
அதிகமாக இருக்கிறது என்று. உள்ளபடியே இன்றைக்குச்
சொல்ல வேண்டும் என்றால், இன்றைக்கு இதற்கு ஆகின்ற
செலவு மற்றவைகளைக் கணக்கிட்டு முறைப்படி சொல்ல வேண்
டும் என்று சொன்னால் சாதாரண நஞ்சை நிலத்திற்கு மொத்தம்
ரூபாய் 261.60 ஹெக்டேருக்கு செலுத்தி இருக்க வேண்டும்.
ஒரு ஏக்கருக்கு 104 ரூபாய் செலுத்தி இருக்க வேண்டும்.
நிலத்திற்கு ஒரு ஹெக்டேருக்கு 174 ரூபாய் 40 காசு செலுத்தி
இருக்க வேண்டும். புஞ்சை நிலத்திற்கு ஒரு ஏக்கருக்கு 69 ரூபாய்
80 காசு செலுத்தி இருக்க வேண்டும். ஆனால், இந்த அரசு
கருணை உள்ளத்தோடு, அவ்வளவு வாங்காமல் கல்லுக்கும்,
அளந்து பார்க்கிற கூலிக்கும் மட்டுமே வாங்குகிற அளவுக்கு
எவ்வளவு வாங்குகிறோம் என்று சொன்னால் ஒரு ஹெக்டேருக்கு
48 ரூபாய் 20 காசு நஞ்சை நிலமாக இருந்தால், ஒரு ஏக்கருக்கு
23 ரூபாய் வாங்குகிறோம். ஆகவே, 104 ரூபாய் வாங்க வேண்
டிய இடத்தில் 23 ரூபாய் தான் வாங்குகிறோம். 261 ரூபாய்
வாங்க வேண்டிய இடத்தில் கல்லுக்கு ஆகிற செலவு, அளந்து
பார்க்கும் செலவு மற்ற செலவுகளுக்கு மட்டும் ரூபாய் 48.20,





அதே போல் புஞ்சைக்கு 38 ரூ. 80 காசும், நஞ்சையாக இருந்
தால் 15 ரூ. 60 காசும் வாங்குகிறோம். இதை அதிகம் என்று
சொல்ல முடியாது. இதைக் கூட கொடுக்காவிட்டால் அலட்சியம்
தான் வந்து விடுமே தவிர ஒரு அக்கறை வராது. தனியாக
இருந்தாலும் அங்கே அவர்கள் பணத்தை வைத்துத்தான் மதிப்
பிடுகிறார்களே தவிர மதிப்பை வைத்து பணத்தை மதிப்பிடுவது
இல்லை. ஆகவே தான், இந்தக் கட்டணம் அதிகம் இல்லை
என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, கோவில்பட்டித் தொகுதியைப் பொறுத்த வரை
யில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட வெட்டுத் தீர்மானத்
தில் கூறுகிறபோது 35 கிராமங்களில் வரி வஜா செய்ய வேண்
டும் என்றும், வரி வஜா அளிக்கப்பட்டிருக்கிறது, அப்படி வரி
வஜா செய்யப்பட்ட வகையில் 9,358.03 ரூபாய்க்கு ஏற்கெனவே
வரி வஜா செய்யப்பட்டிருக்கிறது, இந்த மாதிரி வரி வஜா
செய்ய வேண்டும் என்று தனித்தனியாக கேட்டு இருக்கிறார்
கள். அதை தனித்தனியாக மாண்புமிகு உறுப்பினர்கள் தெரி
வித்ததை எல்லாம் வருவாய்த் துறை கணக்கிடும் என்பதை எடுத்
துச் சொல்ல விரும்புகிறேன். இந்த நிலஅளவை செய்கிறவர்கள் இந்
தப் பதிவேடுகளை எழுதுகிறவர்களுக்குக் கட்டணமாக நாம் ஒரு
நாளைக்கு 8 ரூபாய் என்று வைத்து இருந்தோம். அதை இப்
போது 10 ரூபாயாக மாற்றுவதற்கு அரசு முடிவு எடுத்து இருக்
கிறது என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இதன் மூலம்
27 இலட்ச ரூபாய் இந்த ஆண்டு கூடுதலாகச் செலவு ஆகும். என்
றாலும் கூட எழுதுகிறவர்களுக்கு ஒரு நாளைக்கு 8 ரூபாய்
என்பதை 10 ரூபாய் என்று ஆக்குகின்ற முயற்சியை இந்த
அரசு மேற்கொண்டு அதை நடைமுறைப்படுத்தும் என்பதை
எடுத்துச் சொல்லி மேலும் பல கருத்துக்களை மாண்புமிகு உறுப்
பினர்கள் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பல கருத்
துக்களுக்கு அவ்வப்போது வினாக்களுக்கு விடையிருக்கின்ற
வகையிலும் தெளிவுபடுத்தப்படுகின்றன. மிச்சம் மீதி ஏதா
வது இருக்குமானால் மறுபடியும் வினாக்கள் தொடுப்பார்களா
னால் விளக்கங்கள் மூலம் கொடுப்பதற்கு நாள்தோறும் வாய்ப்பு
வசதிகள் இருக்கின்றன என்று எடுத்துச் சொல்லி இந்த வருவாய்த்
துறையில் பிற மானியக் கோரிக்கைகளும் நோக்கங்களும் நிறை
வேறுகிற அளவுக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய
முழு ஒத்துழைப்பையும் ஆதரவையும் தொடர்ந்து தர வேண்
டும் என்று இந்த வாய்ப்பில் கேட்டுக்கொண்டு, ஆகவே, அதிக
மாகச் செலவு செய்ய வேண்டும், செலவு செய்ய வேண்டுமென்று
கேட்டுக்கொண்டு, வெட்டுங்கள், வெட்டுங்கள் என்று சொல்வது
பொருந்தி வராத முரண்பாடு. அந்த முரண்பாட்டிற்கு இடம்
கொடுக்கக்கூடாது என்று சொல்லி, ஆகவே இந்த வெட்டுத்
தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று
கேட்டுக் கொண்டு, இந்தத் துறைகள் சிறப்பாக, செம்மையாக

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 ஏப்ரல் 30

நடைபெற உறுதுணையாக இருந்து பணியாற்றி வருகின்ற, வரு
வாய்த்துறை சிறப்பு ஆணையர், செயலாளர் அவர்களுக்கும்,
இந்தத் துறையைச் சார்ந்த அதிகாரிகளுக்கும், மற்றவர்களுக்கும்
என்னுடைய நன்றியைத் தெரிவித்து, இவற்றையெல்லாம் நிறை
வேற்றித் தருமாறு மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் எல்
லோரையும் கேட்டுக் கொள்கிறேன்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,
ஏரிப் புறம்போக்கு, குளத்துப் புறம்போக்கு, மேய்ச்சல் புறம்
போக்கு என்று இருக்கிற நிலங்களையெல்லாம் நூற்றுக்கணக்
கான ஏக்கர்களையெல்லாம் இன்றைக்குத் தனியார்கள் பட்டாப்
போட்டுக் கொண்டு வருகிறார்கள். அவைகளைத் தடுப்பதற்கு
எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி அமைச்சர் அவர்கள்
பதிலில் வருமா என்று எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத்
தலைவர் அவர்களே, அதை நான் முதலிலேயே குறிப்பிட்டேன்.
உள்ளபடியே இது தடுக்கப்படத்தான் வேண்டும். ஆகவே
இந்தியாவிலே எவ்வளவோ அரசியல் மாறுதல்கள், படை
யெடுப்பு மாறுதல்கள் எல்லாம் வந்தபோதும் கூட, இந்தக் கிராம
நிர்வாகம், மிக ஒழுங்காக, சீராக இருப்பது, குறிப்பாக தென்
னாட்டில் தமிழகத்திலே தான் என்பது வரலாற்றுப் பேராசியர்க
ளுடைய கருத்தாகும். இது சீர்குலையாமல் இருப்பதற்குக்
காரணமே, இந்த ஒழுங்குபட்ட முறைகள்தான்
மக்களுடைய அடிப்படைத் தேவைகள் என்பதைக் கருதித்தான்
மந்தைப் புறம்போக்கு, ஏரிப் புறம்போக்கு, மேய்ச்சல் புறம்
போக்கு, குடிநீர்ப் புறம்போக்கு என்று பல புறம்போக்குகளை
வைத்து, அதை யாரும் ஆக்கிரமிக்கக் கூடாது, அது தனியார்
யாருக்கும் சொந்தமல்ல. புறம் போக்கு என்றால்,
அது பொது மக்களுக்குச் சொந்தம் என்று அந்த
முறைகளை எலலாம் அந்தக் காலத்தில் வழி முறைகளை ஏற்
படுத்திய காரணம், தனி மனிதனை விட பொதுமக்களுடைய
நலன்கள் முக்கியம் என்ற அந்த நோக்கம்தான்
மாண்புமிகு அம்மையார் அவர்கள்
தெரிவித்ததற்கிணங்க, இப்பொழுது செல்வாக்குடையவர்களும், எடுத்துத்
மற்றவர்களும், தங்களுடைய விருப்பப்படி, ஆக்கிரமித்துக்
கொண்டு, பொதுமக்களுக்குப் பயன்படுத்தாமல் ஒரு
குடும்பத்திற்கென்று, தனிப்பட்ட மக்களுக்காகப் பயன்
படுத்தப்படுகிற அளவிற்கு ஆக்கிரமிக்கப்பட்டிருப்பது கட்டாயம்
மாற்றப் பட வேண்டும். அவைகள் எல்லாம் மீட்கப்பட்டு,
பொது மக்களுக்கு அக்கப்பட வேண்டும். அதற்கு இப்போது
இருக்கிற சட்டங்கள் இடம் கொடுக்காவிட்டாலும் கூட, அவற்
றைத் திருத்தம் செய்தாவது கொண்டு வர வேண்டும் என்ற
நோக்கம் தான் அரசுக்கு இருக்கிறது. அப்படி திருத்தம் கொண்டு



1986 ஏப்ரல் 30] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

வருகிற சூழ்நிலை வருகின்றபோது, மாண்புமிகு உறுப்பினர்கள்
அத்தனை பேரும், எல்லோரும் ஒரு மனதாக ஆதரிப்பார்களே
யானால், அதை விரைவுபடுத்தி, நடைமுறைப்படுத்த அரசு
ஆயத்தமாக இருக்குமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், வெள்ளத்
தடுப்புச் சுவர் எடுப்பது என்ற அந்தப் பணிக்காக அடை
யாற்றுக் கரை ஓரத்திற்காக ரூ. 2 கோடி என்றும், அதற்கு
மாநில அரசு ரூ. 86 இலட்சம் என்றும், ஆக மொத்தம் 2½
கோடி ஒதுக்கியிருப்பதாகச் சொன்னார்கள். அந்தப்
பணிக்கு அதிகமாக நிதி தேவைப்படுவது பரிசீலனையில் இருக்
கிறது என்ற கருத்தையும் தெரிவித்திருக்கிறார்கள். எனவே
அந்தப் பணி நடப்பு நிதியாண்டில் துவக்கப்படுமா?
பரிசீலனையில் இருக்கின்ற அந்தக் கோரிக்கையை நிறைவேற்றிய
பிறகு, இந்தப் பணி துவக்கப்படுமா என்பதை அறிய விரும்பு
கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, தலைமையிடத்திலேயிருந்த தன்
காரணமாக, கேட்க முடியாததன் காரணமாக மாண்புமிகு உறுப்
பினர் இடத்திற்குச் சென்று கேட்டிருக்கிறார்கள். அடையாற்
றைப் பொறுத்த வரையிலும், மத்திய அரசே அதனுடைய தன்
மையை உணர்ந்து மத்திய வேளாண்மை அமைச்சர் பூடாசிங்
அவர்களே—அவர்களை அழைத்துக் கொண்டு வந்து நானும்
மற்றவர்களும் சென்று காட்டினோம்—உணர்ந்தார்கள். அங்கே
யிருக்கின்ற குடியிருப்புக்களை, ஏற்கனவே வீடுகட்டியிருக்கும்
பகுதிகளை, ஆக்கிரமித்தவர்களை, இனிமேல் அகற்றுவது என்பது
ஆகாது என்றும், ஆகவே வெள்ளம் அங்கு புகாமல் தடுப்பதைத்
தான் செய்ய முடியும் என்று அவர்களே மிகப் பெருந்தன்மை
யோடு, அதற்கென்று தனியாக ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொண்டதற்கிணங்க, ரூ. 2 கோடியை ஒதுக்கினார்கள். முதலில்
ரூ 64 கோடிதான் நமக்கு ஒதுக்கினார்கள. அதற்குப் பிறகு
இந்த ரூ. 2 கோடியையும் சேர்த்துத்தான், ரூ. 66 கோடியாக
ஒதுக்கினார்கள். அந்த ரூ. 2 கோடியையும் நாம் ஒதுக்கிட ரூ. 86
இலட்சத்தையும் தவிர, நம்முடைய பொறியாளர்களும், மற்ற
வர்களும், கூடுதலாக ஆகும் என்று சொல்லியிருக்கிறார்கள்.
ஆகவே இந்தப் பரிசீலனை விரைவில் வரவேண்டும் என்பதுதான்
நம்முடைய எண்ணம். இன்னும் சொல்லப்போனால், அடுத்த
வெள்ளம் வருவதற்குள் அந்தத் திட்டம் முடிக்கப்பட வேண்டும்
என்பது தான் நோக்கம், வெள்ளம் வந்தால் நல்லது தான்.
இப்போது கூடத் தஞ்சை மாவட்டத்தில் பெரும் மழை
பெய்து, இடியெல்லாம் கூட இடித்து, சில பேர் இறந்துபடுகின்ற
சூழ்நிலை கூட அங்கே ஏற்பட்டுவிட்டது என்று இன்றைக்குச்

செய்து வந்திருக்கிறது. அப்படி பெருமழை எங்கு பார்த்தாலும்
பெய்தால் அது கூட நல்லது தான். அடுத்த வெள்ளம் வருவதற்கு
முன்னால் முடிக்க வேண்டுமென்பது தான் நோக்கம். அதற்காக
பரிசீலனைசெய்யாமல், திட்டம் போடாமல், எஸ்டிமேட் கொடுக்
காமல், நாம் திட்டத்தைத் துவக்கமுடியாது, ஆக இந்த பரிசீலனை
முடிந்ததற்குப் பிறகு, விரைவிலே முடிக்க வேண்டுமென்று
சொல்லியிருக்கிறோம். எவ்வளவுக்கு எவ்வளவு விரைவு
படுத்தமுடியுமோ, விரைவுபடுத்த வேண்டுமென்று சொல்லி
யிருக்கிறோம். விரைவுபடுத்தாவிட்டால், இன்னும், ரூ. 2
கோடி, 2½ கோடியாக கூடுதலாக ஆகும். அதற்குள்ளாக அந்தத்
திட்டத்தை விரைவுபடுத்த அரசு முனைப்புள்ளம்
கொண்டிருக்கிறது. ஆகவே இந்த ஆண்டு இந்தத் திட்டத்தைத்
துவக்கிடவேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய எண்ணம்.

(முற்பகல் 11-10)

**திரு. கு. சுப்பராயன்** : தலைவர் அவர்களே, தமிழ்நாட்
டில் மூன்றில் இரண்டு பங்கு மாவட்டங்கள் கடுமையான
வறட்சியால் பாதிக்கப்பட்டிருப்பதாலும் கிராமப்புறங்
களிலே இருக்கிற விவசாயிகள் உழவு மாடுகளை
விற்றுக் கொண்டிருக்கிற நிலைமை இருப்பதாலும் அவர்கள்
கிராமங்களைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கிற நிலையும்
அவர்கள் அரசினுடைய நிறுவனங்களுக்கும் பல்வேறு துறை
களுக்கும் தரவேண்டிய கடன்களுக்காக ஜப்தி செய்யப்படக்
கூடிய கடுமையான நிலைமையும் இருக்கிறது. எனவே மாநில
அரசு அப்படிப் பட்ட விவசாயிகள் மீது எந்தக் காரணம் கொண்
டும் இந்த வறட்சி ஏற்பட்டிருக்கிற காலத்திலே ஜப்திநடவடிக்கை
எடுக்கக்கூடாது என்று அறிவிக்க முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே,
பொதுவாக ஜப்தியே செய்யக்கூடாது என்று அறவே சொல்லி
விட இயலாது. மாண்புமிகு உறுப்பினர் சொல்லியது போன்று
இரண்டு மாடுகள் வைத்திருக்கிறவர்கள், ஏழை எளியவர்கள,
கடன்களைக் கட்ட முடியாதவர்கள் ஆகியவர்களுடைய நிலை
யைத் தனியாகப் பார்த்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள், வரு
வாய்த் துறை அதிகாரிகள் மூலமாக அதை ஒத்திவைக்க முடியுமா
அல்லது என்ன சலுகைகள் அளிக்கலாம் என்பதைப் பார்த்து
அரசாங்கமே நடவடிக்கை எடுத்துக் கொள்கிறது. எந்தக்
குறைபாடும் வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அப்படிச்
சொல்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்குமானால்
அதன் மூலமாக ஏழை எளியவர்கள், நலிந்தவர்கள் ஆக
இருந்தால் கொடுமைப்படுத்தக் கூடாது என்ற நிலைமைதான்
இருக்கிறது



வசதி படைத்தவர்களாக இருந்தாலும் கடன்களைக் கொடுக்
கக்கூடாது என்ற முறையிலே வீம்புக்காகக் கட்டாதவர்
கள் அரசினிடத்திலே டிராக்டர்கள வாங்க கடன்களை
வாங்கி கட்டாதவர்கள், அவைகளை வாடகைக்கு விட்டு சம்பா
தித்துக் கொண்டிருக்கிறவர்களும் பெரியார் மாவட்டத்திலும்
கோயம்புத்தூர் மாவட்டத்திலும் இருக்கிறார்கள். அந்தப்
பெயர்ப்பட்டியல் வேண்டுமானால் தருகிறேன். அப்படிப்பட்டவர்
களிடம் வசூல் செய்யத்தான் வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்
கூறுவது போன்று 2 மாடுகளை மட்டும் வைத்திருக்கிறவர்கள்,
நலிந்தவர் கள் என்றால் கடுமையாக அவ்வாறு செய்யக்கூடாது
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். என். இரமசாமி** : தலைவர் அவர்களே,
சாத்தான்குளம் டவுன் பஞ்சாயத்திலிருந்து போகின்ற ஹை
வேஸ் ரோட்டில் இரண்டுபுறம் கடைகளைக் கட்டிக் கொண்டு,
இருக்கின்ற 7 குடிநீர்க் கிணறுகளை சிலர் ஆக்கிரமித்துக்கொண்டு
அங்கேயுள்ள ஹைவேஸ் அதிகாரிகளும் அந்த ஆக்கிரமிப்பை
அகற்ற வேண்டுமென்ற முறையிலே சொல்லப்பட்டும் அவர்கள்
முடியாது என்று சொல்லிவிட்டார்கள். ரீசர்வே செய்யப்பட்டு
அந்த 7 கிணறுகளின் மேல் உள்ள ஆக்கிரமிப்பு அகற்றப்பட
வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டு உள்ளது. ஆனால் ரெவின்யூ
அதிகாரிகளும் தாசில்தார்களும் ஆக்கிரமிப்புச் செய்தவர்க
ளோடு இருந்து அங்கே இருக்கின்ற மக்கள் குடிநீர்க்கிணறுகளைப்
பயன்படுத்தமுடியாமல் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த 7 கிணறுகளை ஆக்கிர
மிப்புச் செய்திருப்பதை அகற்றி அவர்களை வெளியேற்றி அந்த
மக்கள் குடிநீரை பயன்படுத்தக்கூடிய ஏற்பாடுகளைச் செய்
வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவர்
அவர்களே, சாத்தான்குளம் எல்லைக்குட்பட்ட பகுதியிலே இருக்
கிற சூழ்நிலையை மாண்புமிகு உறுப்பினர் இப்போது கவனத்
திற்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். ஆகவே நெடுஞ்சாலைத்
துறைக்குச் சொந்தமான பகுதியாக இருக்கிற, பொது மக்க
ளுக்குப் பயன்படுகின்ற அளவுக்கு இருக்கிற 7 கிணறுகள் ஆக்கிர
மிப்புச் செய்யப்பட்டிருக்கின்றன. அரசுக்குச் சொந்தமான,
நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான இடம், அந்த இடத்
திலே ஆக்கிரமிப்பு என்று சொன்னால் அது தவறுதான். அது
சட்டத்திற்குப் புறம்பானதுதான். நடவடிக்கை எடுக்க வேண்
டும். நடவடிக்கை எடுக்கத் தவறியிருக்கிறார்கள் என்றும் அவர்
கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கடைகளை வைத்துக்
கொண்டிருக்கிறவர்கள் மீது தக்க நடவடிக்கையை இங்கே மேல்
மட்டத்திலே உள்ள அதிகாரிகள் எல்லாம் வருகை தந்திருக்கிறார்

கள், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன குறிப்பை அவர்கள் குறித்து வைத்துக்கொண்டு நடவடிக்கை எடுப்பார்கள் என்ற உறுதியை நான் இந்த அவைக்குத் தருகிறேன்.

**திரு. டி. என். முருகானந்தம் :** தலைவர் அவர்களே, ஒவ்வொரு கிராமத்திலும் மயானத்திற்குச் செல்கின்ற பாதை சம்பந்தமாகப் பிரச்சினைகளும் தகராறுகளும் இருந்து வருகின்றன. அந்தப் பகுதியைச் சேர்ந்த தாசில்தார்கள் இந்தப் பிரச்சினையில் சுமுகமான முடிவை ஏற்படுத்த வேண்டுமென்ற முறையிலே அந்தக் கிராமங்களுக்குச் சென்று யாருடைய நிலங்களிலே அந்தப் பாதை சென்றாலும் அவர்களுடன் கலந்து பேசி சுமுகமான முடிவு எடுக்கிறார்கள். இருந்தாலும் கிராமங்களில் உள்ள நிலச் சுவான்தார்கள் கோர்ட்டிற்குச் சென்று தடைவாங்கிவிடுகிறார்கள். பொதுவாகவே மயானத்திற்குச் செல்கின்ற பாதைகள் சம்பந்தமான பிரச்சினை பெரிய பிரச்சினையாக இருந்து வருவதால் அரசாங்கம் ஒரு சட்டம் கொண்டுவந்து அதன் மூலமாக இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோன்ற பிரச்சினைகள் சில பல இடங்களிலே ஏற்படுகின்றன. அப்படி ஏற்படுகிற போது அந்த அந்த ஊர்களிலே இருக்கிற எல்லா வகுப்பினரையும் சேர்ந்த பெரியவர்கள் என்று கருதப்படுகின்ற அவர்கள் உட்கார்ந்து பேசி அப்படி சுமுகமான முடிவைக் கொண்டு வந்து, அந்த முடிவின் அடிப்படையிலே நடைமுறைப்படுத்துகின்ற அளவிற்குக் கொண்டு வருவது தான் சாலச் சிறந்தது. கட்டாயத்தினுடைய அடிப்படையிலே செய்து விடுகின்ற சூழ்நிலை ஏற்பட்டால், அதிகாரிகள் சென்ற பிறகு, மற்றவர்கள் சென்ற பிறகு பாதிக்கப்பட்டவர்கள் தங்களுடைய ஆதிக்கத்தைக் காட்டுவதற்காக ஆதிக்கத்தை மேலும் செலுத்துகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, இப்படிப்பட்ட பிரச்சினைகளில் ஊரில் உள்ள பெரியவர்களும், மற்றவர்களும் சேர்ந்து எடுக்கிற நல்ல முடிவின் அடிப்படையில் செல்ல வேண்டும். கூடுமான வரையில் அப்படிப்பட்ட வகையிலே சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் போன்றவர்கள் இவற்றைத் தீர்த்து வைத்து, சமாதானப்படுத்துகின்ற முயற்சிகளைச் செய்யலாம். அப்படி ஒரு வழிமுறையை வகுத்துத் தந்ததற்குப் பிறகு, சமாதானம் ஏற்பட்டதற்குப் பிறகு, அதை மீறுகிறார்கள், சில பேர் வழக்குமன்றத்திற்குச் செல்கிறார்கள் என்றால், அரசியல் சட்டத்தின்படி கொடுக்கப்பட்டுள்ள உரிமைகளை நாம் தடுப்பதிற்கில்லை, ஆகவே நீதிமன்றங்களானாலும்கூட சோஷியல் ஜஸ்டிஸ் என்பதை உணர வேண்டும். Court of Law என்று உட்கார்ந்திருப்பவர்களுக்குத்தான் ஜஸ்டிஸ் என்றுபெயரே தவிர, நாம்தான் நீதிமன்றம் என்று சொல்கின்றோமே தவிர, அதை ஒழுங்காக சொல்லவேண்டுமென்றால் வழக்கு





மன்றம் என்றுதான் சொல்ல வேண்டும். Court of Law தானே தவிர Court of Justice அல்ல. அதிலே வருவதெல்லாம் நீதி என்று சொல்லமுடியாது என்பதற்காகத்தான் அப்படி வைத்திருக்கிறார்கள். அமெரிக்கா சட்டமோ, வேறு பல நாடுகளின் சட்டங்களோ, இங்கிலாந்து சட்டமோ இந்த நாட்டிற்குச் சில சமயங்களில் பொருந்தி வராது. இந்த நாட்டின் தன்மைக் கேற்ப சுமுகமான சூழ்நிலை ஏற்படுகின்ற வகையில் இருக்க வேண்டும். மயானத்திற்குப் பிணங்களைக் கொண்டு செல்லுகின்ற வகையில் பார்த்தால் ஜாதிக்கு ஜாதி மயானம் என்று இருக்கின்ற இப்படிப்பட்ட சூழ்நிலைகள் எல்லாம் இருக்கின்ற பொழுது, ஊரிலே உள்ளவர்கள் சேர்ந்து ஒரு முடிவு ஏற்படுகின்றபொழுது அந்த முடிவிற்கு மதிப்பளிக்க வேண்டுமென்ற உணர்வோடு நீதி வழங்கும் சூழ்நிலை ஏற்பட, தனி மனிதரின் ஆதிக்கம் ஏற்படாது. அப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்பட வேண்டுமென்ற விருப்பத்தைத் தெரிவிக்கலாம். ஆனால் எல்லோருடைய ஒத்துழைப்பின் அடிப்படையிலேதான் பொது மக்களின் நலன்கள் நிறை வேற்றப்பட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது ; இப்போது வாக்கெடுப்பு.

## கோரிக்கை எண் 1—நிலவரித் துறை

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

திருவாளர்கள் சு. பாலன், எஸ். என். இராமசாமி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :— " மானியக் கோரிக்கை எண் 1—நிலவரித்துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 18,87,18,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

### கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம்

திருவாளர்கள் ஆர். ரெங்கசாமி, பி. கே. எம். முத்துராம
லிங்கம் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய
வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப்
பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

திரு. சு. பாலன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேர
வையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள
கேள்வி :—'' மானியக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம்
என்ற தலைப்பின் கீழ் ரூ. 43,48,35,000-க்கு மேற்படாத
தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று,
நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்
பெற்றது.

### கோரிக்கை எண் 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

திருவாளர்கள் சு. பாலன், எஸ். என். இராமசாமி ஆகியவர்
களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன்
திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள
கேள்வி :—'' மானியக் கோரிக்கை எண் 41—இயற்கைச் சீற்
றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின் கீழ்
ரூ. 40,67,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற
வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று
நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்
றது.

### கோரிக்கை எண் 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்

திரு. சு. பாலன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேர
வையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள
கேள்வி :— ''மானியக் கோரிக்கை எண். 46—இழப்பீடுகளும்
ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 27,43,57,000க்கு
மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று
நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்
றது.



### 7. அமைச்சரின் அறிக்கை

*விதி 111-ன் கீழ் சென்னை பெருநகர், குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத் தொழிலாளர்கள் குறித்து வேளாண்மைத்துறை அமைச்சரின் அறிக்கை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு வேளாண்
மைத்துறை அமைச்சரவர்கள் 111—வது விதியின்கீழ் ஒரு அறிக்
கையைப் பேரவைக்கு அளிப்பார்கள்.

(முற்பகல் 11–20)

**திரு. மு. இராமநாதன் :** * * *

(திராவிட முன்னேற்றக்கழகத்தினர் வெளிநடப்பு செய்தனர்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ** இதுவரை நடந்த
வற்றை நீக்குகிறேன். 111-வது விதியின் கீழ் மாண்புமிகு
வேளாண்மைத்துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே,
1—4—1986 அன்று சட்டப் பேரவையில் வரவு-செலவுத் திட்ட
மானியக் கோரிக்கை எண். 49 குடிநீர் வழங்கல் பற்றிய விவா
தத்தின் மீது சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீர் அகற்றும் வாரியத்தில் உள்ள தற்காலிகத் தொழிலாளர்
களை வாரியத்தின் முறையான பணியாளர்களாக நியமிப்பது
பற்றி குறிப்பிடப்பட்டன. அதுசமயம் அப்பொருள் பற்றி
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தக் கோரிக்கையை நிறை
வேற்றுவதற்கு விரைவிலேயே ஆணையிடப்படும் என்று பேரவை
யிலே தெரிவித்தார்கள். சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல்
மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியத்தில் பணிபுரிந்துவரும் தொழி
லாளர்கள், தொழிலாளர் பிரிவிலிருந்து பணியாளர் பிரிவிற்கு
தங்களைக் கொண்டுவரும்படி கேட்டுக்கொண்டுள்ளனர். இவர்
களை பணியாளர் பிரிவிற்கு மாற்றினால், வீட்டு வசதி, மருத்துவ
செலவு ஈடு செய்யும் பணம், ஓய்வு ஊதியம், குடும்ப
ஊதியம், தனி வருங்கால வைப்பு நிதி, பொது வருங்கால வைப்பு
நிதி, ஆயுள் ஈட்டுறுதி நிதி போன்ற சலுகைகளுக்குத் தகுதி
உடையவர்கள் ஆவார்கள்.

மேற்கண்ட கோரிக்கையை நிறைவேற்ற அரசு முடிவு செய்
துள்ளது. இதற்கான ஆணை இன்று பிறப்பிக்கப்படுகிறது என்
பதை நான் மகிழ்ச்சியோடு இந்தப் பேரவைக்குத் தெரிவித்துக்
கொள்கிறேன். புரட்சித் தலைவர் அவர்களின் அரசு சொன்ன
வாக்குறுதியை நிறைவேற்றும் என்பதற்கு இதை எடுத்துக்காட்
டாகவும் தொழிலாளர்களின் மே தினப் பரிசாகவும் இதை நான்
அறிவிக்கிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்
பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு நிலைமை விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு மேலப்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் திரு. சம்சுல் ஆலம் அவர்கள் ஒரு புகார் சொன்னார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அந்தப் புகாரை, எழுதிக் கொடுங்கள், அதன்பேரில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். இன்னும் அவர்கள் எழுதிக் கொடுக்கவில்லை. ஆகவே, அவர்கள் இந்தப் பிரச்சினையை எழுப்புவதற்கான இடம் கொடுப்பது தேவையில்லை. அப்படி எழுப்பினாலும் கூட இங்கே அந்தப் பிரச்சினையைத் தீர்க்க நம்மால் இயலாது. அதனை பேரவைத் தலைவர் அவர்கள்தான் விசாரிக்க வேண்டும். எழுதிக் கொடுத்ததற்குப் பிறகு உரியவர்கள் யார் என்று கேட்க வேண்டும். அதற்கு சாட்சிகள் கொடுக்க வேண்டும். சாட்சிகள் வந்ததற்குப் பிறகு முடிவெடுக்க வேண்டும். அவ்வாறு முடிவெடுத்த பிறகு இந்த அவைக்குத் தெரிய வேண்டிய அவசியம் வந்தால் தெரிவிக்கலாம். அப்படித் தெரிவிக்கிறபோது, தெரிவிக்கின்ற நிலைமையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய கருத்துக்களைச் சொல்லலாம்.

என்னிடத்திலும் வந்து அவர் சொன்னார். புகார் எழுதித் தாருங்கள். முறைப்படி நடந்ததற்குப் பிறகு தக்க நடவடிக்கை எடுக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதைப் பொறுத்த வரையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உரிமையைக் காப்பாற்றவும், பாதுகாப்பு கொடுக்கவும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பெறும் என்று அவரிடத்திலே நான் சொன்னேன். அவர்களும் அமைதியாகத்தான் கேட்டுக்கொண்டார்கள். எழுதித் தருகிறேன் என்று சொன்னார்கள். இன்னும் எழுதித் தரவில்லை. எழுதித்தந்தால் அதன் மீது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நடவடிக்கை எடுப்பார்கள் என்பதை மட்டும் நான் கூறிக்கொள்கிறேன்.

## 6. வரவு செலவுத் திட்டம் 1986-87 வாக்கெடுப்பு—தொடர்ச்சி

### (உ) கோரிக்கை எண் 36—பாசனம்

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"மானியக் கோரிக்கை எண் 36—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 64,86,31,000-க்கு மேற்படாத் தொகை அரசுக்கு ஒதுக்கப்பெற வேண்டும்."

திரு. க. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத்தீர்மானத்தை மொழிகிறேன் :—

"மானியக் கோரிக்கை எண் 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 64,86,31,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."





திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாமிரபரணியில் மழைக் காலத்தில் ஏராளமாக கடலுக்குச் செல்லும் உபரி நீரை மணிமுத்தாறு கால்வாய்களில் விட்டு தரிசு நிலங்களை வளப்படுத்த வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

"மானியக் கோரிக்கை எண் 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 64,86,31,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியம் பொன்னிரையிலிருந்து ஆலிவலம், ஆலத்தூர் வரையிலும் உள்ள அரிச்சந்திரா நதியின் தென் கரையை பொதுப்பணித்துறையிலிருந்து போக்குவரத்துத்துறை எடுத்துக் கொள்வது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :—

"மானியக் கோரிக்கை எண். 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 64,86,31,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

Thiru N. S. V. CHITHAN: Mr. Speaker Sir, I move that :—

"To discuss about the hardships felt by the land owners on the Vaigai basing due to lack of water during harvest seasons" the amount of Rs. 64,86,31,000 under Demand No. 36 Irrigation, be reduced by Rs. 100.

### (ஊ) கோரிக்கை எண் 37—பொதுப்பணிகள் கட்டிடங்கள்

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"மானியக் கோரிக்கை எண் 37—பொதுப்பணிகள்-கட்டிடங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,04,53,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. கே. கல்லன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல அரசு அலுவலகங்கள் வாடகைக் கட்டிடங்களில் இயங்குவதைப் போக்குவது குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :—

"மானியக் கோரிக்கை எண். 37—பொதுப்பணிகள் கட்டிடங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,04,53,00ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

[1986 ஏப்ரல் 30

(எ) கோரிக்கை எண். 38—பொதுப்பணிகள் பணியாளரமைப்பும்—கருவிகளும்—தடவாடமும்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

" மானியக் கோரிக்கை எண் 38—பொதுப்பணிகள் பணியாளரமைப்பும், கருவிகளும், தளவாடங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 22,78,64,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :—

" மானியக் கோரிக்கை எண் 38—பொதுப்பணிகள் பணியாளரமைப்பும், கருவிகளும், தளவாடமும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 22,78,64,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. கே. கல்லன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுத் துறையைச் சார்ந்த வாகனங்கள் பழுது பார்க்க ஒரு கராஜ் உதகையில் ஏற்படுவது குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்: —

"மானியக் கோரிக்கை எண். 38—பொதுப்பணிகள் பணியாளரமைப்பும், கருவிகளும், தளவாடமும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 22,78,64,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

(ஏ) கோரிக்கை எண், 52—பாசனம் குறித்த மூலதனச் செலவு

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் : —

" மானியக் கோரிக்கை எண். 52—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 63,89,13,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."



1986 ஏப்ரல் 30]

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன். :—

" மானியக் கோரிக்கை எண். 52—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 63,89,13,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும். "

(முற்பகல் 11-30)

(ஐ) கோரிக்கை எண். 53 பொதுப்பணிகள் கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு

மாண்புமிகு யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

" மானியக் கோரிக்கை எண். 53—பொதுப்பணிகள் கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 42,38,18,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும். "

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :—

" மானியக் கோரிக்கை எண். 53—பொதுப்பணிகள் கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 42,38,18,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும் . "

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறையின் கீழ் நான் இங்கே இந்த அவையில் முன் மொழிந்து கொண்டுவரப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகள் பற்றி நான் பேச வேண்டியவைகளையெல்லாம் ஏற்கெனவே புத்தகங்களாக@ பதித்து இங்கே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அவைகளை நான் இங்கே உரை நிகழ்த்தியதாகக் கருதி, அவைக்குறிப்பிலே ஏற்ற உதவுமாறு தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

@ 646—738-ஆம் பக்கங்களில் இணைப்புகளாக அச்சிடப் பெற்றுள்ளன.

[1986 ஏப்ரல் 30

திரு. பெ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள பாசனம் மற்றும் அதன் தொடர்பான மானியக் கோரிக்கைகள் மீது நடைபெறும் விவாதத்தில் கலந்துகொண்டு சில கருத்துக்களை நான் இங்கே கூற விரும்புகிறேன்.

அவ்வைப் பாட்டி ஒரு சமயம் ஒரு அரசனைப் பற்றி புகழ்ந்து பாட நேரிடும் போது, 'வரப்பு உயர' என்று வாழ்த்தி இருக்கிறார்கள். 'வரப்பு உயர' என்று சொல்லிவிட்டு அதன் விரிவைப் பின்னால் சொல்கிறார்கள். வரப்பு உயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல் உயர நாடுயரும், நாடு உயர கோன் உயரும் என்று ஒரு நாடு சிறப்பாக இருக்க வேண்டுமென்றால் விவசாயம் செழிக்க வேண்டும் என்ற பொருள்படச் சொன்னார்கள். அப்படி விவசாயம் சிறப்பாக இருக்க வேண்டும் என்றால் அதற்கு நீர்ப்பாசனம் இன்றியமையாத ஒன்றாகும். அத்தகைய நீர்ப்பாசனத்திற்கு தமிழகத்தைப் பொறுத்தவரையில் மிகச் சிறப்பாக பல நீர்ப்பாசனத் திட்டங்கள் மேற்கொள்ளப் பெறுவதைப்பற்றி அறிக்கையில் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

குறிப்பாக தமிழகத்திலே இருக்கக்கூடிய எந்த விவசாயியும் அவன் விவசாயம் பண்ணக்கூடிய நிலப்பரப்பு பூராவையும் உபயோகித்து விவசாயம் பண்ணமுடியாத நிலையில் தான் பல திட்டங்கள், நீர்ப்பாசனத் திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. தொடங்கப்பட்ட திட்டங்கள் பல பாதியில் நிற்கின்றன. தொடங்கியும் ஏற்கெனவே பாசனம் தரப்பட்ட நிலங்களில் கூட, நீர் போதாத நிலை தான் இருக்கின்றது. அப்படிப் போதாத நிலையில் இருக்கும் அந்த நிலப்பரப்பு முழுமைக்கும் பாசனம் தரக்கூடிய வகையில், எப்படியாவது நீரை மிச்சப் படுத்தி உபரி நிலங்களுக்கும் பாயும் வகையில் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் பல மாற்றுத் திட்டங்கள் எல்லாம் இப்போது நடைமுறைக்குக் கொண்டு வர இருக்கிறார்கள்.

அந்த வகையில் வைகை அணை மேம்பாட்டுத் திட்டம், தஞ்சைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், காவிரி டெல்டாப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் போன்ற பல திட்டங்கள் ஆய்வு செய்யப் படுகின்றன. வைகை அணை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு நீர் பாயும் என அறிவிப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தண்ணீரைப் பொறுத்த வரையில் எப்படியும் மிச்சமாகும். ஒரு திட்டத்தில் கிடைக்கும்



1986 ஏப்ரல் 30] [திரு. பெ. செங்கோட்டையன்]

தண்ணீர் முழுவதும் அப்படியே செலவிடப்படும் என்று சொல்லி விட முடியாது. மேட்டூர் அணையிலிருந்து விடப் படும் தண்ணீர் கூட அது கர்நாடக மாநில அரசோடு சம்பந்தப் பட்டிருப்பதால் வெளியே சொல்ல வேண்டாம் என்று நினைத்திருந்தாலும், அதிலே இவ்வளவு தண்ணீர் மிச்சமாகும் என்று உறுதியாகச் சொல்ல முடியாத நிலை இருந்தாலும், அதிலும் நிச்சயம் மிச்சமாகும் என்றே கருதுகிறேன். காவிரி மேம்பாடு திட்டத்தின் கீழ் என்னென்ன இடங்கள் பயன்பெறும் அல்லது புதியதாக ஏதாவது இடங்களைச் சேர்த்திருக்கிறீர்களா என்ற விவரங்கள் தரப்படவில்லை.

(முற்பகல் 11-40)

காவிரி தமிழகத்தில் வந்த பிறகு மேட்டூர் அணையிலிருந்து முதலாவதாக பெட் டேம் கட்டி பிரிக்கப்படும் வாய்க்காலானது சேலம் மாவட்டத்தில் நாமக்கல் வட்டத்தில் தான் பிரிக்கப்படுகிறது. ராஜா கொமாரபாளையம் வாய்க்கால் முதலாவது வாய்க்காலாக ஜேடர்பாளையம் பகுதியில் பிரிகின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந் ப் பகுதிகளுக்கு வந்திருந்தபோது அவர்களுக்கு அதையெல்லாம் காண்பித்து இருக்கிறேன். அந்த பெட் டேமிலிருந்து பிரியக்கூடிய பொய்யேறி, ராஜா கொமாரபாளையம், மோகனூர் வாய்க்கால் ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்கு முன்னால் வெட்டப்பட்டவையாகும். அவற்றை யார் வெட்டினார்கள், எப்போது எதற்கு வெட்டினார்கள் என்பது தெரியாது. மண் வாய்க்கால்களாக, காண்டூர் சிஸ்டம் என்று சொல்வார்களே அப்படி மேடுபள்ளங்களை அடித்துச் செல்கிற முறையில் அந்த வாய்க்கால்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. அந்த வாய்க்கால்கள் பல இடங்களில், 'அக்யூட் டெட்' என்று சொல்வார்களே அதைப்போல 90 டிகிரிக்கும் குறைவான அளவில் தண்ணீர் திரும்பக்கூடிய அளவிற்கு வாய்க்கால்கள் இருக்கின்றன. இதைப்போன்று திருச்சி மாவட்டத்திலும் புகளூர் வாய்க்கால், நெரூர் வாய்க்கால் போன்ற வாய்க்கால்கள் இருக்கின்றன. இந்த வாய்க்கால்களில், குறிப்பாக நாமக்கல் வட்டத்தில் இருக்கும் ராஜா வாய்க்காலை பாசன ஆதாரங்களை நவீனப்படுத்தும் திட்டத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதனால் மிச்சமாகக் கூடிய தண்ணீரைக் கொண்டு, அந்தப் பகுதியில் பம்ப் செட் வைத்து பாசனம் பெறும் நிலங்களுக்கு கொடுத்து விவசாயம் நல்ல முறையில் நடைபெற உதவ வேண்டும். இதையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நேரில் காண்பித்து இருக்கிறேன். அவர்களும் பார்த்திருக்கிறார்கள். ஆகவே ராஜா வாய்க்காலை புதுப்பித்து, லைனிங் போட்டு சீர்படுத்தினால் மேலும் 20 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர் வழங்கும் வாய்ப்பு இருக்குமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. பெ. செங்கோட்டையன்] [1986 ஏப்ரல் 30

அடுத்து காவிரி ஆற்றின் கரைகளில் அந்தக் காலத்தில் உண
வுப் பயிர்களைத் தான் பயிர் செய்தார்கள். நாடு சுதந்திரம்
பெற்ற சமயத்தில் 30 கோடி மக்களுக்கு உணவு போதாம
லிருந்த அந்த நிலையை நாம் அறிவோம். ஆகவே, 'க்ரோ
மோர் புட்' என்ற திட்டத்தில் உணவுப் பயிர்களை வளர்க்க
தண்ணீரை எடுத்து விவசாயம் செய்தார்கள். இன்றைய நிலை
யில் உணவுப் பயிர்கள் மட்டுமல்லாமல் பல்வேறு பயிர்களும்
பயன்படுகின்றன. முக்கியமாக கரும்பு அத்யாவசியமான பயி
ராக இருக்கிறது. நாட்டில் சர்க்கரை பற்றாக்குறை இருப்
பதை நாம் அறிவோம். தினமும் பத்திரிகையில் அதுபற்றி
படிக்கிறோம். இதன் காரணமாக வெளிநாடுகளிலிருந்து
சர்க்கரை இறக்குமதி செய்யப்படுகிறது. அப்படியிருக்கிற
போது உணவுப் பயிர்களை மட்டும்தான் விளைவிக்க வேண்டு
மென்ற கட்டுப்பாட்டை நீக்கி எந்தப் பயிராக இருந்தாலும்
விவசாயம் செய்வது நாட்டிற்கு நல்லது என்ற நிலையில் இன்று
செய்து வருகிறோம். உணவுப் பயிர்களுக்கும் மற்றப் பயிர்களுக்
கும் வரி வீதங்களில் வேறுபாடு இருக்கிறது. நில வகையிலும்
வேறுபாடு இருக்கிறது. இதையெல்லாம் ஒரே மாதிரியாகச்
செய்து எல்லோருக்கும் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இப்போது
தான் என்னுடைய உரையை ஆரம்பித்திருக்கிறேன். விரைவில்
கருத்துக்களைச் சொல்லி முடித்து விடுகிறேன். நிலப்பரப்பு
நீர் ஆதாரங்கள் குறைந்துவிட்ட நிலையில் நிலத்தடி நீரை
நாம் முழுமையாகப் பயன்படுத்த வேண்டிய நிலையில் இருக்
கிறோம். எங்களுடைய சேலம், பெரியார், தர்மபுரி மாவட்
டங்களில் எல்லாம் நிலத்தடி நீர் மிகக் குறைவாக இருக்கிறது.
அமைச்சர் அவர்கள் கொள்கைக் குறிப்பில் ஒன்றைச் சொல்லி
யிருக்கிறார்கள். நிலப் பரப்பு நீரையும், நிலத்தடி நீரையும்
ஒன்றாக இணைத்து பாசனம் செய்தால் அதிகமான அளவிற்கு
பாசன வசதி அளிக்க முடியுமென்றும், அந்த அடிப்படையில்
கிருஷ்ணகிரி அணைக்கட்டுப் பகுதியில் அந்தத் திட்டம் அமல்
நடத்தப்பட்டு பலன் அளித்திருக்கிறது என்றும் சொல்லியிருக்
கிறார்கள்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அது மிக நல்ல திட்டம், நிலப்பரப்பில் இருக்கிற தண்ணீரை
வயலுக்குப் பாய்ச்சி, அந்தத் தண்ணீர் நிலத்திற்குச் செல்லும்
போது நிலத்தில் இருக்கிற தண்ணீரை கிணறுகள் வெட்டி பம்ப்
செட் மூலம் இறைத்து தட்டுப்பாடுள்ள நிலங்களுக்கு அளிப்பது
என்பது மிகச் சிறப்பான திட்டம். இந்தத் திட்டத்தை வெள்
ளோட்டமாக கிருஷ்ணகிரி அணைக்கட்டுப் பகுதியில் செய்
திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இந்தத் திட்டத்தை
காவிரியின் எல்லாப் பகுதிகளிலும் அமல் செய்தால் காவிரி
ஆற்றின் கடைமடைப் பகுதிக்கும் பாசன வசதி கிடைக்கும்



1986 ஏப்ரல் 30] [திரு. பெ. செங்கோட்டையன்]

அதேபோல காவிரி வாய்க்கால்களின் கடைமடைப் பகுதிகளி
லும் இந்தத் திட்டத்தை அமல் நடத்தினால் அந்தப் பகுதிகளில்
பயிர்கள் தண்ணீர் இல்லாமல் காயாமல் இருக்கும்.

எங்களுடைய பகுதியில் இராஜா வாய்க்காலின் கடைமடைப் பகுதியான பொய்யேறி, நிலையாறு, சொமாரபாளையம், பாலப்பட்டி போன்ற கடைப் பகுதிகளிலும் நிலத்தடி நீரையும், மேல்பரப்பு நீரையும் இணைத்து செய்யக்கூடிய திட்டத்தைச் செய்ய வேண்டும். அங்கே கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதில் முன்னுரிமை கொடுத்து செய்தால் கிணறுகளிலிருந்து நீர் பாய்ச்சி பயிர்கள் காயாமல் இருக்கும். பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதில் இன்றைய நிலையில் விண்ணப்பம் செய்பவர்களுக்கு 10, 15 ஆண்டுகள் மின் இணைப்புக் கொடுக்க காலமாகிறது. ஆகவே கடைமடைப் பகுதிகளில் பயிர்களைக் காப்பாற்றுவதற்கு உடனடியாக கிணறுகளை வெட்டி மின் இணைப்புக் கொடுப்பதில் முன்னுரிமை கொடுக்க வேண்டும். அப்படி அமைக்கக்கூடிய கிணறுகளுக்கு மானியமும் கடனும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் நிலத்தடி நீரை அபிவிருத்தி செய்யக்கூடிய வகையிலே கசிவு நீர்க் குட்டைகளை ஏராளமாக எங்கள் பகுதியிலே அமைக்க வேண்டிய நிலையிலே நாம் இருந்து வருகிறோம் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். கசிவு நீர்க் குட்டைகளாலும், சிற்றோடையிலே ஆங்காங்கு புதிதாகக் கட்டப்படும் தடுப்பு அணைகளாலும், அதாவது செக் டாம்களால் மட்டும் தான் அந்தப் பகுதியில் நிலத்தடி நீரை நாம் அதிகப்படுத்த முடியும். சேலம், தர்மபுரி, பெரியார், கோயம்பத்தூர் போன்ற மாவட்டங்களில் நிலத்தடி நீரை அதிகப்படுத்த வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். அங்கே இப்போது குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லாமல் இருக்கக்கூடிய காரணத்தால், அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய நிலத்தடி நீரை அபிவிருத்தி செய்யக்கூடிய வகையில் ஏதாவது ஏற்பாடுகளைச் செய்து, கசிவு நீர்க் குட்டைகளைச் கட்டவேண்டும். தடுப்பு அணைகளைக் கட்டவேண்டும்.

குறிப்பாக தர்மபுரி மாவட்டத்தில் உள்ள மொரப்பூர் தொகுதியில் போதிநாய்க்கன் கண்டியிலே ஏற்கனவே அணை கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்ட நிலையில் இருக்கிறது. இந்த அணையினுடைய வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையிலே இருக்கிறது. எனவே உடனடியாக இந்த அணையைக் கட்டி, அந்தப் பகுதி மக்கள் பயன்படக்கூடிய வகையில் நன்மை செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பெ. செங்கோட்டையன்] [1986 ஏப்ரல 30

சேலம் மாவட்டத்தில் உள்ள கபிலர் மலைப் பகுதியில் திருமணிமுத்தாறு ஆற்றின் ஓரத்திலே, அதன் போக்கிலே ஓருர் என்றஇடத்திலும், மாவரட்டி என்ற இடத்திலும் இரண்டு செக்டாம் கட்டினால், அந்தப் பகுதியிலே இருக்கிற விவசாய நிலங்கள் பயன் அடையக்கூடிய வகையில் உதவிகரமாக இருக்கும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல் என் பகுதியிலே காவிரியிலிருந்து தண்ணீர் எடுப்பதற்கு நீர் ஏற்றுப் பாசனங்கள் எல்லாம் அமைக்க உதவியிருக்கிறார்கள். இந்த நீர் ஏற்றுப் பாசனத் திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்வையிட்டு இருக்கிறார்கள். அப்படி பார்வையிட்டபோது, அந்த மக்கள் தங்களுடைய குறைகளை எல்லாம் அமைச்சர் அவர்களிடம் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய அந்த நீர் ஏற்றுப் பாசனத்தின் மூலம் சேலத்தில் இருக்கக்கூடிய மோகனூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு—ஏராளமாக கரும்பு உற்பத்தி செய்கிற இடம் என்பதை நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்—தேவையான தண்ணீரை அனுமதிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். கரும்புப் பயிர்கள் எல்லாம் காய்ந்து போகின்ற அளவிற்கு நிலைமைகள் இருக்கின்றன. தண்ணீர் விடுவதற்கு ஏதாவது தடை, அல்லது சிக்கல் இருந்தாலும் கூட, அவற்றை எல்லாம் நீக்கி, காலம் பூராவும் அங்கே தண்ணீர் கிடைப்பதற்கு வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று பொதுப்பணித்துறை இலாக்காவில் இருக்கக்கூடிய வாய்க்கால்கள் தூர் எடுப்புப் பணிகளை அங்கே உள்ள தனியார் கான்ட்ராக்டாரர்கள் செய்து கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் செய்யக்கூடிய வேலைகள் எல்லாம் சரியாக இல்லாத காரணத்தால் சில இடங்களில் அங்கே இருக்கக்கூடிய கூட்டுறவுச் சங்கங்கள் அந்த வேலைகளை, நாங்களே, எடுத்துச் செய்கிறோம் என்று சொல்கிறார்கள். குறிப்பாக, சேலம் தொகுதியில் உள்ள வேலைகளை, சேலத்தில் இருக்கக்கூடிய மோகனூர் சர்க்கரை ஆலையைச் சேர்ந்தவர்கள் அவர்களே தூர் எடுக்கக் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். எனவே அந்த வேலையைக் கொடுக்கும்போது, அந்தக் கான்ட்ராக்டர்களோடு சேர்ந்து போட்டி இட வேண்டிய நிர்பந்தமான நிலைமை ஏற்படுகிறது. எனவே இந்தச் சிக்கலை நீக்கி, சேலத்தில் அந்த கூட்டுறவுச் சர்க்கரை ஆலை இருக்கிற காரணத்தால், பொய்யேறி கும்மாபாளையம், மோகனூர் போன்ற வாய்க்கால்களினுடைய தூர் எடுப்புப் பணிகளை, அந்த ஆலைக்கே நியமன முறையிலே அளிக்கவேண்டும், அதற்குப் பொதுப் பணித்துறை உத்திரவிடவேண்டும் என்று நான் தங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



1986 ஏப்ரல் 30] (திரு. பெ. செங்கோட்டையன்)

அதேபோல் மோகனூர் வாய்க்கால திட்டம் என்பது அந்தக் காவிரியின குறுக்கே.............

மாண்புமிகு திரு. யா. ஃச. மு. யூசுப் : பேரவை மாற்றுத்
தலைவர் அவர்களே, இங்கே மோகனூர் கால்வாயைப் பற்றி
சுட்டிக்காட்டி, அங்கே நியமன முறையில் பணிகளைச் செய்
வதற்கான உத்திரவை இந்த அரசு போடவேண்டும் என்ற அந்தக்
கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்
கிறார்கள். கடந்த 10 நாட்களாக, அன்றாடம் பொதுப்பணித்
துறையின் இத்தகைய செயலைக் குறிப்பாக படித்து வேலை
யில்லாமல் இருக்கக்கூடிய பட்டதாரி பொறியியல் வல்லுநர்களுக்
கும், பொறியியல் பயிற்சி பெற்றவர்களுக்கும் கூட்டுறவுமுறை
யிலே பொறியியல் பணியை மேற்கொள்கிறவர்களுக்கும் பணியை
தரக்கூடிய அந்த பாங்கினைச் சுட்டிக்காட்டி, தனியார் காண்ட்
ராக்டர்களுக்காக தொடர்ந்து 10 நாட்களாக ஒருசில பத்திரி
கைகள் வக்காலத்து வாங்கிக் கொண்டு இருக்கின்றன. இந்த
நிலையில் நான் பதில் சொல்ல விரும்பினாலும் கூட இன்று பதில்
சொல்ல முடியாத சூழ்நிலை உருவாகிவிடுமோ என்பதற்காக—
என்னிடத்திலே பதில் இருக்கிறது என்பதைச் சொல்வதற்காக
இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்கிறேன். இந்தச் சந்தர்ப்
பத்தில் இப்படி புதிது புதிதாக நீங்கள் கோரிக்கைகளை வைப்பது
எங்களுக்கு மிகவும் ஆபத்தான, சிரமமான காரியமாக இருக்கும்
என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

திரு. பெ. செங்கோட்டையன் : நியமன முறைவேலை
களைக் கொடுப்பது சிரமமாக இருக்கும் என்று
அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் என்னைப்
பொறுத்தவரையிலும், இதை அரசியல் பிரச்சனையாக
பேசாமல், நேரடியாக விவசாயிகளுக்குச் செய்யக்கூடிய உதவி
என்ற அடிப்படையிலே, அந்தப் பகுதியில் இருந்து விவசாயம்
செய்யக்கூடிய விவசாயி என்ற முறையிலே, சொல்கிறேன்,
அமைச்சர் அவர்கள் நேரிலே பார்வையிட்டு இருக்கிறார்கள்.
நான் கேட்பது, கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு நியமன முறையில்
அந்த வேலையைக் கொடுங்கள், அதனால் லாப நஷ்டம் அதிக
மாக இருந்தாலும், வேலை சாதகமாக இருக்கும் என்பதை
நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

(முற்பகல் 11—50)

*திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு பேரவை மாற்றுத்
தலைவர் அவர்களே, 1986—87 ஆம் ஆண்டு பாசனம் மற்றும்
கட்டிடங்கள் மீதான மானியக் கோரிக்கைகள் மீது எனது
கருத்துக்களை எடுத்து வைக்க விழைகிறேன்.

[திரு. வே. இரா. ஜெயராமன்] [1986 ஏப்ரல் 30

தமிழக அரசு புரட்சித் தலைவர் அரசானது தமிழகத்தி
னுடைய மேற்பரப்பு சர்பளஸ் வாட்டர் 90 சதவீதம் பயன்
படுத்தியதற்கு பின்னர் இருக்கின்ற பெரிய, நடுத்தர, சிறிய
பாசன ஆதாரங்களை நவீனப்படுத்துவதன் மூலம் உலக வங்கி
யினுடைய நிதி உதவியோடு இருக்கின்ற 20 அம்சத் திட்டத்தில்
இருக்கின்ற முதல் அம்சத்திற்கு அடிப்படையாகக் கொண்டு அதிக
மான பாசன வாயில்களை புதிதாக திறப்பதன் வாயிலா
இன்றையதினம் புரட்சித் தலைவர் அரசின் நீர்ப்பாசனத் துறை
மற்றமாநிலங்களுக்கு எடுத்துக் காட்டாச்க செயல்பட்டு வருகிறது
என்பதை முதலில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக, இந்த ஆண்டு இதற்கு முன்னால் மாண்புமிகு
புரட்சித் தலைவர் ஆட்சி காலத்திலே ஏற்படுத்தப்பட்ட பெரிய
மற்றும் நடுத்தர பாசனங்கள் குறிப்பாக தமிழகத்தில் பெரியார்
வைகையும், கோவை மற்றும் பெரியார் மாவட்டத்தில் இருக்கின்ற
பரம்பிக்குளம் ஆளியாறு திட்டம் தான். இந்த திட்டங்களுக்கு
உலக வங்கியின் நிதி உதவியோடு புதிதாக இந்த ஆண்டு பெரியார்
வைகை நவீனப்படுத்துவது இன்றைக்கு முதல் கட்டம் முடிந்து
2-வது கட்ட பணிகள் ரூ. 16.02 கோடியில் இந்தத் திட்டம் இந்த
ஆண்டு ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இந்த திட்டங்களுக்கு முதலில்
செலவிடப்பட்ட தொகை 56.86 கோடி ரூபாய்.

அதேபோல் மற்றொரு பெரிய பாசன திட்டமான
பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தின் மூலம்
நடைபெறுகின்ற
16,170 எக்டேர் நிலங்களுக்கு பாசன வசதி அளிப்பதற்கு 18
கோடி ரூபாய் செலவில் இன்றையதினம் திட்டங்கள் தீட்டப்
பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. அதே
போல் நடுத்தர பாசனங்கள், சிறு பாசனங்கள் ஆகியவற்றைப்
பொறுத்தவரையில் சுமார் 18 திட்டங்கள் இன்றையதினம்
நடைபெறுகின்றன. புதிதான திட்டங்களை மாண்புமிகு பாசனத்
துறை அமைச்சர் அவர்கள் இந்தக் மானியக் கோரிக்கைக்கு பதில்
அளிக்கும் போது அறிவிப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

அதேபோல் அடுத்து இந்த முக்கியமான தமிழகத்தினுடைய
நதி நீர்ப் பிரச்சினையில் குறிப்பாக நீர்ப் பாசனத் துறையைப்
பொறுத்த வரையில் காவேரி பேசினில் இருக்கின்ற பாசனத்
திட்டங்கள், சிறு பாசனத் திட்டங்கள் காவேரி பேசினில்
இருக்கின்ற ஒரே காரணத்திற்காக பூகர்ப்ப ரீதியாக அந்தப்
பகுதியில் அந்தக் காவேரி ஆற்றுப் படுகையில் இருக்கின்ற ஒரே
காரணத்திற்காக, இன்றையதினம் மத்திய அரசு அந்த திட்டங்
களுக்கு அனுமதி அளிக்க மாட்டோம் என்று ஒரு தடைக் கல்லாக
சட்ட திட்டங்களைப் போட்டு இருக்கிறார்கள். குறிப்பாக
உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்றால், இதற்கு முன்னால்



1986 ஏப்ரல் 30] [திரு. வே. இரா. ஜெயராமன்]

நாம் காவேரி படுகையில் சில திட்டங்களை நிறைவேற்றி
இருக்கிறோம். குடகனாறு திட்டம், நொய்யல் ஆற்றுத் திட்டம்
போன்ற திட்டங்களை நாம் நிறைவேற்றி இருக்கிறோம்.
அதைப்போல் அந்த பாசனத்தில் இருக்கின்ற நங்கஞ்சியாறு,
போன்ற உப நதிகளில் இருக்கின்ற திட்டங்களுக்கு இன்றையதினம்
மத்திய அரசு தடைக் கல்லாக சில விதிகள் போட்டு இருக்கின்றது.
அந்த விதிகளை தளர்த்தி, நமது அரசு மாற்றி, அவைகளை செயல்
படுத்தவேண்டும் என்று வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக நங்கஞ்சி ஆறு திட்டம் இருக்கிறது. இந்த திட்டத்
திற்கு பயன் மிகுதி, செலவு விகிதமும் நன்கு இருக்கிறது அதனால்
பல்லாயிரக்கணக்கான ஏக்கர் பாசன வசதி பெறுகின்ற வாய்ப்பு
இருந்தும் காவேரி பேசினில் இருக்கின்ற காரணத்தால் இன்றைய
தினம் அனுமதி மறுக்கப்படுகிறது. அத்தகைய திட்டங்களை
உடனடியாக நம் மாநிலத்தினுடைய நிதி நிலைமைக்கு ஏற்ப
எடுத்து அந்தப் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இந்த ஒப்பந்தத்தைப் பொறுத்தவரையில் மாநிலங்
களின் உரிமைகள், பாசன உரிமைகள் காக்கப்படும் என்று பல
மாநிலங்களில் பேசப்படுகிறது. குறிப்பாக 1974 காவேரி ஒப்பந்
தம் இன்றையதினம் பிரச்சினைக்கு உரிய ஒன்றாக ஏற்படுத்தப்
பட்டதற்கு பின்னர் இன்றைய தினம் காவேரியிலே நீர் வரத்து
குறைந்து இருக்கிறது. 1974 காவேரி ஒப்பந்தப்படி தமிழகம்
60 சதவீதத்தையும் கர்நாடகம் 40 சதவீதத்தையும் பயன்படுத்திக்
கொள்ளலாம் என்ற அந்த அளவுக்கு உள்ள நிலை மாறி இன்றைய
தினம் அந்த 40 சதவீதம் 60 சதவீதம் மாறி இருக்கிற நிலை
ஏற்பட்டு இருக்கிறது. இந்த நிலையில் கர்நாடக அரசு ஹேமா
வதி, ஹேரங்கி, கபினி அணைகளை அங்கே கட்டி, வருகின்ற
நீரை இன்றைய தினம்அவர்கள் மாநிலத்திற்குள்ளேயே அவர்கள்
பயன்படுத்தி கொண்டு இருக்கிறார்கள். குறிப்பாக இந்த ஆண்டு
நமக்குக் கொடுக்க வேண்டிய நீர், காவிரியினுடைய தண்ணீர்
அளவு, பாதிக்குப்பாதி அளவு கூட இந்த ஆண்டு கொடுக்க
வில்லை. இந்த ஆண்டு காவிரிக்கு வந்த தண்ணீர் எல்லாம்
நமது மாநிலத்தில் பெய்த மழையின் அளவைப் பொறுத்
திருந்ததே தவிர, கர்நாடகத்திலிருந்து நமக்குக் கிடைக்
வேண்டிய தண்ணீர் கிடைக்கவில்லை என்பதை நான்
இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதை மறு
பரிசீலனை செய்யவேண்டும். தமிழக அரசின் நீர்ப்
பாசனக் கொள்கையில் புதிய மாற்றமும் புதிய கண்ணோட்டமும்
தேவை என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக உலக வங்கி நிதியுதவி பெறும்போது, அவர்
களும் சில இடர்பாடுகளைச் சொல்லி, கண்டிஷன்களை, அந்தத்
திட்டங்களில் போடுகின்றார்கள், அவர்கள் பிரத்யட்ச கண்
ணோட்டத்தோடு, இங்கேயிருக்கின்ற இயற்கை சூழ்நிலைக்கேற்ப

[திரு. வே. இரா. ஜெயராமன்] [1986 ஏப்ரல் 30

அவர்களுடைய விதிகளை தளர்த்தி, சில திட்டங்களை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் புதுப் பாசனக் கொள்கையை வகுக்கும்போது, இப்போது இருக்கின்ற சிரமங்களை இதுவரை நாம் சில திட்டங்களை அனுமதிப்பதற்கு ஏற்படுத்திக் கொண்டிருந்த அந்தப் பயனீட்டுச் செலவு வீதங்களை மாற்றி, அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றையதினம் மாண்புமிகு நாவலர் அவர்கள் இதற்கு முன்னாலே 1937 ஆம் ஆண்டு நில வரி கொடுத்தார்கள். அதே நிலவரிதான் இன்றைக் குப் இருந்துகொண்டிருக்கிறது என்றெல்லாம் கூறினார்கள்.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். ஒரு சில திட் டங்களை, ரூ. 10, 15 கோடி என்று மதிப்பீட்டில் நாம் அணைக் கட்டுகளைக் கட்டிக் கொண்டிருக்கிறோம். ஆனால், இதனால் பயன்பெறுகின்ற விவசாயிகள் மிகவும் குறைவான அளவில் தான் இருக்கிறார்கள். அதே நேரத்தில் மிகச் சிறிய விவசாயிகள் ஆங் காங்கே இருக்கிறார்கள். அவர்களுக்கு இலவசமாக தமிழக அரசு கிணறுகளை (கம்யூனிட்டி வெல்களை) வெட்டித்தர வேண்டும். அதன் மூலம் அவர்களுக்கு பாசன வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக லோயர் ரைப்பேரியன் உரிமை பாதுகாக் கப்பட வேண்டும். அந்த வகையில் ஒரேயொரு கருத்தை மாநி லங்கள் அவையில் திரு சங்கரானந்த் கூறியிருக்கிறார்கள், அவர் கள் மாநிலங்களுக்கு ஏற்பட்ட பயத்தைப் போக்குகின்ற வகை யில், Mr. Sankaranand allayed the fears of any Constitutional amendment secking to curb the rights of the State over the river water. இரண்டு மாநிலங்களுக்கு இடையே ஓடுகின்ற ஆறுகளினுடைய உரிமைகளை பாதுகாக்கின்ற வகையில், அவர்கள் பயத்தை போக்குகின்ற வகையில், அரசியல் சட்டத் திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள். உறுதி மொழியும் எடுத்திருக்கிறார்கள். அதை மிக விரைவாகக் கொண்டுவருவதற்கு இங்கே காங்கிரஸ் கட்சி நண்பர்கள் உறு துணையாக இருக்க வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, இங்கே இருக்கின்ற காவிரி நீர் பிரச்சினையை பொறுத்தவரையில், மிக விரைவாக, மத்திய அரசு தான் முடிவு எடுக்க வேண்டும். பஞ்சாபில் இருக்கின் றவன் துப்பாக்கியைத் தூக்கினால், சட்லஜ், பியாஸ் ஒப்பந்தம் ஏற்படுகின்றது. இங்கே நாம் சட்டங்கள் போட்டும், சட்டங்கள் மூலமாக அவர்களுக்கு அறிவுரைகள் தந்தும், கடிதங்கள் எழுதி யும், கடிதங்கள் மூல கெஞ்சிக் கேட்டும், இன்றைய தினம் தமிழக அரசுக்கு பதிலே வருவதில்லை. நூற்றுக்கணக்கான கடிகங்கள் கேரளாவில் மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளுக்



1986 ஏப்ரல் 30] [திரு. வே. இரா. ஜெயராமன்]

தாக கடிதங்கள் எழுதியும், அங்கேயிருந்து பதில் வருவதில்லை. எருமை மாட்டின் மேல் மழை பெய்த மாதிரி இருக்கிறது. அந்த வகையிலே, மத்திய அரசே முன்வந்து இந்த நதி நீரை பொறுத்த வரையில் மேற்கு நோக்கி பாயும் நதிகளைப் பொறுத்த வரையில் Wate Development of Peninsular Rivers Council 218 டி. எம். சி. தண்ணீர் இருக்கிறது. இதில் 10-ல் ஒரு பங்கு கொடுத்தால், தமிழகத்திலுள்ள மதுரை, முகவை, கோவை, பெரியார் மாவட்டங்களிலுள்ள 2 இலட்சம் ஏக்கர்களுக்கு மேல் பாசன வசதியை ஏற்படுத்துகின்ற நிலையில் அமையும். அந்த வகையில் மத்திய சர்க்கார், ஒரு கொள்கையை வகுத்து, புதிய நெறிமுறைகளை தமிழக அரசிற்கும், மற்றும் தமிழகத்தைச் சார்ந் திருக்கின்ற, கேரளம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களை இணைத்து, ஒரு புதிய நெறிமுறையினை ஏற்படுத்தி, இங்கே பாசன வசதியை பெருக்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, சுமார் 100 ஏக்கருக்கும் குறைவாக ஆயக்கட்டுகளை உடைய ஏரிகள், குளங்கள், குட்டைகள், கசிவு நீர்க் குட்டைகள் ஆகியவை 25,000 என்ற எண்ணிக்கையில் இருக்கின்றன. இவைகளை பொறுத்த வரையில் இந்த ஆண்டு தமிழக அரசு 'மைனர் இரிகேஷன்' பராமரிப்பதற்கு ரூ. 50 இலட் சம் ஒதுக்கியிருக்கிறது. இது "யானை பசிக்கு சோளப் பொறி" மாதிரி இருக்கிறது. இவற்றை 4, 5 சுழற்சி முறைகளில் கொடுக்கிறார்கள். இவைகளை மாற்றி ரூ. 4, 5 கோடியாக கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக என்னுடைய தொகுதியில் இருக்கின்ற சண் முகா நதி அணைக்கட்டுத் திட்டம், 18ஆம் கால்வாய்த் திட்டம், அதற்கடுத்து, புரட்சித் தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட மூல வைகை திட்டத்தை ஏற் படுத்த வேண்டும். அதன் வாயிலாக 25,000 ஏக்கர் பயன்பெறு கின்ற அளவிற்கு இருக்கின்ற அந்தத் திட்டத்தைக் கடந்த வெள்ளப்பெருக்கின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்து பார்வையிட்டார்கள். அந்தத் திட்டத்தை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளின் நீரைப் பொறுத்த வரையில் அதைத் திருப்பிவிடுகின்ற பணியைச் செய்ய வேண்டும். (மணியடிக்கப் பெற்றது.)

(நண்பகல் 12—00)

**திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு தாற்காலிகத் தலைவர் அவர்களே, பாசனத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நமக்குக் கிடைக்கவேண்டிய நீரைக் கேட்டு கர்நாடக மாநிலத்திற்குப் பல்வேறு முறைகள் சென்று, மாண்பு மிகு முதல்வர் அவர்களுடைய பிரதிநிதியாகச் சென்று, வாதாடி அவ்வப்போது சில நன்மைகளைப் பெற்று வருகிறார்கள்.

[திரு. குமரி அனந்தன்] [1986 ஏப்ரல் 30

நீண்ட காலமாகவே நெல்லை மாவட்டம் நாங்குனேரி ராதாபுரம் வட்ட எல்லைக்குள்ளே வள்ளியூரிலிருந்து சுமார் 10 கிலோமீட்டர் தொலைவிலே மேற்கு தொடர்ச்சி மலையிலே உற்பத்தியாகின்ற ஒரு ஆற்றிலே அணைகட்டித் தரவேண்டுமென்று தென் கோடி மக்கள் நீண்ட காலமாகக் கேட்டு வருகிறார்கள். கடல் மட்டத்திற்கு 3,700 அடியிலே உற்பத்தியாகி கொம்பை ஆறுடன் சேர்ந்து தாமரை ஆறாக ஓடி நம்பியாற்றில் சேருகின்ற கொடு முடியாறு அணைக்கட்டுத் திட்டத்தை 25 ஆண்டுக் காலத்திற்கு மேலாக அந்தப் பகுதி மக்கள் கேட்டு வந்திருக்கிறார்கள். மாண்பு மிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு முறை தேர்ந் தெடுக்கப்பட்டு வந்திருக்கிற தொகுதி யாகும் இது. இப்போது என்னையும் அந்தப் பகுதி மக்கள் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக் கிறார்கள்.

அந்த அணையைக் கட்ட வேண்டுமென்று பல்வேறு காலக் கட்டங்களில் நாங்கள் எழுப்பிய குரல் மட்டுமல்ல அந்த மக்களுை டய சார்பிலேயும் குரல் எழுப்பிக் கொண்டு வந்திருக்கிறோம் 1976 ஆம் ஆண்டு ஜூன் மாதம்அந்தத் திட்டத்திற்கு அங்கீகாரம் பெறப்பட்டு 1976 ஆம் ஆண்டிலே 58 லட்ச ரூபாய் செலவிடப் பட்டும்கூட எமர்ஜன்சி என்று சொல்லப்படுகிற அவசர நிலையின் போது அது நிறுத்தி வைக்கறுப்பட்டது. நிறுத்தி வைக்கப்பட்டு 3 ஆண்டுகள் நீர் வரத்தைப் பற்றிய ஆராய்ச்சி செய்ததற்குப் பிறகு மீண்டும் அந்தத் திட்டப்பணிகள் தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

குறைந்த பட்சம் 700 மிலியன் கன அடி தண்ணீராவது வந்தால் தான் அது கட்டப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. 3 ஆண்டு களுக்குப் பின்னாலே 1786 மிலியன் கன அடித் தண்ணீர் (எதிர் பார்க்கப்பட்டது வெறும் 700 கன அடி தண்ணீர்தான்) ஆனால் சராசரி 1786 கன அடி தண்ணீர் அங்கே வருகிற காரணத்தி னாலே அதிலே அணை கட்டலாம் என்பதற்கான எல்லா சாத்தியக் கூறுகளும் இருந்தகாரணத்தினாலே அரசாங்கத்தின் பரிசீலனைக்கு இதை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டோம். யார் யார் எல்லாமோ அதைத் தடுத்துக் கொண்டிருந்தாலும் கூட நமது பாசனத் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச் சர் அவர்களுடைய ஒப்புதலோடு அதனை ஆழமாகப் பரிசீலித்து அங்கிருந்து வந்த குரலுக்கு மரியாதை கொடுத்து ஏறத்தாழ 1,400 அடி நீளமும் 80 அடி உயரமும் கொண்ட அந்த அணையை இரண்டு மலைகளை இணைத்து 5,783 ஏக்கர் நிலங்களுக்கு நேரடிப் பாசன வசதியும் 42 பெருங்குளங்களுக்குத் தண்ணீரை நிரப்புகின்ற வசதியும் ஏற்படுத்துகிற அந்த அணையைக் கட்டு வதற்கு ரசாணை பெறப்பட்டிருப்பதாக அறிந்து நான் பெரு மகிழ்ச்யடைகிறேன். 12 கோடி ரூபாயில் கட்டப்படும் அந்த



1986 ஏப்ரல் 30] [திரு. குமரி அனந்தன்]

கொடுமுடியாறு அணைத் திட்டம் வருகிறது என்று சொன்னால் தண்ணீர் பிடிக்க பானை, குடத்தை வைத்துக் கொண்டிருக்கின்ற ஒவ்வொரு குடத்திலும் தண்ணீர் போவதைப் போன்று நம் குல மகளிர் மகிழ்ச்சி அடைவார்கள். அந்த அளவுக்கு இந்த கொடுமுடியாறுத் திட்டத்தை நிறைவேற்றித் தருவதற்கு அரசாணை பெற்று இருப் பதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். ராதாபுரம் வாக்காளப் பெருமக்கள் மட்டுமல்லாமல் தென்பகுதியில் இருக்கிற மக்கள் சார்பாகவும் நான் அமைச்சர் அவர்களுக்கும் முதலமைச்சர் அவர்களுக்கும் எனது பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர்களின் பதிலுரையின்போது அவர்கள் திருவாயாலே அர சாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிற செய்தியை எடுத்துரைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே வெகு காலமாகவே நம்பியாற்றுத் திட்டம் என்ற திட்டத்தை ராதாபுரம் தாலுகா கோட்டைக்கருங்கும் சமீபமாக வடுகன்பட்டி மூவாற்றின் கரையில் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். ராதாபுரம் தாலுகாவும் சாத்தான்குளம் தாலுகாவும் அதன்மூலம் பயன் பெற வாய்ப்பு நிரம்ப இருக்கிறது. மழை காலத்திலே தண்ணீ ரைத் தேக்கி வைப்பதன் மூலமாக ஏராளமான மக்களுக்குக் குடி நீர் வசதியையும் ஏற்படுத்திக் கொடுப்பதோடு தேரி பகுதி என்று சொல்லப்படுகிற மணல் பகுதியிலே விவசாயம் செய்கிற வசதி யையும் ஏற்படுத்திவிட முடியும். அந்த நல்ல திட்டத்தையும் அமைச்சர் அவர்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறார் கள். அது குறித்தும் அவர்கள் அரசாணை பெற்று நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே வடக்கன்குளம், காவல்கிணறு போன்ற பகுதிகளுக்கு தண்ணீர் கிடைக்கவேண்டுமென்றால் ஆலந்தலை யாறு திட்டம் வேண்டும். அதிலே ஒரு குறிப்பிட்ட அளவுக்குத் தண்ணீர் தோவாளைக்கு வேண்டுமென்று சொல்லிக் கொண் டிருக்கிறார்கள். தோவாளைக்கு போக மீதித் தண்ணீர் என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். உண்மைதான். தோவாளை பகுதியிலே தண்ணீர் தேவைப்படுகிறது. ஆனால் அவர்களுக்குத் தேவைப்படுவது போக மீதித் தண்ணீர் கிடைக்கின்ற அளவிற்கு ஏதாவது வழி செய்ய முடியுமா ? கன்னியாகுமரி மாவட்டத் திலே இருக்கின்ற தகவை ஆறு அணைத் திட்டத்தை நாம் நிறைவேற்றுவதோடு மாம்பழத்தாறு அணையை நாம் நிறை வேற்றுவோமேயானால் அந்த ஆலத்துறை ஆற்றிலேயிருந்து போகின்ற தண்ணீரை அதிகபட்சம் இந்தப் பகுதிக்குத் திருப்பி விடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே, அதையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் செய்வதற்கு முயல வேுண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. குமரி அனந்தன்] [1986 ஏப்ரல் 30

அடுத்தாற்போல ஒரு செய்தி. சேர்வலாறு அணை தண்ணீர் இப்பொழுது பாபநாசத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது. அந்த அணைத் தண்ணீரிலே கொஞ்சம் திருப்பி மணிமுத்தாறுக்கு அனுப்பினால் தலை வாய்க்கால்கள் வழியாக அது நாங்குநேரி, சாத்தான்குளம், இராதாபுரம் போன்ற பகுதிகளிலே வறட்சி யைப் போக்குவதற்கு வசதியாக இருக்கும். அதனையும் அமைச் சரவர்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பச்சையாறு அணைத் திட்டத்தை விரைவிலே நிறைவேற்றித் தருவதாக முதல்வரவர்கள் அறிவித்தார்கள். நமது மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சரவர்களும் முனைந்து முன்னின்று செயல்பட்டுக் கொண்டு வருகிறார்கள். ஆனால் மத்திய அர சாங்கத்தின் சார்பிலே இருந்துகொண்டிருக்கின்ற அந்த வனத் துறையினுடைய அனுமதி வராத காரணத்தாலே அது இன்னும் செயல்பாடு இல்லாமல் இருக்கிறது. அது செயல்பாட்டுக்கு வர வேண்டுமென்று சொன்னால், மத்திய அரசாங்கம் உடனடி யாக அனுமதி கொடுப்பதற்கு உரிய முயற்சிகளிலே, இங்கிருக் கின்ற, மத்திய அரசாங்கத்தோடு தொடர்பு உடைய உறுப்பினர் களும் உதவி செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

முக்கியமாக நான் இங்கே சொல்ல விரும்புவது, இப்படிப்பட்ட என்னுடைய தொகுதி, தென் பகுதி இவைகளைச் சேர்ந்தவை களையெல்லாம் சொல்லிவிட்டு, பொதுவாகச் சில செய்திகளை நான் சொல்வதற்கு எனக்குச் சில நிமிடங்களை அனுமதிப்பீர்கள் என்ற நம்பிக்கையிலே அவைகளை சொல்லத் தொடங்குகின் றேன்.

இப்பொழுது ஒரு பகுதியிலே வெள்ளப் பெருக்கும், இன்னொரு பகுதியிலே வறட்சியும் வநதுகொண்டிருக்கின்ற காரணத்தினாலே உடனடியாகச் செய்ய வேண்டியது என்னவென்று சொன்னால், நாட்டில் இருக்கின்ற நீர் ஆதாரங்கள் அத்தனையையும் தேசிய சொத்துக்கள் என்று அறிவிக்க வேண்டும். நீர் ஆதாரங்கள் அத்தனையும் தேசிய சொத்துக்கள் என்று அறிவிக்கப்படுகின்ற நேரத்திலேதான், எந்தப் பகுதியிலேயும் வெள்ளச் சேதம் ஏற் படாமலும், எந்தப் பகுதியிலேயும் வறட்சியால் பாதிப்பு ஏற் படாமலும் நாம் இந்தியா முழுவதும் செழிக்கின்ற ஒரு பூமியாக ஆக்க முடியும்.

இப்பொழுது இருக்கின்ற விஞ்ஞானத்தை வைத்துக்கொண்டு எதை எதையோ சாதிக்கலாம் என்று சொன்னாலுங்கூட, நம் மிடத்திலே உள்ள பண வசதி அவ்வளவு இல்லை என்பது நமக்குத் தெரியும். கடலுக்கு அடியிலேகூட இப்பொழுது நல்ல தண்ணீர் இருப்பதாக விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். கடலுக்குள்ளேயே கூட நல்ல தண்ணீர் ஓடைகள் ஓடுவதாக



1986 ஏப்ரல் 30] [திரு. குமரி அனந்தன்]

இப்பொழுது கண்டுபிடித்திருக்கிறார்கள். அதிலிருந்து குழாய் கள் மூலம் தண்ணீரைக் கொண்டு வரலாம். என்றெல்லாம் சொல் கிறார்கள். அந்த அளவிற்கு விஞ்ஞானத்திலே நமக்கு இப்பொழுது பணத்தைச் செலவிடுவதற்கு வழியில்லை.

அதோடுகூட, உறைந்து கிடக்கின்ற பனிக் கட்டிகளில், பனி மலைகளிலே ஏராளமாக தண்ணீர் அடைபட்டுக் கிடப்பதாகச் சொல்கிறார்கள். இன்றைக்கு உலகத்திலே ஓடிக்கொண்டிருக் கின்ற நதிகள் அத்தனையையும் 700 ஆண்டுக்காலம் தொடர்ந்து ஓடச் செய்து, அந்தத் தண்ணீரையெல்லாம் ஓரிடத்திலே நிரப் பினால் எவ்வளவு தண்ணீர் இருக்குமோ அவ்வளவு தண்ணீர் பனிக்கட்டிக்குள்ளேயே அடைபட்டுக் கிடக்கிறது என்று சொல் கிறார்கள். அந்தத் தண்ணீரை யெல்லாம் நாம் இங்கே கொண்டு வர முடியவில்லை என்று சொன்னாலும், ''இன்னறும் நீர்க் கங்கையாறு எங்கள் ஆறே'' என்று பாரதி பாடினானே, இனிய நீரைத் தந்து கொண்டிருக்கின்ற கங்கை நதி எங்கள் நதி என்று சொல்லிக்கொண்டிருந்தானே அந்தக் கங்கையை காவிரியோடும் கன்னியாகுமரியோடும் இணைப்பதற்கு உரிய திட்டத்தைக் கொண்டு வருவதாக இருந்தால், உடனடியாக நமது பிரச்சனை கள் எல்லாம் தீர்வதற்கு வழி உண்டு.

ஐக்கிய நாடுகள் சபையிலேயிருந்து வந்த ஒரு நிபுணர் குழு 1971-லேயும், 1972-லேயும் இங்கே வந்து பரிசீலித்து, 2000 ஆவது ஆண்டுக்குள்ளே கங்கையைக் காவிரியோடு இணைத்து எல்லா நதிகளையும் நீங்கள் தொடர்புபடுத்தவில்லை என்று சொன்னால், இந்தியாவிலே பெரிய, கொடிய தண்ணீர்ப் பஞ்சம் வரும் என்று எச்சரித்திருக்கிறது. ஐக்கிய நாடுகள் சபையிலே யிருந்து வந்த இந்தக் குழுவே எச்சரித்திருக்கிறது. 1971 டிசம் பரிலேயும் வந்தது; 1972 மார்ச்சிலேயும் வந்தது. அது வந்து எச்சரித்து இருக்கிறது. நீங்கள் இப்பொழுதே உடனடியாகத் திட்டத்தைத் தொடங்க வேண்டும்; கங்கையைக் காவிரியோடு இணைக்க வேண்டும்; எல்லா நதிகளையும் சேர்த்து இணைத்து விட வேண்டும், இந்தப் பணிகளை உடனே செய்துவிட வேண் டும்; இல்லையென்றால் கி.பி. 2000-இலே கொடிய தண்ணீர் பஞ்சம் வரும் என்று அவர்கள் எச்சரித்ததற்குப் பிறகும் நாம் அந்தக் காரியத்திலே முனைந்து செயல்படாமல் இருப்பது, இங் கிருக்கின்ற உறுப்பினர்கள் மூலம், இந்த அவையின் மூலம் மத்திய அரசாங்கத்தினுடைய காதுகளுக்கு எட்ட வேண்டுமென்பதற் காகவே நான் சொல்கிறேன். அந்த நிபுணர் குழு சொல்கிறது அங்கே.

இங்கே கட்டிடக் கலையாக இருந்தாலும், அந்த என்ஜினியரி என்று சொல்லப்படுகின்ற பொறியியல் கலையாக இருந்தாலு சரி, இது எதுவுமே குறுக்கே நிற்க முடியாது. அந்த அளவிற்

அது வசதியாக இருக்கிறது, சாதகமாக இருக்கிறது, சாத்தியக் கூறுகள் இருக்கின்றன, அந்தத் தண்ணீரைக் கொண்டு வருவதற்கு என்று சொல்கிறார்கள்.

இப்படிப் பல இடங்களிலே தண்ணீரைக் கொண்டு வந்திருக்கிறார்கள். உதாரணமாக, கலிபோர்னியா அணைத் திட்டம் என்று அமெரிக்காவிலே இருப்பது 520 கோடி கன மீட்டர் தண்ணீரை - கன அடி தண்ணீரைச் சொல்லவில்லை - 520 கோடி கன மீட்டர் தண்ணீரை 820 கிலோ மீட்டர் தொலைவிலேயிருந்து கொண்டு வருகிறது.

அதைப் போலவே, மிசிசிபியிலேயிருந்து டெக்சாஸ் தண்ணீர் திட்டம் என்று சொல்லுகின்ற திட்டத்தின் அடிப்படையிலே 1,500 கோடி கன மீட்டர் தண்ணீரை 1,450 கிலோ மீட்டர் கால்வாய் வெட்டி கொண்டு வருகிறது. அப்படிக் கொண்டு வருகின்ற நேரத்தில் 1,030 மீட்டர் தண்ணீரை பம்பு செய்து மேலே ஏற்றுகிறது.

நமக்கு விந்தியத்தைக் கடக்க வேண்டியிருக்கின்ற நேரத்திலே நாம் அந்த விந்தியத்திலே சுரங்கப் பாதை அமைக்கவில்லை என்று சொன்னால், அந்தத் தண்ணீரை மேலே ஏற்ற வேண்டுமென்றால், எவ்வளவு மீட்டர் மேலேற்ற வேண்டியிருக்கிறது என்றால் 335 மீட்டர்தான். அமெரிக்காவிலே அவர்களுடைய வசதிக்கு அவர்கள் 1,030 மீட்டரை மேலேற்ற முடியுமானால் நாம் நம் தொகையையும், நமது விஞ்ஞான அறிவையும் வைத்துக்கொண்டு 335 மீட்டர் விந்தியத்திலே மேலே தூக்க முடியாது என்று சொல்லிக் கொண்டிருப்பதிலே பயன் இல்லை. அந்தத் தண்ணீரைப் பம்ப் செய்ய முடியாது என்பதையெல்லாம் நாம் இப்பொழுது சொல்லிக் கொண்டிருப்பதிலே பயன் இல்லை. மின்சாரம் எவ்வளவு தேவைப்படுகிறது என்பதையெல்லாம் சொல்லிக் கொண்டிருப்பதிலே பயன் இல்லை. ஏனென்றால், ஐக்கிய நாட்டுச் சபையினுடைய நிபுணர் குழு சொல்கிறது. உடனடியாக இந்தக் காரியத்தைச் செய்தாக வேண்டுமென்று.

(பிற்பகல் 12—10)

லிபியா இப்பொழுது அரசியல் ரீதியிலே மட்டுமல்ல, சமூக ரீதியிலே பேசப்பட்டு வருகிற நாடு. அந்த லிபியா, பாலைவனத்தின் பக்கத்தில் இருப்பது உங்களுக்குத் தெரியும். அவர்கள் அந்தப் பாலைவனத்தைத் தோண்டிப் பார்த்ததற்குப் பிறகு, 200 ஆண்டுகள் நைல் நதி ஓடினால் எவ்வளவு தண்ணீர் தேங்குமோ அவ்வளவு தண்ணீர் பாலைவனத்திற்குள்ளே கிடப்பதாகக் கண்டு பிடித்திருக்கிறார்கள். நைல் நதி நீர் தொடர்ந்து 200 ஆண்டுகள் ஓடினால் எவ்வளவு வருமோ, அது பாலைவனத்திற்குள்ளே இருக்கிறது. அதை 1,100 கிலோ மீட்டர் கான்கிரீட் குழாய்





கள் போட்டு தண்ணீரைக் கொண்டு வருகிறார்கள். 1,100
கிலோ மீட்டர் கொண்ட குழாய் போடுகிற அளவு, அதிலே
அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், கான்கிரீட் ரயில்
என்று சொல்கிற அளவுக்கு வந்து கொண்டிருக்கிறது என்று.
அப்படியிருக்கும்போது, இந்தியப் பெரும் தேசம் இவ்வளவு
மகத்தான தேசமாக இருக்கும் போது, தேசிய தண்ணீர்
திட்டத்தைப் பரிசீலித்து அறிவிக்க வேண்டு
மென்பது என்னுடைய பணிவான வேண்டுகோள்.

கங்கையைக் காவிரியோடு இணைக்க வேண்டும், அதிலேயிருந்து
கன்னியாகுமரியோடு இணைக்க வேண்டும். அப்படிச் செய்தால்,
சோன் நதி, நர்மதா, கிருஷ்ணா, கோதாவரி, பெண்ணாறு,
காவேரி, தாம்பிரபரணி, வைகையாறு இவையெல்லாம் இணையும்.
கோடிக்கணக்கில் வேண்டுமென்பது குறுக்கே நிற்கக் கூடாது.
மதிப்பிற்குரிய திரு. நா. மகாலிங்கம் அவர்கள் கூட ஒரு கட்டுரை
எழுதியிருக்கிறார்கள், கங்கையை காவிரியோடு இணைப்பது
சாத்தியம்தான் என்பதை அண்மையிலே ஓம் சக்தி என்று சொல்
கிறஅவருடைய பத்திரிகையிலே மிகத்தெளிவாக எழுதியிருக்கிறார்

அவற்றையெல்லாம் நான் இங்கே குறிப்பிடுவதற்குக்
காரணம், இதை தேசிய சொத்தாக உடனடியாக அறிவித்தாக
வேண்டும். அதை ஒரு தேசிய சொத்தாக 'நாஷனல் வெல்த்' என
அறிவிக்க வேண்டும். மேற்கே ஓடுகின்ற நதியைப் பற்றிச்
சொல்கிறோம். 2,000 டி.எம்.சி. தண்ணீர் வீணாகப் போய்க்
கொண்டிருக்கிறது. 2,000 டி.எம்.சி. தண்ணீர் வீணாகப் போய்க்
கொண்டிருப்பதிலே 200 டி.எம்.சி. தண்ணீர் கிடைத்தால், கன்னி
யாகுமரி, இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி, கோயம்
புத்தூர் ஆகிய பகுதிகள் எல்லாம் செழிக்கும் என்பதோடு
அவர்கள் தண்ணீரைத் தந்தால், இலவசமாகவே நாம் அவர்
களுக்கு நெல்லைக் கொடுக்க முடியும், இலவசமாகவே கூட.
அந்த அளவுக்கு அவர்களிடமிருந்து தண்ணீரைப் பெற்று
அந்தத் தண்ணீரைப் பாய்ச்சுவதற்குரிய சோற்றினைக் கொடுப்
பதற்குரிய, அரிசியினைக் கொடுக்கக் கூடிய அளவுக்கு இருக்கிற
நேரத்திலே கூட Not a single drop of water will be sparedto Tamll
Nadu என்று சொல்கிற அளவுக்கு இருக்கிறது என்றால், அந்தந்தப்
பகுதியிலே இருக்கிறது. எனவே, அவரவர்களே வைத்துக்
கொள்வது என்ற நிலை போய், ஓடிக்கொண்டிருக்கிற நதி
இந்திய மக்களுக்கெல்லாம் சொந்தம் என்று தேசியச் சொத்தாக
வகுக்கிற நேரத்தில், அந்தப் பிரச்சினை எழாது என்பதற்காகத்
தான் இதனைச் சொல்கிறேன். அதே போலத்தான் காவேரி
நீர் பிரச்னை. அந்த ஒப்பந்தம், 1924-லேயிருந்து அமுலி
இருக்கிறது. ஏற்கனவே இருந்த தவறுகள் நீக்கப்பட்டு, புதுப்
பிக்கப்பட வேண்டுமென்றுதான், 1924 ஒப்பந்தம் 1974-லே
புதுப்பிக்கப்பட வேண்டுமென்று உள்ளதே தவிர, ஒப்பந்தப்
நிற்கிறது என்று சொல்கிற பிரச்னையே வரவில்லை.

ஆக, காவேரி பிரச்னையாக இருக்கட்டும், மேற்கே ஓடிக்
கொண்டிருக்கிற நதிகள் பிரச்னையாக இருக்கட்டும், வடக்கே
வெள்ளப் பெருக்கு ஏற்படுவதாக இருக்கட்டும், அந்த நதிகளை
எல்லாம் தேசியமயமாக்கி விடவேண்டும். இப்பொழுது ரெயிலை
தேசியமயமாக்கி விட்ட காரணத்தால் தான் ரெயில்கள் எல்லாம்
எல்லா இடங்களிலும் ஓடிக் கொண்டிருக்கின்றன. நினைத்த
இடத்திலே தண்டவாளத்தைப் போடுகிறோம். இல்லையென்
றால், ஒவ்வொரு மாகாணமும் தடுத்துக் கொண்டிருக்கும். தேசிய
மயமாக்கி அதை அறிவித்து விட்ட காரணத்தால், ரெயில்கள்
இன்று உண்மையிலே நாஷனல் இன்டகிரேஷ
னுக்கு ஒரு பெரிய நூல் போட்டுப் பின்னிக் கிடப்பதைப் போலே
இருக்கிறது. அதைப் போல நீர்வளத்தைத் தேசியமயமாக்க
வேண்டும். நீர்வழி தேசியமயமாக்கப்படுகிற நேரத்தில் இரண்டு
மூன்று சக்திகள் நமக்குக் கிடைக்கின்றன. உதாரணத்திற்குச்
சொல்லப் போனால், போக்குவரத்து மக்களுக்கு அதிக அளவில்
கிடைக்கும் என்று கணக்குச் சொல்கிறார்கள். ஒரு குதிரைச்
சக்தியிலே எச்.பி. சாலையிலே 150 கிலோ பாரத்தை
இழுக்கலாம். அதையே ரெயிலிலே பயன்படுத்தினால் ஒரு
குதிரை சக்திக்கு 500 கிலோ பாரத்தை இழுக்கலாம். அதையே
தண்ணீரிலே பயன்படுத்தினால் அந்தக் குதிரைச் சக்தி, 4,000
கிலோ பாரத்தை இழுக்கலாம். ஆக, சாலையின் வழியாக
150 கிலோ ஒரு எச்.பி.யைக் கொண்டு இழுத்தால், 500 கிலோவை
ரெயிலின் மூலம் இழுத்தால், 4,000 கிலோ பாரத்தை, சுமையை,
பளுவை, நீரின்மூலம் இழுக்கலாம். பொருள்களைக் கொண்டு
வரலாம் என்றால், அது இந்த நாட்டிற்குத் தேவைப்படுகிறது.
நிலக்கரி கொண்டு வருவதற்கு நமக்கு எவ்வளவு செலவாகிறது.
அங்கங்கேயிருந்து நிலக்கரி கொண்டு வருகிற செலவு நமக்கு
என்ன என்பதையெல்லாம் பார்க்கிறபொழுது, இந்த நாட்டிலே
நீர்ப்பாசனம் மட்டுமல்ல, நீர் வழி மட்டுமல்ல, நாம் சுகமாக
வாழ வேண்டுமென்று சொன்னால், நீர் வழி கண்டு பிடிக்க
வேண்டுமென்று சொன்னால், இதுதான் வழி. வேறு வழியில்லை.
ஆதலாலே, வடக்கே இருக்கிற நதியை தெற்கே திருப்புவதற்
குரிய முயற்சிகளிலே ஈடுபட வேண்டுமென்பதற்காக இதனைச்
சொல்கிறேன். மீண்டும் நினைவு படுத்துகிறேன். எனக்கு இது
தெரியும் என்பதற்காக முதலிலே தொகுதியைச் சொல்லி வந்
தேன்.

மீண்டும் சொல்கிறேன், கொடுமுடி—மிகுந்த மகிழ்ச்சியோடு,
நாங்கள் எதிர்பார்த்துக்கொண்டு வந்த ஆற்று அணைக்கட்டுத்
திட்டத்தை நீங்கள் அறிவிப்பது, எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத்
தரும். அரசாணை வந்துவிடும் என்ற அறிவிப்பில் மகிழ்ச்சி
அடைவேன். அதைப் போலவே, நம்பியாற்று அணைத்
திட்டத்தையும், ஆலந்தலையாறு அணைத் திட்டத்தையும்,
பக்கத்திலேயிருக்கிற எங்கள் சாத்தான்குளம் தொகுதி
உறுப்பினர் அவர்கள், முகப்பேர் மேலைப்பட்டியிலே ஒரு பிரிவு
உத்திரங்குறிச்சிக்குத் தனி கால் கொண்டு வந்தால் அந்தப் பகுதி





யில் இருக்கிற மக்கள் எல்லாம் செழிப்புறுவார்கள் என்று
கேட்கின்றார்கள். அப்படிப்பட்ட நல்ல திட்டங்களை நீங்கள்
அறிவிக்க வேண்டும். உங்களுடைய பதில் உரையிலே, நீங்கள்
மகிழ்ச்சி ததும்ப எங்களுடைய உள்ளமெல்லாம் பூரிக்கும் அளவு,
கொடுமுடியாறு திட்டத்தினுடைய செயல்பாட்டை தங்களுடைய
வாயாலே சொல்லவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொண்டு,
உங்களையும் என்னையும் தேர்ந்தெடுத்த அந்தப் பகுதி மட்டு
மல்ல, எப்பொழுதும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற கொடு
முடியாறு வந்தது என்று சொல்கின்ற செய்தி தாங்கள் தரவேண்டு
மென்று கேட்டு அமைகிறேன். வணக்கம். நன்றி.

**திரு. மா. மீனாட்சி சுந்தரம்:** தற்காலிக தலைவர் அவர்
களே, பாசனம், கட்டிடங்கள் என்ற தலைப்பின்கீழ் எங்களுடைய
கட்சியின் சார்பாக சில கருத்துக்களை சொல்ல முன்வருகின்
றேன். தமிழ்நாட்டினுடைய பாசனம், கட்டிடங்கள் என்ற
தலைப்பில் எடுத்துக் கொண்டால் தஞ்சை மாவட்டம் தான்
முக்கியமான கேந்திரமாக அமைகின்ற ஒரு பகுதி. அது உங்
களுக்கெல்லாம் தெரியும். தஞ்சை மாவட்டம் தான் தமிழ்நாட்டி
னுடைய ஏனைய பகுதிகளுக்கு ஒரு முக்கியமான நெல் களஞ்சிய
மாக இருக்கிறது அந்த தஞ்சை மாவட்டத்தின் நெல் உற்பத்திக்கு
உதவுவது காவிரி நீர்ப்பாசனம். அந்தக் காவிரி நீர்ப்பாசனத்தைப்
பற்றி இங்கே பல ஆண்டுகளாக இந்த சபையிலே ஆளும்
கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் தங்களுடைய கருத்துக்
களை தெரிவித்துள்ளனர். காவிரி நீர் பிரச்சனையைப்
பற்றி பேசுகின்றபொழுது, ஆளும் கட்சி உறுப்
பினர்கள் பேசும்போது ஏதோ தி.மு.க. காலத்திலே தான்
அந்த காவிரி நீர் பிரச்சனையில் தவறிவிட்டார்கள் என்ற
குற்றச்சாட்டை சொல்வதை நாம் எல்லாம் கேட்டுக்
கொண்டிருக்கிறோம். ஆனால் இன்றைக்கு 10, 12 ஆண்டுகளாக
ஆளுகின்ற அண்ணா தி.மு.க. காவிரி நீர் பிரச்சனையில் என்ன
முடிவு எடுத்து இருக்கிறது என்றால் ஒன்றுமே இல்லை. ஏதோ
அந்தக் காலத்தில் தி.மு.க. அந்தப் பிரச்சனையில் வழக்கு மன்றத்
திற்கு சென்றபோது தலைமை அமைச்சராக இருந்த திருமதி
இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் சகவாசதோஷம் என்றுகூட
வைத்துக்கொள்ளலாம், அந்த அடிப்படையிலே அவர்கள் கேட்டுக்
கொண்டதினால் நாங்கள் ஏமாந்துவிட்டதாகக் கூட வைத்துக்
கொள்ளலாம். நீங்கள் திறமையானவர்கள். இப்போதுகூட
மத்தியில் ஆளும் கட்சியான இந்திரா காங்கிரஸ் கட்சியோடு
நல்ல உறவு சுமுகமாக வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள்
இதனை தீர்ப்பதற்கு ஏதாவது முயற்சி எடுத்தீர்களா என்றால்
அது ஏனோ தானோ என்ற வகையிலே தான் இருக்கிறதே தவிர,
உண்மையாகவே இந்த காவிரி நீர்ப்பிரச்சினையை தீர்க்கவேண்
டும் என்ற அக்கறையோடு இருப்பதாகத் தெரியவில்லை. அதற்கு
பல சான்றுகள் இருக்கின்றன. எதற்கெடுத்தாலும் பேச்சு
வார்த்தை என்ற நிலை இருக்கிறதே தவிர அதனை முழுமையாக
தீர்க்க வேண்டும் என்ற அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை.

[1986 ஏப்ரல் 30

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாற்றுத் தலைவர் அவர்களே, காவிரி நீர் ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட வேண்டிய அந்த கால கட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தவர்கள். அவர்கள் தான் அதனை புதுப்பித்திருக்க வேண்டும். புதுப்பிக்காததைத்தான் குற்றச்சாட் டாக எங்கள் தரப்பிலே நாங்கள் சொல்கிறோமே தவிர வேறொன்றுமில்லை. அப்போது தலைமை அமைச்சராக இருந்த திருமதி இந்திரா காந்தி அவர்கள் வாக்குறுதி வழங்கினார்கள் என்று குறிப்பிட்டார்கள். அந்த வாக்குறுதி யாரிடத்திலே வழங்கப்பட்டதோ அவர்கள் தான் அதை வைத்துக்கொண்டு அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அதை பயன்படுத்தியிருக்க வேண்டும். அதிலே தவறிவிட்டார்கள் என்பது தான் எங்க ளுடைய குற்றச்சாட்டு.

**திரு. மா. மீனாட்சி சுந்தரம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, நான் தான் முன்பே சொன்னேன். நாங்கள் தான் ஏதோ தப்பு பண்ணிவிட்டோம். ஏதோ நம்பி மோசம் போய்விட்டோம். நீங்களாவது முயற்சி செய்தீர்களா என்றால். . . .

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாற்றுத் தலைவர் அவர்களே, அதற்கு பிறகு சிக்கலை உண்டாக்கிவிட்டது தான் பிரச்சனை.

**திரு. மா. மீனாட்சி சுந்தரம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, சிக்கல் உருவாக்குகின்ற அளவிற்கு அப்போது இல்லை. அப் போது மத்தியிலே ஆளுகின்ற கட்சி காங்கிரஸ் கட்சியாக இருந்த காரணத்தினால், கர்நாடக அரசும் காங்கிரஸ் கட்சியாக இருந்த காரணத்தினால் தலைமை அமைச்சர் அவர்கள் சொன்னால் கேட்பார்கள் என்ற நம்பிக்கையோடு நாங்கள் இருந்தோம். நாங்கள் செய்தது தவறு என்று எடுத்துக்கொண்டால் கூட நீங்கள் எங்களைவிட அதிகமான உறவு வைத்துக் கொண்டிருக்கிற ஆளும் கட்சியோடு கலந்து அதை தீர்க்கின்ற முயற்சியிலே ஈடு பட்டால் நன்றாக இருக்கும் என்பதனால் சொல்கிறோமே தவிர குறையாகச் சொல்லவில்லை. அந்த முயற்சியிலே அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை என்பதுதான் எங்களுடைய குற்றச் சாட்டு. தஞ்சை மாவட்டத்தின் உணவு உற்பத்தி மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் புள்ளிவிவரத்தில் நீங்கள் அதிக மாக காட்டியிருக்கிறீர்களே. அது உண்மையான புள்ளிவிவரமா என்றால் இல்லை. நாங்கள் அதற்கு பல உதாரணங்களை சொல்ல முடியும். தஞ்சை மாவட்டத்தில் கடலோரப் பகுதிகளில் சென்ற ஆண்டு பெய்த பெரு மழையினால், பெரும் சேதம் ஏற்பட்டது உங்களுக்குத் தெரியும்.



1986 ஏப்ரல் 30] [திரு. மா. மீனாட்சிசுந்தரம்]

(பிற்பகல் 12-10)

மழை பெய்தாலும் கடைமடைப் பகுதியில் நட்டம் ஏற்படு கிறது. மழை பெய்யாவிட்டாலும் கடைமடைப் பகுதியில் நட்டம்தான் ஏற்படுகிறது. அதற்கு என்னதான் முடிவு? உலக வங்கியிலேயிருந்து கடன் வாங்கி காவிரிப் பிரச்சினையைத் தீர்த்து அதனுடைய சீரமைப்புக்கு ஏற்பாடு செய்து வாய்க்கால்கள், வடிகால்கள், ஆறுகள் ஆகியவற்றை எல்லாம் சீரமைக்க வேண்டு மென்று திட்டமிட்டிருந்தாலும் கூட அதை முறையாகச் செய் தார்களா என்றால் இல்லை. கடைமடைப் பகுதியாக இருக்கிற கடலோரப் பகுதியாக இருக்கிற தலைஞாயிறு, நாகப்பட்டினம், வேதாரண்யம் ஆகிய பகுதிகளில் மழை பெய்தாலும் நட்டம்; மழை பெய்யாவிட்டாலும் நட்டம். காவிரியில் தண்ணீர் திறந்து விட்டால் அது அந்தப் பகுதிக்கு வந்து சேர்வதற்கு ஆறுகள் சரியான அமைப்புகளாக இல்லாத காரணத்தால் மிக மோசமான நிலைமை இருக்கிறது. ஆறுகள் மண்மேடிட்டு இருக்கின்றன. பாசனத்திற்கு ஏற்ற வகையில் அமையவில்லை. இப்படிப் பட்ட காரணங்களால் அந்தப் பகுதியில் உற்பத்தி குறைந்து பல பகுதிகளில் விவசாயிகள் சங்கடத்திற்கு ஆளாகி இருக்கிறார் கள். இந்த ஆண்டு கூட தலைஞாயிறு, வேதாரண்யம் பகுதியில் வாபதா, வரி வஜா எல்லாம் செய்திருக்கிறார்கள். அதற்குக் காரணம் என்ன? அங்கே பாய்கிற தண்ணீர் சரியாக வந்து சேரவில்லை. அப்படி வந்து சேருகிறபோது மழை வந்தாலும் வெள்ளத்தால் பாதிக்கப்படுகிறது. இதற்கான பல திட்டங்களை நமது முனுஆதி கமிஷன் வந்தபோது அறிவிக்கப்பட்டது. அதன் பின்னர் அங்கே பார்வையிட வந்த திரு. ஹரிபாஸ்கர் தலைமை யிலான குழுவும் பார்வையிட்ட பிறகு பல திட்டங்களை நாம் அறிவித்திருக்கிறோம். மக்களின் பிரதிநிதியாக இருந்து கேட்ட போது உடனடியாகச் செய்வதாகச் சொன்னார்கள். அரசுக்குப் பல மனுக்களைத் தந்திருக்கிறார்கள். இந்த நிதி நிலை அறிக்கை யிலே பார்க்கிற போது தஞ்சை மாவட்டத்திற்கு வடிகாலோ வாய்க்கால் வசதியோ, குடிமராமத்து வேலைகளோ அறிவிக்கப் பட்டதாகத் தெரியவில்லை. அந்தத் திட்டங்கள் சரிவரச் செயல் படாததால் அந்தப் பகுதி மிகவும் மோசமான நிலைமையில் இருக்கிறது. வேதாரண்யம் மானாவாரிப் பகுதி என்பது அனை வருக்கும் தெரியும். அந்தப் பகுதியில் இறவை நீர்ப்பாசனம் என்பதைப் பொறுத்த வரையில் பல திட்டங்கள் இருக்கின்றன. ஆனால் இந்த ஆண்டு முழுமையாக அந்த இறவைப் பாசனம் எதுவுமே செயல்படவில்லை. அந்தத் திட்டம் செயல்படாத காரணத்தால் விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆனால் தண்ணீர் தீர்வையை மட்டும் வசூல் செய்கிற அளவில் வருவாய்த் துறை முன்னணியாக இருக்கிறது. அதிலே உடனடியாக அமைச் சர் அவர்கள் தலையிட்டு ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

7, 8 ஆண்டுகளுக்கு முன்னால் கோவிலிப்பட்டு, செட்டிகுளம், வாய்மேடு போன்ற பகுதிகளில் இறவைப் பாசனத் திட்டங்கள் நிறைவேற்றுவதாக அறிவிக்கப்பட்டும் இதுவரையில் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. அடப்பாறு பாசன வாய்க்கால் செம்மையாகச் சீர்படுத்தப்படாததால் அந்தப் பகுதியில் கிட்டத்தட்ட 10, 20 கிராமங்கள் 2,000 ஏக்கருக்கு மேலே உள்ள பகுதிகள் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. சோழாவதி ஆற்றினுடைய கரை மிகவும் பலவீனமாக இருப்பதால் அந்த வாய்க்காலிலே தண்ணீர் திறந்துவிட்டவுடன் வந்து சேர்வதற்குள்ளாக மேட்டூர் டாமைச் சாத்திவிடுகிறார்கள். அந்த அளவுக்கு வாய்க்கால்களும், வடிகால்களும் சரியாக இல்லாததால், பாசன ஆறுகள் சரியாக இல்லாததால், 10, 20 கிராமங்கள் மிகவும் பாதிக்கப்பட்டு மோசமான நிலைமையில் இருக்கின்றன. அந்தச் சூழ்நிலையை மாற்றுகின்ற வகையில் பாசனத்தைச் சீர் செய்யவேண்டும்.

தேசிய ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் பாசன வாய்க்காலைச் செம்மைப்படுத்த ஒரு இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருப்பதாகத் தெரிகிறது. அது எந்த அளவுக்குத் தஞ்சை மாவட்டத்திற்குப் போதும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். தஞ்சை மாவட்டம் இந்த மாநிலத்திற்கு உணவை உற்பத்தி செய்கிற மாவட்டமாக இருக்கிறது. ஆகவே, ஒரு இலட்சம் ரூபாய் என்பது எந்த அளவுக்குப் போதும் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். பாமினியாறு, அடப்பாறு ரெகுலேட்டரிலே இருந்து ஆயிமோடு மற்றும் உள்ள பல கிராமங்களுக்குப் பாசன வசதி இல்லை. அதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்திலே மனு கொடுத்தும், தாலுக்கா ஆபீசிலே உண்ணாவிரதம் இருந்தும் பயன் இல்லை என்பதை இந்த அரசு உணரவேண்டும். இந்தியாவினுடைய மொத்தத் தொகையில் ஏழில் ஒரு பங்கு தமிழ் நாட்டினுடைய மக்கள் தொகையாக இருக்கிறது. இந்த ஆண்டு இந்தியாவில் உணவு உற்பத்தி 150 மில்லியன் டன். அதாவது 15 கோடி டன்களாகும். பஞ்சாப், அரியான மாநிலங்களைப் போல உபரி உற்பத்தி இல்லை என்றாலும் சராசரியாகத் தமிழ் நாட்டின் உணவு உற்பத்தி 150 மில்லியன் டன்னில் 14-ல் ஒன்றாக 11 மில்லியன் டன்னாக இருந்திருக்கிறது. ஒரு கோடியே 11 லட்சமாக ஆனால் அரசு கணக்கின்படி 1985-86 ஆம் ஆண்டு தமிழகத்தில் உணவு உற்பத்தி 79 லட்சம் டன் மட்டுமே. அ.தி.மு.க. ஆட்சி வந்ததற்குப் பிறகு தமிழ்நாட்டில் அரிசி உற்பத்தி கீழ்க்கண்டவாறு உள்ளது.

1977-78-லிருந்து 1985-86 வரை 53 லட்சம் டன் தான் உற்பத்தி. ஆனால் 1970-71-ல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேயே உணவு உற்பத்தி 53 லட்சம் டன்னாக இருந்திருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டில் மக்கள் தொகை 1970-71-லே 4.11 கோடி. 1985-86-ல் 5.2 கோடி. மக்கள் தொகை 25 சதவீதம் கூடிய பிறகும், தமிழ்நாட்டில் அரிசி உற்



பத்தியில் எந்தவித முன்னேற்றமும் இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே இந்த அரசுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாநிலத்தினுடைய உணவு உற்பத்தி குறைந்திருக்கிறபடியால் தனி நபருடைய வருமானம், விவசாயத்திலே தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் குறைந்திருக்கிறது. ஆனால் புள்ளி விவரத்திலேதான் இந்த அரசு முன்னணியில் இருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, அது செயலாக்கப்படுவதற்கு ஆக்கப்பூர்வமான திட்டம் ஏதாவது இருக்கிறதா என்றால் இல்லை என்பதை இந்த அரசுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்தோடு இந்த பாசன வாய்க்கால்கள் சம்பந்தப்பட்ட பிரச்னையிலே பல ஊழல்கள் நிறைய வந்திருக்கிறது. அவைகளை எல்லாம் சொல்ல வேண்டும் என்றால், தலைவர் அவர்கள் அடிக்கடி மணியடித்துக் கொண்டேயிருக்கிறார்கள். போதிய நேரம் இல்லை.

**மாண்புமிகு திரு. யா. ஷை. மு. யூசுப் :** மாற்றுத் தலைவர் அவர்களே, அவர்கள் சொல்ல வருகின்ற ஊழல் குற்றச்சாட்டுகளை, அவர் இங்கே பேச அனுமதிக்குமாறு அரசின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. மா. மீனாட்சி சுந்தரம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, குற்றச்சாட்டுகளைச் சொன்னால் ஆதாரம் இருக்கிறதா என்று கேட்பார்கள். ஆகவே குற்றச்சாட்டுகளுக்கு உள்ளே போக நான் விரும்பவில்லை. வெளிப்படையாக தெரிகின்ற குற்றச்சாட்டுகளை சொல்கிறேன். பத்திரிகைகளிலே வந்தவைதாம் அவைகள். அதைத்தான் சொல்லப் போகிறேன். ஆனால் பத்திரிகைகளிலே வந்த செய்திகளை இங்கே பேச முடியாது என்று சொல்வார்கள். ஆனால் அது உண்மையாக இருந்தால்....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. சைதை சா. துரைசாமி)** பத்திரிகையிலே வந்த செய்திகளை எல்லாம் பேசக்கூடாது. குற்றச்சாட்டு ஏதாவது சொல்வதாக இருந்தால் இங்கே அதை கொடுத்துவிட்டு சொல்லுங்கள். பத்திரிகைச் செய்திகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு எதையும் சொல்லக்கூடாது.

**திரு. மா. மீனாட்சி சுந்தரம் :** நான் குற்றச்சாட்டையே இன்னும் சொல்லவில்லை. அதற்குள்ளாக குற்றச்சாட்டை சொல்லுங்கள், சொல்லுங்கள் என்று சொன்னால், அது ஏதோ ''அப்பன் குதிருக்குள் இல்லை'' என்பது போல் ஆகிவிடுகிறது.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு மாற் றுத் தலைவர் அவர்களே, தன்னுடைய கையிலே குற்றச்சாட்டுகள் இருக்கின்றன என்றும், அவைகளை பேச அனுமதிக்க மாட்டீர் கள் என்றும் எண்ணத்தை உருவாக்கக் கூடிய அளவுக்கு அவர்கள் பேசினார்கள். அதற்காகத் தான் சொன்னேன். இந்த அரசைப் பொறுத்த வரையில் எந்த ஊழல் குற்றச்சாட்டையும் சந்திக்க தயாராக இருக்கிறது. கமிஷனைப் போட்டால் ஓடக்கூடிய அரசு அல்ல என்பதைச் சொல்லிக் கொண்டு, அதைச் சந்திப்பதற்கு தயாராக இருக்கிறோம், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெளிவாகக் குற்றச்சாட்டை சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மா. மீனாட்சி சுந்தரம் : குற்றச்சாட்டு சொல்வது என்றால் நீண்ட நேரம் ஆகும். சபைத் தலைவர் அவர்கள் அதற்கு அனுமதிக்க மாட்டார்கள். அத்தோடு தேவையான ஆதாரங்கள் என்னிடத்திலே பூரணமாக இல்லை. அதை நான் ஒத்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. சைதை சா. துரைசாமி : 2 நிமிடங்கள் வேண்டுமானால் அதிகமாக அதற்காகத் தரு கிறேன். அதற்குள்ளே சொல்ல வந்ததை சொல்லிவிடுங்கள். இன்னும் நிறைய உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். 1 1/2 மணிக்கு சபை கலைய வேண்டும். அமைச்சரின் ரிப்ளை வேறு இருக்கிறது. அதனால் சுருக்கமாக அந்தக் கருத்தைச் சொல்லி விடுங்கள். விவாதத்திற்குரிய பிரச்னையாக ஆக்கி சபையின் நேரத்தினை வீணாக்கி விடாதீர்கள்.......

திரு. மா. மீனாட்சி சுந்தரம் : நான் விவாதத்திற்கே வர வில்லையே. விவகாரம் ஆரம்பிக்கவே இல்லையே. குற்றச் சாட்டு இன்னும் சொல்லப்படவே இல்லை. குற்றச்சாட்டுகள் நிறைய இருக்கின்றன. பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. அதையெல்லாம் பார்த்துக் கொள்ளுங்கள் என்றுதான் சொல்ல வந்தேனே தவிர வேறு அல்ல....

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சைதை சா. துரைசாமி :) திரும்ப திரும்ப பத்திரிகைச் செய்திகளை பற்றியே சொல்லிக்கொண்டிருக்கக்கூடாது. பத்திரிகைச் செய்தி களை ஆதாரமாக வைத்து எதுவும் குறிப்பிலே ஏறக்கூடாது.

திரு. கு. பாலன் : மாற்றுத் தலைவர் அவர்களே, பத்திரி கையிலே இருந்து வெளியிடப்படுகின்ற எல்லாச் செய்திகளையுமே அப்படித் தவறாகக் கருதிவிடக் கூடாது. சில பத்திரிகைகளிலே வந்த செய்திகளை அதிகாரிகளே கட் பண்ணி அமைச்சருக்குக் கூட அனுப்புகிறார்கள். நடவடிக்கை எடுப்பதற்காக. ஆகவே அவர் அந்த அடிப்படையிலே சொல்கிறாரே தவிர, குற்றச்சாட்டை உறுதிப்படுத்தவில்லை.



திரு. மா. மீனாட்சி சுந்தரம் : நான் இந்த அரசின் மீதோ அல்லது அமைச்சர் அவர்களின் மீதோ தனிப்பட்ட குற்றச்சாட்டு சொல்ல இப்போது தயாராக இல்லை. அமைச்சர் அவர்களுக்கு உதவியாக இருக்க வேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறேன். அமைச்சர் அவர்களின் மீதும் எங்களுக்கு எந்தவிதமான சங்கட மோ வருத்தமோ இல்லை. அமைச்சர் போய் எல்லாவற்றையும் பார்க்க முடியாது; தீர்க்க முடியாது. சென்னையிலே சமீபத் திலே ஹாஸ்பிடலிலே ஸ்டூடண்ட்ஸ் டாக்டர்கள, நர்சுகள் இறந்த சம்பவம் குறித்து......

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : குறுக்கிடுவதற்காக தயவு செய்து மன்னிக்க வேண்டும். அமைச்சர் எல்லாவற்றை யும் பார்க்க முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர் கள் ஏற்றுக்கொண்டதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், தமிழகத்திலே பல இடங்களிலே, கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள வேலைகள் நடக்கும்போது ஒரு 'ஈம்' புக்கிலே தவறுநடக்கும்போது அதை மிகைப்படுத்தி, ஒரு புகைப்படத்தைப் போட்டு, அதைப் பார்த்து இந்த அமைச்சருக்கு பதவி ஒரு கேடா என்று கேட்டிருக்கிறார்கள். ஆகவே, அதை மாற்றிக் கொண்டதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. மீனாட்சி சுந்தரம் : சென்னையில் ஸ்டான்லி ஹாஸ்பிடலில் நடந்த செய்தி குறித்துக்கூட பத்திரிகையில் வந் திருக்கிறது. ஆஸ்பத்திரியிலே ஒரு நர்ஸ் இறந்திருக்கிறார். மற் றும் பல நர்சுகள் ஸ்டூடன்ட் டாக்டர்கள் எல்லாப் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். காரணம் என்ன என்பதைப் பற்றி யோசிக்க வேண்டும். மருத்துவமனையிலே எல்லாம் கூட....

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர்: (திரு. சைதை. சா. துரை சாமி) : பொதுப்பணித்துறை மானியம் இது. அதைப்பற்றிப் பேசுங்கள். மருத்துவத்துறையை பற்றி வேண்டாம்........

(பிற்பகல் 12—30)

திரு. மா. மீனாட்சி சுந்தரம் : மாற்றுத் தலைவர் அவர் களே, பொதுப்பணித் துறை மானியத்தில் தான் நான் பேசு கிறேன். மருத்துவத் துறை பற்றிப் பேசவில்லை. நர்சுகள் அங்கே பாதிக்கப்பட்டதற்குக் காரணம் பொதுப்பணித் துறை தான் என்பது என்னுடைய குற்றச்சாட்டு. பொதுப் பணித் துறையில் அந்த பில்டிங்கில் இருக்கிற என்ஜினியர்கள் [illegible] [illegible] எடுக்காத காரணத்தால் தான் இந்த [illegible] [illegible] [illegible]. அந்தக் [illegible] கட்டு [illegible] [illegible] காரணமாக [illegible] பரவி இந்த பாதிப்பு [illegible] சொல்கிறார்கள் இன்னும் சிலர் கூட

தண்ணீர் செல்லும் குழாய்களும், கழிவுநீர் செல்லும் பைப்பும் இரண்டும் ஒன்றாக சேர்ந்துவிட்டதாகவும், அந்தத் தண்ணீரை உட்கொண்டதால் அவர்கள் பாதிக்கப்பட்டார்கள் என்றும் சொல்கிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, காலையில் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு பதில் அளிக்கும் போது விரிவான விளக்கங்களை அளித்திருக்கிறார்கள். ஆகவே அதில் மேற்கொண்டும் உறுப்பினர் அவர்கள் காரணங்களை கற்பித்துக் கூறுவது சரியாக இருக்காது. பொதுப்பணித்துறை மானியக் கோரிக்கையில் அவருடைய கருத்துக்களை கூறுவது தான் பொருத்தமாக இருக்கும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்;** (திரு. சைதை சா. துரைசாமி) : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவையின் காலை நிகழ்ச்சிகள் பிற்பகல் 1–30 மணியளவில் முடிவுற்று, பேரவை மீண்டும் மாலை 4–00 மணிக்குக் கூடும். காலை நிகழ்ச்சியில் விவாதம் முடிந்து, மாலை 4–00 மணிக்கு பேரவை கூடும்பொழுது மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் விவாதத்திற்குப் பதிலுரை அளிப்பார்கள்.

**திரு. எப் எம். இராசரத்தினம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களால் இந்த மன்றத்தில் கொண்டு வரப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கைகள் மீது நான் சார்ந்திருக்கிற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களை எடுத்துவைக்க வாய்ப்பு வழங்கியமைக்கு முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

புனிதத் தலைவர், புரட்சித் தலைவர் தமிழக முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பு ஏற்றதற்குப் பின்னாலே தான் அளப்பரிய திட்டங்களைத் தீட்டி ஏழை எளியவர்களுக்காக, விவசாயப் பெருங்குடி மக்களுக்காக இன்றைக்கு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பெரியார், வைகை மேம்பாடுத் திட்டங்கள், பரம்பிக்குளம்-ஆளியாறு விரிவாக்கத் திட்டம், மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் அனந்தனார் சிறப்பு சீரமைப்புத் திட்டம், திருப்பரப்பு அணையின் வலது புறக் கால்வாயை நீட்டித்து நவீனப்படுத்தும் திட்டம், அடுத்து மீனவர்களுக்கு உதவுகிற வகையில் கடல் அரிப்பைத் தடுக்கிற திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி இந்த அரசு இன்றைக்கு சமுதாயத்தில் ஒரு மறுமலர்ச்சி



யை உருவாக்கி வருகிறது. இந்தத் திட்டங்களையெல்லாம் சிறப்பாக நிறைவேற்றி வருகிற தலைவராக மாண்புமிகு புரட்சித் தலைவர் இருந்து வருகிறார் என்பதை எடுத்துச்சொல்லி, அவருக்கு உறுதுணையாக இருந்துவருகிற எங்களுடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களைப் பாராட்டி வாழ்த்துக்களைக் கூறி அமரலாமென்று கருதுகிறேன்.

குமரி மாவட்டத்தில் அனந்தனார் சிறப்பு சீரமைப்புத் திட்டம் இன்றைக்குச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு ஜூலை மாதத்தோடு அதனுடைய பணிகள் முடிவடைய இருக்கின்றன. எனவே, அந்தத் திட்டத்தைத் தொடர்ந்து, உலக வங்கியின் நிதியுதவியோடு ஆய்வு செய்யப்பட்டு வருகிற, குமரி மாவட்ட மக்கள் நீண்ட நாள் கோரிக்கையாகக் கேட்டு வருகிற கோதையாறு மேம்பாடு திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று என்னுடைய வேண்டுகோளை வைக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மேலும், இன்றைக்கு திருப்பரப்பு அணையின் வலதுபுறக் கால்வாயை நீட்டித்து நவீனப்படுத்தும் திட்டத்தைப் பொறுத்த வரையில் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் அது ஏற்றுக்கொள்ளப் பட்டு, ஆய்வு செய்யப்பட்டு அடிக்கல் கூட நாட்டப்பட்டது என்பதை நான் அறிவேன். ஆனால், அந்தப் பணிகள் காங் கிரஸ் ஆட்சிக் காலத்தில் தொடங்கப்படவில்லை. அதற்குப் பின் னாலே பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையிலிருந்த திரா விட முன்னேற்றக் கழக ஆட்சியில் பல்வேறுபட்டவர்கள் தங்கள் கோரிக்கையை இந்தத் திட்டம் குறித்து எடுத்து வைத்தார்கள். நம்மையெல்லாம் அரசியலில் ஆளாக்கிவிட்ட பேரறிஞர் அண்ணா அவர்கள் நிச்சயமாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரு கிறேன் என்ற உறுதியைக் கூட சொல்லியிருக்கிறார்கள். அதற்கு குப் பின்னால் மதிப்பிற்குரிய கலைஞர் அவர்களின் ஆட்சி தமி ழகத்தில் ஏழாண்டு காலம் நடந்தது. இந்தத் திட்டத்தை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. ஆனால், புனிதத் தலைவன், புரட்சித் தலைவர், எம். ஜி. ஆர். அவர்கள், தமிழகத்தினுடைய முதலமைச்சராக ஆளுகின்ற பொறுப்புக்கு வந்ததற்கு பின்னாலேதான் இந்தத் திட்டம் இன்றைக்கு நிறைவேற்றப்பட்டு, அது சிறப்பாக நடைபெற்று வருகிறது என்பதை இந்தநேரத்திலே சொல்லி, குமரிமாவட்ட மக்களுடைய சார்பாக பாராட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். இன்றைக்கு அந்த பகுதி மக்களுக்கு, விவசாயிகளுக்கு எல்லாம் ஒரு விடிவு காலம் ஏற்பட்டு இருக்கிறது.

[திரு. எப். எம். இராசரத்தினம்][1986 ஏப்ரல் 30

மேலும் நீர்ப்பாசனத் திட்டங்களைப் பொறுத்த வரையில்
இலாப நோக்கங்களை வைத்து மட்டும் ஆய்வு செய்யாமல்,
விதிமுறைகளைத் தளர்த்தி, பாசனத் திட்டங்களை நிறைவேற்ற
வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன்.

வயல் வெளியிலும், கடும் வெய்யிலிலும், கடும் குளிரையும்
பாராது நெற்றி வேர்வை நிலத்திலே சிந்த உழைக்கின்ற விவசாயி
களிடத்தில் இலாப நட்டக் கணக்கைப் பார்க்க ஆரம்பித்தால்,
விவசாயிகளிடத்தில் இலாபம் வராது, நட்டம்தான் இருக்கும்.
இதனால் விவசாய உற்பத்தி கூட பாதிக்கும். எனவே, விவ
சாயிகளுக்காக பல்வேறுபட்ட பாசன திட்டங்களை நாம் நிறை
வேற்றுவதற்கு தடையாக உள்ள விகிதாச்சார விதிமுறைகளைத்
தளர்த்த வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே வேண்டி
விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், பல்வேறு உறுப்பினர்கள் பல்வேறுபட்ட உணர்வு
களை இந்த மன்றத்திலே எடுத்து வைத்திருக்கிறார்கள். கங்கை
யையும் காவிரியையும் இணைக்க வேண்டும், இன்றைக்கு இந்
தியத் துணைக் கண்டத்திலே ஓடுகிற நதிகளை எல்லாம் தேசிய
மயமாக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை எல்லாம் பல்வேறு
சந்தர்ப்பங்களிலே எடுத்து வைத்திருக்கிறார்கள். 1971-ஆம்
ஆண்டு காங்கிரஸ் கட்சி அதனுடைய தேர்தல் அறிக்கையில்,
கங்கையையும் காவிரியையும் இணைப்போம் என்று தெளிவாகக்
குறிப்பிட்டு இருந்தது. ஆனால், அந்தத் தேர்தல் அறிக்கை
வெறும் அறிக்கையாக இருந்ததே தவிர, அவ்வாறு நிறைவேற்றப்
படவில்லை. ஆனால் என்னைப் பொறுத்த வரையில் இந்த
மன்றத்தின் மூலமாக நான் சொல்வது, இதற்காக ஒரு பொதுக்
கொள்கையை நாம் நிறைவேற்றியாக வேண்டும். இன்றைக்கு
நதிகளைப் பொறுத்த வரையிலும், பல்வேறுபட்ட திட்டங்களை
நிறைவேற்றுவதற்கு மாநிலத்தினுடைய பல்வேறு பட்ட உரிமை
களுடைய உணர்வுகள் தடையாக இருப்பதால், நதிகளை தேசிய
மயமாக்குகின்ற ஒரு திட்டத்தை ஒரு பொதுக் கொள்கையாக
நிறைவேற்ற வேண்டும் என்பதை இந்த மன்றத்தின் மூலமாக
ஒரு தீர்மானமாக நிறைவேற்றி, மத்திய அரசுக்கு நாம் அனுப்ப
வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்
கிறேன்.

மேலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மாம்பழத்
தாறு அணைக்கட்டுத் திட்டத்தை அந்தப் பகுதி மக்கள் எல்லாம்,
விவசாயிகள் எல்லாம் எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறார்கள்.
நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்
வெய்யிலையும் பாராது, அந்தப் பகுதிகளுக்கு நடந்து வந்து,
மாம்பழத்து ஆறு அணைத்திட்டத்தினுடைய தேவையை அவர்
கள் உள்ளத்திலே கொண்டு, பல்வேறுபட்ட சூழ்நிலைகளிலே



1986 ஏப்ரல் 30] [திரு. எப். எம். இராசரத்தினம்]

அவர்கள் பார்த்து, அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று
உறுதியைக் கூடச் சொன்னார்கள். ஆனால், அந்தத் திட்டம்
இன்றைக்கும் நிறைவேற்றப்படாமல் இருந்து வருகிறது. எனவே
கன்னியாகுமரி மாவட்ட மக்களுடைய நலன் கருதி, விவசாய
நலன் கருதி, மாம்பழத்தாறு அணைத் திட்டத்தை நிறைவேற்ற
வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் வேண்டி விரும்பிக்
கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், 80 ஆண்டுகளுக்கு முன்பு, 1906ஆம் ஆண்டில
கட்டி முடிக்கப்பட்ட பேச்சிப்பாறை அணையின் மலைப் பகுதி
யில் உள்ள மண் சரிவினாலே, சேறு நிறைந்து, அதனுடைய
கொள்ளளவு மிகவும் குறைந்து கொண்டு வந்திருக்கிறது என்று
அந்தப் பேச்சிப்பாறை பகுதி விவசாயப் பெருங்குடி மக்கள் மத்
தியிலே பரவலாகப் பேசப்பட்டு வருகிறது. அது உண்மையாக
வும் தெரிகிறது. எனவே, அந்த நேரத்தில் பேச்சிப்பாறை
அணை கட்டப்பட்ட நேரத்தில் அதனுடைய கொள்ளளவு
எவ்வளவு, இப்போது இருக்கிற கொள்ளளவு எவ்வளவு என்
பதைக் கணக்கிட்டுப் பார்த்து, அந்தப் பேச்சிப்பாறை அணை
யில் தூர் வாரவேண்டும், பழைய கொள்ளளவைக் கொண்டு
வரவேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்
கொள்கிறேன்.

மேலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் வருடாந்திரப் பணி
களுக்காக கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று இந்தச்
சந்தர்ப்பத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன். இன்
றைக்கு நீர்ப்பாசனக் கால்வாய்களின் தூர் எடுக்க, கரையைச்
செப்பனிட, மதகுகளை பழுது பார்க்க, வருடாந்திரப் பணி
களுக்காக மதிப்பீடு தயாரித்தல், ஒப்பந்தங்கள் நியமனம் செய்
தல், போன்ற வேலைகளை பிப்ரவரி மாதம் அணையை
அடைப்பதற்கு முன்னாலே, அந்தப் பணிகளை முடிப்பதற்கு அதி
காரிகளை அறிவுறுத்த வேண்டும். ஆனால், தற்போதைய நிலை
என்னவென்றால் பிப்ரவரி மாதம் அணையை அடைத்ததற்குப்
பிறகு, அதனுடைய திட்ட மதிப்பீடு தயாரிப்பதற்காக ஆய்வு
செய்வதற்காக ஒரு மாதம் ஆகிறது. ஆகவே பிப்ரவரி மாதம்
அணையை அடைக்கிறார்கள். மார்ச் மாதம் முடிய அதனுடைய
ஆய்வுப் பணி நடைபெறுகிறது. அதற்குப் பின்னாலே ஒரு மாத
காலம் டெண்டர் விடுவதற்காக செலவாகிறது. இது மே மாதம்
முடிகிறது. எனவே அதற்குப் பிறகு 15 நாட்களில் அந்த
ஒப்பந்தக்காரர்களுக்கு அந்த ஒப்பந்தங்களைக் கொடுக்கிற அந்
தப் பணியைக் கொடுக்கிற சமயம் வருகிறது. ஜூன் மாதம்
அணையை திறக்க இருக்கிறார்கள். ஆகவே இடையிலே 15
நாட்கள் தான் இருக்கிறது. இந்த 15 நாட்களில் அந்தப் பணி
கள் எல்லாம் நடந்
தடைபெற வேண்டும். என்வே இந்தப்பணிகள் எல்லாம் நடந்
திருக்கின்றனவா என்பது சந்தேகத்திற்குரியதாக இருக்கிறது என்

பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, ஒரு முன்னேற் பாடாக மதிப்பீடு தயாரித்து ஒப்படைக்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலும் அங்கே உள்ள கடவரம்புப் பகுதி என்பது கடை கோடியில் இருக்கிற பகுதியாகும். பெரும்பாலும், விவசாயப் பெருங்குடி மக்கள் உள்ள பகுதியாகும். இன்றைக்கு பேச்சிப்பாறை அணையில் இருந்து தண்ணீர் திறந்து விட்டால், இந்தப் பகுதிக்கு தண்ணீர் வந்து சேர வேண்டும் என்று சொன்னால், ஏறக்குறைய 30 நாட்கள் ஆகிறது. எனவே, 15 நாட்களில் இந்தக் கடவரம்புப் பகுதிக்குத்தண்ணீர் போய்ச் சேரக்கூடிய வகையில், அதிகாரிகள் ஒரு உறுதியான நிலையை அறிவிக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் இன்றைக்கு அந்த கடவரம்புப் பகுதியில் கழிவு ஏற்படுகிறது என்று சொன்னால், 2 தண்ணீர் தட்டுப்பாடு அல்லது 3 தண்ணீர் தட்டுப்பாடால் ஏற்பட்டு வருகிறது.

எனவே அந்த 2 தண்ணீர் தடுப்பு 3 தண்ணீர் தடுப்பு வராமல் தடுப்பதற்கு இரணியல் வள்ளியார் நீரேற்றுத் திட்டம், ராஜக் கமங்கலம் பன்றி வாய்க்கால் நீரேற்றுத் திட்டம் ஆகிய நீரேற்றுத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன். மேலும் குறிப்பாக குமரி மாவட்டம் வளர்ந்து வருகிற ஒரு நகரப் பகுதியாகவும், அது ஒரு துறைமுகப் பகுதியாகவும் இருப்பதால் அதனுடைய முக்கியத் துவத்தை கருதி அங்குள்ள பயணியர் விடுதி மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. எனவே அந்த பயணியர் விடுதியை .. ...... (மணியடிக்கப் பெற்றது).

(பிற்பகல் 12-40)

**திரு. பொ.உத்திராபதி:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலை வர் அவர்களே, பாசனம் மற்றும் கட்டிடங்கள் மீதான மானியக் கோரிக்கைகள் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விழை கிறேன்.

5 பிரிவுகளாகப் பிரித்து 197 கோடியே 96 இலட்சத்து 79 ஆயிரம் ரூபாய் இந்த மானிய கோரிக்கையில் கேட்டு இருக்கிறார் கள். பாசன முறைகளை நவீனப்படுத்துவதற்காக 1973, 1975 ஆம் ஆண்டுகளில் தஞ்சையினுடைய காவேரி டெல்ட்டா பகுதியை மேம்பாடு செய்வதற்காக 40 கோடி ரூபாயை அன் றைக்கு இருந்த அரசு ஒதுக்கீடு செய்ய உலக வங்கியை கடன் கேட்டு, கர்நாடக அரசின் அனுமதியை கேட்டு இருக்கிறார்கள். அன்றைய தினமும் கர்நாடக அரசு அனுமதி கொடுக்க மறுத்து விட்டது என்ற காரணத்தைக் காட்டி உலக வங்கி பணத்தைக் கொடுக்க மறுத்து விட்டார்கள். அதனால் அன்றைக்கு அந்தத் திட்டம் கைவிடப்பட்டது.





அதேபோல் இப்போதும் இந்த குறிப்பில் காவேரி டெல்ட்டாவை நவீனப்படுத்துவதற்காக 366.60 கோடி ரூபாய் ஒதுக்கி அதிலே 1983 இல் தயார் செய்ததில் 123 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டு இருக்கிறது. இதற்கு கர்நாடக அரசு அனுமதி அளித்தால் தான் உலக வங்கி இதற்கு நிதி உதவி அளித்து இந்த வேலைகள் தொடங்கப்படும் என்று இந்தக் குறிப்பில் இருக்கிறது. எப்படி 1973, 1975 இல் இது கடைசியில் இந்தத் திட்டம் நிறைவேறாமல் போனதோ அதேபோல் இன்றைக்கும் கடைசி வார்த்தை இருக்கிறபோது இதற்கு ஒரு உத்திரவாதமான வாக்குறுதியை அல்லது நிறைவேற்றுவோம் என்று சொல்லக் கூடிய அளவுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை எப்படியும் மத்திய அரசை தலையிடச் செய்து, கர்நாடக அரசை வற்புறுத்தி இந்த டெல்ட்டா பகுதியினுடைய மேம்பாட்டுத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் காவேரி நீர்ப் பிரச்சினை சம்பந்தமாக தொடர்ச்சியாக பேசிக் கொண்டு வருகிறோம். 1974 இல் ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டு இருக்க வேண்டும். ஆனால் புதுப்பிக்கத் தவறி விட்டார்கள். பிறகு 11 ஆண்டுக் காலம் ஆகியும் தொடர்ந்து பேச்சு வார்த்தை, பேச்சு வார்த்தை என்று சொல்லப்பட்டு 1985 நவம்பர் 23 ஆம் தேதி பேசப்பட்டது என்றும் மேலும் ஏப்ரல் மாதம் பேசப் போவதாகவும் இந்த குறிப்பில் இருக்கிறது. இன்னும் எத்தனை ஆண்டு காலத்திற்குத் தான் இதை பேசப் போகிறோம்? இப்படி பேசிக்கொண்டே போனால் இந்த காவேரி பிரச்சினை எப்படி, எப்போது தீர்க்கப்படும்? தஞ்சை மாவட்டத்தில் காவேரி டெல்ட்டாவில் அமைந்து இருக்கக் கூடிய அந்த விவசாயிகள் மேலும் மேலும் பாதிக்கப்பட்டு அந்த பகுதி மக்கள் அந்தப் பகுதியிலிருந்து வெளியேறக்கூடிய அபாயம் இருக்கிறது. இதனால் தமிழ்நாடு உணவு நிலைமையில் மேலும் மேலும் நெருக்கடி வரும். ஆகவே அரசும், அமைச்சர் அவர்களும் துரிதமாக இந்த ஆண்டு ஆகிலும் மத்திய அரசு இதில் தலையிட செய்ய வேண்டும்.

நான்கூட இது வழக்கு மன்றத்திற்கு போவதாக செய்தியை பார்த்தேன். படித்து இருக்கிறேன். இது அரசு மூலமாக பேச்சு வார்த்தை நடத்த முடியாமல் வழக்கு மன்றம் சென்று அங்கே வாதாடி அது இன்னும் எத்தனை ஆண்டு காலம் ஆகும் என்று சொல்ல முடியாது. ஆகவே இந்தப் பிரச்சினையில் அமைச்சர் அவர்கள் துரிதமாக கவனம் செலுத்தி தீர்த்து காவேரி பகுதி விவசாய மக்களைப் பாதுகாக்க வேண்டும்.

அதேபோல் 1985 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கடுமையான மழை பெய்தது. மதுராந்தகம் ஏரி உடைபட்டு 1 மாத காலத்திற்கு மேல் போக்குவரத்து தடைப்பட்டது. இன்றைக்கு அந்த

(திரு. பொ. உத்திராபதி) [1986 ஏப்ரல் 30

ஏரியை கட்டிக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அன்றைக்கு கணக்குப்படி 4,750 ஏரிகள், கால்வாய்கள் உடைபட்டு இருப் பதாக இதிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. தமிழகத்தில் மொத்தம் 37 ஆயிரம் ஏரிகள் இருப்பதாக இங்கே குறிப்பிடப் பட்டு இருக்கின்றது. 1983 டிசம்பரில் பெய்த மழை, 1985 நவம்பரில் பெய்த மழையின் காரணமாக தமிழகத்தில் ஒரு கடுமையான நிலைமை ஏற்பட்டு ஆயிரம் கோடி ரூபாய் சேதம் ஏற்பட்டு இருக்கிறது. 1983 இல் ஆயிரம் கோடி ரூபாய் சேதம் ஏற்பட்டு இருக்கிறது. இவ்வளவு ஏற்பட்ட பிறகு இன்றைக்கு இதிலே 150 ஏரிகளுக்கு 27 கோடி ரூபாய் அளவில் இதற்கு ஒதுக்கப்பட்டு இருக்கிறது.

37,000 ஏரிகள் எங்கே? 150 ஏரிகள் என்று சொன்னால், இன்னும் எத்தனை ஆண்டிற்குள் இந்த ஏரிகளை எல்லாம் சுத்தப் படுத்தப் போகிறோம்? 1983 ஆம் ஆண்டு பெய்த மழையால் தஞ்சாவூர் மாவட்டத்தில் காவிரி, கோரையாறு இப்படி பல்வேறு ஆறுகளின் கரை உடைந்ததே தவிர, அந்த ஆண்டு போட்ட மண் அப்படியே தான் இருக்கிறதே தவிர, இன்னும் முழுவதுமாக கரை உடையாமல் பாதுகாக்கின்ற பணிகள் இன்னும் நடை பெறவில்லை. ஆகவே நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், இன்றைக்கு தமிழகத்தில் இருக்கக்கூடிய அத்தனை ஏரிகளும், அவ்வளவு குளங்களும் மேடிட்டுப் போய் விட்டது. அதனால் மழை பெய்கின்றபோது, மழை தண்ணீர் பூராவும் சேர்ந்து, ஆறுகள் உடைப்பு எடுத்து கடலில் வீணாகக் கலக்கின்றதே தவிர, அந்தத் தண்ணீரை தேக்கிவைத்து, அதன் மூலம் விவசாயிகளுக்கு பயன்படுத்த முடியாமல் ஒரு ஆபத்து நிலைமை இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றது.

ஆகவே அதிகமாக நிதியைப் பெற்று, எப்படியோ நிதியைப் பெற்று, தமிழகத்தில் இருக்கக் கூடிய பெரிய ஏரிகளை, ஆறுகளை, குளங்களை எல்லாம் ஆழப்படுத்தி, மழையினால் வரக் கூடிய தண்ணீரை, காவிரியிலிருந்து வரக் கூடிய தண்ணீரை தேக்கி வைக்கக் கூடிய அளவிற்கு ஒரு 'மாஸ்டர் பிளான்' ஒன்றைத் தொடங்க வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோன்று ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், வெள்ளக் கட்டுப்பாடு திட்டத்திற்கு என்று ரூ. 9 கோடி குறிப்பிடப்பட் டிருக்கிறது. வெள்ளக் கட்டுப்பாட்டிற்கு மட்டும் ரூ. 9 கோடி. ஆனால் இன்னும் எவ்வளவோ ரூபாய் செலவு செய்கிறோம். அந்தப் பணம் எப்படி செலவு செய்யப்படுகிறது, அது நியாயமாக செலவு செய்யப்படுகிறதா என்று பார்த்தால், உண்மையில் மனசாட்சிப்படி சொல்ல வேண்டுமானால், பாதிப் பணம் கூட அந்தக் காரியங்களுக்காக கிடைக்கவில்லை.



1986 ஏப்ரல் 30] [திரு. பொ. உத்திராபதி]

குறிப்பாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ரிவட்மெண்ட் தடுப்புச்சுவர் எப்படி கட்டுகிறோம், கரையை அடைக்கிறோம்? ஆனால் சிமெண்ட் சரியான அளவிற்கு போடப்படுகிறதா? அதை எப்படியோ கட்டுகிறார்கள். தண்ணீர் வந்தவுடன் அடைத்து விடுகிறார்கள். ஆகவே சரியாகக் கட்டாமல் இன் றைக்கு அதிகமாக பாதித்துக் கொண்டிருக்கிறது. அதைப் பார்க்கவேண்டும்.

அதைப்போல் பெரியார் அணைக்கு நீர் மட்டம் 152 அடி கொள்ளளவு. ஆனால் 136 அடி தான் இருக்க வேண்டுமென்று இன் றைக்கு கேரள அரசு சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். 136 அடி யோடு நிறுத்திவிட்டால், குறைந்தபட்சம் 16 அடி குறைகிறது. 16 அடிக்குக் குறைந்தால், இங்கு 2 இலட்சம் ஏக்கர் பாதிக்கும். ஆகவே மத்திய அமைச்சக அதிகாரிகள் கூட நமது கட்சிதான் நியாயம் என்று சொல்கிறார்கள். அதை நிறைவேற்ற வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோன்று கேரள மாநிலத்திலிருந்து மேற்கு நோக்கிப் பாய்கின்ற அந்தத் தண்ணீரைத் திருப்பி விட்டால், 200 டி.எம்.சி. தண்ணீர் நமக்கு தமிழகத்திற்குத் திருப்பி விட்டார்களே யானால், 16 இலட்சம் ஏக்கர் விவசாய உற்பத்தி செய்ய முடியும். ஆகவே இந்த விவசாயிகள் நலனைக் கருதி, மேற்கு நோக்கிப் பாயும் தண்ணீரை தமிழகத்திற்குக் கொண்டு வரு வதற்கு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று என்னுடைய முத்துப்பேட்டை ஏரியில் வள வனாற்றில் அந்தக் கடலில் கலக்கின்ற தண்ணீரைக் கொண்டு 15,000 ஏக்கர் அளவில் விவசாயம் செய்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் விவசாயம் முடிந்தவுடன் கடலில் வருகின்ற உப்புத் தண்ணீர் 15,000 ஏக்கர் நிலத்தில் புகுந்து, விவசாயம் குறுகி விடுகிறது. விவசாயம் பாதிக்கிறது. இதைத் தொடர்ந்து சொல்லி வருகிறேன். ஆகவே எதிர் காலத்திலாவது அந்தக் கரையைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோன்று, தஞ்சை ஜில்லாவில் வெண்ணாறு டிவிஷன் இருக்கிறது. முல்லையாறு, பாமணியாறு, கோரையாறு, அரிச் சந்திரநதியாறு, வளவனாறு, அய்யனாறு, அடப்பாறு, பொன்னு கொண்டாறு, இப்படி வெண்ணாற்றங்கரை டிவிஷனில் எத் தனையோ ஆறுகள் எல்லாம் குறுகிவிட்டது. முக்கியமாக ஆறு கள் எல்லாம் மேடிட்டு விட்டது. மேலும் தண்ணீர் விடாமல் அடைத்து இருப்பதை நிச்சயமாக பார்த்தாக வேண்டும். ஆகவே அதிகமாகப் பணம் ஒதுக்கப்பட்டால் தான், இன்னும் இந்த ஆறுகள் எல்லாம் முழுவதுமாக வெட்டி, கரை உயர்த்தப்பட்டு, வரக் கூடிய தண்ணீர் இலகுவாக கிடைக்கும். அதற்கு அமைச் சரவர்கள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. பொ. உத்திராபதி] [1986 ஏப்ரல் 30

அங்கேயுள்ள சீமைக் காட்டாமணிச் செடிகளை எப்படி
யாவது ஒழிக்க வேண்டும். அது நாளுக்கு நாள் வளர்ந்து ஆறு
களை தூர்த்துக் கொண்டிருக்கிறது. இரண்டாவது, இன்றைக்கு
செங்கல் காளவாய்களில், பெரிய முதலாளிகள் எல்லாம் ஆற்றுக்
குள்தான் மண் தோண்டி எடுக்கிறார்கள். ஆற்றுக்குள்தான்
காளவாய்களைப் போடுகிறார்கள். அந்தஉடைப்புகளை
எல்லாம் நீங்கள் ஒரு சர்வே செய்து பார்த்தால், எங்கெங்கே
காளவாய் போட்டு மண் எடுத்திருக்கிறார்களோ, அங்கேதான்
பெரும்பகுதி உடைப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. அதைத் தடுக்க
நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12—50)

ஆக்கிரமிப்புகள் நிறைய இருக்கின்றன. அதையெல்லாம் கவ
னத்தில் கொண்டு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க
வேண்டும். வள்ளியூர், கொடுமுடித் திட்டம் என்ன நிலையில்
இருக்கிறது என்று தெரியவில்லை. அதையும் அமைச்சர் அவர்
கள் கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். வேலைகள்
செய்கிறபோது சம்பந்தப்பட்ட விவசாயிகள் கமிட்டி அமைத்து
அவர்கள் மேற்பார்வையில் அந்த வேலைகளைச் செய்ய
வேண்டும். 1977—79 ஆம் ஆண்டு சேதமடைந்த வைகை
யாற்றுக் கால்வாய்கள் பழுதடைந்திருக்கின்றன. அதையும்
சீர் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்
டும்.

நிர்வாகத்தில் பொதுப் பணித்துறையிலே பணியாளர்கள்
என்.எம்.ஆர். ஆக தினக் கூலிகளாக இருந்துக் கொண்டிருக்
கிறார்கள். அவர்கள் 5, 6 ஆண்டுக் காலமாகப் பணியாற்றிக்
கொண்டிருக்கிறார்கள். அவர்களை நிரந்தரமாக்க வேண்டு
மென்று கேட்டுக் கொண்டு இந்தப் பொதுப் பணித்துறையை
வலுப்படுத்துவதோடு காவிரி நீர்ப் பிரச்சினையை தீர்த்து தஞ்
சையை பாலைவனமாகாமல் தடுத்து சோலைவனமாக்க வேண்
டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு முடித்துக்
கொள்கிறேன்.

**திரு. யு. பி. மாதையன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, 1986—87 ஆம் ஆண்டிற்கான பொதுப்பணி மற்றும்
நீர்ப் பாசனத் துறையின் நிதிநிலை மானியக் கோரிக்கை ஏற்
பளிப்பில் பேச வாய்ப்பளித்தமைக்கு இம்மன்றத்திற்கு எனது
பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோரிக்கை எண் 36, பாசனத்தின் கீழ் ரூ. 64 கோடியே
87 இலட்சம் செலவினமாகவும், கோரிக்கை எண் 52இன் கீழ்
63 கோடியே 89 இலட்சம் மூலதனச் செலவினமாகவும் கோரிக்கை
எண் 38, பொதுப் பணிகள், பணியின் அமைப்பும் கருவிகளும்



[1986 ஏப்ரல் 30] [திரு. யு. பி. மாதையன்]

தளவாடங்களும் என்பதன்கீழ் ரூ. 22 கோடியே 79 இலட்சம்
ரூபாயும், கோரிக்கை எண் 53 பொதுப் பணிக் கட்டடங்கள்
மீதான மூலதனச் செலவு 42 கோடியே 38 இலட்சம் ரூபாய்க்கு
ஏற்பளிக்கும் புரட்சித் தலைவரின் புனிதத் திட்டங்களுக்கு நன்றி
கூறுகின்ற நேரத்தில் என்னுடைய தொகுதிக்காக சிறப்பான நிதி
ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

புரட்சித் தலைவர் அரசுக்கு கடந்த 3 சட்டமன்றத் தேர்தல்
களிலும் பெரும்பான்மையான வாக்குகளை அளித்தது எனது
அந்தியூர் தொகுதி மக்கள் என்பதனை இங்கே பெருமையுடன்
நான் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனது அந்தியூர் தொகுதியில் எண்ணமங்கலம் ஏரி, கெட்டி
சமுத்திரம் ஏரி, அந்தியூர் பெரிய ஏரி, சந்திபாளையம் ஏரி
ஆகிய ஏரிகள் வறட்டுப் பள்ளம் நீர்த் தேக்கத்தையே நம்பியுள்
ளன. ஆனால் வறட்டுப் பள்ளம் நீர்த் தேக்கத்தில் நீர் நிறைந்
திருக்கின்ற காலத்திலேயே இந்த ஏரிகளுக்கு தண்ணீர் விடப்
படுவதில்லை. எனவே வறட்டுப் பள்ளம் நீர்த் தேக்கம் பெரும்
பாலான மாதங்கள் வறட்சிப் பள்ளமாக நீரின்றி வாடுகின்றது.

இந்த நீர்த்தேக்கம் உண்மையான நீர்த் தேக்கமாக இருக்க
வேண்டுமென்றால் இந்த நாடு விடுதலை பெற்ற நாள் முதல்
அந்தியூர் தொகுதி மக்களின் கனவான மணியாச்சிப் பள்ளத்தை
வறட்டுப் பள்ளம் நீர்த் தேக்கத்தோடு இணைக்க வேண்டும்.
பெருந்தலைவர் காமராசர் அவர்களாலே பார்வையிடப்பட்டு
மணியாச்சி நீர்த் தேக்கம் ஏற்கப்பட்டுள்ளது. புரட்சித் தலைவர்
ஆட்சிக் காலத்திலும் ஆரம்பக் கட்டத்திலேயே அது இன்னமும்
இருந்து வருகின்றது.

பெரியார் மாவட்டம் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள
தாளவாடி, பருகூர் மலைத் தொடர்கள், சுமார் 2 இலட்சம்
ஹெக்டேர் பரப்பைக் கொண்டும், வடகிழக்கு, தென்மேற்குப்
பருவ[illegible] காலங்களில் ஆண்டுக்கு சுமார் 65 செ.மீ. மழை பொழி
கிறது. ஆனால் இவற்றில் வடக்குச் சரிவுப் பகுதியான இடத்தில்
சுமார் 1,000 சதுர கி.மீ. பரப்பில் பெய்யும் மழையினையும்
சுமார் 20 ஆயிரம் மில்லியன் கன அடி மழை நீரை தமிழகம்
இன்னமும் முழுமையாகப் பயன்படுத்தவில்லை.

இப்பகுதியில் பொழியும் மழை நீரைப் பயன்படுத்தி மணி
யாச்சிப் பள்ள நீர்த் தேக்கத்தை அமைத்தால் சுமார் 20 ஆயிரம்
மில்லியன் கன அடி தண்ணீரைத் தேக்கி 12 ஆயிரம் ஏக்கர் பரப்
பைப் பாசனத்திற்குப் பயன்படுத்துவதோடு 500 அடி உயரத்
திலிருந்து கீழே கொண்டு வரப்படும் தண்ணீரிலிருந்து மின்
உற்பத்தியையும் மேற்கொள்ள முடியும்.

பெரியார் மாவட்டத்திலேயே மிகவும் பின்தங்கிய பகுதியான அந்தியூர் தொகுதியைப் பொன்கொழிக்கும் பூமியாகப் புரட்டித் தலைவரின் பொன்னான ஆட்சிக் காலத்திலே ஏற்படுத்த வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மணியாச்சிப் பள்ளம் நீர்த் தேக்கம் அமைக்கப்படுமேயானால் வறுமைக் கோட்டின்கீழ் வாடும் சுமார் 50 ஆயிரம் மலைவாழ் மக்களும், அரிசன மக்களும் பெரும் பயன் அடைவதோடு விளை பொருட்களின் உற்பத்தியும் பல மடங்கு பெருகும் என்பதில் ஐயமில்லை. மேலும் பருவமழை பொழியும்போது ஏற்படும் குடிதண்ணீர் பற்றாக்குறை நீங்கும். அதோடு வறட்சிக் காலத்தில் மக்களும், கால்நடைகளும் குடிபெயர வேண்டிய இக்கட்டான சூழ்நிலைகளையும் தவிர்க்க முடியும்.

அடுத்து, பவானி வட்டம், அம்மாப்பேட்டை ஒன்றியத்திலே, பாலமலை அடிவாரத்திலே தாளகுதிச்சான்பள்ளத்திலே ஒரு ஏரி அமைப்பதற்காக ஆய்வு செய்யப்பட்டது. அந்த ஏரியானது அமைக்கப்பட்டால் சுமார் நூறு ஏக்கர் நிலம் பயன்பெறும் என அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு, அதற்கு அறிக்கைகள் சமர்ப்பித்தும், ஆண்டு பல ஆகியும் இன்னும் அந்த ஏரியின் பணி ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது என்பதை இங்கே மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, இந்த ஏரியை உடனடியாக ஆரம்பிப்பதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து அந்தப் பகுதி மக்களுக்கு அந்த ஏரி உறுதுணையாக இருப்பதற்கு ஆவன செய்வார்கள் என்ற நம்பிக்கையை இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேட்டூர் அணையிலேயிருந்து இடது கரை, வலது கரை என்று இரண்டு வாய்க்கால்கள் இருக்கின்றன. அந்த மேட்டூர் அணையில் சுமார் என்பது அடி தண்ணீர் இருந்தால் மட்டுமே ஒருபோக விளைச்சலுக்கு நீர் விடப்படுகிறது. அந்த நிலைமையை மாற்றி வருடம் முழுவதும் வாய்க்காலில் தண்ணீர் விடப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்திற்கு விடப்படும் காவிரித் தண்ணீரில் நாற்றில் ஒரு பங்கு தண்ணீர்தான் தற்போது வாய்க்காலுக்கு விடப்படுகிறது. ஆனால் தொடர்ந்து தண்ணீர் விட்டால் தஞ்சை மாவட்டத்தில் எங்களுக்கு ஏற்படும் விளைச்சலைவிட அதிக அளவு மகசூலை எங்கள் மாவட்டத்தில் நிச்சயமாகப் பெற்றுத் தர முடியும். எனவே தான் மாண்புமிகு அமைச்சரவர்கள் இடது கரை, வலது கரை வாய்க்கால்களுக்கு ஆண்டு முழுவதும் தண்ணீர் விடுவதற்கு ஆவன செய்ய வேண்டுமாய் இங்கே கேட்டுக் கொள்கிறேன். மாவட்டப் பாகுபாடு இன்றி, தமிழ்நாட்டின் பொரு





ளாதார நிலையைக் கருதி இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அந்தியூர் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, அத்தாணி உயர்நிலைப் பள்ளி, நெறிஞ்சிப்பாடி உயர்நிலைப் பள்ளி போன்ற பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் இல்லாமல் மிகவும் அவதிப்படுகிறார்கள். பழுதடைந்து இருக்கின்ற கட்டிடங்களையும் இந்த நிதியாண்டிலேயே சீர் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்தியூர் அரசு மருத்துவமனையில் கழிப்பிடங்கள் சுற்றுச் சுவர்கள் இல்லாமல் மிகவும் மோசமான நிலையில் இருப்பதால் அங்கே கட்டிட வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

குருவட்டியூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் கட்டப்பட வேண்டும்.

பழுதடைந்து கிடக்கின்ற அந்தியூர் பயணியர் விடுதியை மாண்புமிகு அமைச்சரவர்கள் உடனடியாகச் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அம்மாப்பேட்டையிலே, அம்மாப்பேட்டை பஞ்சாயத்து யூனியனுக்குச் சொந்தமான நிலம் இரண்டு ஏக்கர் இருக்கிறது. அந்த நிலத்தை அம்மாப்பேட்டை பேரூராட்சி மன்றத்திற்குக் கொடுத்தால் வருமானம் இல்லாத அந்த பேரூராட்சி மன்றம் வாரச் சந்தை அல்லது பேருந்து நிலையம் அமைத்து வருமானம் பெறத்தக்க வகையில் செய்து, அந்தப் பகுதி மக்களுக்கு அந்தப் பஞ்சாயத்தில் ஏதாவது நன்மை செய்வதற்கு வாய்ப்பு உருவாகும் என்று கூறிக்கொண்டு இந்த மன்றத்திலே பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு சின்ன விளக்கம் அளிப்பதற்கு அனுமதி அளிக்க வேண்டுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சி சுந்தரம் அவர்கள் இங்கே பேசுகின்ற போது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது இருந்த அரிசி உற்பத்தி இப்போது இல்லை என்ற ஒரு கருத்தைக் குறிப்பிட்டார்கள். ஆகவே, அதற்கு விளக்கம் சொல்வதற்காக முறையான புள்ளிவிவரத்தைக் கேட்டுப் பெற வேண்டுமென்ற முயற்சியில் கேட்டு, இப்பொழுது தெரிவிக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கடைசி ஆண்டான 1976-77 இல் அரிசி உற்பத்தி 42.15 இலட்சம் மெட்ரிக் டன்; அரிசி உற்பத்தி ஹெக்டேருக்கு 1,246 கிலோ. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றச் கழக ஆட்சியில் அரிசிஉற்பத்தி

1979–80 இல் 57.99 இலட்சம் மெட்ரிக் டன். 1985–86-ல் அரிசி உற்பத்தி, வறட்சி ஒரு பகுதியிலேயும், வெள்ளம் ஒரு பகுதியிலேயும் பாதித்த சூழ்நிலையிலேயும் 55.44 இலட்சம் மெட்ரிக் டன். 1985–86இல் சராசரியாக ஹெக்டேர் அரிசி உற்பத்தி 2,500 கிலோ. இதுவரைக்கும் தமிழ்நாடு இந்த அளவை எட்டியதில்லை. இந்த விளக்கத்தை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

***திரு. த. புஷ்பராசு :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பாசனம், கட்டிடங்கள் மீதான மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்தை இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். விவசாயம் ஒன்றையே ஜீவநாடியாகக் கொண்டு வாழ்க்கை நடத்தி வரும் கிராமப்புற மக்களுக்குப் பாசன வசதி செய்து கொடுப்பதன் மூலமாகத்தான் தமிழ்நாட்டிலே பசுமைப் புரட்சியை ஏற்படுத்த முடியும் என்ற கருத்து நம் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயமாகும். இந்த ஆண்டு பெரிய மற்றும் நடுத்தர பாசனத் திட்டங்களுக்காக ரூபாய் 58.46 கோடியும், சிறு பாசனத் திட்டங்களுக்காக ரூபாய் 9.20 கோடியும் முதலீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதாகக் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறீர்கள். சிறுபாசனத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட 9.20 கோடி ரூபாய் மிகக் குறைவான தொகை என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1-00)

தமிழகத்திலே உள்ள அனைத்து மாவட்டத்திலும், அந்த மாவட்டத்திலுள்ள இயற்கைச் சூழ்நிலைக்கேற்ப, சிறு பாசனத் திட்டங்களைச் செயல்படுத்தினால் பாசனத்தை விரிவாக்க முடியும். அந்த அடிப்படையில் பார்த்தால், இந்தத் தொகை மிகக் குறைவு என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அதிகப்படுத்த சிறு பாசனத் திட்டங்களை விரைவாகச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை விவசாயிகள் கடந்த பல ஆண்டுகளாக நம்பி விவசாயம் செய்கின்ற நிலையிலிருந்து மாறி, கவலையோடு விவசாயம் செய்கின்ற நிலைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை நாம் எல்லோரும் நன்கு அறிவோம். காரணம், நீர்ப் பற்றாக்குறை என்பது எல்லோரும் அறிந்த விஷயம்.

காவேரி டெல்டாப் பகுதியை நவீனப்படுத்தும் ஒருங்கிணைந்த திட்டம் ஒன்று ரூ. 366.60 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டுள்ளது என்பது தஞ்சை விவசாயிகளுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய செய்தி. காவேரியாற்றில் வருகின்ற நீர் வீணாவதைத் தடுத்து, விவசாயிகள் முழுமையாகப் பயன்படுத்துகின்ற பொழுது அந்த நீர்ப்பற்றாக்குறை உயர்வது குறையும் என்பது என்னுடைய கருத்தாகும்;





உலக வங்கியினுடைய உதவியைப் பெற்று, கர்நாடக அரசினுடைய ஒப்புதல் பெற்ற பிறகுதான் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முடியும் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு விரைவாக கர்நாடக அரசோடு தொடர்பு கொள்ள முடியுமோ அவ்வளவு விரைவாகத் தொடர்புகொண்டு அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, ஐரோப்பிய பொருளாதார சமுதாய உதவியோடு, ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டம். இந்தத் திட்டம் நல்ல திட்டம். பல ஆண்டுகளாக போதிய பராமரிப்பு இல்லாமல் மதகுகளும், மிகைபோக்கி கதவுகளும் மிகவும் பழுதடைந்த நிலையில் இருப்பதால் பாசன நீர் முழுவதும் பாசனத்திற்குப் பயன்படவில்லையென்பதை நாம் உணர்கிறோம். தமிழ்நாட்டிலுள்ள 39,000 ஏரிகளிலே, 150 ஏரிகள் மட்டும் எடுக்க செயற் குறிப்பு இருப்பதாக அறிவித்து இருக்கிறார்கள். இது மிகமிகக் குறைவு. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினால், கிராமங்களிலே பாசன வசதியை அதிகப்படுத்த வாய்ப்பு அதிகம் உள்ளது. குறிப்பாக, புதுக்கோட்டை போன்ற வறட்சி மாவட்டங்களிலே இந்தத் திட்டத்தை விரைவாகச் செயல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய திருமயம் தொகுதி வறட்சியாலே அதிகம் பாதிக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் வருகின்ற பொழுது நேரிலே பார்த்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தாஞ்சூர் தாஞ்சி கண்மாய், ரூ. 16.62 இலட்சம், கீழ்த்தாணியம் பெரிய கண்மாய் 26.00 இலட்சம், மிரட்டுநிலை சேத்துக் கண்மாய் ரூ. 20.70 இலட்சத்திலே நவீனப்படுத்திட மதிப்பீடு தயார் நிலையில் உள்ளது. அரசு ஒப்புதல் கொடுத்து உடனடியாக அந்த வேலையைத் துவங்க வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை போன்ற வறட்சி மாவட்டங்களிலே கசிவு நீர்க் குட்டை அமைக்கும் பணியைத் தொடர்ந்து செய்யவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை உங்கள் மூலம் கேட்டுக் கொள்கிறேன்.

ஏரிகளை மராமத்து செய்யும்போது பல தவறுகள் நடக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக ஏரிகளை ஆழப்படுத்த வேண்டுமென்று சொல்லி, முதல் ஆண்டு தோண்டிய அதே குழிகளைக் காண்பித்து, பணம் பெறுகின்ற நிகழ்ச்சியும், அதே நேரத்திலே கரை கட்டுகிறோம் என்று சொல்லி, அங்கே கட்டாமல், பணம் தருகின்ற நிகழ்ச்சியும் இன்று நடந்து கொண்டிருக்கிறது.

[1986 ஏப்ரல் 30

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** மாற்றுத் தலைவர் அவர்களே, பொதுவாக இப்படி ஏரிகளை ஆழப்படுத்தாமலேயே ஆழப்படுத்தியதாகச் சொல்லி பணம் பெறுகிறார்கள் ; எந்த வேலையுமே நடைபெறவில்லை, அத்தனை வேலைகளும் நடந்த தாகப் பொய்யாக ஒரு பதிவேட்டை ஏற்படுத்தி, அதன் வாயி லாகப் பணம் பெறுகிறார்கள் என்று சொல்வது அவ்வளவு அழகாக இல்லை. உதாரணத்திற்கு அவர்கள் சொல்வார்களானால், நிலைமைகளை விளக்கி, விவாதங்களை வைக்க முடியும். கார ணம் இல்லாமலே, அவர்கள் ஏதாவது ஒரு விரைத்தை, ஒரு புகைப்படமாகப் போட்டுக்கொண்டு, பொய்யான குற்றச்சாட்டு களைச் சொல்கிறார்கள். ஆகவே, அது போன்ற நிலைமையை இந்த மாமன்றத்தில் உருவாக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. த. புஷ்பராசு :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர் களே, குற்றச்சாட்டைச் சொல்ல வேண்டுமென்ற எண்ணத்தோடு சொல்லவில்லை. குறிப்பாக, கிராமங்களிலே இந்த மாதிரி நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இது மாதிரியான நிகழ்ச்சியை நான் காட்டுகிறேன் என்று சொல்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, பொதுப் பணித் துறையில் கூட கட்டப் படுகின்ற கட்டிடங்கள், கட்டுகின்ற நிலையிலேயே பல குறைகள் இருக்கின்றன. குறிப்பாக, கட்டிக் கொண்டிருக்கிற நேரத்திலே கூட இந்தக் கட்டிடங்கள் இடியக் கூடிய நிலையில் இருக்கின்றன. இதையெல்லாம், அரசு மீண்டும் கவனித்து....

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஏதாவது இப்படிக் கட்டுகின்ற பொதுப் பணித்துறை கட்டுகின்ற கட்டிடங்கள் இடிந்திருக்கின்றன, ஏரிகள் உடைந்திருக்கின்றன என்று சொன்னால், நலமாக இருக்கும். இல்லாவிட்டால் பத்திரிகையில் வரும், உண்மைக்குப் புறம்பான செய்திகளாகும். அது துறைக்கும் நல்லதல்ல, துறையிலே பணி யாற்றுகின்ற பணியாளர்களை என்க்ரேஜ் செய்வதாக அமையாது, டிஸ்கரேஜ் செய்வதாக அமையும்.

**திரு. த. புஷ்பராசு :** மாற்றுத் தலைவர் அவர்களே, கட்டி டம் கட்டிக்கொண்டிருக்கின்றபோது இரண்டு ஆண்டுகளுக்கு முன்புகூட புதுக்கோட்டை அரசு மருத்துவ மனையில் கட்டிடம் இடிந்து அங்கே வேலை செய்த ஒரு பெண் இறந்துவிட்டார் என்பதை குற்றச்சாட்டாக சொல்லவில்லை. இதுமாதிரி தவறு கள் அதிகம் நடக்கின்றன. அதையெல்லாம் அரசு கவனிக்க வேண் டும். அந்த மாதிரி செய்கின்ற ஒப்பந்தக்காரர்களுக்கு திரும்பவும் வேலை கொடுக்காமல் இருக்க வேண்டும்.



1986 ஏப்ரல் 30] [திரு. த. புஷ்பராசு]

அம்மாதிரியான நிலையை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும் என்ற
காரணத்தினால்தான் கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்தைப்
பொறுத்த வரையில் நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதற்கு
வெளியே கொண்டுவருவது மிகமிக அவசியம். இதன்மூலம் பாசன
தேவையை ஓரளவு சீர்படுத்த முடியும். புதுக்கோட்டை மாவட்
டத்தில் இந்த திட்டங்களை எல்லா ஒன்றியங்களிலும் விரிவாக்க
வேண்டும். புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அனைத்து
ஏரிகளிலும் ஆழ் குழாய் கிணறு அமைத்து அதன்மூலம் பாசன
வசதி செய்து கொடுப்பதன் மூலமாக கிராமப்புற மக்களுக்கு
ஒரு நன்மையைச் செய்ய முடியும் என்பதை கூறிக்கொண்டு
அதோடு விரும்புகின்ற விவசாயிகளுக்கு அவர்கள் விரும்பினால்
வட்டி இல்லாமல் கடன் கொடுத்து ஆழ் குழாய் கிணறுகளை
அமைக்கின்ற ஒரு திட்டத்தை அரசாங்கம் அமல்படுத்தவேண்டும்,
அதன்மூலம் அந்த விவசாயிகள் வாழ்விலே நல்ல திருப்பத்தை
ஏற்படுத்த முடியும். குழாய்க்கிணறு திட்டத்தில் 50 சதவீதம்
ஆதிதிராவிட விவசாயிகளுக்கு, பிற்படுத்தப்பட்ட விவசாயி
களுக்கு பாசன வசதி அளிப்பதற்கு ஆழ் குழாய் கிணறு அமைக்கப்
பட்டிருக்கிறது.

இது நல்ல திட்டம். இது புதுக்கோட்டை மாவட்டத்
தில் பயனைத் தரும். அதோடு அந்த திட்டத்தை ஒரு சில
ஒன்றியங்களில் மட்டும்தான் செயல்படுத்துகிறார்கள்.
அப்படி இல்லாமல் எல்லா ஒன்றியங்களிலும் அந்த திட்டத்தை
செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த
ஆழ் குழாய் கிணறு பராமரிக்கின்ற பொறுப்பு நீர்ப்பாசன குழு
விற்கு விடப்பட்டிருக்கிறது. அப்படி ஒரு குழு போடும்போது
அதிலே பல தவறுகள் நடக்கின்றன. ஆழ்குழாய்க் கிணறு மூலம்
பாசன வசதி செய்து கொடுக்க பணவசூல் செய்கின்ற போதும்
தவறுகள் நடக்கின்றன. அந்த குழுவிலே ஆதிதிராவிடர்கள் புறக்
கணிக்கப்படுகிறார்கள். இந்த நிலையை மாற்றி அந்தந்த கிராமங்
களில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக அந்த குழாய்க்
கிணறுகளை நிறுவுகின்ற பொறுப்பினை அரசாங்கம் ஏற்படுத்த
வேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனது திருமயம் தொகுதி
வறட்சி மிகுந்த தொகுதி. வெள்ளாற்றின் குறுக்கே சேத்து
கண்மாய் அணைக்கட்டு திட்டம் (கூடலூர் அருகே) நீண்டகால
மாக மதிப்பீடு தயார் செய்து நடவடிக்கை இல்லாமல் இருக்கிறது.
ஆகவே, அந்த திட்டத்தை உடனடியாக இந்த ஆண்டு செயல்
படுத்த வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்
கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் தங்களுடைய பதிலிலே
இந்த திட்டத்தைச் சேர்த்து அறிவிக்க வேண்டுமென்று எனது
தொகுதி சார்பாக கேட்டுக்கொண்டு அதோடு எனது திருமயத்
தில் பாம்பாறு ஓடிக்கொண்டிருக்கிறது. குறுக்கே பல அணைக்
கட்டுத் திட்டங்கள் மதிப்பீடு தயார் நிலையில் உள்ளது. இந்த
அணைக்கட்டு திட்டங்களை அரசு எடுத்து செய்து கொடுக்க
வேண்டும். பிரான்மலை, அழகு, சொக்கன் கணவாய் அருகில்
அய்யாகாடு சோலை அருகே ஒரு அணைக்கட்டுத் திட்டம்

அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதையும் விரைவிலேயே செயல்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்பிற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. வீ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள 1986–87 ஆம் ஆண்டிற்கான பாசனம் மற்றும் கட்டி டங்கள் மீதான மானியக் கோரிக்கையை வரவேற்று ஒரு சில கருத்துக்களை மட்டும் கூற விழைகிறேன். பெரிய மற்றும் நடுத்தர பாசன திட்டங்களுக்கு 1986–87 ஆம் ஆண்டில் ரூ.58.46 கோடியும் 2,000 ஹெக்டேருக்குக் குறைவான பாசன பரப்பு கொண்ட சிறுபாசனத் திட்டங்களுக்கு 9.20 கோடியும் முதலீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1986–87 ஆம் ஆண்டில் கூடுதல் பாசன வசதிக்கான இலக்கு 17,060 ஹெக்டேராக நிர்ண யிக்கப்பட்டுள்ளது. பெரிய பாசன திட்டங்களுக்கு உலக வங்கி உதவியுடன் 1977ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட பெரியார் வைகை நவீனப்படுத்தும் திட்டத்தின் மூலமாக முதல்கட்டப்பணிகள் 1984ஆம் ஆண்டு முடிக்கப்பட்டு ரூ. 56.86 கோடி செலவில் இத்திட்டத்தின் இரண்டாவது கட்டப் பணிகள் எடுத்துக் கொள் ளப்பட்டுள்ளன.

(பிற்பகல் 1-10)

இந்தத் திட்டத்திற்கு உலக வங்கியின் உதவித்தொகை 35 மில்லியன் (அமெரிக்கா) டாலர்கள் ஆகும். 1988-ல் முடிவுற வுள்ள இத்திட்டத்திற்காக இந்த ஆண்டு வரவு-செலவு மதிப் பீட்டில் ரூ. 16.02 கோடி ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப் பட்டுள்ளது.

இதுபோலவே ரூ. 18 கோடி செலவில் கோவை மற்றும் பெரியார் மாவட்டங்களில் 56,660 ஹெக்டேர் நிலம் பயன் பெறும் வகையில் திட்டமிடப்பட்டுள்ள பரம்பிக்குளம், ஆளி யாறு பாசனப் பகுதி விரிவாக்கத் திட்டப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இத்திட்டத்தின் கீழ் மேலும் 14,170 ஹெக்டேர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்க விரிவான மதிப் பீடு ரூ. 743.50 லட்சத்தில் அரசின் பரிசீலனையில் உள்ளது.

நடுத்தரப் பாசனத் திட்டங்களைப் பொறுத்த வரையில் 10 திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டங்களை அம்ல்படுத்தி விவசாயப் பெருங்குடி மக்களை வாழ வைக்கின்ற புரட்சித் தலைவரின் அரசை நான் பாராட்டுகிறேன்.

1985 ஆம் ஆண்டு அக்டோபர் 30 ஆம் நாள் புதுடெல்லியில் நடைபெற்ற நீர்வளக்குழு முதல் கூட்டத்தில் மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளின் உபரி நீரைத் தமிழ்நாட்டிற்குத் திருப்பிவிட





வேண்டும் என்று வலியுறுத்திய இதய தெய்வம் புரட்சித் தலை வருக்கு எனது நன்றியை உரித்தாக்குகின்றேன். மேலும் இது குறித்த ஆக்கபூர்வமான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டு மென்று நான் வேண்டிக் கொள்கின்றேன்.

கிருஷ்ணா குடிநீர்த் திட்டம் விரைவாகச் செயல்பட அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதி அளிப்புத் திட் டத்தின்கீழ் 1986–87ஆம் ஆண்டில் 93 நீர்ப்பாசனத் திட்டங்கள் ரூ. 1,000 லட்சத்திற்கு மேற்கொள்ளப்பட்டிருக்கும் திட்டம் செயல்பட மாநில மற்றும் மைய அரசுகள் ஒப்புதல் அளிக்க மிகப் பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன்.

காவேரி டெல்டாவை நவீனப்படுத்தும் ஒருங்கிணைந்த திட் டம் ஒன்று ரூ. 366.60 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டுள் ளது. உலக வங்கியின் உதவியுடன் செயல்பட இருக்கின்ற இந்தத் திட்டத்தை, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு பகுதித் திட்டத்தை முடிக்க ரூ. 123 கோடிக்கு இறுதி செய்யப்பட்டு மத்திய நீர்வளக் குழுவிற்கு திட்டக் கமிஷனிடமிருந்து ஒப்புதல் பெற அனுப்பப்பட்டுள்ளது. மாண்புமிகு புரட்சித் தலைவரின் இந்த சீரிய முயற்சியை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக் கின்றேன்.

தமிழ்நாடு மாநில குழாய்க் கிணறுகள் கழகம் ஆதிதிராவிட சிறு விவசாயிகளின் நிலங்களுக்குப் பாசன வசதி அளிப்பதற்கான திட்டங்கள் சமூக நலத்துறையால் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. மேலும் திட்டத்திற்கான முதலீட்டுத் தொகையைப் பொறுத்த வரையில் 6,000 ரூபாய் என்பதற்குப் பதிலாக ஏக்சர் ஒன்றுக்கு 10,000 ரூபாய் என்ற வகையில் அரசு பரிசீலிப்பதைப் பற்றிக் கொள்கைக் குறிப்பின் மூலம் நான் அறிகிறேன். இத்திட்டத்தை அமல்படுத்த அன்புடன் வேண்டிக் கொள்கிறேன். இக்கழகத்தின் தொடக்க காலத்திலிருந்து ஒட்டு மொத்தமாக ரூ. 433.41 இலட் சங்கள் மதிப்பீட்டுச் செலவில் 289 குழாய்க் கிணறுகள் அமைப் பதற்குத் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம் 7,861 ஆதிதிராவிட விவசாயிகள் பயன்பெறுவர் என எதிர் பார்க்கப்படுகிறது. இதற்காக அரசை நான் பாராட்டுகிறேன்.

மேலும் விழுப்புரம் வட்டத்தில் 1976-ல் முடிந்த நந்தன் கால்வாய்த் திட்டத்தின் மூலம் முதன்முதலில் பனமலை ஈசா ஏரியில் நீர்வந்து விழுந்து அதன்பின்னர் மற்ற 11 ஏரிகளுக்கு ஒன்றன்பின் ஒன்றாக நிரம்பிப் பாசனத்திற்குப் பயன்படும். ஆனால் வாய்க்கால் பனமலை ஏரியில் வந்து முடியும்படியாக வெட்டப்படாமல் நிறுத்தப்பட்டதால் நந்தன் வாய்க்காலின் நீர் விடும் பனமலை ஏரிக்குத் தண்ணீர் சரியாக வரவில்லை.

[திரு. வீ. சுப்பிரமணியன்] [1986 ஏப்ரல் 30

எனவே, விழுப்புரம் வட்டத்திலுள்ள மற்ற 11 ஏரிகளுக்குப் பாசனத்திற்கு நீர்வர வாய்ப்பு கிடைக்கவில்லை. எனவே, இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினால் எனது தொகுதியில விக்ர வாண்டி ஒன்றியத்தில் உள்ள முட்டத்தூர், நகர், பிரம்மதேசம், ஏசாலம் ஆகிய ஏரிகள் நிரப்பி விவசாயத்திற்கு இரண்டு போகச் சாகுபடிக்குப் பயன்படும். ஆகவே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களை இந்தத் திட்டத்தை அமல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மிகப் பணி வுடன் நான் வேண்டிக் கொள்கிறேன்.

மேலும், எனது தொகுதியில் முண்டியம்பாக்கம் பனையபுரம் சிறுவந்தாடு ஆகிய கிராமங்களில் அரசினர் உயர்நிலைப் பள்ளி களுக்குக் கட்டிடம் இல்லாமல் இருக்கிறது. அவற்றைக் கட்டிக் கொடுக்க மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர் களை அன்புடன் நான் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் விக்கிரவாண்டி ஒன்றியத்தில் எண்ணா யிரம் என்ற கிராமத்தில் உள்ள ஆரம்ப சுகாதார மருத்துவ மனைக்குக் கட்டிடம் இல்லை. கட்டிடம் கட்டித்தர வேண்டும் என்று மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களை மிகப் பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் பொன்னேரி தொகுதியில் பழவேற்காடு ஏரியில் பக்கிங்காம் கால்வாய் மண் மூடிவிட்டுள்ள தால் அதன் வழியாக படகுகளில் சென்று மீன் பிடிக்கும் மீனவர் கள் மீன் பிடிக்கச் செல்லாமல் பாதிக்கப்படுகின்றனர்.

ஆகவே, அந்த பக்கிங்காம் கால்வாயை இயந்திரத்தின்மூலம் ஆழப்படுத்திட ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு நன்றிகூறி முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

**திரு. எஸ். டேனியல்ராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை, நீர்ப்பாசனத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி யின் சார்பாக என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

நீர்ப்பாசனத் துறையைப் பொருத்த மட்டிலே கொடுக்கப் பட்டிருக்கும் இந்த அறிக்கையை பார்க்கும்போது உலக வங்கி யின் உதவியோடு தமிழகத்திலே பல புதிய பாசனத் திட்டங்களை செயல்படுத்த இருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். இத்திட்டங் களோடு உலக வங்கியின் உதவியோடு தாமிரபரணி பாசனப் படுகையையும் நவீனப்படுத்தி அதன் மூலமாக பல லட்சக் கணக் கான ஏக்கர்கள் பாசன வசதி வாய்ப்பை பெறும் சூழ்நிலையை உருவாக்கித் தர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.



1986 ஏப்ரல் 30] [திரு. எஸ். டேனியல்ராஜ்]

கேரளாவிலே மேற்குத்தொடர்ச்சி மலையிலே பெய்யும் மழை யின் காரணமாக உற்பத்தியாகின்ற ஆறுகளெல்லாம் மேற்கே ஓடி வீணாகக் கடலில் கலக்கின்றன. மேற்கே கடலில் அப்படி வீணாகப் போய்ச் சேருகின்ற தண்ணீரை கிழக்கே தமிழகத்திற்கு திருப்பி விடுவதன் மூலமாக, கன்னியாகுமரி, திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை ஆகிய மாவட்டங்கள் செழிப்படைய வாய்ப்பாக இருக்கும். ஆகவே, மேற்கே கடலில் போய் வீணாகக் கலக்கின்ற தண்ணீரை கிழக்கே தமிழகத்திற்கு திருப்பி விடுவதற்கு தமிழக அரசு கேரள அரசை, மத்திய அரசின் மூலமாக வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே ஸ்ரீவைகுண்டம் வடகாலில் இருந்து தூத்துக்குடியில் இருக்கிற ஸ்பிக் தொழிற்சாலைக்கு தண்ணீர் வருடம் முழுவதும் கொண்டு செல்லப்படுகிறது. இத னால் ஸ்ரீவைகுண்டம் வடகால் விவசாயிகள் விவசாயத்திற்கு தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, பொதுப் பணித்துறையைச் சார்ந்தவர்கள் ஏரலுக்கு அருகே ஒரு அணையைக் கட்ட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். ஸ்ரீவைகுண்டத்தில் மழை வரும்போது வெள்ளப் பெருக்கு வந்து, அந்தத் தண்ணீர் வீணாகக் கடலிலே போய் கலக்கின்ற தன்மையை மாற்ற அந்தத் தண்ணீரை ஏரலுக்கு அருகே கட்டப்படும் அணையில் தேக்கி வைத்து அதன் மூலமாக விவசாயிகளின் விளைச்சலையும் பெருக்க முடியும், சுற்றியுள்ள கிராம மக்களுக்கும் குடிநீர் வழங்க முடியும் என்பதைச் சொல்லிக் கொண்டு, ஏரலுக்கு அருகே கட்டப்படும் அந்த அணையை ஸ்பிக் நிறுவனமே செலவு செய்து கட்ட ஏற்கச் செய்யவேண்டிய அள வுக்கு அரசு அவர்களுக்கு அறிவுரை வழங்கவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

எனது தொகுதியில் ஆறுமுகமங்கலம் குளத்தின் மறுகால் ஓடையை செப்பனிடவும் இடையர்காடு, வலவெட்டி கலுங்கு கழிவுநீர்ப் பாசனத்திற்கு புதுமடை கட்டுவதற்கும் பெரும்படை சாஸ்தான் கோவில் வடிகால் ஆகியவற்றைப் பழுது பார்ப்பதற் குப் ரூ. 22 இலட்சம் நிதி ஒதுக்கியிருப்பதாக அறிவித்திருக்கிறீர் கள். அதற்காக பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்கு என் தொகுதி விவசாயிகளின் சார்பாக நன்றியைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

பொதுப்பணித்துறை அதிகாரிகள் நில ஆர்ஜித வேலைக்காக வரைபடம் போட்டு ரெவின்யூ டிப்பார்ட்மெண்டிற்கு அனுப்பியும் கூட நில ஆர்ஜித வேலை செய்வதிலே காலதாமதம் காட்டி வருகிறார்கள். ஆறுமுகமங்கலத்தைச் சுற்றியுள்ள விவசாயிகள் நில ஆர்ஜித வேலைகளைச் செய்வதற்கு ஒத்துழைப்புக் கொடுக்கத் தயாராக உள்ளனர். ஆகவே, ரெவின்யூ துறை அதிகாரிகள் நில

ஆர்ஜித வேலைகளை உடனடியாக முடித்து, பொதுப்பணித்துறையிடம் நிலங்களை ஒப்படைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிற்கு மேல் உள்ள திட்டப் பணிகளைச் செய்வதற்கு தனி சப்-டிவிஷன் அமைத்து வேலைகளைச் செய்யலாம் என தலைமைப் பொறியாளர் ஆணை பிறப்பித்துள்ளார். அதன் அடிப்படையில் மருதூர் அருகிலே ஏரலிலே ஒரு சப்-டிவிஷனை அமைத்து இந்தத் திட்டத்தை கூடிய விரைவில முடிக்க ஏற்பாடு செய்துதரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே ஸ்ரீவைகுண்டம் வட்டத்திலே அகரம் கிராமத்து விவசாயிகள் மட்டும் மானாவாரி குளத்தின் மூலமாக விவசாயம் செய்யக்கூடிய அவல நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அகரம் குளத்திற்கும், ஆறுமுக மங்கலம் குளத்திற்கும் இடையே வாய்க்கால் வெட்டி தாமிரபரணி பாசனத்தோடு, அந்தக் குளத்தையும் இணைத்து அகரம் விவசாயிகளுடைய நீண்ட நாள் குறையை தீர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மருதூர் கீழக்கால கற்குளம் மதகிலிருந்து சிவகளை பெருங்குளம் ஆகிய குளங்களுக்கு தனிக் கால் வாய் வெட்ட வேண்டும். மங்கலக் குறிச்சிக்கு மேல் புறமாய் புதிதாக ஒரு வடிகால் அமைக்க வேண்டும். இந்தத் திட்டங்களை எல்லாம் நிறைவேற்ற உலக வங்கி அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது. இந்தத் திட்டங்களை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்றுகேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-20)

ஸ்ரீவைகுண்டம் யூனியனில் உள்ள அனைத்துக் குளங்களையும் வருடத்திற்கு ஒரு குளம் என்ற முறையில் மராமத்து செய்தும், ஆழப்படுத்தியும் கொடுத்து, அவற்றின் கரைகளைப் பலப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்ரீவைகுண்டம் முதல் மங்கலக்குறிச்சி வரையுள்ள ஆழங்கால் வடிகாலில் ஆக்கிரமிப்புகளை அகற்றி, அமலைச் செடிகளை அகற்றி அதனை சீரமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஸ்ரீவைகுண்டம், வடகால், கொற்கையன்கால், நாரசக்கால், ஆகியவற்றை தூர் அகற்றி வடிகால் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





ஏரல், வாழவல்லான், கொற்கை, உமரிக்காடு, முக்காணி ஆகிய பகுதிகளில் மழைக்காலங்களில் நீர் தேங்கி பயிர்கள சேதமடைகின்றன. ஆகவே அங்கே நிரந்தரமான வடிகால் வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியில் ஒரு பகுதி தாமிரபரணி ஆற்று நீரைப் பயன்படுத்தி விவசாயம் செய்பவர்களும்கூட. வல்லநாட்டுக்கு கிழக்கே புதுக்கோட்டை வரையுள்ள அனைத்து கிராமமக்களும் மழையை நம்பித்தான் விவசாயம் செய்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். வல்லநாட்டிற்குக் கிழக்கே ஓழக்குடி என்ற கிராமத்தில் உள்ள குளத்தில் மழைக் காலங்களில் உற்பத்தியாகும் காட்டு வெள்ளம் பாய்ந்து புதுக்கோட்டை வரை சுமார் இருபதுக்கும் மேற்பட்ட புனைக்குளங்கள் வழியாகப் பாய்ந்து இறுதியாக வீணாக கடலில் போய் கலக்கிறது. ஆகவே மழைக்காலங்களில் உற்பத்தியாகும் வெள்ளத்தை வல்லநாட்டில் ஒரு அணையைக் கட்டி தடுத்து, தண்ணீரை தேக்கி வைத்து வல்லநாட்டிற்கும் ஓழக்குடிக்கும் மட்டும் ஒரு வாய்க்கால் வெட்டினால், தேக்கி வைத்த தண்ணீரின் மூலமாக வல்லநாடு முதல் புதுக்கோட்டை வரையுள்ள அனைத்து கிராம விவசாயிகளுக்கும் ஒரு போக விளைச்சல் உற்பத்தி செய்ய வசதியாக அமையும். மேலும் வல்லநாடு முதல் புதுக்கோட்டை வரையுள்ள அனைத்துக் கிராமங்களில் வசிக்கும் மக்களுடைய குடிநீர்ப் பஞ்சமும் தீரும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக நான் சொல்ல விரும்புவது, கடந்த பொதுப் பணித் துறை மானியத்தில் ஒரு கருத்தைச் குறிப்பிட்டேன். அப்போது டிப்ளமோ பொறியாளர்களுடைய அவல நிலை குறித்து விளக்கமாக எடுத்துக் கூறியும்கூட இதுவரையில் டிப்ளமா பொறியாளர்களின் அவல நிலையைப் போக்க அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. பொதுப்பணித் துறையிலும், நீர்ப்பாசனத் துறையிலும் பணியாற்றுகிற டிப்ளமா, டிகிரி பொறியளார்களிடையே எந்தவிதமான பாகுபாடும் இல்லாமல், சம வேலைக்கு சம ஊதியம் என்ற அடிப்படையில் அவர்களை ஒரே மாதிரியாக நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பொதுப்பணித்துறையிலும், நீர்ப்பாசனத் துறையிலும் ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றுகிற என்.எம்.ஆர். தொழிலாளர்களை நிரந்தர ஊழியர்களாக அறிவித்து, அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கிற எல்லா சலுகைகளையும் அவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது பொதுப்பணித் துறை மூலமாக கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. கட்டிடங்களை கான்ட்ராக்ட் காரர்கள் மூலமாகத் தான் கட்டி வருகிறார்கள். கான்ட்ராக்ட்காரர்களைப் பொறுத்தவரையிலும் அவர்களுக்குள் ஒப்பந்தம் செய்துகொண்டு

பொதுப்பணித் துறையின் மதிப்பீட்டுத் தொகையைக் காட்டிலும் அதிகமாகத் தொகைகளைப் போட்டு அவர்கள் லாபம் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குள்ளே ஒப்பந்தம் ஏற்படா விட்டால் பொதுப்பணித் துறையின் தொகையைக் காட்டிலும் 50 சதவீதம், 60 சதவீதம் கூட குறைவான மதிப்பீட்டுத் தொகையைப் போட்டு வேலைகளை எடுத்து, அதிகாரிகளைச் சரிக்கட்டி, தரமற்ற முறையில் ஒழுங்கான கலவை போடாமல் கட்டடங்களைக் கட்டி வருகிறார்கள்,

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** தலைவர் அவர்களே, அப்படி அளவிற்கு அதிகமாக 50 சதவீதம், 60 சதவீதம் என்று போட்டு அந்த அளவிற்கு எஸ்டிமேட்டைவிட குறைவாக யாராவது ஒப்பந்தக்காரர்கள் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டிருந் தால் அந்த ஒப்பந்தமே ஏற்றுக்கொள்ளப்படப் போவதில்லை. ஆகவே திர விசாரித்து சொன்னதாகத் தெரியவில்லை. அப்படி எந்த ஒப்பந்தமாவது 50 சதவீதம், 60 சதவீதத்திற்கு குறை வாசப் போட்டு, அந்தக் குறைந்த ஒப்பந்தத்தை ஏற்று பொதுப் பணித்துறை அதிகாரிகள் அந்த ஒப்பந்தக்காரர்களுக்கு அனுமதி வழங்கி, அதன்மூலம் அவர்கள தவறு செய்து, ஊழல் புரிந்து, அதன் வாயிலாக கட்டடம் கட்டப்பட்ட விவரம் ஏதாவது உறுப் பினர் அவர்களிடம் இருந்தால், அந்த விவரத்தைச் சொன்னால் நலமாக இருக்கும்.

**திரு. எஸ். டேனியல்ராஜ் :** தலைவர் அவர்களே, சில ஒப்பந்தக்காரர்கள் அவர்களுக்குள்ளே ஒப்பந்தம் செய்துகொண்டு பொதுப்பணித் துறையில் வேலைகளை எடுக்கும்போது, அவர்கள் ஒன்றாக இருந்து, மதிப்பீட்டுத் தொகையைப் போட்டு வேலையை எடுத்துவிடுகிறார்கள். அதன்காரணமாக சில நேரங்களில் ஒப்பந் தக்காரர்கள் இதுபோன்ற நிலைமைகளை உருவாக்கி அதிகாரி களைச் சரிக்கட்டி, தரமற்ற பொருள்களைப் பயன்படுத்தி, ஒழுங்கான கலவைப் போடாமல் கட்டடங்களைக் கட்டி வருகிற காரணத்தால் தான்..........

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** தலைவர் அவர்களே, நான் மறுபடியும் சொல்கிறேன். அதிகாரிகளை சரிக்கட்டுகிற அளவிற்கு இன்றைக்கு நிலைமை இல்லை. 50 சதவீதம் 60 சதவீதம் என்று ஒப்பந்தக்காரர்கள் குறைவாகப் போட்டால் அந்த ஒப்பந்தக்காரர்களுடைய ஒப்பந்தமே நிராகரிக்கப்படு கிறது. ஆகவே அவ்வளவு தூரத்திற்கு குறைவாகப் போட்டு, பொதுப்பணித்துறையிலே செய்யப்படுகிற பணிகள் எல்லாம் தரக் குறைவானது என்பது போன்ற எண்ணங்களை எல்லாம் தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உருவாக்க வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படி தரக்குறைவான பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதற்கு குறிப்பாக ஏதாவது ஒரு இடத்தைச் சொன்னால், அது பொதுப் பணித் துறைக்குப் பயன் உள்ளதாகும், நாட்டுக்கும் பயன் உள்ளதாக இருக்கும்.



**திரு. எஸ். டேனியல்ராஜ் :** தலைவர் அவர்களே, இந்த
நரத்திலே பொதுப்பணித்துறையினுடைய கட்டுமானக் கழகங்
ள், கூட்டுறவுச்சங்கங்கள மூலமாக சில கட்டுமான வேலைகளை
பொதுப்பணித் துறை செய்து வருகிறார்கள், அந்த வேலைகள்
ரமுள்ளதாகவும் உறுதியாக இருப்பதாகவும் சொல்கிறார்கள்.
ஆகவே பொதுப் பணித்துறையிலே இருக்கின்ற கட்டுமானக்
ழகத்தையும், கூட்டுறவுச் சங்கத்தையும் இணைத்து, கட்டுமான
வாரியம் என்ற ஒரு வாரியத்தை அமைத்து, பொறி
பாளர்கள், டிப்ளமோ பொறியாளர்கள், தச்சு வேலக்காரர்
கள், மின்சாரப் பணியாளர்கள், பிட்டர்கள், பிளம்பர்கள்
ஆகியோர்களை நேரடியாக வேலைக்கு எடுத்துக் கொண்டு,
இதர வேலைகளைச் செய்வதற்கு என். எம். ஆர். என்ற அடிப்
படையிலே வேலைக்கு ஆட்களை எடுத்து, பொதுப் பணித்
துறையின் மூலமாக கட்டிடங்களைக் கட்டினால், அந்தக் கட்டி
டங்கள் தரம் உள்ளதாகவும், உறுதியாக உள்ளதாகவும் இருக்
கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.
அதே நேரத்தில் பல்லாயிரக்கணக்கான பேர்களுக்கு வேலை
வாய்ப்புக் கொடுக்க முடியும் என்பதைத் தெரிவித்து, பேச
வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி,
வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் காலை
அலுவல்கள இத்துடன் முடிவுற்று மாலை 4.00 மணிக்கு பேரவை
மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.26 மணிக்கு ஒத்திவைக்கப்
பெற்றது.

பிற்பகல் 4.14 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர்
திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை
மீண்டும் கூடியது.

## 6. வரவு-செலவுத் திட்டம் 1986—87 வாக்கெடுப்பு—(தொடர்ச்சி)

**கோரிக்கை எண்** 36—பாசனம்

**கோரிக்கை எண்** 37—பொதுப் பணிகள்-கட்டடங்கள்

**கோரிக்கை எண்** 38—பொதுப் பணிகள்-பணியாளரமைப்பும் கருவிகளும் தளவாடமும்.

**கோரிக்கை எண்** 52—பாசனம் குறித்த மூலதனச்செலவு

**கோரிக்கை எண்** 53—பொதுப் பணிகள் - கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு.

[1986 ஏப்ரல் 30

**திரு. வி. இரா. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு
தலைவர் அவர்களே, 1986—87ஆம் ஆண்டுக்கான பேரவைத்
கோரிக்கைகள் மீது நான் சார்ந்திருக்கிற அனைத்திந்திய மானியக்
திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எனக்குப் அண்ணா
பளித்தமைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் பேச வாய்ப்
அவர்களுக்கும் மாண்புமிகு பொதுப்பணித் துறை தலைவர்
அவர்களுக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன். அமைச்சர்

என்னுடைய அணைக்கட்டுத் தொகுதியின் நீண்ட நாள்
கோரிக்கையான மேல் அரசம்பட்டு அணைத் திட்டம் விவசாயி
கள் மாநாடுகள் போட்டு கோரிக்கைகள் வைத்து இரண்டு
மாண்புமிகு அமைச்சர்கள் பார்வையிட்டு முன்னாள் இந்தத்
தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரான திரு. மார்க்கபந்து
பி.ஏ.,பி.எல்., அவர்கள் பலமுறை இந்த சட்டமன்றத்தில்
வாதாடியுள்ளார்கள்,

நான் விவசாய சங்கத்தைச் சேர்ந்தவரை எதிர்த்து நின்று
நீண்ட நாட்களாக உள்ள விவசாயிகள் கோரிக்கையாக உள்ள
மேல் அரசம்பட்டு அணைத் திட்டத்தை கொண்டு வருவேன்
என்று உறுதி கூறி 20 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி
பெற்றேன். நான் இந்தத் திட்டத்தை தேர்தல் வாக்குறுதியாகக்
கொடுத்துள்ளேன். இதை அடுத்த பட்ஜெட் தொடரில் அவசியம்
உறுதியாகச்சேர்க்கவேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர்
அவர்களையும், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்
அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

இத்திட்டம் நிறைவேறினால் வறட்சியால் வாடிக்கொண்
டுள்ள அணைக்கட்டு ஒன்றியம் நிலத்தடி நீர் மேன்மைபட்டு,
கிணற்றையே நம்பி உள்ள அந்தப் பகுதி விவசாயிகளுக்கு ஒரு
வரப்பிரசாதமாக அமையும் என்ற நம்பிக்கையில் 3 முறையும்
ஆளும் கட்சிக்கு வாக்களித்துள்ளார்கள். எனவே அவசியம்
இத்திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டும் என்று வேண்டி
விரும்பி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தவிர என் தொகுதியில் உள்ள பள்ளிகொண்டா பேரூராட்சி
யில் பயணியர் விடுதி ஒன்று கட்டுவதற்காக நீண்ட நாட்களாக
திட்டம் வகுக்கப்பட்டு அது நிலுவையில் உள்ளது. அந்த பயணி
யர் விடுதியை உடனடியாகக் கட்ட ஆவன செய்யவேண்டும்
என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை நகர குடிநீர் வசதிக்காக 15 டி.எம்.சி. கிருஷ்ணா
நதி நீரைக் கொண்டு வருவதற்கான திட்டத்தைச் செயல்படுத்
தவும், அதற்கான செலவைப் பகிர்ந்து கொள்ளவும் ஒரு ஒப்
பந்தம் ஆந்திரா மற்றும் தமிழ்நாடு முதல்வர்களால் 18—4—1983
அன்று கையொப்பமிடப்பட்டது. இரு மாநிலங்களின் திட்ட
வேலைகள் அந்தந்த மாநில அரசுகளால் தொடங்கப்பட்டுள்ளன.
இது நாட்டின் ஒருமைப்பாட்டையும், இரு மாநிலங்களின் நல்
லெண்ணத்தையும் வெளிப்படுத்துகிறது.



1986 ஏப்ரல் 30] [திரு. வி. இரா. கிருஷ்ணசாமி]

தமிழக எல்லையிலிருந்து பூண்டி நீர்த்தேக்கம் வரை உள்ள கண்டலேறு பூண்டிக் கால்வாய் வேலை எடுத்துக் கொள்ளப்பட்டு இக்கால்வாய்க்குத் தேவையான நிலம் கையகப்படுத்தும் வேலை முடிவுற்றது. முதல் 24 கி.மீ. நிலத்திற்கான கால்வாய் வெட்டும் பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது. பூண்டி நீர் மட்டத்தை உயர்த்தும் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்படி மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசில் ஆக்கப்பூர்வமான வேலைகள் செய்வதற்காக பாராட்டுகிறேன்.

கேரள மாநிலத்தில் மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளின் உபரி நீரை தமிழகத்திற்குத் திருப்பி, தமிழகத்தின் குடிநீர் மற்றும் வறட்சிப் பகுதிகளுக்கு பாசனமளிப்பது பற்றி இரு தரப்பு பேச்சு வார்த்தை நடத்துமாறு கேரள முதலமைச்சர் அவர்களையும் மத்திய அரசையும் தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் நினைவூட்டி, வற்புறுத்தி வருகிறார்கள். அதற்காக நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்,

காவிரி நீர் பிரச்சினை சம்மந்தமாக தமிழக மற்றும் கர்நாடக முதல்வர்களிடையில் பேச்சு வார்த்தை 1985 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 23 ஆம் நாள் சென்னையில் நடைப்பெற்றது. அடுத்த கட்ட பேச்சுவார்த்தை இவ்வாண்டு மே மாத இறுதிக்குள் சுமுகமாக முடிக்க மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் உறுதி பூண்டு இருப்பதை நான் பாராட்டக் கடமைப் பட்டு இருக்கிறேன்.

தற்போது தமிழக அரசால் நடுத்தர பாசனத் திட்டங்கள் 10-ம், சிறுபாசனத் திட்டங்கள் 8-ம் நடைபெற்று வருகின்றன. வாணியார், வெம்பபேட்டை, குள்ளூர் சந்தை, சூளகிரிசின்னார் ஆகிய நான்கு திட்டங்கள் நிறைவு பெற்றுவிட்டன என அறிக்கையில் உள்ளது. அதை நான் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

பரம்பிக்குளம், ஆளியாறு பாசனப் பகுதி விரிவாக்க திட்டப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இத்திட்டத்தின் மீது 14,170 எக்டேர் நிலங்களுக்கு பாசன வசதி அளிக்க அரசின் பரிசீலனையில் இருப்பதை அந்தப் பகுதி விவசாய மக்கள் பாராட்டுவார்கள் என்று கூறி தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

(மாலை 4—20)

இதையும் நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொண்டு, தமிழக அரசுக்கு என்னுடைய பாராட்டைக் கூறிக்கொண்டு எனக்கு வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில், பாசனம் என்பது மிக முக்கியமான அம்சம் என்பதை எல்லோரும் நன்கு அறிவார்கள். ஏனென்றால், தமிழகத்தில் உள்ள பெரும்பான்மை யான மக்கள் விவசாயத்தை நம்பி வாழக் கூடிய மக்கள். விவ சாயத்திற்கு நீர்ப்பாசனம் இன்றியமையாத தேவையாக இருக் கிறது என்ற முறையில் நாம் பார்த்தால், தமிழகத்தில் இன்றைய விவசாயிகளுக்குப் போதுமான அளவிற்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கவில்லை என்பது பரவலாக, ஆளுங்கட்சித் தரப்பிலும் சரி, எதிர்க்கட்சித் தரப்பிலும் சரி, பொதுவாக கூறப்படக்கூடிய ஒரு பிரச்சினை.

இந்த நேரத்தில் ஒரு சில கருத்துக்களை இது சம்பந்தமாக எடுத்துச் சொல்வதற்கு நான் ஆசைப்படுகிறேன். தமிழகத்தைப் பொறுத்த மட்டில் தற்போது குடிதண்ணீருக்குக்கூட பல இடங் களில் மிகப்பெரிய பற்றாக்குறை ஏற்பட்டு மக்கள் தவிக்கக் கூடிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது.

அதேபோன்று நீர்ப்பாசனத்தைப் பொறுத்த வரையில், அரசு தண்ணீர் கொடுப்பதற்கு ஒரு சில திட்டங்களை, ஒரு சில நடவடிக்கைகளை எடுத்திருப்பதாக இந்தக் கொள்கை விளக்க அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தக் கொள்கை குறிப்பிலே கூறப்பட்டிருக்கக்கூடிய பல பிரச்சினைகள் பற்றி பார்க்கக் கூடிய நேரத்தில், additional irrigational potentiality ஏற்படுத்துவதற்காக கொடுக்கப் பட்டிருக்கக் கூடிய விவரங்கள் எல்லாம், அநேகமாக 1985–86ல் கொடுக்கப் பட்ட அதே விவரங்களாக மீண்டும் 1986–87-லே கொடுக்கப் பட்டிருக்கிறது. காவிரி தண்ணீர்ப் பிரச்சினையைப் பொறுத்த மட்டில், ஏற்கனவே 5 ஆண்டு காலமாக, இந்த அவைக்குள்ளே யும், வெளியேயுமாக அதற்கு ஒரு முடிவு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாக பல முறை இரண்டு மாநிலத்திலும் இருக் கின்ற அமைச்சர்களும், முதலமைச்சர்களும், எல்லோராலும் பேசப்பட்டதற்குப் பிறகும் இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இது கவலைக்குரிய ஒரு பிரச் சினை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று இன்னொரு 'பொடென்ஷியலிடி' பற்றி கூறப்பட்டிருப்பது. பெரியார் டாம். அந்தக் கொள்கைக் குறிப் பிலே பார்த்தால், 1985–86-லும் சரி, 1986–87-லும் சரி ஒரு விஷயம் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.





(மாண்புமிகு மாற்றுத்தலைவர் தலைமை.)

1980-லிருந்து அதிலே வரவேண்டிய வாட்டர் லெவல் சம் பந்தமாக , கேரள மாநில அரசுக்கும், தமிழக அரசுக்கும் இடையே இன்னும் ஒரு உடன்பாடு ஏற்பட்டு, அதற்கான முடிவு ஏற்பட்ட தாகத் தெரியவில்லை. அதிலே இந்தப் பிரச்சினை இன்னும் நீடித்துக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

அதே போன்று இன்னொரு பிரச்சினை. Diversion of the West flowing water. மேற்கு நோக்கிப் பாயும் நதிகளைப் பொறுத்த வரையில், அதைத் திருப்பி விடுவதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கேரள மாநிலத் தோடு இது சம்பந்தமாக பேசிக் கொண்டிருக்கிறோம். ஏற் கனவே 6 ஆண்டுக் காலமாகவே பேசப்பட்டு வருகிறது. ஆனால் இதிலே உண்மையான பிரச்சினை என்னவென்பதைப் பொறுத்த அளவிலே, இன்னும் ஒரு முடிவு வந்ததாகவோ, அது சம்பந்த மாக எங்கே இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பதும் இன் னைக்கு ஒரு கேள்விக்குறியாக இருக்கக் கூடிய விஷயம்.

இங்கே இந்தப் பிரச்சினை வரக்கூடிய நேரத்தில், பாண்டியாறு புன்னம்புழா ஸ்கீம் சமபந்தமாக கேரள மாநிலத்தோடு தமிழக அரசு பேசிப் பேசி இன்னும் அது சம்பந்தமாக ஒரு முடிவு ஏற்படவில்லை என்ற நிலை இருந்து கொண்டிருக்கிறது.

நீலகிரி மாவட்டத்திலுள்ள மலையிலிருந்து ஆரம்பித்து. கேரள மாநிலத்திற்கு உள்ளே ஒழுகக் கூடிய அந்த நதியைப் பொறுத்த அளவிலே........ (குறுக்கீடு)

திரு. வெ. ரா. ஜெயராமன்: மாற்றுத் தலைவர் அவர்களே, பாண்டியாறு-புன்னம்புழாத் திட்டம் பற்றி மாண்புமிகு உறுப் பினர் ஹேமச்சந்திரன் அவர்கள், இரண்டு அரசுகளும் நடத்திய பேச்சுவார்த்தைகள் பற்றிய கருத்தை வலியுறுத்திக்கொண் டிருக்கிறார்கள். தமிழக அரசு இந்தப் பிரச்சினையில், பல முறை கேரள அரசிற்குக் கடிதங்கள் எழுதியிருக்கிறது. அவர்கள் இந்தக் கடிதத்திற்கு இதுவரையில் ஒரு பதிலையும் அனுப்பவில்லை. பாண்டியாறு-புன்னம்புழாவிலிருந்து மின்சாரம் எடுக்கப்பட்டு மின்சாரம் எடுத்தது போக, மீதமுள்ள தண்ணீரைப் பாசனத்திற்காகப் பயன்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை தமிழக அரசு வேண்டுகோளாக வைத்திருக்கிறது. அதிலே அங்கே யிருக்கின்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகளின் நிலை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாற்றுத் தலைவர் அவர்களே, ஆகவே நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், யதார்த் தமாக இதிலே ஏற்பட்டிருக்கக் கூடிய பிரச்சினையை தீர்ப்ப தற்கு ஏதாவது நடைமுறை சாத்தியமான யோசனைகளைச் செய்வதற்கு இரண்டு அரசுகளும் முன்வந்திருக்கிறது. இந்திய

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அந்த மாநிலத்தில் ஆட்சிப் பொறுப்பில் இருந்த காலத்தில் இதுசம்பந்தமாக ஒரு சுமுகமான தீர்வை ஏற்படுத்தவேண்டுமென்ற எண்ணத்துடன் பேச்சு வார்த்தை நடத்தியது. ஆனால் இதிலே இருக்கக் கூடிய ஒரு பிரச்சினையாக நான் கேள்விப் பட்டது, இதிலே ஒரு நல்ல பகுதி கடலோரப் பகுதியாக இருக்கிறது. கடலில் உள்ளதண்ணீர் உள்ளே வருவதற்கு சாத்தியப்பாடு மேற்கு நோக்கிப் பாயக்கூடிய நதியைத் திருப்பிவிடுவதன் காரணமாக ஏற்படும், அதன் காரணமாக சீகோஸ்ட் பகுதிகளில் பாதிப்பு ஏற்படும். அதை எப்படித் தடுப்பது என்று விஞ்ஞான ரீதியாக தீர்வு காணுவதற்கு இரண்டு அரசுகளாலும் முடியவில்லை என்று கருதப்படுகிறது. அது உண்மையென்றால்......

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழக அரசு தொடர்ந்து எந்த நடவடிக்கை எடுத்தாலும் கூட அடுத்த பக்கத்திலேயிருந்து எந்தவிதமான சிறு ரியாக்ஷன் கூட இல்லை. அதற்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. இரண்டு அரசுகளும் ஒன்றுமே செய்ய வில்லை என்ற கருத்தை அவர்கள் சொன்னார்கள். அதை அவர்கள் மாற்றிக் கொள்ள வேண்டும். தமிழக அரசைப் பொறுத்தவரையில் ரிசீவிங் எண்ட்டில் இருப்பதால் நாம் பெறக்கூடிய இடத்திலேயும் அவர்கள் தரக்கூடிய இடத்திலேயும் இருப்பதன் காரணமாகத்தான் நாம் ஏதோ அவர்கள் வீட்டிற்கு யாசகம் கேட்டு வருகிற எண்ணத்திலே பார்ப்பதால் விளைவுகள் இன்றும் நேற்றும் நாளையும் இந்தச் சட்டப் பேரவையில் இப்படிப் பேசக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழக அரசு ஒன்றும் செய்யவில்லை என்று நான் சொல்லவில்லை. இரண்டு அரசுகளும் ஒரு கட்டத்திலே பேசினார்கள். 1967-க்கு முன்னாலே பேசினார்கள். அதற்குப் பிறகு இது சம்பந்தமாக ஒரு தெள்ளத் தெளிவான முடிவு ஏற்படமுடியாத காரணத்தினால் விஞ்ஞான ரீதியாக பிரச்சினைக்கு ஒரு முடிவு ஏற்படாத காரணத்தினால் இந்தப் பிரச்சினை தேங்கிக் கிடக்கிறது என்று தெரிகிறது. இன்னும் ஒரு சில கருத்துக்களை நான் சொல்லி அதற்குப் பிறகு எதற்காக நான் இதைச் சொல்கிறேன் என்று சொல்கிறேன்.

கிருஷ்ணா நதித் திட்டத்தைப் பொறுத்தவரையில் 1986-87-வது வருடத்திலே கொடுக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில் 12-வது பக்கத்திலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், இந்த முக்கியமான திட்டத்திற்குத் தேவையான அனுமதியை இந்திய அரசு விரைவிலே வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும்





இந்தத் திட்டத்திற்கு மைய அரசு அனுமதி வழங்கவில்லை என்பதுதான் உண்மை. இன்றைய தினம் பத்திரிகையிலே வந்திருக்கிற செய்து மாநில அரசுகளும் மைய அரசும் அவர்களுடைய பிரதிநிதிகள் எல்லாம் உட்கார்ந்து பேசிய பிறகு கூட ஒரு முடிவு ஏற்படமுடியாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. கிருஷ்ணா நதித் திட்டத்தைப் பொறுத்தவரையில் இந்தியாவினுடைய பிரதமர் ஆக இருந்தவர்கள் அவர்களே வந்து அடிக்கல் நாட்டி ஆர்ப்பாட்டமாக அறிவிக்கப்பட்ட ஒரு திட்டத்திலேயே 3 ஆண்டுகளாக அந்தத் திட்டத்திற்கு மைய அரசு அனுமதியளிக்க வில்லை என்றால் மைய அரசு எங்கே இருந்து கொண்டிருக்கிறது என்பதை நாம் பார்க்க வேண்டும்.

இன்று வந்திருக்கக்கக்கூடிய பிரச்சினை என்னவென்றால் The Cen ral Government is not taking any initiative of its cwn. The Cen ral Government offic als did not take the in iative to resclve the issue till all the three States had reached an agreement. அதாவது சம்பந்தப்பட்ட 3 மாநில அரசுகளும் அவர்களுக்குள்ளே பேசி ஒரு முடிவு ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறது என்ற முறையில் இன்றைக்கு மைய அரசு ஒரு பார்வையாளர் என்ற முறையிலே இருந்துகொண்டிருப்பதாகத் தான் செய்தி வந்திருக்கிறது. இது உண்மையாக இருந்தால் மைய அரசினுடைய பாத்திரம் என்ன ? மைய அரசு அதிலே சம்பந்தப்பட்டிருக்கிறது என்பதை மறுக்கமுடியாது. ஏன் என்றால் மைய அரசினுடைய தலைமை அமைச்சராக இருந்தவர் இந்தத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டியிருக்கிறார். ஆந்திரப் பிரதேச அரசினைப் பொறுத்தவரையில் சென்னை நகருக்குக் குடிநீர் கொண்டுவருவதற்காக மட்டும் ஒரு கேனாலை ஏற்படுத்த முடியாது, அப்படி ஏற்படுத்தினால் ராயலசீமாவிலே வறட்சியிலே உள்ள மக்கள் தகராறு செய்வார்கள். ஆகவே அதையும் சேர்த்து போட வேண்டுமென்பதுதான் அவர்களுடைய நிலை. கர்நாடக மாநிலம், மகாராட்டிர மாநிலம் ஆகியவை என்ன சொல்கிறார்கள் என்றால் அப்படி நடவடிக்கை எடுத்தால் 1976 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஒப்பந்தத்தை நீங்கள் மீறுகிறீர்கள், அதிலே நல்ல முடிவை ஏற்படுத்தவேண்டிய மைய அரசே பார்வையாளர் என்ற முறையிலே இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது என்று சொல்வது துரதிருஷ்டமானதாக இருக்கிறது.

(மாலை 4—30)

காவிரி நீர் பிரச்சினையானாலும் சரி, மேற்கு நோக்கிப் பாயும் நதிகளைத் திருப்பி விடக்கூடிய பிரச்சினையானாலும் சரி மத்திய அரசு ஒரு நிலையை எடுத்து இந்த அரசுகளை ஒரு இடத்திற்குக் கொண்டு வந்து நல்ல முடிவை ஏற்படுத்து

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1986 ஏப்ரல் 30

வதற்கு முயற்சிப்பதற்குப் பதிலாக, மத்திய அரசு ஏனோ
தானோ என்ற முறையில் பார்வையாளராக இருந்துகொண்
டிருக்கிறதோ என்ற சந்தேகம்தான் எழுகிறது.

நான் எதற்காக இதைச் சுட்டிக் காட்டுகிறேன் என்றால்,
இன்றைக்குத் தமிழகத்தைப் பொறுத்தவரையில் நீர்ப்பாசனம்
மக்களுக்குத் தேவையாக இருக்கிறது. அந்த நீர்ப்பாசனம்
கிடைக்காததால் பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள்
கருகிப்போகின்றன. காவிரியைப் பொறுத்தவரையிலே
கூட மழை காலாகாலத்தில் பெய்து ஒன்றிரண்டு முறை
காப்பாற்றப்பட்டதால் அந்தப் பகுதி பாதிக்கப்படவில்லை.
இப்படிப்பட்ட நிலையிலே எங்கள் தொகுதி என்ற முறையிலே
சொல்லிக் கொள்ள விரும்புவது என்னவென்றால், மத்திய
அரசாங்கத்தை மட்டும் நம்பியிருக்கும் நிலை தமிழகத்திற்கு
இருக்கிறதா என்ற சந்தேகம் இருக்கிறது. மத்திய அரசாங்கம்
ஒரு முடிவை ஏற்படுத்திக் கொடுப்பார்கள், ஆகவே, அந்த
நாள் வரையில் காத்திருப்போம் என்ற நிலையில் தமிழக
அரசு இருந்தால் அது சரியானது அல்ல. சம்பந்தப்பட்ட மாநில
அரசுகளை அணுகி 'கிவ் அன்ட் டேக் பாலிசி' முறையைக்
கையாள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அவர்களுக்கும் இதுசம்பந்தமாகப் பிரச்சினைகள் இருக்
கின்றன. எங்களுக்கு தெரிந்த அளவிற்கு, இன்றைக்கு ஆந்திர
மாநில அரசானாலும் சரி, அல்லது கன்னட மாநில அர
சாங்கமானாலும் சரி அல்லது கேரள மாநில அரசாக இருந்தா
லும் சரி இந்த நீரைக் கொடுக்கவே கூடாது என்ற நிலை அவர்
களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் அவர்களுக்கும்
யதார்த்தமாகச் சில பிரச்சினைகள் இருக்கின்றன. அங்கே
உள்ள சட்டமன்றங்களில் பிரச்னைகள் எழுப்பப்படுகின்றன.
ஆகவே, அவர்களுடைய பிரச்னைகளையும் பார்த்து, நம்
முடைய தேவையையும், கணக்கிலே கொண்டு, கிவ் அண்ட்
டேக் பாலிசி முறையில் நல்ல முறையில் ஏற்படுத்துவதற்கு,
சம்பந்தப்பட்டவர்களுடன் பேசி, மத்திய அரசை மட்டும்
நம்பியிராமல் அப்படிப்பட்ட ஒரு நிலைக்கு இந்த அரசு வர
வேண்டுமென்பது எங்கள் கருத்து.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** மாற்றுத் தலை
வரவர்களே, கேட்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.
ஆனால் கொடுப்பதற்குத்தான் அவர்கள் தயாராக இல்லை.

**திரு ஜே. ஹேமச்சந்திரன் :** மாற்றுத் தலைவரவர்களே,
கேட்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று அமைச்ச
ரவர்கள் சொல்கிறார்கள். தருவதற்கு அவர்களிடம் என்ன
இருக்கிறது என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். அவர்களுக்கு



1986 ஏப்ரல் 30] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

இருக்கின்ற பிரச்சினைகளையும் பார்க்க வேண்டும். இன்
றைக்குப் பத்திரிகையிலே வந்த பிரச்னையை வைத்துக்கொண்டு
தான் பேசுகிறேன். இன்றைக்கு அப்படிப்பட்ட பிரச்னைகள்
அவர்களுக்கு இருக்கின்றன. ஆந்திர மாநில அரசுக்கு, தர
வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. ஆனால் கர்நாடகம்
எதிர்க்கிறது. மகாராட்டிரம் எதிர்க்கிறது. ஆகவே, இப்
படிப்பட்ட பிரச்சினையிலே மத்திய அரசாங்கத்தைப் பொறுத்த
வரையில் பத்திரிகையிலே வந்த தகவல், அவர்கள் இதில்
எந்த இனிஷியேட்டிவும் எடுப்பதில்லை. ஆகவேதான் சொல்கி
றேன், இந்தப் பிரச்சினைகளிலே மாநில அரசுகளோடு ஒரு
கிவ் அண்ட் டேக் பாலிசி என்ற முறையில் அணுகவேண்டுமென்பது
தான் எங்கள் விருப்பமாகும்.

இந்தப் பிரச்னையிலே இன்னொரு விஷயமாகச் சுட்டிக்
காட்ட விரும்புவது என்னவென்றால், இன்றைக்கு மத்திய
அரசைப் பொறுத்த வரையில் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்
தில் இருந்து கொண்டிருக்கிறது. ஆறு ஐந்தாண்டுத் திட்டங்கள்
முடிந்துவிட்டன. ஆனால் இந்தியா இன்றைக்குப் பார்த்துக்
கொண்டிருக்கும் நிலை என்ன ? ஒரு இடத்திலே மிகப்பெரிய
வறட்சி ; இந்தியாவின் இன்னொரு பக்கத்திலே மிகப்பெரிய
வெள்ளப்பெருக்கு. இது ஏன் என்றால், இந்த ஆறு ஐந்
தாண்டுத் திட்டங்களிலேயும் உள்ள கோளாறுகள்தான் கார
ணம்; பிளானிங்கில் டெஃபிஷியன்ஸ் ஏற்பட்டுள்ளது. ஆகவே
தான் இந்த நிலைமைகளைப் பார்க்கிறோம்.

இன்றைக்கு வந்துள்ள விஞ்ஞான ரீதியான நிலையிலே நாம்
நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். எதற்காக நான் இதைச்
சுட்டிக்காட்டுகிறேன் என்றால், மாநில அரசுகளைப் பொறுத்த
வரையில் இன்றைக்கு வறட்சி வருகின்ற நேரத்திலேயும் சரி
அல்லது வெள்ளப்பெருக்கு வருகின்ற காலத்திலேயும் சரி,
மத்திய அரசாங்கத்திடம் பணம் கேட்கிறோம். நாம் 100
கோடி ரூபாய் வேண்டுமென்று கேட்டால் அவர்கள் 25 இலட்சம்
ரூபாய் அல்லது 50 இலட்சம் ரூபாய் என்று கொடுக்கிறார்கள்.
மாநிலங்களிலேயிருந்து வரிகளாகக் கொண்டு போகக்கூடிய
பணத்திலிருந்து அந்த மாநில மக்களின் தேவைகளைப்
பூர்த்தி செய்வதற்காக அவர்களுக்கு முன்னால் நாம் பிச்சைக்
காரர்களைப்போல நிற்க வேண்டிய நிலை ஏற்படுவது
சரியல்ல. ஆகவே, நான் சுட்டிக்காட்டுவது என்னவென்றால்,
இதே பிரச்சினையில் காங்கிரஸ் கட்சி பொறுப்பிலே உள்ள
மாநில அரசுகள் உள்பட இந்தப் பிரச்சினையிலே கருத்து
வேறுபாடு இருந்து கொண்டிருக்கிறது. பத்திரிகையிலே
வந்த செய்தியைப் பார்த்து விட்டுத்தான் நான் இதைச்
சொல்கிறேன். சமீபத்தில்கூட ஒரு செய்தி வந்தது. அது
என்னவென்றால், 'நேஷனல் ரிவர்ஸ் கமிஷனைப்' பொறுத்த
வரையில் இன்றைக்கு மத்திய அரசாங்கத்திற்கு அதிகமான

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1976 ஏப்ரல் 30

அதிகாரங்களைக் கொடுப்பதற்கு காங்கிரஸ் கட்சி ஆட்சிப்
பொறுப்பிலே உள்ள சில மாநில அரசுகள்கூடத் தயாராக
இல்லை. இதில் தமிழக அரசின் நிலை என்ன என்பதைத்
தெரிந்துகொள்ள விரும்புகிறேன். பத்திரிகையில் வந்த தக
வலின்படி, தமிழக அரசு மத்திய அரசுக்குப் பூரணமாக அதி
காரத்தைக் கொடுப்பதற்கு ஒத்துக் கொண்டதாகவும், அதே நேரத்
தில் காங்கிரஸ் கட்சி ஆட்சிப்பொறுப்பிலே உள்ள அரசுகள் கூட
அதை ஒத்துக்கொள்ளவில்லை என்றும் தெரிகிறது. இப்
பொழுதுள்ள அதிகாரமே மத்திய அரசாங்கத்திற்கு அதிக
மாக இருக்கிறது. இன்னும் இது மாதிரி பிரச்சினைகளின்
மேலும் அவர்களுக்கு வாக்குறுதியைக் கொடுத்திருப்பது சரி
யல்ல என்று தெரிவித்திருப்பதாகப் பத்திரிகையிலே வந்திருக்கி
றது. ஆகவே, நான் என்ன சுட்டிக்காட்ட விரும்புகிறேன்
என்றால், இன்று மத்திய அரசை மட்டும் நம்பி இருக்கக்கூடிய
ஒரு நிலையை மாற்ற வேண்டும். மற்ற மாநில அரசுகளை
யும் சேர்த்துக்கொண்டு அவர்களுக்கும் இருக்கிற பொதுப்
பிரச்னைகளிலே நாமும் ஒத்து, மத்திய அரசோடு எந்த
இடத்திலே பேசவேண்டுமோ, எந்த இடத்திலே வாதாட
வேண்டுமோ, எந்த இடத்திலே எது சம்பந்தமாக நடவடிக்கை
எடுக்க வேண்டுமோ அதை எடுத்து, இந்தப் பிரச்னைகளுக்குத்
தமிழகத்தைப் பொறுத்தவரையிலே இன்று ஏற்பட்டிருக்கக்
கூடிய நீர்ப்பாசன பிரச்னைகளுக்கு நல்ல முடிவு ஏற்படுத்த
அரசு முன் வரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்
கொள்ள விரும்புகிறேன்,

இன்னொன்று நான் சுட்டிக்காட்ட விரும்புவது என்ன
வென்றால், இந்த அரசைப் பொறுத்தவரையில் இன்று
திட்டங்களை உருவாக்குகிற நேரத்திலே, காஸ்ட் பெனிபிட்
ரேஷியோ என்ற பிரின்சிப்பிளை வைத்துக் கொண்டு,
இதில் வருவாயில்லை, ஆகவே, இந்தத் திட்டத்தை ஏற்றுக்
கொள்வதற்கில்லை என்று மறுக்கிறார்கள். நீர்ப்பாசனத்
தைப் பொறுத்த அளவிலே, அப்படிப்பட்ட கொள்கை சரி
யாக இருக்காது. ஏனென்றால், அப்படிப்பட்ட கொள்கை
யிலே பார்த்தால், பல இடங்களிலே நீர்ப்பாசன வசதி
கொடுக்க முடியாத நிலைமை ஏற்படும். ஆகவே, இந்தக்
கொள்கையைக் கை விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கி
றேன்.

இந்த நேரத்திலே இன்னொரு விஷயத்தை நான் சுட்டிக்
காட்ட விரும்புகிறேன். மழைக் காலத்திலே வருகின்ற
தண்ணீரைச் சேகரித்து அதைக் கோடைக் காலத்திலே
பயன்படுத்தும் ஆராய்ச்சிக்கு அரசு நடவடிக்கை எடுக்க
வேண்டும். மத்திய அரசு கூட சில சிந்தனைகளை வைத்தி
ருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அந்த முறையிலே நடவடிக்கை
எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1986 ஏப்ரல் 30] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

இன்னொன்று சில்ட்கள் சரியான முறையிலே மாற்றப்பட
வில்லை. அதற்குத் தேவையான பணம் ஒதுக்கப்படவில்லை.
காலாகாலத்திலே அது செய்து முடிக்கப்பட வேண்டிய
நேரங்களிலே செய்து முடிக்கப்படாததாலே, இன்று பல இடங்
களிலே, அந்த நீர்நிலைகளிலே தண்ணீர் அடைக்கப்பட்டதற்குப்
பிறகுதான் அந்த வேலை ஆரம்பிக்கப்படுகிறது. அந்த வேலை
2 மாத காலத்திலோ, 3 மாத காலத்திலோ செய்து முடிக்க
முடியாததன் காரணமாக, தண்ணீர் திறந்து விடும்போது, டெயில்
எண்டிலே போய் தண்ணீர் சேராத நிலைமை இருந்து கொண்டி
ருக்கிறது. அதை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்
டும்.

அதே போல், குளங்களை ஆழப்படுத்த நடவடிக்கை எடுக்க
வேண்டும். தஞ்சை மாவட்டத்திலே பல குளங்களை ஆழப்
படுத்தாத காரணத்தாலே, இன்றைக்கு உடைப்பு ஏற்பட்டி
ருக்கிறது. ஆகவே, குளங்களை ஆழப்படுத்த நடவடிக்கை
களை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மாவட்டத்திலே சின்னவேடம்பட்டியில் 400
ஏக்கரில் ஏரி அமைக்கும் திட்டம் நீண்டகாலமாக
முடிவுக்கு வராமல் இருக்கிறது. அதை உடனே நிறை
வேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** மாற்றுத் தலைவர்
அவர்களே, ஒரு தகவலுக்காகச் சொல்கிறேன். மாண்புமிகு
உறுப்பினர் ரமணி அவர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர்கள்
நேரம் ஆகிவிட்டது என்று போனாலும் போகட்டும், அதற்காக
சொல்கிறேன். முன்கூட்டியே அவருடைய வேண்டுகோள் ஏற்
றுக்கொள்ளப்பட்டு விட்டது. இதுபற்றி கடந்த முறையே
வந்தது. அதற்குரிய அரசாணை பிறப்பிக்கப்பட்டது. உங்
களுடைய பிரிவின் தலைவர் மாண்புமிகு ரமணி அவர்களிடத்
திலே அதைக் காட்டியிருக்கிறேன். அவர்கள் ஒப்புக் கொண்
டிருக்கிறார்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** மாற்றுத் தலைவர் அவர்களே,
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த தகவலுக்கு நன்றி.
இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்
றால், 'பிளட் கன்ட்ரோல் ஸ்கீம்' என்ற முறையிலே ரூ. 9 கோடி
ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது போதாது. தமிழகத்திலே ஏற்
பட்டிருக்கக்கூடிய நிலைமையை வைத்துப் பார்க்கிற நேரத்தில்,
இந்த ரூ. 9 கோடி போதாது. ஆகவே, அதிகமாக ஒதுக்கப்
பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஜெ. ஹேமச்சந்திரன்] [1986 ஏப்ரல் 30

இந்த நேரத்திலே நான் சொல்லவிரும்புவது, கன்னியாகுமரி மாவட்டத்திலே பள்ளிகுட்டம் என்ற ஒரு டாம் கட்ட வேண்டுமென்ற கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. பிளாட் கன்ட்ரோல் ஸ்கீமில் அதைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயத்தைச் சொல்லவிரும்புகிறேன். டியூப் வெல்ஸ் அமைக்க ஒரு திட்டம் இருக்கிறது. இந்த டியூப் வெல்ஸ் பயன்படுத்தி, இன்று லிப்ட் இரிகேஷன் பிராசஸிலே தண்ணீரைத் தேவையான இடங்களிலே, அதாவது டாங்க் வழியாகவோ அல்லது சானல் வழியாகவோ, தண்ணீர் கொடுக்க முடியாத இடங்களிலே, இந்த மாதிரி குழாய்க் கிணறுகளை அமைத்து, லிப்ட் இரிகேஷன் வழியாகக் கொடுப்பது நல்ல ஸ்கீம். இன்று வெளிநாடுகளில் எல்லாம் அப்படிப்பட்ட திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை நாம் நடைமுறைப்படுத்தினால், விவசாயத்தைப் பொறுத்தவரையில் பயன்படும் என்று தெரிகிறது.

(மாலை 4-40.)

இன்னொரு விஷயம். இந்த எக்ஸ்டன்ஷன் ஸ்கீமை பொறுத்தவரையில் மாரப்பாடி, தேரை போன்ற இடங்களுக்கு எக்ஸ்டண்ட் செய்யப்பட்டால் அங்கிருக்கக்கூடிய விவசாயிகள் பயன்பெற முடியும். சட்டமன்ற ஹாஸ்டலில்கூட 6, 7 வருடங்கள் பணிபுரிந்த என். எம். ஆர். தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். எலக்ட்ரிஷியன்ஸ், ப்ளம்பர்ஸ் போன்றவர்களை நிரந்தரப்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் முடிவு எடுக்க வேண்டும். 10 வருட காலமாக வேலை செய்த என். எம். ஆர். தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்களை ரெகுலரைஸ் பண்ண வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சித்தாறுபட்டணங்கால் பொறுத்த அளவில் ஒரு டிவிஷன் அங்கு இருக்கிறது. 6 மாத காலம் அவர்களுக்கு ஊதியம் வழங்கப்படாமல் இருக்கிறது. ஆகவே அங்கே உள்ள டிவிவிஷன்களை நிரந்தர டிவிஷனாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பல இடங்களில் சிட்டாறிலிருந்து கொஞ்சம் தண்ணீர் டைவர்ட் பண்ண வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. எக்ஸிக்யூட்டிவ் என்ஜினியரும் மாவட்ட ஆட்சித் தலைவரும் அதை நடைமுறைப்படுத்துவதற்கு முன்வராததன் காரணமாக அந்த பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறை இருக்கிறது. சிட்டாறிலிருந்து கொஞ்சம் தண்ணீர் டைவர்ட் பண்ணுவதற்கு அமைச்சர் அவர்கள்.... (மணியடிக்கப்பெற்றது)



1986 ஏப்ரல் 30]

*திரு. அ. வெங்கடாசலம் : மாற்றுத் தலைவர் அவர்களே, 1986—87-க்கான மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட பாசனங்கள் மற்றும் கட்டிடம் மீதான மானியக் கோரிக்கையை வரவேற்றுப் பேச நான் கடமைப் பட்டிருக்கிறேன். இன்றைக்கு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகு வறுமைக் கோட்டின் கீழே உள்ள மக்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்தக்கூடிய அளவில் அணைக்கட்டுகள், சிறுபாசனம், பெரும்பாசனம் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைப்பதன் மூலம் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியிருக்கிறார்கள், என்பதை சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு புதுக்கோட்டை மாவட்டத்தை எடுத்துக்கொள்கின்றபோது அதைப் பின்தங்கிய மாவட்டம் என்று சொல்லி விட்டாலும் வளர்ந்து வருகின்ற மாவட்டங்களில் ஒன்று புதுக்கோட்டை மாவட்டம் என்பதைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆண்டுதோறும் கோரிக்கை வைக்கப்பட்டு இந்த மன்றத்திலே பல உறுப்பினர்களால் வலியுறுத்தப்பட்ட கோரிக்கை புதுக் கோட்டை மாவட்டத்திற்கு காவிரி ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்றபோது உபரி நீர்களை புதுக்கோட்டை கண்மாய் களுக்கு விடக்கூடிய திட்டம் கோரிக்கையாக வைக்கப்பட்டு இருக்கிறது. எனவே வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு அதன் காரணமாக தஞ்சை மாவட்டத்தின் பெரும் பகுதி பாதிக்கப் படுகின்றது. அதனைக் கட்டுப்படுத்துவதோடு உபரி நீரை புதுக்கோட்டை மாவட்டத்திற்கு கொடுக்கின்றபோது அந்தப் பகுதியிலே சாதாரண மக்கள், வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மக்கள் பெரிதும் பயன்படக்கூடிய அளவில் அந்தத் திட்டத்தை தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களும் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களும் நிறைவேற்றித் தரும்படியும், கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்த வரையில் நிதி ஆதாரங்கள் எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் மிக மிகக் குறைவான நிலையில் இருக்கின்றன. 100 ஏக்கருக்கு மேல் உள்ள அந்த கண்மாய்களை, பொதுப்பணித் துறை ஆண்டுக்கு ஒரு முறை மராமத்து செய்கிறார்கள். 100 ஏக்கருக்கு உட்பட்ட குளங்கள் எல்லாம்— ஊராட்சி ஒன்றியங்களில் நிதி இல்லாததினால் பல ஆண்டுகளாக வெள்ளமோ வறட்சியோ வருகின்றபோது 100 ஏக்கருக்கு உட்பட்ட கண்மாய்கள் மராமத்து செய்யப்படாமல் இருப்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே அந்த 100 ஏக்கர் அளவிலே இருக்கின்ற நிலைமையிலே 50 ஏக்கருக்கு மேல் உள்ள குளங்களைப் பொதுப்பணித் துறை மூலம் எடுத்து வேலை செய்தாலே அங்கே கிராமப்புறங்

களில் இருக்கக்கூடிய, ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கக்கூடிய
அந்தப் பகுதிகளுக்கு மிக நல்லதொரு சூழ்நிலையை உருவாக்க
முடியும். அந்த வகையில் உருவாக்க வேண்டும் என்று நான்
இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்திலே குறிப்பாக ஆலங்குடி தொ
குதியைப் பொறுத்தவரையில் மாவட்ட அளவில் ஆழ்குழாய்க்
கிணறுகள் அமைப்பதற்கான பரிசோதனைகளைச் செய்து
பார்க்கிறபோது புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆலங்குடி
தொகுதியிலே 300 அடிக்குக் கீழே போதிய நீர் இருக்கிறது
என்று இங்கே புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன.
இந்த ஆண்டு 1986—87-ஆம் ஆண்டில் புதுக்கோட்டை
மாவட்டத்திற்காக அங்கே இருக்கக் கூடிய வறட்சிப் பகுதி
களுக்காக ஆழ்குழாய்க் கிணறு அமைப்பதற்கான திட்டங்களை
ஏற்படுத்தக்கூடிய நோக்கத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்
அவர்கள் 200 ஆழ்குழாய்க் கிணறுகள் வேண்டுமென்று மத்திய
அரசுக்குப் பரிந்துரை அனுப்பி இருக்கிறார்கள். ஆகவே 300
அடி போட்டாலே போதுமான அளவுக்கு எனது தொகுதியில்
நீர் இருப்பதால் ஆழ்குழாய்க் கிணறுகளை அமைப்பதன் மூலம்
அங்கேயுள்ள மக்களுடைய வறுமையைப் போக்கக்கூடிய
அளவுக்கு ஏற்பாடு செய்ய முடியும். அந்த அளவுக்கு ஆழ்
குழாய்க் கிணறுகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகப்
படுத்தித் தரவேண்டுமென்று நான் இங்கே குறிப்பிட்டுச்
சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்ற ஆண்டு இதே பொதுப்பணித் துறை மானியத்தில்
பேசுகிறபோது சொன்னேன். கரம்பக்குடி ஒன்றியத்தில்
தஞ்சை பார்டர் பிரியக்கூடிய செங்கமேடு, பத்துத்தாக்கு
போன்ற பகுதிகளில் ஆதிதிராவிட மக்கள் வாழக் கூடிய பகுதி
யில் பொதுப்பணித்துறை கண்மாய் இருக்கிறது. பல ஆண்டு
களாக அந்த மக்களுடைய சொந்த உழைப்பால் கண்மாயைப்
பராமரித்து வைத்திருக்கிறார்கள். ஆனால் அந்தப் பகுதி
களுக்கு மாற்றுத் தண்ணீர் விடக்கூடிய நிலைமை பற்றி மாவட்ட
ஆட்சித் தலைவர் அவர்களால் பரிந்துரை செய்யப்படாமல்
இருக்கிறது. அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை வைத்திருக்
கிறார்கள். புது ஆற்றிலே ஒரு முறைகூட தண்ணீர் விடாததன்
காரணத்தால் அங்கே இருக்கக்கூடிய ஆதிதிராவிட மக்கள்
பெரும் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறார்கள். அந்த வாய்க்
காலைத் தூர் எடுக்கவும், மராமத்துச் செய்யவும் முடியாத
நிலைமையில் அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.
எனவே புது ஆறு பிரியக்கூடிய செங்கமேடு வாய்க்காலை
முழுமையாக மராமத்து செய்து தரவேண்டுமென்று நான் கேட்
டுக்கொள்கிறேன்.





புது ஆற்றிலிருந்து பிரியக்கூடிய உழவயல் வாய்க்கால்
மூலம் சுமார் 20 குளங்களுக்குத் தண்ணீர் விட்டு அதன் மூலம்
அந்தப் பகுதியிலுள்ள பிற்பட்ட மக்கள் தண்ணீரை நிரந்தர
மாகப் பெற்றுக்கொண்டிருந்தார்கள். இப்போது அந்த வாய்க்
கால் பத்துப்பதினைந்து ஆண்டுகளாக செம்மைப்படுத்தப்படா
ததன் காரணத்தால் தூர்ந்துபோன நிலைமையில் இருக்கிறது.
அதனால் தண்ணீர் முழுமையாக வந்து சேரவில்லை. பயிர்
களைப் பொறுத்தவரையில் ஆண்டுக்காண்டு மகசூலைப் பெற
முடியாமல் அவை பாதியில் பட்டுப் போகக்கூடிய நிலைமை
இருக்கிறது. எனவே அந்த உழவயல் வாய்க்காலை மராமத்து
செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர்
அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

கரம்பக்குடி ஒன்றியத்தில் அங்கேயுள்ள இடங்கள் பார்வை
யிடப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு இப்போது 3 கோடி 60 இலட்
சம் ரூபாய் மதிப்பீட்டில் உலக வங்கி உதவியுடன் ஒரு அணை
கட்டுகின்ற திட்டத்தைப்பற்றி அதாவது அக்கினி ஆற்றிலே
திருமணஞ்சேரியிலே அணை கட்டுகின்ற திட்டம் பற்றி
மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பரிந்துரை செய்து அர
சுக்கு அனுப்பியிருக்கிறார்கள். திருமணஞ்சேரி அருகே அக்கினி
ஆற்றில் அணை கட்டுவதன்மூலம் கரம்பக்குடி ஒன்றியத்தி
லுள்ள ஐந்தாறு ஊராட்சிகளுக்கு நல்ல திட்டமாக அது அமை
யும். அந்தப் பகுதி மேடான பகுதியாகும். புஞ்சை விவசா
யம் செய்யக்கூடிய வகையில் பம்ப்செட்டுகள் இல்லை. அது
வானம் பார்த்த பூமியாக இருப்பதாலும், மிகப் பெரிய திட்ட
மாக அது இருப்பதாலும் இந்த ஆண்டு இல்லாவிட்டாலும்
அடுத்த ஆண்டாவது 3 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்
பீட்டில் இருக்கக்கூடிய அந்தத் திட்டத்தை மாண்புமிகு அமைச்
சர் அவர்கள் நிறைவேற்றித் தரும்படி நான் கேட்டுக்கொள்
கிறேன்.

கரம்பக்குடி ஒன்றியத்தில் முதலிப்பெட்டி என்ற ஊருக்கு
அருகில் மகாராசா காட்டாற்றின் குறுக்கே ஒரு அணை கட்டு
வதற்கான திட்டம் பற்றி மதிப்பீடு தயார் செய்யப்பட்டு
அரசுக்கு வந்துள்ளது. அதுபற்றியும் மாண்புமிகு அமைச்சர்
அவர்களின் மேலான கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.
அந்த அணையைக் கட்டித்தரும்படி நான் வேண்டிக் கேட்டுக்
கொள்கிறேன்.

(மாலை 4–50)

அதற்கு அடுத்தாற்போல கரம்பக்குடி ஒன்றியத்திலே,
வெட்டங்குடி, கண்ணக்கன்காடு ஆகிய பகுதிகளுக்கு இடையே
மாங்கோட்டை ஆறு இருக்கிறது. அங்கே காரைக்குறிச்சிக்
குளம் என்று ஒரு குளம் இருக்கிறது. அந்தக் குளத்திற்கு அரு
காமையில் ஒரு அணை கட்டுவதன் மூலமாக 10,15 குளங்களுக்கு

தண்ணீர் நிரம்பி அங்கே பாதையில் பயிரிடக்கூடிய பயிர்களை காக்கக்கூடிய அளவிற்கு காவேரக்குறிச்சி குளத்திலே ஒரு அணையைக் கட்டித்தரவேண்டும் என்றும் தங்கள் மூலமாக இந்த மன்றத்திலே வைக்கிறேன்.

அதற்கு அடுத்தாற்போல திருவரங்குளம் ஒன்றியத்தைச் சார்ந்த நா. கொத்தமங்கலம் என்று சொல்லக்கூடிய பகுதியில் ஆதி திராவிட மக்கள் பெரும்பான்மையாக இருக்கிறார்கள். அங்கே வெள்ளாற்றில் ஒரு அணையைக் கட்டாத காரணத்தால், ஆண்டுதோறும் மழை பெய்யும்போது தண்ணீர் தேங்காத ஒரு நிலை இருக்கிறது. ஆகவே வெள்ளாற்றின் குறுக்கே ஒரு அணையைக் கட்டுவதன் மூலம் நீசுவப்பட்டு மற்றும் நா. கொத்தமங்கலம் பகுதியில் இருக்கக்கூடிய ஆதி திராவிட மக்களுக்கு பெரும் உபயோகமாக இருக்கும். ஆகவே அந்த அணையை உடனடியாக கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துரிதமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று உங்கள் மூலமாக அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தாற்போல இங்கே நீண்ட நெடு நாட்களாக ஒரு குறை இருக்கிறது. ஆலங்குடி பகுதி ஒரு பேரூராட்சியாக இருக்கிறது. பேரூராட்சியின் மையப் பகுதியாகவும் அது இருக்கிறது. அங்கே கடலை மில்களும், ஆயில் மில்களும் அதிகமாக இருக்கின்றன. அது ஒரு வணிகத்தலமாகவே மாறிக்கொண்டிருக்கிறது. ஆகவே அங்கே ஒரு தங்கும் விடுதி கட்டித்தர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கு அடுத்தாற்போல கொத்தமங்கலம் என்று சொல்லக்கூடிய ஒரு ஊரில் இருக்கிற பெரிய கண்மாயிலிருந்து சேந்தங்குடி வழியாக செல்லக்கூடிய அன்னதான காவிரி உள்ள வாய்க்கால் 20, 25 ஆண்டுக்காலமாக மராமத்து செய்யாமல் அந்தப் பகுதிகள் மிகவும் தூர்ந்து, அத்தோடு 1983-லே அடித்த புயலால் பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையிலே அந்த வாய்க்கால்கள் உடைந்து, அந்த உடைப்பை இன்னும் அடைக்க முடியாத நிலையில், மிகவும் மோசமாக அன்னதான காவிரி வாய்க்கால் பாதிக்கப்பட்டிருக்கிற காரணத்தால், அந்தப் பகுதியிலே இருக்கிற 10, 15 குளங்களுக்கு தண்ணீர் இல்லாமல் அந்தப்பகுதி ஆண்டுதோறும் வறட்சியால் பாதிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அந்த அன்னதான காவிரி வாய்க்காலை மராமத்து செய்து, அதிலே 2, 3 பாலங்களையும் அமைத்துத் தர வேண்டும் என்று அமைச்சருடைய கவனத்திற்கு உங்கள் மூலமாகக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்



கரம்பக்குடி ஒன்றியத்தில் உள்ள கரும்பம்பட்டி ஊராட்சியில் உள்ள ஆயிப்பட்டி குளத்திற்கு ஒரு பெட் டேம் கட்டுவதன் மூலமாக பாதைகளில் குடி அமர்த்தப்பட்டுள்ள ஆதி திராவிட மக்களில் பெரும்பகுதியினர் பயன் அடையக்கூடிய நிலை ஏற்படும். ஆகவே அங்கே ஒரு பெட் டேம் அமைத்துத் தரவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

கரம்பக்குடி பெரிய குளம் தொடந்தாற்போல மராமத்து செய்ய முடியாத நிலையில் இருக்கிறது. ஆகவே அதை மராமத்து செய்து கொடுப்பதோடு, அங்கே அக்கினி ஆற்றிலிருந்து கால்வாய் வெட்டப்பட்டு இருக்கிறது. அந்தக் கால்வாய் தூர்ந்து போன நிலையில் இருக்கிறது. அந்த கரம்பக்குடி பெரிய குளத்திலிருந்து கண்மாய்க்கு போகக்கூடிய அந்தக் கால்வாயையும் மராமத்து செய்து, அந்தக் குளத்தையும் மராமத்து செய்து தரும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களை உங்கள் மூலமாக நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கு அடுத்தாற்போல அக்கினி ஆற்றின் குறுக்கே 3 கோடி 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையோடு இங்கே அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. நான் சென்ற முறையிலும் இந்த மானியத்தில் பேசும்போது அந்தக் கோரிக்கையைக் குறித்து பேசினேன். இந்த முறையும் பேசியிருக்கிறேன். ஆகவே அடுத்த ஆண்டாவது இந்தத் திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தரவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொண்டு, ஆலங்குடிக்கு ஒரு தங்கும் விடுதியை அரசாங்கம் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த மாற்றுத் தலைவருக்கு நன்றி தெரிவித்து வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம்.

திரு. என். சண்முகம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தின் நெற்களஞ்சியமான காவிரிப்பாக்கம் பகுதியைச் சார்ந்த எனக்கு பேச வாய்ப்பு தந்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டைப் பொறுத்தவரையில், அதிலும் பொதுப்பணித்துறை மானியக் கோரிக்கைகளைப் பொறுத்தவரையில் வட ஆற்காடு மாவட்டம் முழுவதுமாக பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வட ஆற்காடு மாவட்டம் மாநிலத்திலேயே நெல் உற்பத்தியில் தஞ்சை மாவட்டத்திற்கு இரண்டாவது இடத்திலே இருந்தாலும் அரசாங்கத்தினுடைய மானியம் அளிக்கின்ற நிலைமைகளிலோ அல்லது வளர்ச்சிப் பணிகளுக்கு முக்கி

யத்துவம் தருவதிலோ நாங்கள் இரண்டாவது இடத்தைக் கூட பெற முடியாத நிலையிலே இருக்கிறோம் என்பதைக் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். வட ஆற்காடு மாவட்டத்தில் காவேரிப்பாக்கம் ஏரி மிகப் பெரிய ஏரியாகும். காவேரிப்பாக்கம் பகுதியிலிருந்து திருவள்ளூர் பகுதி வரையில் இருக்கிற நிலத்தடி நீரைப் பாதுகாத்துக்கொண்டிருக்கிற அந்த ஏரியில் பராமரிப்பிற்காக இந்த ஆண்டும் நிதி ஒதுக்காதது எங்களுக்கு மீண்டும் வருத்தத்தைத் தருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களால் பார்வையிடப்பட்ட காவேரிப்பாக்கம் ஏரியின் வளர்ச்சிப் பணிகளுக்காக 26 கோடி ரூபாய் அளவில் ஒரு திட்டம் தீட்டப்பட்டு, அந்த ஏரியின் கரை வாரி, கரைகளை பலப்படுத்தும் திட்டம், கொள்ளளவை உயர்த்தும் திட்டம் இந்த ஆண்டும் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பதால், அடுத்த ஆண்டிலாவது இந்தத் திட்டத்தை செயல்படுத்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

கூடுதல் பாசன வசதிக்கு வசதி செய்யப்படும் நிலத்தடி நீர் காப்பாற்றப்பட வேண்டுமென்று கூறிக்கொண்டு அதற்கான திட்டங்களைச் செயல்படுத்துவதில் நாம் மெத்தனமாக இருப்போமானால், நிலத்தடி நீர் முழுமையாக பாழாகிவிடும் நிலை உருவாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொடர்ந்து மழை தவறி வருகிற காரணத்தால், மழை எப்போதாவது பெய்யும் என்ற சூழ்நிலை இருப்பதால், மழை எப்போதெல்லாம் பெய்கிறதோ அப்போதெல்லாம் கிடைக்கிற உபரி நீரை முழுவதுமாக திரட்டி வைத்துக் கொள்கிற அளவிற்கு பொதுப்பணித்துறையில் திட்டங்கள் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். பொதுப்பணித்துறை தன்னுடைய திட்டங்களையெல்லாம் அமலுக்குக் கொண்டு வருகிறபோது செலவிடப்படுகிற பணத்திற்கு ஏற்ற ஆதாயம் இருக்கிறதா, அதற்கான பலன் கிடைத்திருக்கிறதா என்று திட்டமிடுகிற நேரத்தில் பல வளர்ச்சிப் பணிகள் பாதிக்கப்படுகிற வாய்ப்பிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் எவ்வளவு மழை பெய்தாலும், அவ்வளவு நீரையும் தேக்கி வைத்துக்கொள்கிற அளவிற்கு ஏரிகளின் கொள்ளளவை உயர்த்துகின்ற திட்டங்களை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம். இந்தத் திட்டங்கள் உருவாக்கப்படுமானால் நம்முடைய வளர்ச்சிப் பணிகள் எல்லாம் மிக அற்புதமாக அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். ஏனென்றால் பல நேரங்களில் ஏராளமாக நீர் வந்து ஆற்றிலே வெளியேறும் பல நேரங்களில் நீரே வராது. இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்



கிற காரணத்தால் விவசாயத்தில் கடுமையான பாதிப்பு ஏற்படுகிறது என்பதால் கொள்ளளவை உயர்த்துகிற திட்டங்களைச் செயல்படுத்த வேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொள்கிறோம்.

கடந்த மழையின் போது காவேரிப்பாக்கம் ஏரியின் கரை கிட்டத்தட்ட 300 அடிக்கு மேல் சரிந்துவிட்டது. உடனே உயர் அதிகாரிகள் வந்து கரைகளைப் பலப்படுத்தினார்கள் என்பதை மறுக்கவில்லை. பல நூற்றுக்கணக்கான லாரிகள் மண்ணைக் கொட்டியும், கொட்டப்பட்ட மண் உடனடியாக மறைந்துவிடுகிற சூழ்நிலை ஏற்பட்ட போது அந்த உயர் அதிகாரிகள் ஒரு மைல், இரண்டு மைல் தூரத்திற்கு கரையை விட்டு பல இடங்களுக்குச் சென்று, நீர் எங்கே போகிறது, எந்த இடத்தில் கசிவு ஏற்படுகிறது என்பதையெல்லாம் சரியான முறையில் கவனித்தார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். பொதுவாக ஏரியெல்லாம் கட்டப்பட்டு 400 ஆண்டுகள், 500 ஆண்டுகள் ஆகிவிட்ட நேரத்தில் நீரைத் தாங்கித் தாங்கி அவற்றின் கரைகள் எல்லாம் மேற்கொண்டு நீரைத் தாங்கக்கூடிய சக்தியை இழந்துகொண்டிருக்கிறதோ என்ற அச்ச உணர்வை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரக்கடமைப்பட்டிருக்கிறோம். ஏனென்றால் பல பாலங்களும், பல சாலைகளும் அமைக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டதால், தங்களின் சக்தியை இழக்கும் போது, ஏரியின் கரைகளும் அவ்வாறு தங்கள் சக்தியை இழக்கிறதோ என்ற அச்ச உணர்வை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரக்கடமைப்பட்டிருக்கிறோம்.

காவேரிப்பாக்கம் பொறுத்தவரையில் அந்தப் பகுதியில் 1-1/2 இலட்சம் ஏக்கருக்கு மேல் நெல் மகசூல் இருக்கிற சூழ்நிலையில் அந்த ஏரியின் பராமரிப்பிற்காக 20 ஆண்டுகளில் எவ்வளவு செய்திருப்போம் என்று கணக்கிட்டுப் பார்த்தால் 20 இலட்சம் அல்லது 25 இலட்சம் ரூபாய் அளவிற்குக்கூட வளர்ச்சிப் பணிகள் நடந்திருக்காது. வெள்ளம் வருகிற போதும், வறட்சி வருகிற போதும் தான் நிவாரணப் பணிகள் நடைபெறுகிறதே தவிர மற்ற காலங்களில் எந்தப் பணிகளும் நடைபெறுவதில்லை. இந்த நிலை இல்லாமல் அந்த ஏரியை முழுமையாக பராமரித்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து 200, 300 ஆண்டுகளுக்கு முன்னால் வெட்டப்பட்ட பாசனக் கால்வாய்கள் எல்லாம் இன்றைக்குத் தூர்ந்து, முழுமையாக நீரை வெளியேற்றும் சக்தியை இழந்திருப்பதால, கால்வாய்களை ஒட்டுமொத்தமாக லைனிங் செய்து சீர்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

வட ஆற்காடு மாவட்டத்தில் மூன்றாவது பெரிய ஏரியான மகேந்திரவாடி ஏரியின் வரத்துக் கால்வாய்கள் பாதிக்கப்பட்டிருப்பதால் வருகிற தண்ணீர் ஒட்டு மொத்தமாக காவேரிப்பாக்கம்

[திரு. என். சண்முகம்] [1986 ஏப்ரல் 30

ஏரியில் விழுந்து விடுவதால் மகேந்திரவாடி மக்கள் பெரிதும்
பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, அந்தப் பகுதி மக்கள் பயன
டைகிற அளவிற்கு அந்தக் கால்வாய்களைப் புதுப்பித்துத் தர
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 5-00)

அடுத்து நிலத்தடி நீரைப் பாதுகாக்கின்ற வகையில் கொண்டு
வரப்பட்டு இருக்கின்ற பாலாறு பற்றிய அடிகள் பல விவசாயி
களுக்கு துன்பத்தைக் கொடுத்துக் கொண்டு இருப்பதை நான்
அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். பாலாற்
றில் ஏற்கெனவே ஒரு 5 கி.மீ. அல்லது 10 கி.மீ. தூரத்திற்கு
தடுப்புச் சுவர் கட்டியிருப்பார்களானால் பெய்கின்ற மழை நீர்
அத்தனையும், வருகின்ற வரத்து நீர் அத்தனையும் அங்கே தேக்
கப்பட்டு, பாலாற்றினுடைய நிலத்தடி நீர் பாதுகாக்கப்பட்டு
இருக்கும். ஆனால், இப்படிப்பட்ட திட்டங்கள் எல்லாம் வெள்
ளைக்காரன் காலத்திலேயிருந்து போடப்பட்டும் கூட பின்னால்
பல அரசுகள் வந்தும் கூட செயல்படுத்துவதற்கு யாரும் இல்லாத
காரணத்தால், மழையும இல்லாத காரணத்தால், நிலத்தடி நீரை
கிணறு வெட்டி, ஏராளமாக எடுக்கின்ற அந்தச் சூழ்நிலையை
உருவாக்காத காரணத்தாலே நிலத்தடி நீர் இன்று ஒரு மிக
லான சூழ்நிலையில் இருந்தாலும், நிலத்தடி நீரைப் ... வெறு
நீர் நமக்கு இல்லாத சூழ்நிலையில், ... நாம் ...
கொண்டு இருக்கிறோம். வசதி படைத்தவர்கள், ... இருக்
இருப்பவர்கள், கிணறுகளை வெட்டி, ஆயில் எஞ்சின் போட்டு,
பயிர் செய்து, பலன் அடையக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.
ஆனால் வசதி இல்லாதவன், அரசிலே கடன் பெற்று, கூட்டுறவு
வங்கியிலே கடன் பெற்று, விவசாயம் செய்யலாம் என்றால்,
அதற்கான வாய்ப்புகள் எல்லாம், வசதிகள் எல்லாம் இல்லாத
நிலைமையிலே, ஏழைகளை மேற்கொண்டும் ஏழைகளாக ஆக்கு
வதற்கான விதிமுறைகள்தான் இருக்கின்றன. எந்தக் காலத்திலோ
உருவாக்கப்பட்ட அந்தச் சட்டங்களை எல்லாம் இந்தக் காலத்
திற்கு ஏற்றாற்போல அதிலே மாறுதல்களைச் செய்து தருமாறு
கேட்டுக்கொள்கிறேன்.

மற்றும் இந்த கசிவுநீர்க் குட்டைகள் எல்லாம் அமைக்கப்
பட்டுக்கொண்டு வருகின்றன. நான் அவைகளை எல்லாம்
பாராட்டுகிறேன். இந்த கசிவு நீர்க் குட்டைகள் எல்லாம் 25
ஆண்டுக்காலத்திற்கு முன்பு, 30 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்
பட்டு இருந்தால், நிலத்தடி நீர் காப்பாற்றப்பட்டு இருக்கும்.
ஆனால், காலம் கடந்து செய்தாலும் இந்தத் திட்டத்தை நான்
வரவேற்கிறேன். அதே நேரத்தில் மழை நீரை ஏற்றுக்கொள்
கிற மண்ணும் இருக்கிறது. மழை நீரை நிராகரிக்கின்ற மண்
ணும் இருக்கிறது. சில மண்ணிலே மழை பெய்யுமானால், அந்த
மண்ணால் ஈர்க்கப்பட்டு, பூமியிலே ஓடுகின்ற சூழ்நிலை இருக்கும்.



1986 ஏப்ரல் 30] [திரு. என். சண்முகம்]

சில மண்ணிலே மழை பெய்தாலும் எவ்வளவு நீர்வரத்து இருந்
தாலும், ஒரே ஒரு சொட்டு நீரைக்கூட அந்த மண் ஈர்க்கின்ற
சக்தி இல்லாது போய்விடும். எனவே, எந்த இடத்திலே கசிவு
நீர்க் குட்டைகள் கட்டினால், நீர் வளம் வருமோ, ஊற்றுகள்
தோன்றுமோ, அந்த இடத்திலேதான் அந்தக் குட்டைகள் கட்
டப்பட்டு இருக்கிறதா என்பதை அரசு பரிசீலனை செய்ய வேண்
டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். எந்த இடத்திலே கசிவு
நீர்க் குட்டைகளைக் கட்டி இருந்தாலும், கட்டப்பட்டு இருந்
தாலும், அங்கெல்லாம் ஊற்று நீர் வரும் என்று எதிர்பார்க்க
முடியாது என்பதை அரசுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். இந்த
ஆண்டைப் பொறுத்த வரையிலும் கர்நாடக அரசு காவிரியி
னுடைய உபரி நீரை மீண்டும் பயன்படுத்திக் கொள்வதற்காக
தங்களுடைய பட்ஜெட்டிலே 60 கோடி ரூபாயை ஒதுக்கி இருப்ப
தாக பத்திரிகைத் தகவல் கூறுகிறது. இப்படி உபரி நீரைப்
பயன்படுத்திக் கொள்வதற்காக மட்டும் 60 கோடி ரூபாயை
அவர்கள் ஒதுக்கியிருப்பார்களானால், அது தமிழகத்திற்கு ஒரு
பெரும் அடியாகத்தான் அமையும் என்ற காரணத்தால், இப்படி
ஒதுக்கப்பட்டிருப்பது உண்மைதானா என்பதை அரசு
கண்காணித்து, கர்நாடக அரசோடு மீண்டும் அதற்கான பேச்சு
வார்த்தைகளைத் தொடர வேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து பொதுப்பணித்துறைக்குச் சொந்தமான இடங்கள் பல
இருக்கின்றன. அங்கே 50 ஆண்டுக் காலம், 60 ஆண்டுக் கால
மாக வீடுகளைக் கட்டிக்கொண்டு இருப்பவர்களுக்கு இன்னும்
பட்டா தர முடியாத நிலைமை இருக்கிறது. பல ஏரிகளுக்கு
நீர் வரத்து வந்து 50 ஆண்டுக் காலம், 60 ஆண்டுக் காலம்
ஆகிறது. இன்னும் அவைகள் எல்லாம் நீர்ப் பிடிப்பு என்று இருக்
கின்ற காரணத்தினாலே, அவைகள் எல்லாம் காலத்திற்கு ஒவ்
வாத நிலையில் இருக்கிற காரணத்தாலே, அரசு சரியான முறை
யில் விசாரித்து அந்த இடங்களில் வீடுகளைக் கட்டிக் கொண்டு
இருப்பவர்களுக்கு எல்லாம் வீட்டு மனைப் பட்டாக்களை வழங்க
வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ள முகையூர்
தொகுதியில் சித்தப்பட்டு கால்வாய்த்திட்டத்தை நிறைவேற்றித்
தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். மற்றும்
சாத்தனூர் அணையின் நீரை தென்பெண்ணை ஆற்றில் திறந்து
விடவில்லை என்றால், பாசனம் பெறும் சுமார் ஆயிரம் ஏக்கர்
நிலங்களில் உள்ள பயிர்கள் எல்லாம் கதிர் விடும் தருவாயில்
உள்ளது. இந்த நீர் இன்னும், 4, 5 நாட்களுக்குத்தான் போது
மானதாக உள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

[திரு. என். சண்முகம்] [1986 ஏப்ரல் 3

தென்பெண்ணை ஆற்றில், சாத்தனூர் அணையின் தண்ணீரை
திறந்துவிட்டு, சுமார் 20 இலட்சம் பெருமானமுள்ள நெற்பயிர்
களைக் காப்பாற்றித் தருமாறு கேட்டுக்கொண்டு, வாய்ப்பு அளித்
தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

*திரு. சு. திருமலைச்சாமிக் கவுண்டர் : மாற்றுகு தலைவ
அவர்களே, நான் சார்ந்திருக்கிற இந்திய தேசிய காங்கிரஸ் கட்
யின் சார்பாக இந்த நீர்ப்பாசன மானியக் கோரிக்கையின் மீது
பேச வாய்ப்பு அளித்தமைக்கு முதற்கண் என்னுடைய மனமார்ந்த
நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்

அடுத்தபடியாக நான் சொல்லவிரும்புவது, மூணாறு திட்டம்
என்ற பெரிய திட்டத்தைப் பற்றி இந்த திட்டம் பற்றி, மதிப்
பிற்குரிய சி. சுப்பிரமணியம் அவர்கள் பாராளுமன்றத் தொகுதிக்
காக, பழனித் தொகுதியில் இருந்து போட்டி போட்ட
போது, இந்தத் திட்டத்தைப் பரிசீலனை செய்து, இந்தத் திட்டத்
தைப்பற்றி கேரள அரசோடு பேசி அங்கே ஒரு அணையைக் கட்டி
கிழக்கு முகமாக 7 கிலோ மீட்டர் அதை உடைத்துக் கொண்டு
வந்தால் தமிழகத்திற்கு நிறைய தண்ணீர் கிடைக்கும் என்று
ஒவ்வொரு கிராமத்திலேயும் சொல்லி, இந்தப் பாலைவனத்தை
எல்லாம் நான் சோலைவனமாக மாற்றுவேன் என்று கூறி வந்தார்
கள். அந்தத் திட்டத்தை அம்மையார் அவர்கள் பழனி வந்த போது
அங்குபுரட்சித் தலைவர் அவர்களும் அம்மையார் அவர்களும்
திரு. சி. சுப்பிரமணியம் அவர்களும் மேடையில் இருந்தபோது
அம்மையார் அவர்கள் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் சொன்ன
திட்டத்தை நான் நிறைவேற்றித் தருவேன் என்று வாக்குறுதி
அளித்தார்கள். அதற்குப் பின்னால் அங்கு அம்மையார் அவர்கள்
அந்தத் தடவை தோற்றுப்போய்விட்டார்கள். ஜனதா ஆட்சி
வந்தது. அதற்கு பின்னால் அந்தத் திட்டத்தைப் பற்றி யாரும்
நினைக்காமல் அந்தத் திட்டமும் நிறைவேற்றப்படாமல் பழைய
நிலையில் இருக்கிறது. நான் போன 1985-86 ஆம் ஆண்டு
நிதி நிலை அறிக்கையில் பேசும் போது நான் கூறினேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும் கேரள அமைச்சரோடு
பேச்சு வார்த்தை நடத்த தேதி கேட்டு இருக்கிறோம், தேதி
கிடைத்த உடன் நாங்கள் போய் பேசி முடிவு எடுக்க இருக்கிறோம்
என்று சொன்னார்கள். ஆனால் இதுவரை எந்தவிதமான பேச்சும்
நடந்ததாக பத்திரிகையின் வாயிலாகவும் தெரியவில்லை. எனக்கும்
எந்த பதிலும் வரவில்லை. நாங்கள் பேச்சு வார்த்தை முடித்த
மறுநாளே எங்களுக்கு தகவல் கொடுத்தார்கள், நாங்கள் கேரள
அரசோடு பேச்சு வார்த்தை நடத்தி இந்தத் திட்டத்தை நிறை
வேற்ற பெரு முயற்சி எடுப்போம் என்று சொன்னார்கள். நான்



1986 ஏப்ரல் 30] [திரு. சு. திருமலைச்சாமிக் கவுண்டர்]

நேரில் போய் பார்த்தபோது கூட அந்தக் கருத்தைத் தான் அவர்
கள் சொன்னார்கள். அந்த முறையில் அந்த மூனாறு திட்டம்
என்பதுஅங்கு மதிப்பிற்குரிய சி. சுப்பிரமணியம் அவர்கள்
கொண்டு வந்த ஒரு பெரிய திட்டம் ஆகும். அந்தத் திட்டம் நடை
முறைப் படுத்தப்பட்டால் கிட்டத்தட்ட நமது தமிழ்நாட்டில் 10
லட்சம் ஏக்கர் பாசன வசதி பெறும். அந்த 3 ஆறும் ஒன்றாகச்
சேர்ந்து அரபிக் கடலில் கலக்கிறது. அதன் குருக்கே 7 கிலோ
மீட்டர் குடைந்து அணை கட்டினால் அங்கு அறிவித்து இருக்கிற
அந்தத் திட்டம் வந்து சேரும். அங்கே பழனி பாராளுமன்ற
தொகுதியில் ஒவ்வொரு கிராமங்களிலும் இதை சொல்லிவந்தார்
கள். அந்தத் திட்டம் தான் இந்த மூனாறு திட்டம் என்பதை நான்
மகிழ்ச்சியோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஏன் என்றால்
போன தடவை கூட இதை நான் சொல்லியிருக்கிறேன்.
இந்தத் திட்டத்தை நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
பெருமுயற்சி எடுத்து எப்படியாவது தமிழகத்தில் கொண்டு
வர வேண்டும் என்று இந்த மன்றத்தின் சார்பாகக் கேட்டுக்
கொள்கிறேன். வறட்சிப் பகுதியான பழனி பகுதியில் கோவை
மாவட்டம், அண்ணா மாவட்டம், பெரியார் மாவட்டம், போன்ற
3 மாவட்டங்களில் தண்ணீர் பாயும் என்பதை நான் அவர்கள்
கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அதே நேரத்தில்
நமது மதிப்பிற்குரிய கேரள முதலமைச்சர் கருணாகரன்
அவர்கள் போன வருடம் இங்கே வந்த போது நான் நேரில்
கேட்டேன், அவர்கள் கூறினார்கள். நாங்கள் தண்ணீர் கொடுக்கத்
தயாராக இருக்கிறோம். நீங்கள் அரிசியும், சிமெண்டும் கொடுக்க
வேண்டும் என்றும் அப்போது நாங்கள் அந்தத் தண்ணீரை உங்
களுக்குக் கொடுக்க உறுதியாக இருக்கிறோம் என்று சொன்னார்
கள். அதை நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவரோடு
பேசி இதில் முடிவு எடுத்தால் நமது தமிழகம் தஞ்சையைப்
போல் காட்சி அளிக்கும் என்பதை நான் இந்தச் சபையில் கூறிக்
கொள்ள விரும்புகிறேன்.

நமது அமைச்சர் அவர்கள் ஒரு தடவை அவர்களோடு பேச்சு
வார்த்தை நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
கேரள நீர்ப்பாசன அமைச்சர் திரு. கருணாகரன் அவர்களோடு
நமது அமைச்சர் அவர்களும் இருவரும் பேசி அவர்கள் ஏதோ
நீங்கள் வாருங்கள் பேசி முடிவு செய்யலாம் என்ற ஒரு முடிவு
அறிவித்து இருந்ததாக நான் பத்திரிகை வாயிலாகப் படித்தேன்.
நமது அமைச்சர் அவர்கள் 1986-87 ஆம் ஆண்டு 7-வது
ஐந்தாண்டுத் திட்டத்திலாவது அந்தத் திட்டத்தை சேர்த்து அந்த
மாபெரும் திட்டத்தை நீங்கள் கொண்டு வருவீர்களானால் நமது
மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய பெயரும் விளங்

(திரு. சு. திருமலைச்சாமிக் கவுண்டர்] [1986 ஏப்ரல் 30

கும். அங்கு அவருடைய காலத்திலேயே இந்தத் திட்டத்தின் வேலையை ஆரம்பித்து விட்டால் கூட பின் வரும் சந்ததியினர் எல்லாம் நன்கு வாழ முடியும் என்பதை இந்த மன்றத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(மாலை 5-10)

இன்னும் மாண்புமிகு திரு. ப. சிதம்பரம் அவர்களிடம் கூறினேன். அவர்கள் சொன்னார்கள், கேரள அரசும், தமிழக அரசும் பேசி ஒரு முடிவு எடுத்து எங்களுக்கு அறிவித்தால் அதைப் பற்றி நாங்கள் ஆலோசனை செய்கிறோம் என்று என்னிடம் கூறினார்கள். அந்த வகையில் தான் நான் இந்த மாமன்றத்தில் கூற விரும்புகிறேன்.

பாண்டியாறு, புன்னம்புழா திட்டம் ஒன்று இருக்கிறது. நான கோவையிலே சேர்மனாக 1966 ஆம் ஆண்டிற்கு முன்பேயிருந்து, அப்போதிருந்த திட்டப் இந்தப் பாண்டியாறு - புன்னம்புழாத் திட்டம்.

**மாண்புமிகு திரு. பா. செ. மு. யூசுப் :** தலைவர் அவர்களே, இரண்டு மாநிலங்களும் பேச்சு வார்த்தை நடத்தி முடித்துவிட்டால், அதற்குப் பிறகு நாம் விவாதிப்பது என்பது காதலர்களுக்குத் திருமணம் முடிந்தபிறகு, மணமக்களுடைய பெற்றோருக்கு வேலையில்லை என்பதற்கு ஒப்பாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சு. திருமலைச்சாமிக் கவுண்டர் :** தலைவர் அவர்களே, இரண்டு அரசுகளும் பேச்சு வார்த்தை முடித்து, எங்களுக்கு அறிவுரைகளும் வந்து, நாங்கள் அதற்குண்டான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். நீங்கள் இருவரும் பேசி ஒரு முடிவிற்கு வருவீர்களேயானால், நாங்கள் மேலிடத்தில் பேசி, ராஜீவ் காந்தி அவர்களிடம் சென்று, அதற்குண்டான முயற்சிகளை நாங்கள் எடுத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். மூப்பனார் அவர்களிடமும், வெங்கட்ராமன் அவர்களிடமும் சொல்லியிருக்கிறேன். இப்போது தமிழகத்திலிருந்து 5 மெம்பர்கள் இருப்பதால் நமக்கு ஆதரவாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்தைச் செழிப்படையச் செய்யும் ஆசையும் நம் எல்லோருக்கும் இருக்கிறது. நீங்கள் இருவரும் பேசி, முடிவு எடுத்த பிறகு, இன்றைக்குப் புரட்சித் தலைவர் அவர்கள் மத்திய சர்க்காரை அணுகினால் அதற்கு ஆதரவு கிடைக்குமென்று நம்புகிறேன்.



1986 ஏப்ரல் 30] [திரு. சு. திருமலைச்சாமிக் கவுண்டர்]

பாண்டியாறு - புன்னம்புழாத் திட்டம் என்பது நீண்டகாலமாக அது பேசிப் பேசி, முடியாமல் இருக்கிறது. அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தால், அங்கு பல்லடம், திருப்பூர் போன்ற வறண்ட பிரதேசங்கள் எல்லாம் செழிப்புறும் நிலங்களாக அமையும் என்பது என்னுடைய கருத்து. நல்லாறு திட்டம்—இப்போது பரம்பிக்குளம் ஆளியாறுத் திட்டம் 1977-ல் ரூ. 21 இலட்சத்திற்கு எஸ்டிமேட் தயார் செய்து, வேலை துவங்குவதாக இருந்தது. அந்த ரூ. 21 இலட்சத்தில் அதைக் கட்டுவதாகச் சொல்லியிருந்தார்கள். அதில் இன்னும் வேலைகள் துவங்கப்படவில்லை. இந்த பட்ஜெட்டில் அதற்கு பணத்தை ஒதுக்கி வேலை செய்ய அனுமதிக்குமாறு உங்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் அமராவதி பாசன வாய்க்கால் இருக்கிறது. அதிலே 40 மைல் தூரம் கான்கிரீட் போடப்பட்டிருக்கிறது. 1966-ல் ராமைய்யா பி.டபிள்யூ.டி. மினிஸ்டராக இருந்தபோது, அதிலே கான்கிரீட் போட்டு, மீதமுள்ள பகுதி இன்னும் போடப்படாமல் இருக்கிறது. 20 ஆண்டுக்காலம் ஆகியும் இன்னும் 5 மைல் கான்கிரீட் போடப்படாமல் இருக்கிறது. தி.மு.க. ஆட்சியிலும் சரி, நீங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னரும் சரி, இன்னும் 5 மைல்களுக்கு கான்கிரீட் போடப்படாமல் இருக்கிறது. எனவே அதற்கு கான்கிரீட் போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

***THIRU T. VENKATA REDDY :** Honourable Temporary Chairman, Sir, I want to place one or two suggestions on the Demands for Irrigation and Buildings Grants put forward by our Government. Irrigation is an important aspect in which the Government must bestow its attention. Many hon. Members were talking that all the rivers in India should be nationalised and that the States should have a right on them. The hon. Member Thiru Hemachandran has been saying that the Central Government has not been taking initiative in this regard. I wish to submit that on this aspect both the late Prime Ministers Pandit Jawaharlal Nehru and Shrimathi Indira Gandhi and our beloved present Prime Minister Thiru Rajiv Gandhi have been pressing that all the rivers must be nationalised and water which has been flowing through the rivers without any use to the citizens must be utilised for the benefit of each individual. In this respect, the Central Government is specific on this.

But, whenever the Central Government tend to advise them strongly each State finds some excuse or other to say against the Central Government. They used to blame the Central Government stating that they are unnecessarily interfering with the rights of the individual States. In such state of affairs only all the States concerned should sit together under the leadership of the Hon'ble Prime Minister and get things

[Thiru. T. Venkata Reddy] [1986 ஏப்ரல் 30

sorted out very easily. The Hon'ble Chief Ministers or the Ministers should not feel shy to get the advice of the Prime Minister on maximum utilisation of rivers which are flowing in India. Therefore I request the Hon'ble Minister not to feel shy in approaching the Central Government and the persons in authority there considering the need for water for our State.

Even as regards the West Flowing rivers, as one of our Hon'ble Members had stated, the Kerala Government is not an alien but it is also a State under the Union of India. If you approach them properly and if each one of the Ministers concerned takes the advice of the Experts, things can be sorted out. If an Expert Committee is appointed and all the Chief Ministers and concerned Ministers take the advice of such Expert Committee this problem can be solved. I request Hon-Minister to take initiative in this regard to appoint an Expert Committee. If such an Expert Committee is appointed and its opinion is obtained and the Ministers and Chief Ministers concerned sit together and discuss on the basis of the Expert Committee's report, then there will be no difficulty in overcoming this problem.

In our District, Kalavarapalle Dam has been taken up in 1975. Nearly 10 years are over. We are yet to see the dam completed. It has been started with the laudable object of benefiting the drought affected Hosur area and also to supply the Industrial Development to the SIPCOT Complex. Hosur is a drought prone area where water problem is very acute. So, the Government thought it good to have the Kalavarapalle Dam in the year 1975. But when three crores of rupees had been spent, unfortunately an individual has gone to the Court after merely allowing the Government to spend the huge amount and they obtained a Stay. In this aspect I do not want to blame any individual or authority. Because of the fact no action has been taken earlier the stay has been made absolute. I have been requesting the Minister and also the concerned officials of this area to see that the case is expedited. The case is pending for the last five years and it has not reached even the initial stage.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம் மாநிலத்தைப் பொறுத்த மட்டில் முழுக்க முழுக்க வழக்கு மன்றத்தில் நாம் போராடித்தான் வருகிறோம். ஆனால் வழக்கு மன்றத்தில் வழக்குகளை ஒத்தி வைப்பதோ அல்லது தீர்ப்புகளை ஒத்தி வைப்பதோ பற்றிய பிரச்சினையில் நாம் கேட்கக் கூடிய இடத்தில் இல்லை. நாம் கேட்டு அவர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலையில் இல்லை என்பதை மாமன்ற உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். We are fighting tooth and nail.



1986 ஏப்ரல் 30]

THIRU T. VENKATA REDDY : Sir, it is also true. There is a lot of delay in the court. The courts should think that they are not only there to render justice but also to offer equity to lakhs of people whose welfare is involved in the dam. I am sure that the Hon'ble Minister and the hon. Members are interested in seeing that the drought prone area is developed. Without any malice, the Government has taken the construction of the dam. When that is so, I do not think the High Court, which is also a Court of Equity, can delay the matter. Pendency of the matter has been there for the past 5 years whereas so many other cases have beeen disposing of within six months. They are disposing of many cases. But this is a case where a sum of Rs. 6 crores worth of Dam is involved and the lives two lakhs of people are affected. Not only that, the industrially developed area, Sipcot, which is a money spinning area has become an example of industrially developed good area, is also affected. Industria development is suffering for want of water. Such a beneficial dam has been delayed even in the High Court. I am pressing this with agony in my heart. The people who are in the helm of affairs including Government officials and also the High Court have not been able to see the agony of the people. Justice is denied to the people to whom the justice is required. Therefore, I humbly request this Assembly to request the Government to expedite the case which is in the High Court, which is also a Court of Equity, wherein many people will benefit by that project. That project was also delayed bacause of other procedural wrangles. Irregular procedures have also delayed the construction of the Dam. The Government also can bring in an Ordinance and I have been requesting the Hon. Minister for Irrigation before also so that the Dam can be completed soon. That is also being delayed. In this aspect, I have been urging the completion of the Dam for the last three years. The Newspapers have also highlighted the necessity of completing this Dam. All the people at Hosur have taken out a procession to see that the Dam is completed, but still the Government has....

(மாலை 5.20)

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, சபை நடந்து கொண்டிருக்கிறது, சபையில் போதுமான எம்.எல். ஏ. க்கள் இல்லை. கோரம் இல்லாமல் நடந்து கொண்டிருக் கிறது.

திரு. அ. ரகுமான்கான் : It is violation of the rules. Please stop he proceedings. There is no quorum.

[1986 ஏப்ரல் 30

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சைதை சா. துரைசாமி) : லாபியிலே இருக்கிறார்கள், வருவார்கள்.

திரு. அ. ரகுமான்கான் : விதிப்படி சபை நடக்கவேண்டும். எண்ணிப் பாருங்கள், கோரம் இல்லை. 18 பேர்தான் இருக்கிறோம். சபை நடவடிக்கை நிறுத்தப்படவேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சைதை சா. துரைசாமி) : 26 பேர்கள் இருக்கிறார்கள். உறுப்பினர்கள் அவ்வப்போது டிபன் சாப்பிடப் போய் இருப்பார்கள். அவ்வளவு தான். திரு. வெங்கட ரெட்டி தொடர்ந்து பேசலாம்.

THIRU T. VENKATA REDDY : Sir, With regard to other aspect, we have been seeing that the rains have failed and we have been seeing that when the rain fall has been declining the ground-water table has been going down. The pressure on the ground water is more due to tapping of more ground-water. There is need for tapping more ground water sources for drinking water purposes. We cannot get the rains whenever we require and we cannot expect the rain to shower whenever we require. The best thing the Government can do is to conserve the ground water available. In this connection, I wish to place some of my own suggestions with regard to conservation of ground water. We have been having many tanks in almost all the districts. So many tanks have been silted up and many tanks have been deepened and other tanks have been abandoned in the Revenue Records.

In every Panchayat Union they do not maintain the list of irrigated tanks. Even in Taluk office such registers are not available. Even according to the Revenue Manual it is absolutely necessary that the Panchayat Union Councils must maintain a register of tanks—be it abandoned tanks or the existing tanks. If the tank is of an area less than 50 acres, the register is to be maintained by Panchayat Unions. If the tank is on an area above 50 acres, the Taluk office must maintain registers. Such registers are not at all available either in Taluk office or Union office. I only request the Hon. Minister to see that such registers are maintained either in the Union office or the Taluk office, so that they will be able to know which are the tanks which are available for irrigation, which have been abandoned and which should be repaired and which tanks should be de-silted. Not only that. Wher ever there is necessity and where water availability is there, Government must come forward not only with percolation tanks but should also dig tanks for irrigation. Such things should be taken up on a war footing.



1986 ஏப்ரல் 30] [Thiru. T. Venkata Reddy]

As regards ground water, the level of the ground water will not increase but on the other hand, will be going down. This has been our experience for the last many years, and in 1965 we had dug open wells for percolation purposes in almost all the villages. Such wells are dried now and they are not useful as water is not available in them. We have no bore wells. But every time we have to put more bore wells with more depth, with the result that water table is going down every year. To conserve water I request the Hon. Minister to constitute an Expert Committee or an Advisory Committee and such Committee can advise the Government to take such steps as are necessary to conserve water and also to suggest ways and means to increase the level of the water table. That way we can get water which we can supply to all the villages and also for irrigation purposes. We see that in many of the villages where borewells have been put up, some of them have dried up and water is not available in them, the reason being the ground water table level has gone down. Though huge amount has been spent on borewells they are not useful, so much so the amount spent on them goes waste and the poeple are not able to get benefit from such borewells. So steps have to be taken urgently so as to improve the level of the water table.

Another aspect on which I want to submit is about the tanks in Zamin and Inam villages. The conditions of those tanks have not been brought to the notice of the Government, as a list of such tanks has not at all been prepared. There are tanks which have not been included in the Revenue Records. So, whenever we approach the Collector or the Commissioner for repairs to any of the tanks, the Collector or the Commissioner says that "it is not in the list and so, we cannot undertake any repairs". Such is the state of affairs so far as the tanks in Zamin and Inam villages are concerned. Therefore, I request the Hon. Minister to issue an order immediately so that the Revenue Authorities could take out a list of tanks which are available for use, in Zamin and Inam villages. Though such tanks were once under the control of the Zamindars and Inamdars they are now owned by the Government.

The other aspect that I want to stress is that Dharmapuri is a drought prone area. Unfortunately under the scheme of modernisation of tank irrigation projects with European Economic Community Aid, Dharmapuri has not been included.

(மாலை 5-30)

The drought-prone areas have been announced long back. It has been there on the books of the Government that Dharmapuri district is always a drought-prone area. The rainfall there is very less. Such

a district is not included in the Tank Irrigation Project. I request the Hon. Minister to include Dharmapuri district also under modernisation of Tank Irrigation Project with the European Economic Community Aid so that most of the tanks there could be brought under that Scheme where Rs. 25 crores has been allotted. Such a scheme will definitely benefit our District.

With regard to the repairs to the tanks some of the Members told that repairs to the tanks have not been done properly. Hon. Minister also said, 'Do not cast aspersions on the officials', I am not casting any aspersion on the officials. But what is actually happening is that the Contractors are not properly doing their work and most of the work entrusted to them are not being done properly.

There is a proverb 'Once a Debtor, always a Debtor'. Likewis 'Once a tank is breached always it is breaching. If you undertake repairs to a particular tank this year, next year the same tank gets breached at the same place where the repairs were done. This only shows that th Contractors and the Supervising staff are not properly doing their job I request the Hon. Minister to bear this aspect in mind.

We are spending money only for the benefit of the villagers and Ayacutdars. If the money we are spending is usefully spent we will be rendering service to the Villagers and Ayacutdars. If we do not spend the money usefully we will be only doing great disservice to the Villagers and Ayacutdars. Such service will also result in wastage of Government money and deprival of the benefit to the Ayacutdars. I request that the Contract System of work should be streamlined. In this connection I would like to state that there has been a tendency of entrusting the works to the Contractors under Tender System. I am afraid whether the Government, for reasons best known to them, has been giving good-bye to the Tender System. They have been following the Nomination System. For every work they call for the Contractors and ask them to do the work. There are two drawbacks in this Nomination System. One is that the work is given at the estimated rate. The other is that if the Nomination System is allowed the officials are more likely to misuse their power. If the Tender System is followed the Government also will be benefited because some of the Tenderers may quote even less than the estimated rate. The other benefit is that the best available Contractor will come forward to execute the work. Therefore, I request the Hon. Minister to follow the Tender System for every work, so that the general opinion of dissatisfaction prevailing against the Public Works Department may be wifed.



Our Hon'ble Prime Minsiter, once when he opened a building at Bangalore said, 'This building has been completed within the specified time unlike the other Public Works Department buildings'. What does it show ? Even the Prime Minister is of the opinion that the Public Works Department is not completing the works in time.

Another aspect about which I want to point out is about the condition of the buildings constructed by the Public Works Department. There is a saying that all the buildings constructed by the Public Works Department are not constructed according to the specified standards. Such an opinion prevails everywhere. As we used to say, 'Caesar's wife must be above suspicion' 'The Officials must also act above suspicion'. They should not give room for suspicion, to avoid unnecessary comments coming against them. I request the Hon. Minister to introduce the Tender System so that the money alloted by the Government could be usefully spent, the Government can also get a good name and the people at large will get the benefit of the money spent on the works executed for them.

The other aspect which I want to submit is this. There are many public buildings like schools and other buildings which need to be repaired. Such repair works have not been done properly. No proper attention has been shown to the upkeep and maintanance of such buildings. There are many schools which are in poor condition with no roof tops, where doors are not available, and where windows are not available. Along with the children many outsiders are coming and staying. Such buildings have to be repaired. If the buildings are not properly maintained, I am afraid, such buildings will be lost soon. The amount spent on such buildings will be lost soon. The repairs have to be carried out in time and properly also. Otherwise, the entire building and the money spent on them will be lost. I request the Hon. Minister to see that the public buildings are maintained properly and the repairs are done in time. I only stress these suggestions so that the Government follow the suggestions and implement them.

I request the Hon. Minister once again on my own behalf and on behalf of the people that the Kalavarapalli Dam which is pending for the last 10 years is completed this year with his blessings.

Thank you.

[1986 ஏப்ரல் 30

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** மாண்புமிகு மாற்றுத்
தலைவர் அவர்களே, இன்று காலை முதல் இதுவரை
பொதுப்பணித் துறையின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்க
ளுடைய மேலான கருத்துக்களை இங்கே எடுத்து வைத்திருக்கி
றார்கள். தமிழக அரசின் செயல்முறைகளை ஈடேற்றுகின்ற
தலையாய துறைகளில் பொதுப்பணித்துறையும் ஒன்று என்பதை
நாம் அனைவரும் அறிவோம். இத்துறையின் பணி மேலெழுந்த
வாரியாகப் பார்த்தால் பாசனத் திட்டங்கள் மற்றும் கட்டிடங்
கள் இவற்றை உருவாக்குவதும், அவற்றின் வாயிலாக மக்க
ளுக்குத் தேவையான பாசன வசதிகளை செய்து தருவதும் அல்லது
கட்டிடங்களை பராமரிப்பதும் தான் இந்தத் துறையின்
வேலையாகத் தெரியும். சற்று உள்ளே நுழைந்து பார்த்தால்,
இந்தத் துறையின் பணிகள் அடுத்த துறைகளுக்கும் போகிறது
என்பது தெரியும். நாம் பாசனம் மட்டுமல்லாமல், குடிநீர்
தட்டுப்பாட்டின்போது தேவையான தண்ணீரை, பாசனத்திற்கு
தேவையாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் பாசன கால்
வாய்கள் வழியாக தரவேண்டியிருக்கிறது. இரசாயன ஆலைகள்,
காகித ஆலைகள் போன்றவற்றிற்கு தேவையான தண்ணீரை
கூட பாசன நீர் நிலையிலிருந்து நாம் தருகிறோம்.

தோல் பதனிடும் தொழில் போன்ற ஆபத்தான அபாயமான,
சுற்றுப்புற சூழ்நிலையைக் கெடுக்கின்ற பணிகள், அந்த பணி
களின் வாயிலாக இருக்கக்கூடிய ஆறுகள் போன்ற நீர்நிலைகள்
கெடுக்கப்படுவதனால், அது எவ்வளவு தூரத்திற்கு
கெடுக்கப்படுகிறது அதை மாற்றுவதற்கு என்ன நடவடிக்கை
மேற்கொள்ள முடியும் போன்ற விவரங்களை சேகரித்து மாசு
கட்டுப்பாட்டுத் துறைக்கு தரக்கூடிய பணியிலும் இந்தத் துறை
ஈடுபடுகிறது.

பொதுப்பணித் துறையின் நீர்நிலைகள். ஆறுகள் போன்ற
வற்றில் காடு வளர்ப்பது போன்ற பணிகளை சமூக காடு
வளர்ப்பு திட்டத்தின் கீழ் வனத்துறை மேற்கொள்கிறது
என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள்.
இதேபோன்று அனைத்து துறைகளுக்கும் தேவையான அரசு
கட்டிடங்கள் கட்டுவது, அந்தக் கட்டிடங்களை பராமரிப்பது
போன்ற மிகவும் முக்கியமான பணிகளில் இந்தத் துறை
ஈடுபடுகிறது. இத்தகைய பணிகளில் ஈடுபட்டாலும்கூட
நாட்டில் உள்ள தேவைகள் ஒரு பக்கம் அதிகமாகிக்கொண்டே
வருகின்றன. இன்னொரு பக்கத்தில் அந்த தேவைகளை ஈடு
செய்யக்கூடிய அளவுக்கு நிதிநிலைகள் இல்லாமல் இவை
இரண்டிற்கும் ஊடே ஏற்கனவே அவதிப்பட்டுக்கொண்டு
பணிகளை மேற்கொண்டாலும் கூட அந்த பணிகளை
செவ்வனே செய்யமுடியாத அளவிற்கு, இருக்கக்கூடிய சுயநலம்
பிடித்த கும்பல்களுடைய வெறிபிடித்த வேட்டை ஒருபக்கம்.



1986 ஏப்ரல் 30] [திரு. யா, சை. மு. யூசுப்]

இப்படி பொதுப்பணித் துறை ஒரு பக்கம் எவ்வளவு தான்
தீவிரமான தன்னுடைய பெயருக்கு ஏற்ப பொதுப் பணிகளை
ஆற்றி எல்லோருக்கும் உழைக்க வேண்டும் என்ற நோக்கத்
திலே இருந்தாலும் அந்த உழைப்பின் முழுப் பலன் இந்த
நாட்டிற்கு கிடைக்கக்கூடாத அளவுக்கு பல தீய சக்திகள்
இன்று செயல்பட்டு வருகின்றன என்பதை மெத்த வருத்தத்
தோடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

(மாலை 5—40)

இன்று தமிழ்நாட்டை எடுத்துக்கொண்டால் 130 இலட்சம்
ஹெக்டேர் நிலங்கள் வேளாண்மை செய்யத் தகுதியான நிலங்க
ளாக இருக்கின்றன. அவற்றில் 62 இலட்சம் ஹெக்டேர்
நிலங்கள்தான் வேளாண்மை செய்யப்படுகிற நிலங்களாக
இருக்கின்றன. இந்த 62 இலட்சம் ஹெக்டேர் நிலத்திலும்
பாசன வசதியின் வாயிலாக மட்டும் 30 இலட்சம் ஹெக்டேர்
நிலங்களில் வேளாண்மை செய்யப்படுகிறது. இது நீங்கலாகத்
தமிழகத்தில் 10 இலட்சத்து 50 ஆயிரம் கிணறுகளுக்கு மின்
விசை நீரேற்றிகள் என்ற வகையில் மின்விசை தரப்பட்டிருக்கி
றது என்பதைத் தெரிவித்து இந்த நாட்டிலே இருக்கக் கூடிய
அத்தனை மாநிலங்களையும் விட தமிழகம்தான் மின் விசை
தருவதில் சிறப்பான இடத்தை வகிக்கிறது. தமிழகத்தில்
தான் அதிகமான அளவு எண்ணிக்கையில் தந்து முதலிடத்தைப்
பெற்றிருக்கிறது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன்.

இப்படி அடுக்கடுக்காகப் பல்வேறு முயற்சிகளின் வாயிலாக
தமிழ்நாட்டில் மேற்பரப்பில் இருக்கக்கூடிய தண்ணீரைப்
பொறுத்தவரையில் 94 சதவீதத்தைப் பயன்படுத்திவிட்
டோம். இனிமேல் நிலத்துக்கு அடியில் இருக்கக்கூடிய நிலத்
தடி நீரின் மேல் கவனம் செலுத்தாவிட்டால் வருங்காலத்தில்
நிலைமை மிக மோசமாக இருக்கும் என்பதை உணர்ந்து அவ்வப்
போது ஆய்வுக்காகத் தற்காலிகமான முறையில் அந்த
எண்ணத்திலே துவக்கப்பட்ட நம்முடைய நிலத்தடி நீர்ப்
பிரிவு நிரந்தரமாக ஆக்கப்படக்கூடிய அளவுக்கு இந்த அரசு
தொடர்ந்து முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறது என்பதை நான்
மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பல திட்டங்களை இந்த அரசு மேற்கொள்வதில்லை என்ற
குறைபாட்டை ஒவ்வொரு காலகட்டத்திலும் நாம் சந்தித்து
வருகிறோம்; கேட்டுக்கொண்டுதான் வருகிறோம். ஆனால்
நான் முன்பே சொன்னதுபோல் இருக்கக்கூடிய அத்தனை நீரை
யும் நீர்ப்பாசனத்திற்காக நாம் பயன்படுத்தி விட்டோம்.
இப்போது இருக்கக்கூடிய சின்னச்சின்ன ஓடைகள் போன்ற
வற்றில் சிறிய, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை உருவாக்கக்

கூடிய அளவுக்கு நிலைமை இருக்கிறது என்பதைச் சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன். இதனை மாற்றுவதற்காகத்தான்
மேற்கு நோக்கிப் பாய்கிற ஆறுகளை எல்லாம் அதாவது கேரளா
வில் உருவாகி கேரள மாநிலத்தில் உள்ள அரபிக் கடலில் கலக்
கிற அந்த ஆறுகளை எல்லாம் திசை திருப்பி கிழக்கே கொண்டு
வந்தால் தமிழ்நாட்டிலுள்ள பல மாவட்டங்களில் இருக்கின்ற
விவசாயப் பெருமக்களுக்குப் பயன் உள்ள நிலைமையை
உருவாக்கி, பல புதிய திட்டங்களை அதன் வாயிலாகப் போட
முடியும் என்ற வகையில் நாம் முயன்று கொண்டிருக்கிறோம்.

இங்கே அனைவரும் சுட்டிக்காட்டினார்கள். மேற்கு நோக்
கிப் பாய்கிற ஆறுகளைத் தமிழ்நாட்டிற்குத் திருப்பி விட வேண்
டிய அவசியம் பற்றியும், அது எப்படி சாத்தியமான திட்டம்
என்பதைப் பற்றியும் இங்கே சுட்டிக்காட்டினார்கள். 200
டி.எம்.சி. என்பதற்கு மேலான அளவில் தண்ணீர் கிடைக்கக்
கூடிய ஒன்றாக அது இருந்தாலும் கூட அதற்காக அடுத்த
மாநிலத்தின் மீது படை எடுத்து அந்த மாநிலத்தின் ஆட்சிப்
பொறுப்பை நாமே கையகப்படுத்தி பணிகளைச் செய்துவிட முடி
யாது. அந்த மாநிலத்தை ஒட்டித் தான் நாம் பணியாற்ற
கூடிய கட்டாயத்தில் இருக்கிறோம். இதற்காகத்தான் நம்மை
எல்லாம் இணைக்கிற சக்தியாக மைய அரசு விளங்கவேண்டு
மென்ற ஆசை கூட நமக்கு இருக்கிறது. இத்தகைய நதி
களைப் பொறுத்தவரையில் ஒரு பகுதிக்கு மட்டும் சொந்தம்
என்று இல்லாத வகையில் ஒரு இடத்திலே உருவானாலும் கூட
இன்னொரு இடத்திற்குத் தாவிப் பாய்கிற வாய்ப்பு இருக்கி
றது. ஆரம்பக் காலகட்டத்தில் இந்த நதியை நம்பி நீர்ப்
பாசனத்தையும் நாம் வகுத்துக்கொண்டு ஆயக்கட்டுகளை உரு
வாக்கி அதன்வாயிலாகத் தொடர்ந்து நன்மை பெற்றுக்
கொண்டிருந்த நிலைமையில் திடீரென்று அந்த நன்மையை
இழக்கக்கூடிய அளவுக்கு நிலைமைகள் உருவாக்கப்படுகின்ற
போது—மத்திய அரசு சுதந்திரமாகச் செயல்பட வேண்டுமென்
றால் மாநிலத்தில் ஓடுகிற அண்டைய மாநிலங்களோடு
இணைந்து ஓடுகிற ஆறுகளை எல்லாம் தேசியமயமாக்கு
வேண்டுமென்ற கருத்தை இந்த மாநில அரசு நீண்ட கால
மாக வலியுறுத்தி, தமிழக முதல்வர் டாக்டர், புரட்சித்
தலைவரும் பல காலகட்டங்களில் வலியுறுத்திச் சொல்லியிருக்கி
றார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்போது
அந்தச் சிந்தனை மத்திய அரசுக்கும் உருவாகி இருக்கிறது.
ஆனால் பல மாநில அரசுகள் இதை எதிர்ப்பதற்குக் காரணம்
தங்களுடைய மாநிலத்தில் இருக்கக்கூடிய ஆற்று நீரை
மற்றவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கவேண்டிய சூழ்நிலை உரு
வாகுமே என்பதற்காகத்தான் அவர்கள் அப்படிச் செய்கி
றார்கள். ஆகவே அப்பேர்பட்ட சந்தர்ப்பத்தில் இங்கே மற்ற
வர்கள் எல்லாம் சுட்டிக்காட்டியதுபோல் ஒரு பக்கத்திலே
1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் செய்து பின்னர் புதுப்பிக்கப்பட



வேண்டிய ஒப்பந்தம் புதுப்பிக்கப்படாததன் காரணமாக காலா
வதியாகிவிட்ட ஒப்பந்தம் என்ற கருத்தை வலியுறுத்துகிறது
கர்நாடக மாநில அரசு.

இன்னொரு பக்கத்திலே பார்த்தால் பெரியார் நீர்த்தேக்கத்
திட்டத்தால் நமக்கு 154 அடி தண்ணீர் தேக்கக்கூடிய அளவுக்கு
அந்த ஒப்பந்தம் நம்மிடத்திலே இருந்தாலும் கூட அந்த நீர்த்
தேக்கம் வலுத்தன்மையை இழந்துவிட்டது என்ற உண்மைக்குப்
புறம்பான கருத்தைப் பத்திரிகையின் வாயிலாக வெளிப்
படுத்தி அதன் மூலமாக அந்தப் பகுதியிலுள்ள மக்களி
டத்திலே பீதியை உருவாக்கி அந்தப் பீதியின் காரணமாக
தேக்கக்கூடிய தண்ணீரின் அளவைக் குறைக்க வேண்டு
மென்று சொல்லி 132 அடியாகத் தண்ணீர் மட்டத்தைக்
குறைத்ததை நாம் அத்தனை பேரும் அறிவோம். ஆனால் இந்த
அரசு சிறப்போடு செயல்பட்டு அவர்கள் எதை எதை எல்லாம்
கேட்கிறார்களோ அத்துணையையும் நாம் பொருள் இழந்
தாலும் பரவாயில்லை, தண்ணீரை இழக்கக்கூடாது என்ற
நோக்கத்தில், தொடர்ந்து பணியாற்றி அவர்களுடைய
தேவையை எல்லாம் நிறைவேற்றி இப்போது வல்லுநர்கள்
எல்லாம் கூட அந்தத் திட்டத்தை ஏற்றுக் கொண்டு, இப்போது
தண்ணீரை தேக்கக்கூடிய அளவுக்கு நீர்த்தேக்கம் வலுவாக
இருக்கிறது என்றுசொல்லக் கூடிய அளவுக்கு நிலைமைகள்
இருக்கின்றன என்பதையும் நான் இங்கே கோடிட்டுக் காட்ட
விரும்புகிறேன்.

இங்கே உள்ள சட்டமன்ற உறுப்பினர்களுடைய எண்ணங்
களையெல்லாம் கருத்துக்களையெல்லாம் நிறைவேற்றுவதன்
வாயிலாக நல்ல பெயர் எடுக்க வேண்டும் என்ற ஆசை எனக்கும்
உண்டு. ஆனால் அவர்களால் வலியுறுத்தப்படுகின்ற கோரிக்கை
களை நிறைவேற்றுவதற்கு உரிய இன்னல்களோ சொல்லில்
அடங்காது என்பதையும் சொல்லிக் கொள்ள விரும்பு
கிறேன். தேவைப்படுகிற நேரத்தில் எல்லாம் தண்ணீர்
திறந்துவிடப்பட வேண்டும் என்றாலும் கூட அந்த நீர்
நிலைகளில் இருக்கக்கூடிய தண்ணீரின் அளவிற்கு ஏற்ப
தான் தண்ணீரை திறந்துவிட முடியும். அதிலும் எதிர்காலத்
தேவைகள் போன்றவற்றை கணக்கில் எடுத்துத்தான் தண்ணீர்
திறந்துவிடுவதை நிர்வகிக்க முடியும் என்பதையும் சுட்டிச்
காட்ட விரும்புகிறேன். அதன் காரணமாக பல நேரங்
களிலே பல சட்டமன்ற உறுப்பினர்களுடைய எதிர்ப்புக்கும்
கோபத்திற்கும், ஆத்திரத்திற்கும் இந்தத் துறை உட்பட
வேண்டியதாயிற்று என்பதையும் இங்கே சொல்லிக் கொள்ள
விரும்புகிறேன்.

[திரு. யா. சை. மு. யூசுப்] [1986 ஏப்ரல் 3

இந்தத் துறையின் வாயிலாக எந்த வேலையை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு செய்து தரவேண்டும் என்றாலும் கூட, அந்த சட்டமன்ற உறுப்பினர்களின் தேவைகளை பூர்த்தி செய்து தரக் கூடியதன் வாயிலாக பல லட்சக்கணக்கான இன்னும் சொல்லப்போனால் கோடிக்கணக்கான ரூபாய்களை இந்தத்துறை இழக்கும் என்பதையும் நீங்கள் அத்துணை பேரும் அறிவீர்கள், ஏற்றுக் கொள்வீர்கள். அதனால்தான் இந்தத் துறையின் வாயிலாக எல்லோரையும் திருப்திப் படுத்துவது என்பது முடியாத அளவிற்கு நிலைமைகள் இருக்கின்றன என்பதையும் நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

ஆகவே நாம் ஒரு திட்டத்தை எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற நிலைமை வந்தால் முதன் முதலில் அந்தத் திட்டத்தை ஆய்வு செய்ய வேண்டும். அந்தத் திட்டம் ஆய்வு செய்யப்பட்ட பிறகு, ஒரு நீண்ட ஆய்வுக்குப் பின்னும், மாவட்ட ஆட்சித் தலைவர், நில நிர்வாக வருவாய் ஆணையாளர் ஆகியோர்களின் இசைவைப் பெற்றுத்தான் அந்தத் திட்டத்தை அரசுக்கு அனுப்ப முடியும். செலவுத் தொகை, அதனால் ஏற்படும் கூடுதல் உற்பத்தி அளவு இவற்றைக் கணக்கில் எடுத்துப் பார்க்கும்போது 10 சதவீதம் வட்டியாவது கிடைக்கிறது என்ற அளவுக்கு அதிலும் திருப்தி அளிக்க வேண்டும். அதற்கு பிறகும் நிலைமைக்கு ஏற்ப திட்டங்களை தீட்ட வேண்டிய சூழ்நிலை ஏற்படும் போது அது நமக்கு நன்மை பயக்கிறது என்று எண்ணுகிறபோது கூட அந்த திட்டத்தை நிறைவேற்றுகிற நேரத்தில் தங்களுடைய நிலம் கையகப்படுத்தப்படுமேயானால் அரசு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்புத்தர மறுக்கிறார்கள். அபரிமிதமான நஷ்டஈடு கோருவது அல்லது வழக்கு மன்றத்திற்குச் செல்வது போன்ற தொடர் பணிகளின் வாயிலாக இந்த அரசால் போடப்படுகிற, மிகவும் கஷ்டப்பட்டு போடப்படுகிற, எவ்வளவோ தடைகளை எல்லாம் கடந்து வருகிற ஒரு திட்டத்தை ஒரு நொடியில் தடுத்து விடுகிறார்கள் என்பதற்குச் சான்றாகத்தான் கெலவரப்பள்ளித் திட்டம் இன்று உதாரணமாக விளங்கிக் கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய தர்மபுரி மாவட்டத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும், மற்றவர்களும், இங்கே வேதனையோடு சொன்னார்கள். நேற்றைக்கு இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தித் தாளிலே கூட, படத்தைக்கூட போட்டு, கெலவரப்பள்ளித் திட்டம் 7 ஆண்டுக்காலமாக தூங்கிக் கொண்டிருக்கிறது என்ற கருத்தை உருவாக்கக்கூடிய முறையிலே படம் போட்டிருந்தார்கள். ஏதோ ஜூன் மாதத்திற்குப் பிறகு மிகப்பெரிய போராட்டம் வெடிக்கும் என்றெல்லாம் கூட சொல்லியிருக்கிறார்கள்.



1986 ஏப்ரல் 30] [திரு. யா. சை. மு. யூசுப்]

எனக்கு இருக்கக்கூடிய வருத்தம் எல்லாம் இந்த அரசைப் பார்த்து, வழக்கு மன்றத்திலே இருக்கக்கூடிய பிரச்னையிலே தலையிட முடியாத அளவுக்கு கை கட்டப்பட்டிருக்கிற இந்த அரசைப் பார்த்து, நையாண்டி செய்கிற, கேலி செய்கிற விதத்தில் எதிர்த்துப் போராட வேண்டும் என்று அந்த நபர்கள்—தனியாக ஓரிருவர் என்று நினைக்கிறேன். எதிர்த்துப் போராடினால், ஆளுகின்றவர்களை வற்புறுத்தினால்—இப்போது பல முயற்சிகளிலேயும் சோஷியல் பாய்காட் என்று சொல்வது போல, ஒருவர் ஓட்டுப் போடவில்லை என்றால் கூட அதனை சோஷியல் பாய்காட் என்று சொல்லக்கூடிய இந்தக் காலகட்டத்தில்—அப்படிப்பட்ட சமூக விரோதிகளை அடையாளம் கண்டு, ஏன் சமுதாயமே, சட்டத்திற்கு உட்பட்டு தண்டிக்கக் கூடாது என்றுதான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அவ்வளவு சங்கடங்களையும் கடந்து நாம் திட்டத்தை நிறைவேற்றும் போது, அந்த நீர் நிர்வாகத்தை இந்தத் துறையே ஏற்று நடத்துகிறது என்றாலும், எதை எப்படி நிர்வகிக்க வேண்டும், நிர்ணயிக்க வேண்டும் என்று சொல்லக்கூடிய ஒரு உயர் அதிகாரம் அந்தந்த மாவட்டத்தில் உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலே தான் தரப்படுகிறது. ஆகவே, நாம் இத்தனை முயற்சி எடுக்கிறோம். இந்த நிலைமைகளை எல்லாம் நாம் கட்டுப்படுத்துகிறோம். எங்கேயாவது ஏதாவது ஒரு காரியம் நடைபெறுமானால் பாசனத் துறையைப் பொறுத்த வரையில் உடனடியாக பொதுப்பணித் துறை தாக்கப்படுகிறது. பொதுப் பணித் துறையை கிண்டல் செய்கிறார்கள். இந்த நீர் நிர்வாகத்தைப் பொறுத்தவரையிலும் பொதுப்பணித் துறை சுதந்திரமாக செயல்பட முடியாத அளவிற்கு சட்ட திட்டங்கள் இருக்கின்றன என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

(மாலை 5.50)

பாசன ஆதாரங்களை யாராவது ஆக்கிரமித்தால் அதைத் தட்டிக் கேட்பதற்கு யாரும் முன்வருவதில்லை. நில நிர்வாகத்தில் பங்கு கேட்கும் வருவாய்த் துறை கூட இதிலே அவ்வளவு அக்கறை செலுத்துவது கிடையாது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வேறு எந்தத் துறையாக இருந்தாலும், அது நெடுஞ்சாலைத் துறையாக இருந்தாலும், ரெயில்வே துறையாக இருந்தாலும், அந்தத் துறைகளின் நிலங்களை கணக்கெடுப்பது மிகவும் சுலபமான ஒன்று. அதேபோல வனத் துறையைப் பொறுத்த வரையில் மிகவும் கடுமையான சட்டங்களின் வாயிலாக அந்த துறை ஆக்கிரமிப்புகளை அகற்றுகிறது. ஆனால் இரண்டும் கெட்டான் நிலையில் நாட்டிற்கு தேவையான நாட்டின் முதுகெலும்பு என்று சொல்லக்கூடிய, இன்னும் சொல்லப்

[திரு. யா. சை. மு. யூசுப்] [1986 ஏப்ரல் 30

போனால் மழைக் காலங்களில் வருகிற வெள்ளத்தை கட்டுப்
படுத்தி, மழை நீரை தேக்கி வைக்கும், நீர்நிலைகளின் ஆக்கிர
மிப்புகளை அகற்றக்கூடிய, அல்லது தட்டிக் கேட்கக்கூடிய
அல்லது தடுக்கக்கூடிய ஒரு நிலைமை, சுதந்திரமாக முழு அள
விற்கு செயல்படக் கூடிய அளவிற்கு நிலைமை பொதுப்பணித்
துறையில் கிடையாது. அந்த அளவிற்கு ஒத்துழைப்பு வேறு
துறைகளிலிருந்து கிடைப்பதும் இல்லை.

இங்கே பேசுகிற போது ஏரிகள் எல்லாம் தூர்ந்து கொண்
டிருக்கின்றன. நடவடிக்கையெடுக்கவில்லை என்றெல்லாம்
சொன்னார்கள். ஒன்றை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்
திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்
தில் அகஸ்தீஸ்வரம் என்ற தாலுகா இருக்கிறது. அங்கேயிருக்கக்
கூடிய ஒரு கிராமத்தில் மிக முக்கியமான பெரிய ஏரி, 50 ஏக்கர்
கள் பாசன வசதி கொடுக்கிற ஏரி இருக்கிறது. 1972 ஆம் ஆண்டு
ஒரு சம்பவம் நடந்தது. இன்றைக்கு அந்த ஏரி எங்கேயிருக்கிறது
என்று நாம் பார்த்தால் அந்த ஏரியையே காணோம். அந்த ஏரி
எங்கே போயிற்று என்று நாம் துருவி துருவிப் பார்த்தால் கடைசி
யாக அங்கே தென்னை மரங்கள் நின்று கொண்டிருப்பது தெரிந்
தது. இவை யாருடைய தென்னை மரங்கள் என்று கேட்டால்
இந்த நிலத்தின் சொந்தக்காரரின் தென்னை மரங்கள் என்று
சொன்னார்கள். இந்த நிலத்தின் சொந்தக்காரர் யார் என்று
கேட்டால் ஜெந்தினராஜ் என்று சொல்கிறார்கள். மன்னிக்க
வேண்டும், மைக்கேல்ராஜ் என்று சொல்லக்கூடியவரின் தந்தை
என்று சொல்கிறார்கள். (குறுக்கீடு) தாங்கள் அல்ல, மைக்கேல்
ராஜ். இந்த மைக்கேல்ராஜ் யார் என்று கேட்டால் அன்றைய
தினம் ஆண்டு கொண்டிருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின்
பிரமுகர் என்று சொன்னார்கள். இதையெல்லாம் எதற்காக
சொல்கிறேன் என்றால் நீர் நிலைகள் நாட்டிற்குத் தேவையென
பதில் அக்கறை கொண்டு நாங்கள் தீவிரமாக முயற்சியெடுத்து
ஆக்கிரமிப்புகளை அகற்றுகிறோம். இன்னொரு பக்கத்தில் மிக
முக்கியமான நீர்நிலைகள் எல்லாம் அடைக்கப்பட்ட நிலையில்
இருந்தன என்பதையும், அந்தக் காலத்திலும் அதே மாமன்றம்
இருந்தது என்பதையும் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு
வரத்தான் நான் இதைச் சொன்னேன். யாரையும் தாக்க
வேண்டுமென்ற நோக்கத்தில் சொல்லவில்லை.

ஆகவே இதையெல்லாம் காரணமாக காட்டி நாங்கள் எந்தப்
பணியும் செய்ய வேண்டாம் என்று அந்த முடிவிற்கு வரவில்லை.
ஆனால் பணிகளை மேற்கொள்கிற நேரத்தில் எப்படியெல்லாம்
அதற்கு எதிர்ப்பு வருகிறது என்பதற்கு உதாரணமாக மதுராந்த
கம் ஏரியைச் சொல்ல வேண்டும். மதுராந்தகம் ஏரியை
எடுத்துக் கொண்டால் கடந்த ஆண்டு மேக உடைப்பு என்று
சொல்லக் கூடிய அளவிற்கு cloud outburst ஆகி மழை



1986 ஏப்ரல் 30] [திரு. யா. சை. மு. யூசுப்]

அதிகமான அளவிற்கு கொட்டியதை நாம் அத்துணைபேரும்
அறிவோம். ஆனால் மதுராந்தகம் ஏரிக்குச் சொந்தமான, அந்த
ஏரியின் பாசன வசதிக்கு உதவுகிற கிள்ளியாற்றில் சாதாரணமாக
வரக்கூடிய வெள்ளத்தைக் காட்டிலும் அதிகமாக, அந்தக் கிள்ளி
யாறு தாங்குகிற சக்தியை விட எட்டு மடங்கு அதிகமாக வெள்
ளம் வருகிறது. இதற்கு யாரையும் நாம் குறை சொல்ல முடி
யாது. இயற்கைச் சீற்றத்தால் வெள்ளம் வருகிறது. அவ்வாறு
அந்த ஆற்றில் வெள்ளம் வந்து, மதுராந்தகம் ஏரி தாங்க முடி
யாத அளவிற்கு போய் அங்கே உடைப்பு எடுத்துவிடுமோ என்று
அஞ்சுகிற நேரத்தில், மதுராந்தகத்தில் வசிக்கிற நம்முடைய
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தலைவர் நண்பர் உகம்
சந்த அவர்களும், மற்ற நண்பர்கள் எல்லாம் அந்த நேரத்தில்
அங்கே இருந்தார்கள்.

அரசு அதிகாரிகள், பொதுப் பணித் துறையைச்
சேர்ந்த அதிகாரிகள் எல்லாம் எந்த நேரத்தில் என்ன
ஆகுமோ என்று அஞ்சி, எதையும் சமாளிக்க ஆயத்தமாக இருக்க
வேண்டும் என்று ஆயத்தப்படுத்திக் கொண்டு இருந்தார்கள்.
அந்த நேரத்தில் அங்கே இருக்கக்கூடிய வலுவான பகுதியாகிய
கட்டுமானப் பகுதி உடைகின்றது. கட்டுமானப் பகுதி உடைந்த
பிறகு, எல்லோரும் இங்கே அமர்ந்து கொண்டு, சென்னையில்
அமர்ந்து கொண்டு, யாரோ வெடி வைத்து தகர்த்துவிட்டார்கள்.
அப்படி தகர்த்ததற்குக் காரணம் கரை காப்பாற்றப்பட வேண்
டும் என்ற எண்ணம்தான் என்று எல்லாம் சொன்னார்கள். எந்த
இடத்திலே தகர்க்கப்பட்டது என்று சொன்னார்களோ, அங்கே
10, 12 அடிக்கு தண்ணீர் அதற்கு மேலாக சென்றுகொண்டு
இருக்கிறது. பக்கத்திலே யாருமே போக முடியாத அளவுக்கு
அன்றைய நிலைமை.

ஆகவே, இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளை
எல்லாம் சொன்னார்கள். பிரச்சனை முடிந்துவிட்டது.
அதற்குப் பிறகு அவசர அவரசமாக தண்ணீரை தடுக்கக்கூடிய
பணியிலே பொதுப்பணித் துறை இரவும் பகலுமாக ஈடுபட்டது.
அவ்வாறு நாம் அந்தப் பகுதியிலே தற்காலிகமாக அடைப்பை
ஏற்படுத்திய பிறகும் கூட 'ரிங்மென்ட்ஸ்' என்று சொல்லக்கூடிய
பணியை மேற்கொண்ட பிறகும் கூட, வெள்ளம் தொடர்ந்து
வந்துகொண்டு இருந்ததன் காரணமாக அந்த உடைப்பும், அந்த
அடைக்கப்பட்ட அடைப்பும், வெள்ளத்திலே போய்விட்டது
என்பதை நாம் அத்தனை பேர்களும் அறிவோம். இந்தச் சூழ்
நிலையில் இந்த விவரம் கூட தெரியாமல், கரையை நாங்கள்
வலுவாக வைத்திருந்தோம், அனைத்திந்திய அண்ணா தி.மு.க.
ஆட்சியிலே கரைகள் வலுவிழக்கத்தக்க அளவிற்கு கரைகளில்
இருந்த மரங்கள் எல்லாம் எடுத்து, அவற்றை அப்புறப்படுத்தி
விட்டார்கள். அப்புறப்படுத்தியதை வேறு ஒருவர் செய்திருக்
கிறார்கள். அதன் வாயிலாக, கரை வலுவிழந்து இருக்கிறது
என்று சொல்கிறார்கள். உடைப்பு எங்கே? கரையில் இல்லை.

உடைப்பு வலுவான கட்டிடத்திலே. ஆனால் இவர்கள் சொல்லு
கின்ற குற்றச்சாட்டு, கரைகள் பாதுகாக்கப்படவில்லை என்ற
குற்றச்சாட்டு. ஆனால் அன்று நாம் ஒரு பக்கத்திலே 'டெம்பரரி
ரெஸ்டோரேஷன்' என்று சொல்லக்கூடிய தற்காலிக அடைப்பை
செய்தோம். நிரந்தரமாக அடைப்பை இன்று நாம் செய்து
கொண்டு இருக்கிறோம். பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்
பட்டு, இந்த மதுராந்தகம் ஏரியைப் பராமரிப்பதற்காக நாம்
பல பணிகளை செய்து கொண்டு இருக்கிறோம். ஆனால்
இவ்வளவு வேலைகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கிற நேரத்
தில், திடீரென்று ஒரு அறிக்கை வருகிறது. அந்தத் தொகுதியின்
சட்டமன்ற உறுப்பினர், நண்பர், மதுராந்தகம் ஆறுமுகம் அவர்கள்
அந்த மதுராந்தகம் ஏரியில் வேலைகள் எதுவும் நடக்கவில்லை,
ஆகவே, நாங்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்து
கிறோம், இது அறிக்கை. இதை அடுத்து உண்ணாவிரதப்
போராட்டம். அது எவ்வளவு பேர்களால் நடத்தப்பட்டது
என்பது அல்ல முக்கியம். எத்தனை பேர்கள் பங்கேற்றார்கள்
என்பது அல்ல முக்கியம். அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்களுடைய
ஆதரவு இருந்ததா ? இல்லையா என்பது அல்ல முக்கியம்.
அது எல்லாம் இல்லை என்பதை நாங்கள் அத்தனை பேர்களும்
அறிவோம். ஆனால் எந்த நோக்கத்திற்
காக இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது என்பதை சிந்தித்துப்
பார்க்க வேண்டும். அந்தப் போராட்டம் நடத்தப்பட்ட நேரத்
தில் மதுராந்தகம் ஏரியிலே வேலைகள் நடைபெறவில்லையா
என்றால் நடைபெற்றன. என்று அவர்கள்
போராட்டம் நடத்த வேண்டும் என்று அறிக்கையைத்
தந்தார்களோ, அன்றைய சூழ்நிலையில் உடைப்பு ஏற்பட்ட
பின்பு தற்காலிக வேலைகள் முடிக்கப்பட்டு, 226 அடி நீளமான
ஆர்.சி.சி. சுவர் கட்டும் பணி துவக்கப்பட்டு, அந்த ஆர்.சி.சி.
சுவருக்கான அடித்தளமான வேலைகள், மண் தோண்டுவது
போன்ற வேலைகளுக்காக நடவடிக்கைகள் மேற்கொண்டு,
75 சதவீதம் வேலைகள் முடிந்துவிட்டன.

அதேபோன்று ஆர்.சி.சி. சுவர் சாயாமல் இருக்க, 'பட்.
ரெஸ்ட் வால்' என்று சொல்லக்கூடிய முட்டுக் கொடுக்கும் பணி
14 பணிகள்—முட்டுக் கொடுக்கும் அந்த சுவர்கள் கட்டக்கூடிய
பணி மேற்கொள்ளப்பட்டு இருந்தது. அதிலே, 'ராக் பாட்டம்'
வரை, துளையைத் தோண்டும் அந்தப் பணியும் நடைபெற்று
ஏறக்குறைய 14 பணிகளில் நான்கிற்கான முழு அளவுப் பணிகள்
மேற்கொள்ளப்பட்டு இருந்தது. நான்கு தடுப்பு பணிகள்
நீர் போக்கி அமைக்கின்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
இவ்வளவு வேலைகள் நடைபெற்று இருக்கின்றன.
பல வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இன்னும்
இல்லாத காரணத்தால், நான் சொல்லவில்லை. நேரம்
வேலைகள் எல்லாம் நடைபெற்று வந்திருக்கின்றன. இப்படி பல
குற்றச்சாட்டு சொன்னவர்கள் ஒரு வேலையும் நடக்கவில்லை





என்று சொன்னார்கள். விசாரித்துப் பார்த்தோம். என்ன வேலை
டபெறவில்லை என்றால் கரைகளை வலுப்படுத்துகின்ற.
கரைகளினுடைய மட்டத்தை உயர்த்துகின்ற அந்த 'எர்த் ஒர்க்,
வேலைகள் நடைபெறவில்லை. மேலும் நான் சொன்ன அத்
தனை வேலைகளும் பொதுப் பணித்துறையினால் மேற்கொள்
ளப்பட்டு செயல்படுத்தப்பட்டுக் கொண்டு வருகின்றன. அந்தக்
கரைகளை வலுப்படுத்துகின்ற வேலைக்குத் தேவையான
நபர்கள், லாரிகள் எல்லாம் அதிகமாக தேவை
என்பதற்காக ஒப்பந்தக்காரர்களிடம் விடவேண்டும். அந்த
ஒப்பந்தக்காரர்களிடம் விடாத பணிகள் மட்டும் நடைபெற
வில்லை. இவைகள் நடைபெறாததற்குக் காரணம் இங்கே
இருக்கக்கூடிய கூலி ஆட்கள் எல்லாம் அங்கே சென்று விடுவார்
களோ என்ற அச்சம்தான்.

(மாலை 6-00)

ஆக வேலை நடக்கவேண்டும் என்ற ஆத்திரத்திலே நாங்கள்
இங்கே நடவடிக்கை மேற்கொள்ளும்போது ஒப்பந்தக்காரர்
களுக்கு லாலி பாடுகின்ற, வக்காலத்து வாங்குகின்ற ஒரு சிலர்
அந்த பணியில் குறை கண்டு ஒன்றுமே வேலை நடக்கவில்லை
என்று சொல்லி, நாட்டு மக்களுக்கு உண்மைக்கு புறம்பான கருத்
துக்களை விஷயங்களை எடுத்துச் சொல்லி நல்ல பெயர் வாங்க
க்கிறார்கள் என்பதை நான் உங்கள் கவனத்திற்கு கொண்டு
வர விரும்புகிறேன். ஒப்பந்தக்காரர்கள் என்று சொன்னவுடன்
அண்மையிலே செய்தி தாள்களிலே வந்த பல விவரங்கள், விளக்
கங்கள் விளம்பரமா அல்லது செய்தியா என்று சந்தேகிக்கக்கூடிய
அளவுக்கு பக்கங்களை எல்லாம் நிரப்பிய அந்த விவரமான செய்தி
கள் எடுத்துச்சொல்லப்பட்டு, அவை எந்த அளவுக்கு உண்மைக்கு
புறம்பானவை என்று சொல்லுவது என்னுடைய தலையாய
கடமை என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ள ஆசைப்படு
கிறேன். ஏன் என்றால் இந்த பத்திரிகைகள் எல்லாம் தொடர்ந்து
பல செய்திகளை போடுகின்றன. செய்தி போடுகின்ற அந்தப்
பத்திரிகைகள் இந்தச் செய்தியில் உண்மை இருக்கிறதா, இல்லை
யா என்பதை கூட எண்ணிப் பார்ப்பது கிடையாது. மற்றவர்
கள் போட்டால் கூட எனக்கு அதைப்பற்றி கவலை அதிகமாக
கிடையாது. ஆனால் தமிழ்நாட்டில் பொதுப்பணித் துறையின்
நிர்வாகத்தை நடத்திய அவர்களுடைய கருத்திலே அல்லது
அவர்களுடைய மொழியிலே சொல்ல வேண்டும் என்றால்,
செல்வனே நடத்திய தமிழ்நாட்டில் சற்று காலமாக முதலமைச்
சராக இருந்தவர்கள் கூட அவர்கள் நடத்துகின்ற பத்திரிகையில்
கூட வருகின்ற செய்திகள் எவ்வளவு உண்மைக்கு புறம்பாக
இருக்கின்றன. தீர விசாரிக்காமல் சொல்லப்படுகின்ற செய்தி
களாக வருகின்றன என்பதை எண்ணிப் பார்க்கும்போது நிச்ச
யமாக இது வேண்டும் என்றே செய்யப்பட்ட ஒன்றா ? அல்லது
தெரியாமல் செய்யப்படுகின்ற ஒன்றா ? அல்லது பத்திரிகை

பார்க்க, பத்திரிகை நடத்த நேரம் இல்லாததன் காரணமாக
யாரோ ஒருவர் போட்ட செய்தியா என்று சந்தேகிக்க கூடிய
அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன. சுமார் 200 கோடி
ரூபாய்க்கு வரவு செலவு செய்கின்ற பொதுப்பணித் துறையில
இவர்களால் கண்டு பிடிக்கப்பட்ட ஊழல்கள் எல்லாம் 3 ஆயிரம்
ரூபாய் கொள்ளை அடிக்கப்பட்டு இருக்கின்றது. இன்னொரு
பக்கத்தில் 2 இலட்சம் ரூபாய் கொள்ளை அடிக்கப்பட்டிருக்
கின்றது. இதோ ஆதாரம், இதோ இருக்கின்றது ரசீது எல்லாம்
என்று அடுக்கடுக்காக பல நாட்களாக செய்தித்தாளில் பல விவரங்
கள் வந்து கொண்டிருக்கின்றன. இங்கே நேரம் இல்லாத கார
ணத்தால் நான் அவற்றை எல்லாம் தெளிவாக விளக்க முடிய
வில்லை. நீங்கள் விளக்க வேண்டும் என்று சொன்னால் நான்
விளக்க தயாராக இருக்கிறேன். ஆனால் மேலெழுந்த வாரியாக
பார்த்தால் 30 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதிலே
19 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டு 11 கோடி ரூபாய்
சரண்டர் செய்தார்கள் என்றும் சொன்னார்கள். இதில் நிதி
ஒதுக்கீடு நமக்கு 30 கோடி ரூபாய் இல்லை, 34.8 கோடி ரூபாய்
ஆகும். அதிலே ஊரக நெடுஞ்சாலை துறை, தொழில் பயிற்சி
துறை, ஆகிய துறைகளுக்கு சொந்தமான கட்டிடங்கள் அவை
களே பணியை மேற்கொள்ளுகின்ற கட்டிடங்களுக்கு உரிய
தொகையையும் இந்த பொதுப்பணித் துறையின் கணக்கில்
வந்திருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டி, அந்த
வேலையை அவர்கள் செய்கிறார்கள் என்பதை எடுத்துச் சொல்ல
ஆசைப்படுகிறேன்.

ஆகவே, பொதுப்பணித் துறைக்கு ஒதுக்
கீடு செய்த நிதி 27.8 கோடி ரூபாய் ஆகும். இதிலே செலவு
செய்த பணி 20.7 கோடி ரூபாய்க்கு உரிய வேலைகள் நடை
பெற்று இருக்கின்றன. 7.1 கோடி ரூபாய்க்கு உரிய வேலைகள்
நடைபெறவில்லை. இதற்கு காரணம் இத்தனை வேலைகளும்
22 துறைகளுக்கு சொந்தமான வேலைகள் ஆகும். இந்த வேலை
களை பல துறைகள் தருகின்ற நேரத்தில் அவர்கள் இடத்தைத்
தருவது இல்லை, இடத்தை கையகப்படுத்தித் தருவது இல்லை.
அதே போன்று நிர்வாக ஒப்புதல் போன்ற முழுக்க முழுக்க
அத்தனை காரியங்களையும் செய்து தருவது இல்லை. அவர்கள்
நீண்ட காலத்திற்கு முன்பாக போட்ட எஸ்ட்டிமேட் ஆக இருக்
கும். அவை இன்றைய நிதி நிலைக்கு ஏற்ப மாற்றம் செய்யக்
கூடிய நிலைமையில் மறுபடியும் நிர்வாக ஒப்புதலை அரசிடம்
வாங்க வேண்டும். அவ்வாறு வாங்குவதற்கு கால தாமதப்படுத்து
கின்ற மற்ற துறைகள் வாயிலாக ஏற்படுகின்ற கால தாமதம்,
இவை எல்லாம் சேர்ந்து 7 கோடி ரூபாய்க்கு வேலைகள் நடை
பெறவில்லை. ஆனாலும், ஒப்பந்தக்காரர்களுடன் நாம் செய்து
இருக்கின்ற பல்வேறு 'சேவிங்ஸ்' வாயிலாக இந்த துறை ஒரு
கோடி ரூபாயை மிச்சப்படுத்தி இருக்கின்றது. இது போக
சிமெண்டு போன்ற நமக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்
கள் எது எது தேவையோ அதிலே 40 சதவீதம் தான் தருகிறார்





ஆக அப்படி எல்லாம் நாம் பார்க்கும் நேரத்தில் நாம்
...ள். எவ்வளவு தான் முயன்றாலும் கூட நாம் எதிர்பார்த்த அளவுக்கு
அந்த கால கட்டத்தில் வேலைகள் முடிக்க முடியாத அளவுக்கு
இந்தத் துறைக்கு அப்பாற்பட்ட பல இடையூறுகள்
இருக்கின்றது என்பதையும் நான் இங்கே சொல்லியாக
வேண்டும். ஒரு பத்திரிகையில் பல ரசீது எண்களைத் தந்து அந்த
வேலையை வேறு ஒரு துறையைச் சார்ந்தவர்கள், ரூ. 2 இலட்
சத்திற்கு அவர்களுடைய சொந்தப் பணிக்காக மேற்கொண்டு,
அதற்குப் பிறகு அதே வேலை பொதுப் பணித்துறையால் மேற்
கொள்ளப்பட்டு, ஒப்பந்தக்கரார்களுக்கு ரூ. 2 இலட்சம் பட்டு
வாடா செய்யப்பட்டு, அந்த ரூ. 2 இலட்சம், அதிகாரிகளுக்கும்,
அமைச்சருக்கும், இன்னும் சொல்லப்போனால், முதலமைச்ச
ரைக் கூட இழுத்திருக்கிறார்கள். அப்பேர்ப்பட்டவர்கள் எல்லாம்
பங்கு போடுவதாக இங்கே ஒரு மிகப் பெரிய அரிய கண்டுபிடிப்பு
சிலரால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை சொல்லிக்
கொள்ள ஆசைப்படுகிறேன்.

முதன்முறையாக நாட்டிலே நிலவுகின்ற சட்டதிட்டங்கள்,
விதிமுறைகளின்படி ஒரு துறை ரூ. 10,000-க்கும் மேற்பட்டு
ஒரு அவசரப் பணியை மேற்கொள்ள முடியாது. அதேபோன்று,
ரசீது எண் என்று இங்கே சுட்டிக்காட்டப்பட்ட அந்த விவரங்கள்
...லாம் ரசீது எண்கள் அல்ல. ஆனால் ஒவ்வொரு திட்ட மதிப்
பீட்டிற்கும் ஒரு எண் தரப்படுகின்றது. அந்த திட்ட மதிப்பீட்
டிற்கான எண் ஆகும். அதிலும் கூட ஒரு திட்ட மதிப்பீட்டு
எண். 982/80-81 என்று தந்திருக்கிறார்கள். ஆனால் அந்த
ஆண்டு 977/80-81 என்று தான் முடிந்து இருக்கிறது. 977
என்று நின்றுவிட்ட பின்னர், அவர்களால் சுட்டிக்காட்டப்பட்ட
அந்த ரசீது எண்ணோ 982. நான் இதையெல்லாம் எதற்காகச்
சொல்கிறேன் என்றால் ஏதாவது ஒரு எண்ணைப் போட்டுவிட்டால்
அதற்கு காதும், மூக்கும், கண்ணும் வைத்து, போட்டுவிட்டால்,
இது தான் உண்மை என்று மக்கள் ஏற்றுக்கொண்டால், அதற்கு
நாம் திரும்ப பதில் சொல்லாததன் காரணத்தால் இன்னும்
வளரட்டும், தவறுகள் என்று தவறான கருத்துக்கள், பொய்யான
குற்றச் சாட்டுக்கள் எல்லாம் சொல்கிறார்கள். இந்தக் குற்றச்
சாட்டிற்கு நாம் உடனடியாக பதில் தந்து விட்டால், இத்தோடு
நின்றுவிடும். எனவே, இவர்கள் கையில் இருக்கின்ற அத்தனை
சரக்குகளும் காலியாகட்டும் என்று சொல்லி, வாயை மூடிக்
கொண்டு சும்மா இருக்கிறோம். அப்படி சும்மா இருந்தால்
அதற்கு என்ன சொன்னார்கள் ? அமைச்சரிடம் பதில் கிடையாது
தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய பல இலட்சக்கணக்கான வேலை
கள், அந்த வேலைகளுக்குரிய ஆயிரக்கணக்கான எம் புத்த
...ங்கள், அந்த எம் புத்தகங்களில் இருக்கக்கூடிய நூற்றுக்கணக்
கான பக்கங்கள், அதிலே ஒரு பக்கத்தைப் பத்திரிகையிலே
போட்டுவிட்டால், ஏதோ அமைச்சர் பார்க்கவில்லையென்றால்

இந்த அமைச்சருக்குப் பதவி ஒரு கேடா என்று அப்படிச் சொல்லக் கூடியவர்களுக்கு, அந்த நண்பர்களுக்கு, எண்கள் எவ்வளவு இருக்கிறது என்று பார்க்காதவர்களுக்கு, பத்திரிகை ஒரு கேடா என்று கேட்பதற்கு எங்களுக்கு எவ்வளவு நேரமாகும்? அதைத்தான் நான் கேட்கிறேன். இங்கே எனக்கு இருக்கக்கூடிய, மிகப் பெரிய வருத்தமெல்லாம் இவர்கள் இந்தப் பத்திரிகை யில் மட்டும் இந்தத் துறையைத் தாக்கி பயன்படுத்தினால்கூட வேதனைப் பட மாட்டேன். இன்று காலையில் இங்கே ஒரு சட்டமன்ற உறுப்பினர், நண்பர், சென்னையிலே நடை பெற்ற ஒரு பணி என்று சொல்லி, ஸ்டான்லி மருத்துவமனையில் நடைபெற்ற ஒரு பணியைச் சுட்டிக்காட்டப் போவதாகச் சொல்லி அதற்குப் பிறகு நீங்கள் ஏன் அவசரப்படுகிறீர்கள், எங்களுக்கும் பொறுக்கவில்லை என்று சொல்லி, அதற்குப் பிறகு, அப்பனை யும் காட்டாமல், குதிரையும் காட்டாமல் அவரே அமர்ந்து விட்டார்கள். அதைப் பற்றி நான் கவலைப்படவில்லை.

ஆனால், இங்கே சொன்னவர்கள், 37 பணிகள் ஆரம்பிக்கப் பட்டு, அதற்குப் பிறகு 35ஆக குறைக்கப்பட்டுவிட்டது. அந்த 2 பணிகளையும் முழுங்கி விட்டார்கள். ஒப்பந்தக்கரார்களுக்கு ஆதாயம் தர வேண்டுமென்பதற்காக அவர்கள் செய்த சதி வேலை என்றார்கள். இது ஒரு பக்கம். இன்னொரு பக்கத்திலே இன் னொருவரை போடுவதற்கு அமைச்சர் வாங்கிய நிதி எவ்வளவு தெரியுமா? ரூ. 5 இலட்சம். இது எதற்காக? ஒரு துணைப் பொறியாளர் அலுவலகத்திற்குரிய பணிகளை மேற்கொள் வதற்காக அவர் வாங்கிய தொகை ரூ. 5 இலட்சம். 9 துணைப் பொறியாளர்கள் இருக்கிறார்கள். ஆக, 9×5=ரூ. 45 இலட்சம். சென்னையில் மட்டும் கைமாறியிருக்கிறது. அமைச்சர் லஞ்சம் வாங்கியிருக்கிறார். உள்ளாட்சித் தேர்தலை சந்திப்பதற்காக லஞ்சத்தை வாங்கியிருக்கிறார். இது முதலமைச்சருக்குத் தெரி யாததல்ல என்றெல்லாம் இங்கே பலவிதமாக சுட்டிக் காட்டி யிருக்கிறார்கள். ஆனால் உண்மை நிலை என்னவென்று சொன் னால், இங்கே கூட சொன்னார்கள். வெள்ளை அடிக்கவில்லை: காரை பெயர்ந்து இருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய அத்தனை கட்டிடங்களையும் சரி யாகப் பராமரிக்க வேண்டுமென்றால் ஓரளவிற்கு பராமரிக்க வேண்டுமென்றால், நமக்குத் தேவையான நிதி ரூ. 11 கோடி. ஆனால் இன்றைக்கு ஒதுக்கீடு ரூ. 2.50 கோடியாகும். இது ஒட்டு மொத்தமான ஒன்று.





[மாலை 6–10]

இப்போது குற்றச்சாட்டுக்குரியதாகச் சொன்னது வெள்ள நிவாரணத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் ரூபாய் 30 லட்சம் ஆகும். இதிலே என். எம். ஆர்.கள் சம்பளம் போக—இவைகள்தான் அதிகமாக இருக்கின்றன—கொள்ளை அடிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது ரூ. 45 இலட்சம் இது எந்த நாட்டிலே ஏற்பட்டது என்று தெரியாது. எனக்கு ஒரு சந்தேகம். என்னவென்றால், கடந்த முறைக்கு முன்பாக நான் சட்டப் பேரவை உறுப்பினராக இருந்த நேரத்தில் இந்தப் பேரவையிலே பேசுகிறபோது நான் ஒரு சந்தேகத்தைக் கிளப்பினேன். ஒரு காரில் இருக்கக்கூடிய நபருக்கு திடீரென்று உளி ஊர்க்குருவியாக மாறி கார் கண்ணாடியைத் துளைத்து காரிலே இருந்த அத்தனை பேருடைய தலையையும் சுற்றி மறு படியும் வெளியே போய் மறுபடியும் உளியாக கீழே வருகின்ற அந்த மாயாஜால வித்தை எப்படி நடந்தது என்று கேட்டேன். ரூபாய் 30 லட்ச வேலைக்கு வாங்கிய லஞ்சப் பணம் ரூபாய் 45 லட்சம். இது எந்த மந்திரக்கோலை வைத்துச் செய்தார்களோ தெரியவில்லை. அதைத்தான் நான் இங்கே சொல்கிறேன். வாங்காத கப்பலுக்கு கப்பல் பேர ஊழல் என்று சொன் னார்கள். அதேபோலத்தான் இது என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

நேற்றுக்கூட ஒரு சில குற்றச்சாட்டுகள் வந்திருக்கின்றன. நான் அவற்றையெல்லாம் அடுக்கடுக்காகச் சொலலி நேரத்தை வீண்படுத்த விரும்பவில்லை. சென்னையிலே நடைபெறுகிற உண்மை என்ன என்று சொன்னால், சென்னையிலே சில ஒப்பந் தக்காரர்கள் போட்டி போட்டுக்கொண்டு, மஃபியா காங்க் என்று அமெரிக்காவிலே சொல்வார்களே அப்படிப்பட்ட வெறி பிடித்த வேட்டைக்காரர்களாக அலைந்து கொண்டிருக் கிறார்கள். இங்கே இருக்கக்கூடிய ஒப்பந்தக்காரர்களிலே முக்கியமானவர்கள் என்று சொல்லக்கூடியவர்கள்—இங்கே அவர்கள் பதில் சொல்ல முடியாத காரணத்தால் அவர்கள் பேரை நான் சொல்லவில்லை—இரண்டு பிரிவினர் இருக்கிறார்கள். இருவரும் உறவினர்கள்தான். அதிலே ஒருசிலர் நன்றாக முரசொலிக்கத் தெரிந்தவர்கள். முரசு ஒலிக்கத் தெரிந்தவர் கள் நன்றாக முரசை ஒலித்துக் கொண்டுதான் இருக்கிறார் கள். அவர்கள் ஒலிக்கட்டும். அதைப்பற்றிக் கவலைப்பட வில்லை. ஆனால், இரண்டு டிவிஷன்களில்—ஸ்டான்லி டிவிஷன் என்று சொன்னார்களே அதிலே 32 வேலைகள். இவர் கள் போடுகின்ற வேலை எல்லாம் பார்த்தால் 1980, 1981, 1982 என்று பழையவைகளாக இருந்தால்கூட மன்னித்து விடலாம். இப்பொழுதுகூட 32 வேலைகள், நாம்தான் கொடுத்திருக்கிறோம். இல்லையென்று சொல்லவில்லை. 32

வேலைகள் யாரிடம் தந்திருக்கிறோம் என்றால், வேலை
இல்லாத பொறியியல் பட்டதாரிகள் அல்லது பட்டயம்
பெற்றவர்களுக்குத் தந்திருக்கிறோம். அதைத் தருவதற்கு
அரசு விதி இடம் தருகிறது. ஒரு பக்கத்திலே அவர்கள் இத
னால் எவ்வளவு பெரிய நஷ்டம் என்று பார்க்கவேண்டும்
என்று சொல்கிறார்கள். 40%, 50% என்று யாரும் குறைத்
துப் போட்டால் அதனால் அரசுக்கு இலாபம்தானே என்று ஒரு
பக்கம். அதே பத்திரிகையிலே இன்னொரு பக்கத்திலே பார்த்
தோம் என்றால் ரூ. 5,300-க்கு ஒப்பந்தம் செய்யப்பட்டு ரூபாய்
3,000 பில் வாங்கக்கூடிய புண்ணியவான் யாரோ தெரிய
வில்லை, அது எப்படி அவ்வளவு பெரிய தொகை குறைக்கப்
பட்டது ; அவ்வளவு தூரத்திற்கு ஏமாளியான ஒப்பந்தக்காரர்
யார் ? அப்படியெல்லாம் நடைபெற முடியுமா என்று
போடுகிறார்கள். ஆகவே, முரண்பாடு அங்கேயே இருக்கி
றது. அதைப்பற்றி நான் குறை சொல்லவிரும்பவில்லை.
ஏனென்றால் அது அவர்கள் உரிமை. முரண்பாடே அவர்
களுடைய மொத்த உருவமாக இருந்தால் அதைப்பற்றி
நாங்கள் கவலைப்பட மாட்டோம். மகிழ்ச்சி அடை
கிறோம்.

ஆனால் நான் சொல்லிக்கொள்ள விரும்புவது எல்லாம் இந்த
32 வேலைகளை ஒப்பந்தக்காரர்களிடம் கொடுக்கவில்லை.
அதேபோன்று இனிமேல் அவர்களால் சுட்டிக்காட்டப்
பட்ட சென்னை நார்த் வெஸ்ட் சப் டிவிஷன்—அங்கே
45 வேலைகள், அந்த 45 வேலைகளில் 6 வேலைகள் டெண்டர்
விடப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது. 5 வேலைகள் 60%
முதல் 70% வரை குறைவாக டென்டர் போட்டிருந்தார்கள்.
இங்கே கூட சொன்னார்கள், குறைந்த டெண்டர் போட்டு
ஏமாற்றிவிடுகிறார்களே என்று. அந்த டெண்டர்கள் ஏற்றுக்
கொள்ளப்படவில்லை. அவர்கள் சரியாக வேலை செய்ய
மாட்டார்கள் என்று கருதித்தான் மார்ச் இறுதிக்குத் தொடங்க
வேண்டிய வேலைகள் 14-ம் மாடர்ன் இன்ஜினியரிங் கிராஜு
வேட்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன் கோவாப்ரேட்டிவ் கார்ப்பரேஷன்
என்ற கூட்டுறவு நிறுவனத்திடம், கொள்ளை அடிக்க முடியாத
நிறுவனத்திடம் தந்திருக்கிறோம். அதிலே என்ன தவறு ?
24 வேலைகள் இன்னும் நம்மால் மேற்கொள்ளப்படவே இல்லை.

ஆனால், அதிலேதான் விஷயமே துவங்குகிறது. ஒரு பக்
கத்திலே வேலை இல்லாத பொறியியல் பட்டம் பெற்ற பட்ட
தாரிகளுக்கும், பட்டயதாரர்களுக்கும் வேலை. இதனால்
ஒப்பந்தக்காரர்கள் பாதிக்கப்படுகிறார்கள். நான் முன்பே
சொன்னது போல ஒப்பந்தக்காரர்கள் அவர்களிடையே
இருக்கக் கூடிய போட்டியில் அவர்களுக்கு இருக்கக்கூடிய





அரசியல் நண்பர்களைப் பயன்படுத்திக் கொண்டு அவர்கள்
யாரையாவது தாக்கியாகவேண்டும், அதிகாரிகளை முடக்கி
யாக வேண்டும், அப்படி அதிகாரிகளை முடக்குவதற்கு ஒரே
ஒரு ஆயுதமாக இருப்பது அதிகாரிகளை மிரட்டுவது, அச்
சுறுத்துவது. எப்படி அச்சுறுத்துவது ? பத்திரிகைகளை வைத்
துக்கொண்டு அல்லது ஆட்களை வைத்துக்கொண்டு மிரட்டு
கிறார்கள். அதற்குப் பிறகு பத்திரிகைகளிலே அந்தச்
செய்திகளைப் போட்டு ஏன் விஜிலன்ஸ்க்குப் போகவில்லை
என்று கேட்பார்கள். நாங்கள் செய்த தவறுக்கு இந்தத்
தண்டனை போதாதா ? இவ்வளவு ஆண்டுக்காலம் எங்
களை ஆளவிடாதது போதாதா என்று கேட்டவர்கள் எல்
லாம் 3 ஆயிரம் ரூபாய்க்கு தூக்கிலே ஏற்றுங்கள் என்று சொல்லி
இருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.
அவர்கள் தூக்குத் தண்டனை கொடுங்கள் என்று சொல்லப்
படுபவர் யார் என்றால் எஸ். டி. ஓ., அதாவது சப் டிவிஷனல்
ஆபிசர் என்று சொல்லக்கூடிய அசிஸ்டெண்ட் எக்சிகியூடிவ் எஞ்சி
னியர். யாராவது ஒரு உதவிச் செயற் பொறியாளரைப் பிடித்
தால்தான் இனிமேல் சென்னையிலே அவர்களுடைய கதா
காலக்ஷேபம் ஓடும்.

ஏனென்றால் வேறு வேலைகளையெல்
லாம் காண்ட்ராக்ட் கார்ப்பரேஷன் போன்ற பொறுப்பான
நிறுவனங்களுக்கு அரசு தந்துகொண்டிருக்கிறது. அதைத்
தட்டிக் கேட்பதற்கு நாதி இல்லையென்றால் நாளைய தினம்
அவர்களுடைய வேலையே முடங்கிவிடும் என்பதற்காக அந்த
அப்பாவியைத் தேடிக் கொண்டிருந்தார்கள். அப்பாவி கிடைத்
தார். அவர் ஒரு ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்த துணைச்
செயற் பொறியாளர். சாமு சுந்தரராஜ் என்று சொல்லக்
கூடியவர். அவரைப் பிடித்துக்கொண்டு அவரை எப்படியா
வது மட்டம் தட்டி அவரை விஜிலன்ஸ் உள்பட அத்தனை
தண்டனைகளுக்கும் ஆட்படுத்திவோம் என்றால் மற்ற அவ
ரைச் சார்ந்த சக உதவிப் பொறியாளர்கள் எல்லாம் அஞ்சு
வார்கள். அப்படி அஞ்சினால் தாங்கள் தங்களுடைய
வேலையை மேற்கொண்டு செய்யமுடியும் என்பதற்காக அந்த
சாமு சுந்தரராஜ் என்று சொல்லக்கூடிய உதவிப் பொறியா
ளரைப் பிடித்து அவர் மேல் தொடர்ந்து அடுக்கடுக்காக
குற்றச்சாட்டுகளை சுமத்துகிறார்கள். அந்த சாமு சுந்தர
ராஜ் அவர்களை எனக்குத் தெரியாது. கடந்த ஆண்டுதான்
என் வீட்டுக்கு அவர் வந்தார். அவர் சொன்னார், எனக்கு
இருக்கக் கூடியது ஒரே ஒரு பையன்தான். அந்தப் பையனுக்கு
உடல்நலம் சரியில்லை. மருத்துவ வசதிகள் சென்னையிலே
தான் கிடைக்கும். நானோ ஆதிதிராவிடர். என்னை
ஆதரிப்போர் யாரும் இல்லை. ஆகவே அந்த இடத்திற்குப்
போட்டுக் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று சொன்
னார். அவருடைய வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மனிதாபிமான அடிப்படையில். முந்தா நாள் அவரும் அவருடைய பையனும் என் வீட்டுக்கு வந்தார்கள். அவர் கையை நெஞ்சிலே வைத்துக்கொண்டு கதறிக் கதறி அழுதார். என்னிடத்திலே கெஞ்சுகிறார், அவர் சொல்வது எல்லாம் என்னைத் தயவுசெய்து விட்டுவிடுங்கள். நான் இனிமேல் சென்னையிலே இருக்கமாட்டேன், நான் சென்னையிலே இருந்தால் அவர்கள் என்னைப் பழிவாங்காமல் விடமாட்டார்கள். நான் வேலையில் இருக்கும்வரை என்னைத் துரத்திக்கொண்டே இருப்பார்கள். அவர்களுக்கு வெறி அதிகமாகிவிட்டது. ஆகவே என்னைத் தயவுசெய்து காப்பாற்றுங்கள். என் பையனை எங்காவது வைத்துக்கொண்டு போகிறேன், என்று கண்ணீர் மல்கக் கதறிக் கதறிக் கேட்கிறார். பார்ப்பதற்கே அப்பாவியாக இருக்கிற அவர் நெஞ்சம் வெடிக்கக் கேட்கிறார். யார்? ஆதிதிராவிடர். இங்கே நாம் சம்பந்திகள் என்று சொன்னால் மட்டும் போதுமா? அவர்களுக்கு நாம் கொடுக்கிற பாதுகாப்பு என்ன? ஒரு பணக்காரர் ஒரு காண்ட்ராக்டர் சொல்கிறார் என்பதற்காக எப்படிப்பட்ட தவறை நீங்கள் இந்த நாட்டு மக்களுக்குச் செய்துகொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்னொன்றையும் சொல்ல வேண்டும். எம். புக்கை ஆதாரமாக வைத்துப் போட்டிருக்கிறீர்கள். எம். புக்கைப் பொறுத்தமட்டிலும் அது எவ்வளவு வலுவான, முக்கியமான ஒரு அரசுக்கு அல்லது அந்தத் துறைக்குச் சொந்தமான டாக்குமெண்ட் என்பதனை நாம் அத்தனை பேர்களும் அறிவோம். எம். புக்கைத் தொலைத்ததன் காரணமாக அந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் பலர் வேலையைவிட்டுப் போயிருக்கிறார்கள், வேலை இழந்து இருக்கிறார்கள், அல்லது பெரிய தண்டனைக்கு ஆட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அந்தப் பட்டியலே என்னிடத்திலே இருக்கிறது. யாரோ ஒரு காண்ட்ராக்டரைக் காப்பாற்ற வேண்டும். யாரை எதிர்த்து. ஒரு ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த அசிஸ்டெண்ட் எக்சிகியூடிவ் என்சினியரை எதிர்த்து. அதற்காக நீங்கள் செய்யக்கூடிய மாபெரும் தவறு என்னவென்றால் யாரையோ வைத்துக்கொண்டு எம். புக்கைக் கொண்டுவர வைக்கிறீர்கள். எம். புக் பல இடங்களிலே தொலைந்து இருக்கிறது. எம். புக்கைத் தொலைத்ததற்காக பலர் வீட்டிற்கு அனுப்பப்பட்டு இருக்கிறார்கள். பலர் இன்னும் புரமோஷன் வாங்காமல் இருக்கிறார்கள். யாருக்கோ ஆதாயம் தேடவேண்டும் என்பதற்காக எம். புக்கைக் கொண்டுவந்து போட்டோஸ்டாட் எடுத்துப்போடுகிறோம் என்று சொல்கிறீர்களே.

(மாலை 6–20)

அந்த எம். புக்கைத் திருப்பி வைத்தீர்கள். அதற்காக மகிழ்ச்சி. நன்றி. ஆனால் அப்படித் திருப்பி வைத்திருக்காவிட்டால் நிலைமைகள் என்னவாகி இருக்கும்? அத்தனைபேரும் வீட்டுக்குப்



போயிருப்பார்கள். இதைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாம் இதையெல்லாம் யாருக்காகச் செய்கிறோம்? இப்பொது இவரைப் பிடித்திருக்கிறார்கள். அன்றைக்கு பகிரங்கமாகவே சொன்னேன். என்ன வந்தாலும் சரி, இவர்களுக்குப் பாடம் கற்றுத் தராமல் நான் இருக்கப் போவது கிடையாது; நீங்கள் அஞ்ச வேண்டிய அவசியம் கிடையாது; உங்களை மாற்றப் போவதும் கிடையாது என்று சொன்னேன். ஏனென்றால் அன்றாடம் பத்திரிகைகளிலே செய்திகள் வருகின்றன. ஏன் நடவடிக்கை கிடையாது; ஏன் மாற்றவில்லை என்று அன்றாடம் கேள்விகள். பதில் சொல்ல வக்கில்லாத அமைச்சர் என்ற குற்றச்சாட்டு வேறு. அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. ஒரு ஏழை, ஆதிதிராவிடருடைய உரிமையைப் பாதுகாக்க வேண்டுமென்பதற்காக நான் எதையும் செய்யத் தயார்; இன்னும் சொல்லப்போனால் இந்த அமைச்சரவையிலிருந்து போகக்கூட நான் தயாராக இருக்கிறேன். ஆனால் நிச்சயமாக இவர்களுக்குக் கட்டுப்பட மாட்டேன் என்பதையும், இப்படிப்பட்ட குற்றவாளிகள் தொடர்ந்து இந்த நாட்டிலே இப்படிப்பட்ட அரசியலை வைத்துக்கொண்டு பிழைக்க முடியாத அளவிற்கு நிலைமைகளை நிச்சயமாக இந்த அரசு உருவாக்கும் என்பதையும் நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இப்பொழுது அடுத்ததாக North West Sub-division -இலே, 45 வேலைகள் இப்படியே போகின்றன என்று பார்த்தவுடன் அங்கேயும் யாரோ சொல்லி, அங்கே ஒரு சிறுபான்மை சமுதாயத்தைச் சார்ந்த ஒரு இஸ்லாமிய நண்பர் அவரை மிரட்டுகின்றார்கள்.

ஆகவே, அவர்களுக்குக் கிடைத்ததெல்லாம், ''ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி'' என்பதைப் போல, ஆங்காங்கு இருக்கக்கூடிய, தட்டிக் கேட்க முடியாத அளவிற்கு வலுவற்றவர்களை எல்லாம் பிடித்துக் கொண்டு, அதை வைத்துக் கொண்டு ஆதாயம் தேடப் பார்க்கின்றார்கள் என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நான் இவ்வளவு நேரம் எடுத்ததற்குக் காரணம், நிலைமைகள் சீராக வேண்டுமென்பதற்காகத்தான். ஆகவே, இதன் வாயிலாகவே இன்று இந்தத் துறையிலே எப்படியெல்லாம் பணிகள் நடைபெறுகின்றன என்பதையும், இந்தப் பணிகளுக்கு, அறிந்தோ அறியாமலோ, தெரிந்தோ தெரியாமலோ, அரசியல் ஆதாயம் பெற வேண்டுமென்றோ பெற வேண்டாமென்றோ, ஆக இப்படி எல்லாம் தொடர்ந்து இந்தத் துறை இன்னலுக்கு ஆளாகி இருக்கிறது என்றாலும் உங்கள் மேலான ஆதரவும், ஒத்துழைப்பும் இன்னும் இருக்குமேயானால், நிலைமைகளை உணர்ந்து, புரிந்து

ஏற்றுக் கொண்டீர்கள் என்றால நிச்சயமாக சென்னையிலே இருக்கக் கூடிய பணிகளை, ஏற்கனவே நிதி ஒதுக்கீடு குறைவு, இந்த நிதி ஒதுக்கீட்டை வைத்துக் கொண்டு, செவ்வனே நாம் பணியாற்ற முடியும் என்பதனை மட்டும் இந்த மாமன்றத்திற்கு உத்தரவாதமாகத் தருகிறேன்.

மாமன்றத்தில் இருக்கக் கூடிய உறுப்பினர்கள் பல கோரிக்கை களை எல்லாம் வைத்திருக்கிறார்கள். கோரிக்கைகள் அத்தனை யையும் பரிவோடு கவனித்து இந்த அரசு நடவடிக்கையை மேற் கொள்ளும்.

கடந்த முறை நான், சின்னவேடம்பட்டியைப் பற்றி அறி வித்திருந்தேன்; மாண்புமிகு முதலமைச்சருடைய ஆணை யோடு அறிவித்திருந்தேன். அரசாணை பிறப்பிக்கப்பட்டு நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் மதுராந்தகம் வலதுகரை கால் வாய்க்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்று காலை முதல் பலரும் சொன்னார்கள். கொடுமுடி ஆறு நீர்த் தேக்கத் திட்டம் என்ற கோரிக்கை இங்கே சொல்லி வலியுறுத்தப்பட்டது. நீண்ட காலமாக வலியுறுத்தப் பட்ட அந்தத் திட்டம் நிச்சயமாக ஏற்றுக்கொள்ளப்படும் என்று தொடர்ந்து சொல்லிக் கொண்டு வந்தாலும் கூட பலருக்கு நம்பிக்கை இல்லாமல் இருந்தது. ஆனால் இன்றைக்கு இந்த அரசு புரட்சித் தலைவரின் மேலான ஒத்துழைப்போடு, ஆணை யோடு அரசாணையைப் பிறப்பித்திருக்கிறது. கொடுமுடி ஆறு நீர்த் தேக்கத் திட்டம் 1,560 இலட்சம் ரூபாய் செலவில் திட்டப் பணியாக மேற்கொள்ளப்படும் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சண்முகா நதித் திட்டம், மதுரை மாவட்டம்— இந்தத் திட் டத்தின் பயன் 1.95 : 1 என்று இருந்தாலும் கூட, இந்தத் திட்டத்தை மேற்கொள்ள முடியாத அளவிற்குப் பல இடையூறு கள் இருந்தன. அத்தனையையும் தாண்டி நம்முடைய தேனி ஜெயராமன் அவர்கள் தேனீயைப் போன்று சுறுசுறுப்பாக இருந் ததன் விளைவாகவும், இந்த அரசு மக்களுக்காகப் பணியாற்றக் கூடிய அரசு என்பதன் காரணமாகவும், மதுரை மாவட்டம் உத்தமபாளையம் வட்டம், இராயப்பன்பட்டி கிராமம் அருகே சண்முகா நதிக்குக் குறுக்கே இந்த நீர்த்தேக்கத் திட்டம் 695 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் என்பதையும் நான் இந்த மன்றத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.





அதைப் போன்று வேறு பல கோரிக்கைகளை எல்லாம் பற்றி இங்கே சொல்லியிருக்கிறீர்கள். நேரமில்லாத காரணத்ினால் நான் இங்கே அவற்றை எல்லாம் சொல்லாவிட்டாலும் கூட, காட்டாமணிச் செடி போன்ற பிரச்னைகளை எல்லாம் நாம் தொடர்ந்து பேசிக் கொண்டு வருகிறோம்.

காவிரிப் பிரச்னையைப் பொறுத்த மட்டிலும், காவிரிப் பிரச்னையைப் பற்றி நாம் பல கால கட்டங்களிலே பேசியிருக்கி றோம். நிச்சயமாக இந்த அரசைப் பொறுத்தவரையில், காவிரிப் பிரச்னையிலே தஞ்சை மாவட்டத்து விவசாயிகளை வாட வைக்க வேண்டுமென்ற எண்ணம் கிடையாது. நிச்சயமாக அப்படிப் பட்ட எண்ணம் கொண்ட ஒரு அரசு எந்தக் காலத்திலேயும் தமிழ்நாட்டிலே இருக்க முடியாது. காரணம், தமிழ்நாட்டு மக்களுடைய உரிமை அது. காவிரியிலிருந்து தண்ணீர் பெறுவது தமிழ்நாட்டு மக்களுடைய உரிமை. அதை யாரும், தட்டிக் கேட்க முடியாது. ஆனால் மேல் பகுதியிலே இருக்கின்றார்கள் என்ற ஒரே காரணத்திற்காக, அதைச் கட்டுப்படுத்தக் கூடிய இடத்திலே இருக்கிறார்கள் என்பதற்காக தமிழகத்திற்கே உரிய உரிமைகளை இன்றைக்குத் தட்டிப் பறித்திருக்கிறார்கள் கர்நாடக மாநிலத்தைச் சார்ந்தவர்கள் என்பதைத் தவிர வேறு ஒன்றுமில்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டம், நிச்சயமாக வளம் கொழிக்கும் பூமியாக மாற வேண்டிய அளவுக்கு எலலாம் இந்த அரசு திட்டங்கள் கொடுக்கும் என்பதையும் சொல்லி, பல வெட்டுத் தீர்மானங் களை இங்கே முன் மொழிந்திருக்கிறார்கள், பல கோரிக்கை களையும் இங்கே முன் வைத்திருக்கிறார்கள். அத்தனையையும் பரிவோடு இந்த அரசு கவனித்து, நேரம் இல்லாத காரணத்தால் தொழிலாளர் தினமாகிய மே தினம், நாளைய தினம் கொண்டாட இருக்கிறோம் என்பதாலே, இத்தோடு விட்டுவிடுகிறேன். இன் னொரு நேரத்தில் பார்த்துக் கொள்கிறேன் என்று சொல்லி, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையின் மேல் அரசு கோரியுள்ள தொகையை ஒதுக்கீடு செய்ய ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொண்டு விடைபெறு கிறேன், நன்றி, வணக்கம்.

THIRU T. VENKATA REDDY : Mr. Temporary Chairman, Sir, When Hon. Minister was replying with regard to Kalavar apalli Dam, it is true that the people have given notice that they are going to have a procession. It is not against the Government as such. All the political parties have joined in such a procession in order to compel the Government to complete the Dam. The private individual, will also know the situation, I am sure that she will be taught a lesson that such things will not be tolerated by any people. It is

(Thiru T. Venkata Reddy) [1986 ஏப்ரல் 30

also to highlight the grievances of the people to the High Court to complete the case. We are having the procession not against the Government.

**திரு. வே. இரா. ஜெயராமன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, தேனி தொகுதியினுடைய நீண்ட நாளைய கோரிக்கையான செண்பகா நதி திட்டத்திற்கு ரூ. 666 இலட்சங்களுக்கு அனுமதி அளித்த புரட்சித் தலைவர் அரசுக்கும், பொதுப் பணித் துறை அமைச்சருக்கும், குறிப்பாக, நிதித் துறையிலிருந்து அதற்கு அனுமதி அளித்த மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும் அரசு அலுவலர்களுக்கும், பொறியியல் அலுவலர்களுக்கும் தொகுதியின் சார்பிலும், என் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. துரை கோவிந்தசாமி :** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல்வேறு சிறிய திட்டங்களை அறிவித்தார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கர்நாடகத்தில் ஏறத்தாழ ரூ. 60 கோடியில், தமிழகத்தில் நம்முடைய மேட்டூர் அணைக்கு வருகிற தண்ணீரைத் தேக்குகிற வகையில் வேறு பல திட்டங்களை நிறைவேற்றுவதற்கு, அந்தச் சட்டமன்றத்தில் தொகை ஒதுக்கி இருப்பது பற்றி, காலையிலே எடுத்துப் பேசியிருக்கிறார்கள். குறிப்பாக தஞ்சை மாவட்டம் பாதிக்கப்படுகிற நிலையிலே, கிரவுண்ட் வாட்டர் பாதிக்கப்படுகிற நிலை இருக்கிற காரணத்தால், தஞ்சை மாவட்டத்திலே நீண்ட நெடுங்காலமாக, முதலைப்பட்டு வாரி அணைக்கட்டு தஞ்சைக்குப் பக்கத்திலே அமைக்க வேண்டுமென்று நாங்கள் நீண்ட நாட்களாகச் சொல்லி இருக்கிறோம். இந்த அறிவிப்பிலே அது வரவில்லை. அது இந்த ஆண்டு துவக்குகின்ற நிலையிருக்கிறதா அல்லது உலக வங்கியின் உதவியுடன் தொடங்க இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உலக வங்கியின் அனுமதியுடன் தான் அந்தத் திட்டம் மேற்கொள்ளப்படும்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் பல திட்டங்களை அறிவித்தார்கள். உலக வங்கியின் உதவியினாலே, வைகை பெரியார் மேம்பாடு திட்டத்தின் கீழ் 4,000 ஏக்கர் நிலக்கோட்டைப் பகுதிக்குத் தண்ணீர் கொடுக்க சாங்க்ஷன் செய்யப்பட்டு, அது கெசட் நோட்டிபிகேஷனாக வந்து, இப்பொழுது உலக வங்கி, இலாபகரமாக இல்லாத திட்டம்



986 ஏப்ரல் 30] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

என்று சொல்லி, தள்ளி வைத்திருக்கிறதாகத் தெரிகிறதே.
அது உண்மைதானா? அப்படியானால், நம்முடைய அரசாங்கப்
பணத்தைப் போட்டாகிலும் அந்தத் திட்டத்தை நிறைவேற்று
வதற்கான வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்பு
கிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** மாற்றுத் தலைவர்
அவர்களே, இப்பொழுது என்னிடத்திலே விவரம் இல்லை.
என்றாலும், கெசட்டில் வந்திருக்கிறது என்றால், அத்தனை
சம்பிரதாயங்களும் கடைப்பிடிக்கப்பட்டுத்தான் அதிலே வரும்.
ஆகவே, கெசட்டிலே வந்திருந்தால் நிச்சயமாக அந்தப் பணி
மேற்கொள்ளப்படும்.

**திருமதி. பா. வளர்மதி :** மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, மைலாப்பூரில் இருக்கிற காவலர் குடியிருப்பைச்
சீர் செய்வதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம்
பலமுறை எடுத்துச் சொல்லியும், இந்த முறை திட்டங்களை
அறிவிக்கிறபொழுது அறிவிப்பார்கள் என்று எதிர்பார்த்தோம்,
இல்லை. அது சம்பந்தமாக எவ்வளவு பணம் ஒதுக்கீடு
செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

(மாலை 6-30)

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** மாற்றுத் தலைவர்
அவர்களே, ரூ. 24 இலட்சம் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற
கோரிக்கையை பொதுப்பணித் துறை அரசுக்கு அனுப்பியிருக்
கிறது. அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில்
அந்த பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

**திரு. ஆர். எஸ். ஆறுமுகம் :** மாற்றுத் தலைவர் அவர்களே,
கீரியாறு, பச்சையாறு திட்டத்திற்கும் ஏதாவது பச்சைக்கொடி
காட்டுவதற்கு வழி பிறக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** மாற்றுத் தலைவர்
அவர்களே, கீரியாறு பொறுத்தமட்டில், கீரியும் பாம்புமாக
விவசாயிகள் இருப்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே
தெரியும். பச்சையாறை பொறுத்த மட்டிலும் அந்தப் பகுதி
பசுமையாகத்தான் இருக்கிறது. கூடுதல் பசுமையாக்க வேண்டும்
என்றுதான் நம்முடைய கோரிக்கையில் இருக்கிறது. ஆனால்
அங்கே ஒரு சில குரங்குகளுடைய வாலாட்டம் இருக்கிறது. அந்த
வாலாட்டத்தைக் கட்டுப்படுத்துகின்ற உரிமை மத்திய அரசிடம்
இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
மத்திய அரசிடம் ஒரு குழுவாக போய் கோரிக்கை வைத்து
சிங்கவால் குரங்கைவிட மனிதன் மேல் என்று சொல்லலாம்.

திரு. எப். எம். இராசரத்தினம் : மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய மாற்றுத் தலைவர் அவர்கள் சார்பாக சைதை தொகுதியைச் சார்ந்த அடையாறு வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டும் பணி பற்றிய அறிவிப்பு இல்லை என்பதையும் மற்றும் குமரி மாவட்டத்தினுடைய மக்கள் நீண்ட நெடுங்காலமாக எதிர்பார்த்து வருகின்ற உலக வங்கியினுடைய நிதி உதவியோடு நடைபெற இருக்கின்ற கோதையாறு மேம்பாடு திட்டம் மற்றும் மாம்பழத்தாறு அணைத் திட்டம் போன்ற அறிவிப்புகளுக்கு ஏதேனும் வழி பிறக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாற்றுத் தலைவர் அவர்களே, தயவு செய்து நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்களை துணைக்கு அழைக்க வேண்டாம். உங்கள் தொகுதியை பொறுத்த மட்டிலும் ஏற்கனவே இந்த அரசு 2 கோடியே 88 இலட்சம் ஒதுக்கீடு செய்திருப்பதை நீங்கள் அறிவீர்கள். மாம்பழத்தாறு திட்டம் ஆரம்பத்திலே செயல் முறைக்கு ஏற்ற திட்டமாக இல்லாமல் இருந்தது. அதையெல்லாம் மாற்றி இப்போது செயல் முறைக்கு ஏற்ற திட்டமாக்கக் கூடிய அளவிற்கு திட்டங்களைத் தீட்டியிருக்கிறோம். அரசின் பரிசீலனையில் இருக்கிறது. உரிய நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும். கோதையாறு மாடர்னைசேஷனுக்கு ரூ. 36 கோடிக்கு ஒரு திட்டத்தைப் போட்டு அது உலக வங்கி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற ஒரு எண்ணத்திலே இந்த அரசு இருக்கிறது. ஒரே யடியாக வேறு 2,3 திட்டங்களோடு சேர்த்துப் பேசலாம் என்று இருக்கிறோம்.

திரு. த. புஷ்பராசு : மாற்றுத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் வறட்சி மிகுந்த மாவட்டம். அதிலும் திருமயம் தொகுதி வறட்சி மிகுந்த தொகுதி. அந்தத் தொகுதியிலே இருக்கின்ற சேத்துக்கண்மாய் அணைக்கட்டு திட்டத்தைப் பற்றி காலையிலே பேசும்போது நான் அமைச்சர் அவர்களிடம் தெரிவித்தேன். அந்தத் திட்டம் இவ்வாண்டு நிச்சயமாக நிறைவேற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாற்றுத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டம் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. பொ. உத்திராபதி : மாற்றுத் தலைவர் அவர்களே அமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது இந்த காவிரி நீர் பிரச்சனையைப் பற்றி ஒவ்வொரு ஆண்டும் மானிய கோரிக்கையிலே என்ன பதில் சொல்கிறார்களோ அந்த பதிலை இப்போதும் கொடுத்து இருக்கிறார்கள். இதைப் பார்க்கும்போது



ஏமாற்றம் அடைகின்ற நிலை இருக்கிறது. இப்போது கூட ஏப்ரல் இறுதிக்குள் பேச்சு வார்த்தை நடத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது என்று கொடுத்திருக்கிறார்கள். ஏப்ரல் முடிந்து விட்டது. மே பிறக்கப் போகிறது. ஜூன் மாதம் தஞ்சாவூருக்கு தண்ணீர் கிடைக்க வேண்டும். இப்படியே நீண்டுக் கொண்டு போனால் பேச்சு வார்த்தை என்பதற்கு ஒரு அர்த்தம் இல்லாமல் போய்விடும். ஆகவே கர்நாடக அரசோடு பேச்சு வார்த்தை நடத்த வேண்டும். இல்லாவிட்டால் மத்திய சர்க்கார் இதிலே தலையிடச் செய்ய வேண்டும். இதற்கு தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை கூட்டி, இந்த கர்நாடக பிரச்சனையைத் தீர்ப்பதற்கு என்ன வழி என்று பார்க்க வேண்டும்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த காவிரி நீர் ஒப்பந்தம் பொறுத்த மட்டிலும் அது இறுதியாக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் கடந்த ஜனவரி மாதம் தேதி கொடுப்பதாகச் சொல்லி, அதற்கு முதலமைச்சரிடம் நேரம் ஒதுக்கீடு செய்திருந்தோம். கர்நாடக மாநிலத்தில் இருந்த அரசியல் சூழ்நிலை காரணமாக அவர்கள் அந்தப் பணியை மேற்கொள்ள முடியவில்லை. கர்நாடக மாநிலத்தில் உள்ள முதலமைச்சர் அவர்கள் உடல்நிலை சரியில்லாமல் இருந்த காரணத்தினால் தான் தேதி கொடுக்கவில்லை. இது இறுதியான ஒரு முயற்சி என்று சொல்லக் கூடிய அட்டம்ட்டாக இருக்கும். இதற்குப் பிறகு மேற்கொண்டு எவ்விதமான முயற்சியும் இல்லை என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். முதலமைச்சரின் மேலான ஒப்புதலோடு தான் அந்தத் தகவலை தந்திருக்கிறார்கள் என்ற முறையில் இது இறுதியான முயற்சியாக இருக்கும். இதற்கு மேற்கொண்டு எந்தவிதமான முயற்சியும் இருக்காது என்று ஏற்கனவே முதலமைச்சர் அவர்கள் சொன்னதை ஒட்டி நானும் சொல்கிறேன்.

திரு. மு. மாரிமுத்து : மாற்றுத் தலைவர் அவர்களே, வைகை நதியிலிருந்து பிரிந்து செல்லக்கூடிய நிலையூர் கால்வாயை நவீனமயமாக்குகின்ற திட்டம் இந்த ஆண்டு செயல்படுத்தப்படப்போவதாக சொல்லப்பட்டு இருந்தது. அது மட்டுமல்லாமல், தமிழக அரசின் சாதனைகளை வெளியிடுகின்ற தமிழக அரசு புத்தகத்தில் கூட இந்தத் திட்டத்திற்கு ரூ. 18 1/2 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதாக வெளியிடப்பட்டிருந்தது. கடந்த ஒரு வாரத்திற்கு முன்னால் அமைச்சர் அவர்கள் கேள்வி நேரத்தின்போது, பதில் சொன்ன நேரத்தில் கூட இந்தத் திட்டம் இந்த ஆண்டு தொடங்கப்படுவது போன்று பதில் அமைந்திருந்தது.

இந்த நிலையூர்க் கால்வாயை நவீனப்படுத்துகிற திட்டம் இந்த ஆண்டிலே ஆரம்பிக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பா. சை. மு. யூசுப் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆம்.

**திரு. பெ. செங்கோட்டையன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, காவிரி டெல்டாவிலே இருக்கக்கூடிய பாசன வாய்க்கால்களை எல்லாம் நவீனப்படுத்தும் திட்டம் என்பதற்காக ஏறத்தாழ 301 கோடி ரூபாயில் Comprehensive Scheme போடப்பட்டிருக்கிறது. அந்தக் காவிரி டெல்டாவிலே இருக்கக்கூடிய ராஜி, கொய்யேரி, குமாரபாளையம், மோகனூர் போன்ற கால்வாய்களையும் இந்தத் திட்டத்திலே சேர்ந்துக்கொண்டு அவையும் நவீனப்படுத்தப்படுமா என்பதை அமைச்சரவர்களிடத்திலிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பா. சை. மு. யூசுப்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மேட்டூர் அணையிலிருந்து வருகிற அவ்வளவு தண்ணீரும் இப்போது சுற்றி இருக்கக்கூடிய பழைய ஆயக்கட்டுகளுக்குத்தான் பயன்படுகிறது. எனவே அந்த ஆயக்கட்டுகளைப் பொறுத்தவரையில்தான் பணிகள் மேற்கொள்ளப்படும். புதிய ஆயக்கட்டுகளைப் பொறுத்தவரையில் காவிரி நீர் ஒப்பந்தத்திற்குப் பிறகுதான் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சைதை. சா. துரைசாமி):** விவாதம் முடிவுற்றது; இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண்—36 பாசனம்

திருவாளர்கள் சு. பாலன், என். எஸ். வி. சித்தன் ஆகியோர் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக் கொள்ளப்பெற்றனவாகக் கருதப்பெற்றன.

திருவாளர்கள் எஸ். என். இராமசாமி, பொ. உத்திராபதி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக் கொள்ளப் பெற்றன.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சைதை சா. துரைசாமி):** பேரவை முன்னுள்ள கேள்வி;

''மானியக் கோரிக்கை எண். 36-பாசனம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 64,86,31,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று' நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.





கோரிக்கை எண். 37 — பொதுப்பணிகள் — கட்டிடங்கள்

திரு. கே. கல்லன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றதாகக் கருதப்பெற்றது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சைதை சா. துரைசாமி)** பேரவை முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண். 37 பொதுப்பணிகள் கட்டிடங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,04,53,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 38— பொதுப்பணிகள்

பணியாளரமைப்பும்—கருவிகளும்— தளவாடமும்

திருவாளர்கள் சு. பாலன், கே. கல்லன் ஆகியோர் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத்தீர்மானங்கள் பேரவையின் அனுமயுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சைதை சா. துரைசாமி)** பேரவை முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண். 38—பொதுப்பணிகள்—பணியாளரமைப்பும்—கருவிகளும்—தளவாடமும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 22,78,64,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 52— பாசனம் குறித்த மூலதனச் செலவு

திரு. சு. பாலன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றதாகக் கருதப்பெற்றது.

[1986 ஏப்ரல் 30

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சைதை சா. துரைசாமி) பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண். 52—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 63,89,13,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

### கோரிக்கை எண் 53. பொதுப்பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு

திரு. சு. பாலன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சைதை சா. துரைசாமி) பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண். 53—பொதுப்பணிகள் கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 42,38,18,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

## 8. அறிவிப்பு

### பேரவை அலுவல்

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சைதை சா. துரைசாமி) பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கிணங்க பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு நடைபெறும் :

1—5—1986 (வியாழக்கிழமை) முதல் 6—5—1986 (செவ்வாய்க்கிழமை வரை, ஏற்கெனவே அறிவித்துள்ளபடி மாற்றம் எதுவுமில்லை. எனினும் 2—5—1986 (வெள்ளிக்கிழமை) பேரவைக் கூட்டம் காலை 9.00 மணிக்குப் பதிலாக மாலை 4.00 மணிக்குத் தொடங்கும்.



1986 ஏப்ரல் 30] [மாற்றுத் தலைவர்]

(மாலை 6-40)

| | |
|---|---|
| 7—5—1986 (புதன்கிழமை). | 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்.<br>7—மாநிலச் சட்டமன்றம்.<br>8—தேர்தல்கள்.<br>9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள். |
| 8—5—1986 (வியாழக்கிழமை). | 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்.<br>43—பல்வகை.<br>58—பல்வகை மூலதனச் செலவு.<br>59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்.<br>44—எழுது-பொருள் அச்சுத்துறை.<br>1. 1986–87 ஆம் ஆண்டிற்கான மானியக்கோரிக்கைகள் மீது விவாவாதமும் வாக்கெடுப்பும் மற்றும் முடிவு பெறாத மானியக் கோரிக்கைகள் பொறுத்த வரை விவாதமின்றி 1 மணிக்கு வாக்கெடுப்பு.<br>2. வாக்கெடுப்பிற்குப் பின் 1986–87 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்கச் சட்ட முன் வடிவு — அறிமுகம் செய்தல். |
| 9—5—1986 (வெள்ளிக்கிழமை) | 1986–87 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்கச்சட்டமுன்வடிவு ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும். |
| 10—5—1986 (சனிக்கிழமை) | தனியார் அலுவல்கள். |
| 11—5—1986 (ஞாயிற்றுக்கிழமை). | விடுமுறை. |

[மாற்றுத் தலைவர்] [1986 ஏப்ரல் 30

| | |
|---|---|
| 12—5—1986 (திங்கட்கிழமை) | அரசினர் சட்டமுன் வடிவுகள்—ஆய்வு செய்தலும் நிறைவேற்றுதலும் மற்றும் பிற அரசு அலுவல்கள். |
| 13—5—1986 (செவ்வாய்க்கிழமை) | |

(பேரவை காலையிலும் மாலையிலும் கூடும்).

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று. நாளை மறுநாள் (2—5—1986) மாலை 4.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை மாலை 6.41 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

9. அவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

72. தமிழ்நாடு 1962 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 6—3—1986 ஆம் நாளிட்ட 339 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

73. தமிழ்நாடு அரசு பற்றிய இந்தியத் தணிக்கைத்துறைத் தலைவரின் 1984–85 ஆம் ஆண்டிற்கான (வருவாய் வரவினங்கள்) அறிக்கை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது (ஆங்கிலம்).

74. தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் 1984–85 ஆம் ஆண்டிற்கான பதினான்காவது ஆண்டறிக்கை 1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

151. 1986-87 ஆம் ஆண்டிற்கான பாசனம் மற்றும் கட்டிடங்கள் பற்றிய மானியக் கோரிக்கையின் மீதான நீர்ப் பாசனத்துறை அமைச்சரின் உரை (தமிழ், ஆங்கிலம்).



1986 ஏப்ரல் 30]

152. 1985–86 ஆம் ஆண்டிற்கான பொதுப் பணி (கட்டிடப் பிரிவு) துறையின் பணிகள் பற்றிய ஆய்வுரை (தமிழ், ஆங்கிலம்).

153. 1986–87 ஆம் ஆண்டிற்கான பாசனம் மற்றும் நிலத்தடி நீர் பற்றிய சாதனைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

154. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1979-80, 1980–81 மற்றும் 1981–82 ஆம் ஆண்டுகளுக்கான வருவாய் வரவினங்கள் அறிக்கைகளில் வனம்—மீனளத்துறை தொடர்பான பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்தி இரண்டாவது அறிக்கை (தமிழ்).

155. 1979-80 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் கணக்குகள் மற்றும் அவ்வாண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (சிவில்) அறிக்கையில் ஊரக வளர்ச்சித் துறை தொடர்பான பத்தி எண் 3.12—பணிக்கான ஊதியத்தை உணவுப் பொருளாக வழங்கும் திட்டம் குறித்த பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்தி மூன்றாவது அறிக்கை (தமிழ்).

156. 1981–82 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் கணக்குகள் மற்றும் அவ்வாண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் (சிவில்) தொழிலாளர் துறை தொடர்பான பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்தி நான்காவது அறிக்கை (தமிழ்).

157. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1981–82 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (வணிகம்) தொழில் துறை பற்றிய பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தொன்றாவது அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

158. பொது நிறுவனங்களின் ஆண்டுக் கணக்குகளையும் அவற்றின் மீதான தணிக்கை அறிக்கைகளையும் சட்ட மன்றத்தில் வைப்பதில் ஏற்படும் காலதாமதம் குறித்த பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தி இரண்டாவது அறிக்கை (தமிழ்).

159. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும் விடைகளும் (எண்கள் 1 முதல் 50 வரை) (பனிரெண்டாவது பட்டியல்).

# இணைப்பு 1.

(537ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

பாசனங்கள்-கட்டிடங்கள் மீதான மானியக் கோரிக்கைகள் 1986–87.

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே,

ஆளுநர் அவர்களின் பரிவுரையின் பேரில் இவ்வரசுக்கு கோரிக்கை 36-பாசனம் என்பதன்கீழ் ரூ. 64,86,31,000-க்கு மேற்படாமலும், கோரிக்கை 52-பாசனம் மீதான மூலதனச் செலவு என்பதன் கீழ் ரூ. 63,89,13,000-க்கு மேற்படாமலும், கோரிக்கை 37—பொதுப்பணிகள்—கட்டிடங்கள் என்பதன் கீழ் ரூ. 4,04,53,000-க்கு மேற்படாமலும், கோரிக்கை 38—பொதுப் பணிகள்—பணியாளர்கள் அமைப்பும் கருவிகளும், தளவாடங் களும் என்பதன் கீழ் ரூ. 22,78,64,000-க்கு மேற்படாமலும், கோரிக்கை 53-பொதுப்பணிகள்—கட்டிடங்கள் மீதான மூலதனச் செலவு என்பதன்கீழ் ரூ. 42,38,18,000-க்கு மேற்படாமலும் தொகை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தற்போதுள்ள பாசன அமைப்புகளை விரிவாக்குவதற்கும் அவற்றை இயல்பாகப் பராமரிப்பதற்கும் ஆகும் செலவும், வெள்ளம், புயல் காரணமாக ஏற்படும் செப்பனீட்டுச்செலவும் கோரிக்கை 36-பாசனம் என்பதன்கீழ் வழங்கப்படும் மானியத் திலிருந்து ஈடு செய்யப்படும்.

புதிய பாசனத் திட்டங்கள், தொழிற்சாலைகளுக்கு நிலத்தடி நீர் வழங்கும் திட்டங்கள் ஆகியவற்றில் செலவு கோரிக்கை 52-பாசனம் மீதான மூலதனச் செலவு என்பதன்கீழ் பெறும் மானி யத்திலிருந்து ஈடு செய்யப்படும்.

கட்டிடங்கள், ரூபாய் ஒரு இலட்சம் வரையிலான பலவகைப் பணிகள் மற்றும் மூலப்பணிகளுக்கும் கட்டிடங்களின் கட்டுமானம் மற்றும் மேம்பாடு, தற்போதுள்ள கட்டிடங்களின் இயல்பான பராமரிப்பு ஆகியவை போன்ற செப்பனீட்டுப் பணிகளுக்கும் செய்யப்படும் நிதி ஒதுக்கீடு கோரிக்கை 37-ன் கீழ் வருகிறது. பொதுப்பணியின்கீழ் வருகின்ற கட்டிடங்களின் சொத்துவரி கட்டு வதற்கான செலவும் இக்கோரிக்கையில் அடங்கும்.







கோரிக்கை **எண் 38**—பொதுப்பணித்துறை நிர்வாகம், கருவி களும் தளவாடங்களும் பணியாளர் அமைப்பின் மொத்தச் செலவு இக்கோரிக்கையின் கீழ் வருகிறது.

புதிய கட்டிடப் பணிகளுக்கு, தனித்தனியே ஆகும் செலவு ரூபாய் ஒரு இலட்சத்துக்கு மேற்படுமாயின் அல்லது தனித்தனியே இந்த அளவுக்குக் குறைவாகச் செலவு ஏற்படுவதாயினும், திட்டத் தின் ஒரு பகுதியாக அமைத்து ரூ. 5 லட்சத்துக்கு மேல் செலவாகு மாயின் அப்பணிகள் மீதான செலவு கோரிக்கை 53 என்பதன்கீழ் பெறும் மானியத்திலிருந்து செலவு செய்யப்படும்.

பெரிய மற்றும் நடுத்தர பாசனம் :

1986–87 ஆம் ஆண்டு ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் இரண்டாவது ஆண்டாகும். இவ்வாண்டில் பெரிய மற்றும் நடுத்தர பாசனத் திட்டங்களுக்காக ரூ. 58.46 கோடியும் 2,000 ஹெக்டேருக்குக் குறைவான பாசனப் பரப்பைக் கொண்ட சிறு பாசனத் திட்டங்களுக்காக ரூ. 9.20 கோடியும் முதலீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1986-87 ஆம் ஆண்டின் கூடுதல் பாசன வசதிக்கான இலக்கு 17,060 ஹெக்டேராக நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

பெரிய பாசனத் திட்டங்கள் :

(அ) உலக வங்கியின் உதவித் தொகையுடன் 1977 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட "பெரியார்-வைகை நவீனப்படுத்தும் திட்டத்தின் முதல் கட்டப் பணிகள்" 1984 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் முடிக்கப்பட்டது. ரூ. 56.86 கோடி செலவில் இத்திட்ட இரண்டாவது கட்டப் பணிகள் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு உள்ளது. இத்திட்டத்திற்கு உலக வங்கியின் உதவித்தொகை ·35 மில்லியன் (அமெரிக்கா) டாலர்கள் ஆகும். மேற்கண்ட இரண்டாவது கட்டப் பணிகளை மார்ச் 88-ல் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1986-87 ஆம் ஆண்டு வரவு-செலவு மதிப்பீட்டில் ரூ. 16·02 கோடி இத்திட்டத்திற்காக ஒதுக் கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஆ) ரூ. 18.00 கோடி செலவில், கோவை மற்றும் பெரியார் மாவட்டங்களில் 56,660 ஹெக்டேர் நிலம் பயன் பெறும் வகை யில் திட்டமிடப்பட்டுள்ள பரம்பிக்குளம் ஆழியாறு—பாசனப் பகுதி விரிவாக்க திட்டப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றன. இத்திட்டத்தின் கீழ் மேலும் 14,170 ஹெக்டேர் நிலங் களுக்குப் பாசன வசதி அளிக்க ஒரு கருத்துரு அங்கீகரிக்கப்பட்டு, அதற்கான விரிவான மதிப்பீடு ரூ. 743.50 லட்சத்தில் அரசின் பரிசீலனையில் உள்ளது.

[1986 ஏப்ரல் 30

நடுத்தர மற்றும் சிறு பாசனத்திட்டங்கள் :

வாணியார், வெம்பகோட்டை, குள்ளூர்சந்தை மற்றும் சூளகிரிசின்னார் ஆகிய திட்டங்களுக்கான பணிகள் நிறைவு பெற்றுவிட்டன. மேலும் கீழ்க்காணும் திட்டப் பணிகள் நடை பெற்று வருகின்றன :—

நடுத்தர பாசனத் திட்டங்கள் :

1 பெரியார் அணையை வலுப்படுத்தல்
2 பொன்னியாற்றின் குறுக்கே ஈச்சம்பாடி கிராமத்தில் அணை கட்டுதல்.
3 தொப்பையார் நீர்த்தேக்கத் திட்டம்.
4 சித்தமல்லி நீர்த்தேக்கத் திட்டம்.
5 நொய்யல் நீர்த்தேக்கத் திட்டம்
6 ஆனைமடுவு நீர்த்தேக்கத் திட்டம்.
7 குதிரையார் நீர்த்தேக்கத் திட்டம்
8 ஓரத்துப்பாளையம் நீர்த்தேக்கத் திட்டம்
9 அனந்தனார் வாய்க்காலை மறுவடிவமைப்பு மற்றும் நவீனப்படுத்தும் திட்டம்.
10 கொடகனாறு நீர்த்தேக்கத்தை புனரமைத்தல்.

சிறுபாசனத் திட்டங்கள் :

1 நாகவதி நீர்த்தேக்கத் திட்டம்.
2 கேசரிகுலிஹல்லா நீர்த்தேக்கத் திட்டம்.
3 கோல்வார்பட்டி நீர்த்தேக்கத் திட்டம்,
4 ஆணைக்குட்டம் நீர்த்தேக்கத்திட்டம்.
5 கரியகோயில் நீர்த்தேக்கத் திட்டம்.
6 சோத்துப்பாறை நீர்த்தேக்கத் திட்டம்.
7 பெரும்பள்ளம் நீர்த்தேக்கத் திட்டம்.
8 திருப்பரப்பு அணையின் வலதுபுறக் கால்வாயை நீட்டித்து நவீனப்படுத்தும் திட்டம்.



1986 ஏப்ரல் 30]

தற்போதைய பாசன முறைகளை நவீனப்படுத்துதல் :

தமிழ்நாட்டில் நிலபரப்பு நீர் ஏறத்தாழ முற்றிலும் பயன் படுத்தப்பட்டுவிட்ட நிலையில் கிடைத்துள்ள நீரைப்பாதுகாத் மேலும் சிக்கனமாக பயன்படுத்தும் பொருட்டு கால்வாய்களை ''லைனிங்'' செய்தும, நீர் பங்கீட்டை முறைப்படுத்தியும், பழைய பாசன வழிமுறைகளை நவீனப்படுத்தும் திட்டங்கள் அரசினரால் எடுத்துக் கொள்ளப்பட கருதப்பட்டுள்ளது. உலக வங்கியின் உதவித் தொகையுடன் எடுத்துக் கொள்ளப்பட்ட பெரியார் வைகை பாசனத்தை நவீனப்படுத்தும் இரண்டாவது கட்டப் பணிகள் நடைபெற்று வருகிறது. தஞ்சாவூர் கால்வாய்களை நவீனப்படுத்தும் பணிகள் பல கட்டங்களாகப் பிரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இவைகளை அடுத்து காவேரி டெல்டாவை நவீனப்படுத்தும் ஒருங்கிணைந்த திட்டம் ஒன்று ரூ. 366.60 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் அறிவுரைக்கேற்ப ஒருங்கிணைந்த திட்டத்தின் ஒரு பகுதியை ஏழாவது திட்ட காலத்திற்குள் முடிக்க உத்தேசிக்கப் பட்டு உலக வங்கியின் உதவி கோரப்படுகிறது. திட்ட தயாரிப்பு பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டு அதன் அறிக்கை 1983-ல் தயாரித்து அனுப்பப்பட்டது. உலக வங்கியின் குழுவும் இத்திட்டம் குறித்து மத்திய அரசுடனும், மாநில அரசுடனும் விவாதித்ததுடன் திட்டப் பகுதியையும் நேரில் பார்வையிட்டது. இதற்கிடையில் உலக வங்கியின் உதவியைப் பெறுவதற்காக, பகுதி திட்டத்தின் விளக்கமான திட்ட அறிக்கை ரூ. 123 கோடிக்கு இறுதி செய்யப் பட்டு, மத்திய நீர்வளக் குழுவிற்கு திட்டக் கமிஷனிடமிருந்து ஒப்புதல் பெற அனுப்பப்பட்டுள்ளது. காவேரி அண்டைய மாநிலங்களுக்கிடையே செல்லும் நதியாக இருப்பதால் கர்நாடக அரசின் ஒப்புதல் பெற்ற பின்பு தான் இத்திட்டத்திற்கு இறுதி யாக மதிப்பிடப்படும் என உலக வங்கி அறிவித்துள்ளது. கர்நா டக அரசுடன் இது சம்பந்தமாக தொடர்பு கொள்ளப்பட்டு வருகிறது.

இவை தவிர, கன்னியாகுமரி மாவட்டத்தில் கோதையாறு பாசன முறையின் கீழ் ரூ. 351.50 லட்சம் மதிப்பீட்டில் அனந்தனார் கால்வாய் மற்றும் அதன் கிளைக் கால்வாய்களை சீரமைக்கும் திட்டம் ஒன்றும் ரூ. 85.70 லட்சம் மதிப்பீட்டில் திருப்பரப்பு அணைக்கட்டின் வலதுபுறக் கால்வாயை விரிவாக்கம் செய்து வாய்க்காலின் முழு நீளத்தையும் நவீனப்படுத்தும் திட்டம் ஒன்றும் செயல்படுத்தப்பட்டு முடியும் தருவாயில் உள்ளன. இந்த இரு திட்டங்களும் 1986-87-ல் முடிக்கப்படும். இதனால் 2050 ஹெக்டேர் நிலங்களுக்கு கூடுதல் பாசன வசதி கிடைக்கும்.

சோதையார், மணிமுத்தார் பிரதான வாய்க்கால் பொன்னி யார் பாசன முறை தாமிரபரணி பாசன முறை முதலியவைகளை நவீனப்படுத்தும் திட்டங்கள் பல நிலைகளில் ஆய்விலும் மற்றும் அரசின் பரிசீலனையிலும் உள்ளன.

வெள்ளக்கட்டுப்பாட்டுத் திட்டங்கள் :

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்களுக்கு ரூ. 9.00 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது. 1985-86-ம் ஆண்டில் கீழ்க்கண்டுள்ள 8 வெள்ளக் கட்டுப்பாட்டுப் பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன :—

1. வைகை ஆற்றுப் படுகையிலிருந்து இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள குண்டார் படுகை மற்றும் கிருதமால் படுகைக்கு வெள்ள நீரை திருப்பி விடுதல்.

2. அரும்பாக்கத்திற்கும் அமைந்தகரைக்கும் இடைப்பட்ட கூவம் ஆற்றை சீரமைத்தல்.

3. தஞ்சாவூர் மாவட்டம் ஆலக்குடி கிராமத்தில் 97/1 மைலுக்கும் 97/6 மைலுக்கும் இடைப்பட்ட கொள்ளிடம் ஆற்றின் வலதுபுறத்தில் வெள்ள தடுப்பு பணிகள்.

4. ஜாபர்கான்பேட்டை தரைமட்ட பாலத்திற்கும் அடையார் பாலத்திற்கும் இடைப்பட்ட அடையார் ஆற்றினை சீரமைத்தல்.

5. பண்ருட்டி வட்டம் மருதூர் மற்றும் சிவப்பட்டிணம் கிராமங்களுக்கு இடையே கடிலம் ஆற்றின் இடதுபுறத்தில் வெள்ளக்கரை அமைத்தல்.

6. திருநெல்வேலி மாவட்டம், தூத்துக்குடி நகரில் பக்கில் ஓடையில் வெள்ளப் பாதுகாப்பு பணிகள்.

7. தென் ஆற்காடு மாவட்டம், விழுப்புரம் வட்டம், பில்லூர் கிராமத்தில் மலட்டாறு ஆற்றின் இடதுபுறத்தில் வெள்ளக்கரை அமைத்தல்.

8. மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் வைகை ஆற்றிற்கு வெள்ளக்கரை அமைத்தலும் வைகை ஆற்றினை சீரமைப்பு செய்தலும்

1985-86-ம் ஆண்டில் செலவாகக் கூடிய தொகையை கணக்கில் கொண்டு இத்திட்டப் பணிகளை முடிப்பதற்காக 1986-87-ல் ரூ. 4.31 கோடி ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப் பட்டுள்ளது.

கூடுதல் பாசன வளத்தை ஏற்படுத்துதல் :—

மத்திய அரசின் இருபது அம்சத் திட்டத்தில் முதல் இனம் கூடுதல் பாசன வசதி ஏற்படுத்துவதேயாகும்.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் இரண்டாவது ஆண்டான இவ்வாண்டில் 17,000 ஹெக்டேருக்குக் கூடுதல் பாசன வசதி அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



காவேரி நீர்ப்பிரச்சினை :

காவேரி நீர் பிரச்சினை சம்பந்தமாக தமிழக மற்றும் கர்நாடக முதல்வர்களிடையில் பேச்சுவார்த்தை 1985 நவம்பர் திங்கள் 23-ம் நாள் சென்னையில் நடைபெற்றது. அடுத்த கட்டப்பேச்சு வார்த்தை இவ்வாண்டு ஏப்ரல் இறுதிக்குள் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பெரியாறு அணையினைப் பலப்படுத்துதல் :

கேரள எல்லையிலுள்ள பெரியாறு அணை அபாய நிலையில் இருப்பதாக கேரளத்தில் வெளியாகும் நாளிதழ்களில், 1979-ம் ஆண்டு செய்திகள் வெளியானதைத் தொடர்ந்து இவ்வணையை பலப்படுத்துவதற்கான உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கேரள அரசு தமிழக அரசைக் கேட்டுக் கொண்டது. மத்திய நீர்வளக்குழு தலைவர், கேரள மற்றும் தமிழக அலுவலர்களுடன் அணையை பார்வையிட்டபின் அணையை பலப்படுத்துவது சம்பந்தமாக 1979-ம் ஆண்டு நவம்பர் திங்களில் பல முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கிணங்க அணையின் நீர்மட்டம் 145 அடியிலிருந்து 136 அடிக்கு தற்காலிகமாக குறைக்கப்பட்டது. அணையின் மேற்புறத்தில் கான்கிரீட் மூடி அமைக்கும் பணி ரூ. 131 லட்சம் செலவில் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளது. அணையை அடித்தள பாறையோடு உயர் அழுத்தக் கம்பிகள் மூலம் இணைத்து கட்டும் பணி ரூ. 48 லட்சம் செலவில் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளது. நீண்ட கால ஏற்பாடாக அணையின் பின்புறத்தில் ரூ. 6.55 கோடி மதிப்பீட்டில் கான்கிரீட்டு முட்டு அமைப்பதற்கு திட்டமிடப்பட்டது. பெரியாறு அணையின் மதகு பகுதியில் கூடுதலாக வழிந்தோடிகள் அமைக்கும் பணிக்காக ரூ. 320 இலட்சம் மதிப்பீட்டிற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இவ்விரு பணிகளும் மேற்கொள்ளப் பட்டு முன்னேற்ற நிலையிலுள்ளன.

அணையின் பாதுகாப்பைக் கருதி பெரியாறு அணையின் நீர் மட்டத்தினை 136 அடியில் தான் வைத்திருக்க வேண்டுமெனவும், பெரியாறு அணையை பலப்படுத்தும் பணிகள் முடிவுற்ற பின் னரும் 136 அடியில் நீர்மட்டம் இருப்பதை உறுதிசெய்ய வேண்டு மெனவும் 1980 ஆகஸ்ட் திங்களில் கேரள அரசு இவ்வரசைக் கேட்டுக் கொண்டது. பெரியாறு அணையினை பலப்படுத்து வதின் நோக்கமே, அதனை முழுக் கொள்ளளவிற்கு உயர்த்து வதே என்றும் அணையின் பாதுகாப்பைப் பொறுத்து நீர் மட் டத்தை 152 அடி வரையில் வைத்துக் கொள்ள இவ்வரசுக்கு உரிமை உண்டு எனவும் கேரள அரசுக்கு தெரிவிக்கப்பட்டது.

[1986 ஏப்ரல் 30

கேரள அரசிடமிருந்து இது சம்பந்தமாக பதிலேதும் வராததால் பலப்படுத்தும் பணிகளில் நிலுவையிலுள்ள பிரச்சினைகளை சம்பந்தமாக கேரள, தமிழக அலுவலர்களுடன் விவாதிக்குமாறு மத்திய நீர்வளக் குழுவின் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். இதற்கிணங்க இதுபற்றி 16-6-83 மற்றும் 16-1-84 ஆகிய இரு தேதிகளில் மத்திய நீர்வளக் குழுவால் விவாதிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு மத்திய நீர்வளக் குழுவுடன் விவாதிக்க டெல்லி செல்ல தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. மத்திய நீர்வளக் குழு தமிழகத்தின் நிலை குறித்து திருப்தியடைந்து ஏற்றுக் கொண்டுள்ளது.

மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளைத் திருப்பி விடுதல் :

மத்திய அரசால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்பக் குழுவின் பரிந்துரைக் கிணங்க கேரள மாநிலத்தில், மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளின் உபரி நீரை தமிழ்நாட்டிற்கு திருப்பி தமிழகத் தின் குடிநீர் மற்றும் வறட்சிப் பகுதிகளுக்கு பாசனமளிப்பது பற்றி இரு தரப்புப் பேச்சு வார்த்தை நடத்துமாறு கேரள முதலமைச்சர் அவர்களை தமிழக முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள். கேரள முதலமைச்சர் அவர்கள் அவ்வப்போது நினைவூட்டப்பட்டு வருகிறார்கள். அவரது பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டின் நீர் ஆதாரத்தை முழுவதுமாக பயன்படுத்துவதற்கான தேசிய நோக்குத் திட்டம்.

தேசிய நீர்வளக் குழுவின் முதற்கூட்டம் பிரதமரின் தலைமையின் கீழ் 1985 ஆம் ஆண்டு அக்டோபர் 30 ஆம் நாள் புதுடெல்லியில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் தமிழக முதல் அமைச்சர் கலந்து கொண்டார்.

கேரள மாநிலத்தில் மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளில் இருந்து 200 டி.எம்.சிக்கு மேல் உபரித் தண்ணீரைத் திருப்பி தமிழ்நாட்டின் அவசரத் தேவைகளைப் பூர்த்தி செய்யலாம் என்ற சி. வி. கோல் குழுவினரின் பரிந்துரைக்கு முழுவடிவம் கொடுக்க வேண்டும் என்றும், மேலும் கேரளத்தில் மேற்கு நோக்கிப் பாயும் மூன்று ஆறுகளில் உள்ள 46 டி.எம்.சி. உபரி நீரை மத்திய அரசின் தொழில் நுட்பக் குழு பரிந்துரைத்தது போல, தமிழ்நாட்டின் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்ய திருப்பி விட வேண்டும் என்று இந்தக் கூட்டத்தில் தமிழக முதல்வர் பிரதமரைக் கேட்டுக் கொண்டார். மேலும் மாநிலங் களுக்கிடையே உள்ள ஆறுகளை முழு அளவில் பயன்படுத்து



1986 ஏப்ரல் 30]

வதற்காக தேசிய ஆறுகளாக ஆக்க வேண்டும் என்ற கருத்தினையும் பிரதமரிடம் வலியுறுத்திக் கூறினார். மாநிலங்களுக்கிடையே உள்ள ஆறுகளை ஒவ்வொரு ஆற்றிற்கும் ஒரு நிலையான படுகைக் குழுவோ அல்லது வாரியமோ அமைக்கலாம் என்ற கருத்தினையும் தமிழக முதல்வர் ஆதரித்து உள்ளார். தற்போது வட்டாரங்களிலிருக்கும் நீர் வளத்தின் மாறுபாடுகளை கூடிய விரைவில் சரிப்படுத்த தேசிய நீர்வள முன்னேற்ற அமைப்பு தான் மேற்கொண்டுள்ள பணிகளைத் துரிதமாக செயல்படுத்த வேண்டும் என்று தமிழக முதல்வர் கேட்டுக் கொண்டுள்ளார்.

கிருஷ்ணா குடிநீர்த் திட்டம் :

சென்னை நகர குடிநீர் வசதிக்காக 15 டி.எம்.சி. கிருஷ்ணா நதி நீரைக் கொண்டு வருவதற்கான திட்டத்தைச் செயல்படுத்தவும், அதற்கான செலவைப் பகிர்ந்து கொள்ளவும், ஒரு ஒப்பந்தம் ஆந்திரா மற்றும் தமிழ்நாடு முதல்வர்களால் 18–4–1983 அன்று கையொப்பமிடப்பட்டது. இரு மாநிலங்களிலும் திட்ட வேலைகள் அந்தந்த மாநில அரசுகளால் தொடங்கப்பட்டுள்ளன.

தமிழக எல்லையிலிருந்து பூண்டி நீர்த்தேக்கம் வரை உள்ள கண்டலேறு பூண்டி கால்வாய் வேலை எடுத்துக் கொள்ளப்பட்டு, இக்கால்வாய்க்குத் தேவையான நிலம் கையகப்படுத்தும் வேலை முடிவுற்றது. முதல் 24 கி.மீ. நீளத்திற்கான கால்வாய் வெட்டும் பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது.

பூண்டி நீர்மட்டத்தை உயர்த்தும் பணியும் மேற்கொள்ளப் பட்டுள்ளது. நிலத்தை கையகப்படுத்துதல் போன்ற ஆயத்தப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

1985 நவம்பர் மாதத்தில் ஏற்பட்ட வெள்ளச் சேதப்.

தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகள் முக்கியமாக தஞ்சை, தென்னாற்காடு, வட ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களும், சென்னை நகரமும் 1985 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இரண்டாவது மூன்றாவது வாரங்களில் எதிர்பாராத அளவு அதிக மழையினால் பாதிக்கப்பட்டன. இதனால் 4,753 தற்காலிக மற்றும் நிரந்தர ஏரிகள், கால்வாய்கள் மற்றும் பாசன ஆதாரங்களில் உடைப்பு ஏற்பட்டது.

வெள்ளச் சீரமைப்புப் பணிகளுக்காக தமிழக அரசினால் வழங்கப்பட்ட ரூ. 7·00 கோடி நிதி உதவியைக் கொண்டு, உடைப்புகள் அனைத்தும் தற்காலிகமாக அடைக்கப்பட்டு நிரந்தரமான புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன

[1986 ஏப்ரல் 30

இதற்காக இதுவரையில் ரூ. 179.93 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இடைவிடாத மழையினால் அடையாற்றில் பல பகுதிகளில் உடைப்பு ஏற்பட்டு, இதுகாறும் ஏற்படாத அளவு சேதங்கள் ஏற்பட்டுள்ளன. அதன் கரையை வலுப்படுத்துவதற்காக ரூ. 5.6 கோடியில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசு மேற்படி பணிக்காக ரூ. 2 கோடி மட்டும் நிதிஉதவி அளித்துள்ளது. அடையாற்றின் பிரச்சினைகளை நுணுக்கமாக ஆராய்வதற்காக ஒரு தொழில்நுட்ப வல்லுநர் குழுவை அரசு அமைத்துள்ளது. இந்த வல்லுநர் குழுவின் அறிக்கை கிடைத்த பிறகு மேலும் நிதி உதவி கிடைக்க மத்திய அரசை அணுக உத்தேசிக்கப்படட்டுள்ளது.

பருவ நிலைகள் :

1985–86 ஆம் ஆண்டு தென்மேற்கு பருவமழை காவேரி, பெரியாறு, தாமிரபரணி, கோதையாறு, பரம்பிக்குளம் ஆகிய படுகைகளின் மேல் நீர்பிடிப்புப் பகுதிகளில் இயல்புக்கு குறைவாக இருந்தது. இதனால் இந்தப் படுகைகளில் உள்ள நீர்த்தேக்கங்களில் நீர்வரத்து மிகவும் குறைவாக இருந்தது. எனவே, இந்த நீர்த்தேக்கங்களின் கீழுள்ள பாசனத் திட்டங்கள் வழக்கமாக திறக்கப்படும் தேதியிலிருந்து தள்ளி திறக்கப்பட்டது.

மேட்டூர் நீர்த்தேக்கம் பாசனத்திற்காக 8–7–1985 அன்று திறக்கப்பட்டது. வழக்கமாக திறக்கப்படும் தேதி ஜூன் 12 ஆகும். ஆரம்பத்தில் நீர் இல்லாத காரணத்தால் புதிய கட்டளைக் கால்வாய், புள்ளம்பாடி கால்வாய், மேட்டூர் கால்வாய்கள் பாசனத்திற்காக திறக்கப்படவில்லை. இக்கால்வாய்களின் கீழுள்ள மொத்த பாசனம் 0.88 இலட்சம் ஏக்கர்கள் ஆகும். இதனால் பவானிசாகர் நீர்த் தேக்கத்திலுள்ள நீரையும் டெல்டா பாசனத்திற்காக திருப்பி விடப்பட்டது. பாசனத்திற்காகத் திறந்துவிடப்பட்ட பகுதிகளில்கூட தண்ணீர் பற்றாக் குறையின் காரணமாக இடைவிட்டு தண்ணீர் விடப்பட்டதால் ஒட்டு மொத்தமாக 6 இலட்சம் ஏக்கர்களுக்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டது. பிப்ரவரி மாதம் வரையில் வழக்கமாக 355.8 டி.எம்.சி. நீர் வரத்துக்கு மாறாக இவ்வருடம் ஒட்டு மொத்த நீர்வரத்து 148.8 டி.எம்.சி. மட்டுமே இருந்தது. இதுவரை கணக்கிடப்பட்டுள்ள நீர்வரத்து அளவில் இதுவே மிகவும் குறைவானதாகும். இதில் நான்கு கட்டங்களாக கர்நாடகாவிலிருந்து கிடைக்கப் பெற்ற 17 டி.எம்.சி. தண்ணீரும் அடங்கும். நீர்த்தேக்கங்களிலிருந்து பாசனத்திற்கு நீர்விடுவது 3–2–1986 அன்று நிறுத்தப்பட்டது. இருப்பினும், டெல்டாப் பகுதிகளில் இவ்வருடம் ஜனவரி, பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் மழை பெய்தது பயிர்களுக்கு மிகவும் உதவியாக இருந்தது.



1986 ஏப்ரல் 30]

பாசனத் திட்டங்களுக்கான ஆய்வுப் பணிகள் :

ஒரு தனித் தலைமைப் பொறியாளரின்கீழ் இயங்கி வருகின்ற பொதுப்பணித் துறையின் ஆய்வுப் பிரிவு பெரிய, நடுத்தர, சிறுபாசனம் மற்றும் சிறப்பு சிறுபாசனத் திட்டங்களின் ஆய்வுப் பணிகளை மேற் கொள்வதுடன் தமிழ்நாட்டில் பல்வேறு நீர் படுகைகளில் உபரியாக உள்ள நீரின் அளவை கணக்கிட ஓடைகள் மற்றும் ஆறுகளின் நீரளவைகள் எடுக்கும் பணிகளையும் செய்கின்றது. இதைத் தவிர கண்மாய் சீரமைப்புத் திட்ட ஆய்வுப் பணியும், இந்த ஆய்வுப் பிரிவுகளின் கீழ் உள்ளது. தற்சமயம் ரூ. 267.59 கோடி மதிப்புள்ள 4 நடுத்தர பாசனத் திட்டங்களும் 22 சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களும், ரூ. 114.06 கோடிக்கான 6 திட்டங்களின் முதல் கட்ட அறிக்கைகளும் அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும் ரூ. 141 கோடிக்கான 41 பாசனத் திட்டங்கள் ஆய்வின் பல்வேறு நிலைகளில் உள்ளன. கீழ் பவானி, தாமிரபரணி மற்றும் மணிமுத்தாறு திட்டங்களை நவீனப்படுத்துவதற்காக விரிவான ஆராய்ச்சிப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இதைத் தவிர, ரூ. 3.26 கோடிக்கான 16 சிறப்பு சிறுபாசனத் திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளது. 207 சிறப்பு சிறு பாசனத் திட்டங்கள் ஆய்வின் பல்வேறு நிலைகளில் உள்ளன.

சிறுபாசனம் :

1985–86 ஆம் ஆண்டில் சிறப்பு சிறு பாசனத் திட்டத்திற்காக ரூ. 223.27 இலட்சமும், தூர்வாரி புனரமைக்கும் திட்டத்திற்கு ரூ. 5 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகள் முடிவுறும்போது 3,222 ஹெக்டேர் நிலங்கள் கூடுதலாகப் பாசன வசதி பெறும். 56 வேலைகள் பல்வேறு கட்டங்களில் முன்னேற்ற நிலையில் உள்ளன.

1986–87 ஆம் ஆண்டில் சிறப்பு சிறு பாசனத் திட்டத்திற்கு ரூ. 218.73 இலட்சமும் தூர்வாரி புனரமைக்கும் திட்டத்திற்கு அடையாள ஒதுக்கீடும் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1986–87 ஆம் ஆண்டில் ஒன்பது வேலைகள் முடிக்கவும், 1,257 ஹெக்டேர் கூடுதல் நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஐரோப்பிய பொருளாதார சமுதாய உதவியுடன் ஏரிகள் நவீனப்படுத்துதல் :

ஐரோப்பிய பொருளாதார குழுமத்தின் உதவியுடன் 200 ஹெக்டேருக்குக் குறைவாக ஆயக்கட்டுடைய மழை நீரை எதிர்பார்த்திருக்கும் 150 ஏரிகளை 25 மில்லியன் ஈ.சி.யு.

(ரூ. 27.6 கோடி) உதவியுடன் நவீனப்படுத்தும் திட்டம் 7/84
முதல் செயல்படுத்தப்படுகிறது. இதில் அரசின் செலவு 16·3
மில்லியன் ஈ.சி.யு. (சுமார் 17.99 கோடி ரூபாய்) இந்த திட்டம்,
வட ஆற்காடு, தென்னாற்காடு, புதுக்கோட்டை, இராமநாத
புரம், செங்கல்பட்டு, பசும்பொன் முத்துராமலிங்கம் மற்றும்
காமராசர் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகின்றது.
இதுவரை 47 திட்டங்களுக்கு ரூ. 985.49 இலட்சத்திற்கு அரசு
அங்கீகாரம் வழங்கியுள்ளது.

1986–87 ஆம் ஆண்டில் ரூ. 504.70 இலட்சம் ஒதுக்கீடு
செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நீவிரப்படுத்தப்பட்ட சிறுபாசனத் திட்டம் :

நாற்பது ஹெக்டேருக்கு மேற்பட்ட நிலங்களுக்கு பாசன
வசதி அளிக்கக் கூடிய நீர் நிலைகளைப் பராமரிக்கும் பொறுப்பு
பொதுப்பணித்துறை மேற்கொண்டுள்ளது. 40 ஹெக்டேருக்கு
குறைவான ஆயக்கட்டு உள்ள ஏரிகள், தற்போது ஊராட்சி
ஒன்றியங்களின் பராமரிப்பில் உள்ளன. அவற்றையும் ' தரப்
படுத்தும் பணியை பொதுப் பணித்துறை மேற்கொண்டுள்ளது.
அதேபோல் முன்னாள் ஜமீனைச் சார்ந்த ஏரிகளையும் பொதுப்
பணித் துறை தரப்படுத்துகிறது.

இத் திட்டத்தின்கீழ் 1985–86 ஆம் ஆண்டில் பொதுப்பணித்
துறையைச் சார்ந்த ஏரிகளைத் தரப்படுத்த ரூ. 60 இலட்சமும்,
ஊராட்சி ஒன்றியங்களைச் சர்ர்ந்த ஏரிகளுக்கு ரூ. 20 இலட்சமும்
முன்னாள் ஜமீன் ஏரிகளுக்கு ரூ. 81.34 இலட்சமும் ஒதுக்கப்
பட்டது. 1986–87 ஆம் ஆண்டில் பொதுப் பணித் துறை
குளங்களுக்கு ரூ. 75 இலட்சமும், ஊராட்சி ஒன்றியக் குளங்
களுக்கு ரூ. 30.25 இலட்சமும் மற்றும் முன்னாள் ஜமீன் குளங்
களுக்கு ரூ. 101.05 இலட்சமும் ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்
பட்டுள்ளது.

ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் :

மத்திய அரசு, '' ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதி
யளிப்புத் திட்டம் '' என்ற ஒரு திட்டத்தை 1983 ஆம் ஆண்டு
ஆகஸ்டு மாதம் முதல் அமுலாக்கி வருகிறது. இத்திட்டத்தின்
குறிக்கோள் ஊரக நிலமற்ற வேலையில்லா விவசாயத் தொழி
லாளர்களுக்கு வேலை வாய்ப்பு தருவதும் அதன் மூலமாக நிரந்
தரக் கட்டுமானங்களை உருவாக்குவதும் ஆகும். இத் திட்டத்
தின் மூலம் பொதுப்பணித் துறை சிறப்பு சிறு பாசன திட்டங்கள்,
குளங்கள், அணைக்கட்டுகள் ஆகியவைகள் சீரமைக்கும் பணி
களை எடுத்துக் கொண்டுள்ளது. இத்திட்டத்திற்கான முழுத்
தொகையும் மத்திய அரசு உதவித் தொகையாகத் தருகிறது.



1985–86 ஆம் ஆண்டில் அரசு சிறுபாசனப் பிரிவுக்கு இத்
திட்டத்தின்கீழ் ரூ. 800.00 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.
நடைபெற்றுவரும் 1,682 வேலைகளில் 668 வேலைகள்
இவ்வாண்டில் முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்களின் மூலம்
8,980 ஹெக்டர் நிலங்களுக்குப் பாசன வசதியும் பாசன உறுதியும்
1985–86-ல் தரப்பட்டுள்ளது. மேலும் 45 இலட்சம் மனித
நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

1986–87 ஆம் ஆண்டில் மீதமுள்ள 1,014 வேலைகள்
தொடர்ந்து ரூ. 791 இலட்சம் செலவில் நடைபெறுகின்றன.
இவ்வேலைகள் முடிவுற்றால் 36,999 ஹெக்டர் நிலங்கள் பாசன
வசதியும் பாசன உறுதியும் பெறும். மேலும் 1986–87 ஆம்
ஆண்டில் மாநில மற்றும் மைய அரசின் ஒப்புதல் பெற 93
சிறுபாசனத் திட்டங்கள் ரூ. 1,000 லட்சத்தில் மேற்கொள்ள
பரிந்துரைக்கப்பட்டுள்ளன. இந்த 93 திட்டங்களின் மூலம்
7,005 ஹெக்டர் நிலங்கள் பாசன வசதி பெறவும், சுமார்
57.56 இலட்சம் மனித நாட்களை உருவாக்கவும் திட்ட
மிடப்பட்டுள்ளது.

நிலநீர் ஆய்வு :

நிலத்தடி நீர்வளத்தை அதிக அளவில் உபயோகப்படுத்தி
வரும் மாநிலங்களில் தமிழகமும் ஒன்றாகும். இருப்பில் உள்ள
மேற்பரப்பு நீர்வளத்தில் 94 விழுக்காடுகள் உபயோகப்படுத்தப்
பட்டுள்ளன. ஆகையால் நிலத்தடி நீர்ப் பெருக்கம் அத்தியா
வசியமான ஒன்றாகிறது. ஏறத்தாழ 10.5 இலட்சம் கிணறுகள்
மின்விசை வசதியளிக்கப்பட்டுள்ளன. நாட்டில் உள்ள மின்
விசையளிக்கப்பட்ட கிணறுகளின் எண்ணிக்கையில் தமிழகம்
முதலிடம் வகிக்கிறது. கடினப் பாறைப் பகுதிகளில் நிலநீர்
வளம் சீராக இல்லை. மேலும் அவைகள் குறைந்த அளவே
நீரை உள்ளடக்கி உள்ளது. எனவே நிலநீர் பெருக்கத்திற்கு
அறிவியல் ரீதியான நிலநீர் ஆய்வு இம்மாநிலத்திற்கு அவசியம்
தேவைப்படுகிறது.

முன்பு மேலோட்டமாக நிலநீர் ஆய்வு செய்யப்பட்ட
பகுதிகளில் தற்பொழுது இந்த நிலநீர்த் துறையானது நுண்ணிய
அளவில் கிராமவாரியான நிலநீர் ஆய்வை மேற்கொண்டு
வருகின்றது. இந்நுண்ணிய ஆய்வு ஆரம்பத்தில் நிலநீர்
பெருவாரியாக எடுக்கப்பட்ட ஒன்றியங்களில் முடிக்கப்பட்டு
ஏனைய பகுதிகளிலும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றது.

இந்த நுண்ணிய நிலநீர் ஆய்வில் நிலநீரியல் ஆய்வு, புகைப்பட நிலவியல் ஆய்வு, நிலவியல் ஆய்வு, நிலபௌதிக ஆய்வு, கிராமவாரியான விபரங்கள், ஆழ்வுத்துளைக் கிணறுகள், நீர் வடிநில ஆய்வு, நிலநீரின் வேதியல் தன்மை, பருவநிலை நீர்மட்ட ஏற்ற இறக்க ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நிலத்தடிநீரின் வளம் ஆற்று துணைப் படுகை வாரியாக கணக்கிடப்பட்டு இருப்பில் உள்ள வளத்தை அந்த துணைப் படுகைகளில் அமைந்துள்ள கிராமங்களுக்கு சிறுபாசனத் திட்டங்களுக்காக பங்கிட்டு ஒதுக்கப்படுகிறது. 1978—80-ல் மத்திய நிலநீர் கணிப்பு குழுவின் பரிந்துரையின்படி தமிழகத்தில் உள்ள 378 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் இத்துறையால் சராசரி ஆண்டு நிலநீர் இருப்பு மற்றும் எடுப்பு இவைகள் மதிப்பீடு செய்யப்பட்டது. நிலநீர் இருப்பில் நிலநீர் எடுப்பு விழுக்காட்டின்படி அனைத்து ஊராட்சி ஒன்றியங்களும் வெள்ளைப்பகுதி, பழுப்புப் பகுதி, கருமைப்பகுதி என மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. நிலநீரின் இருப்பில் 85 விழுக்காடுகளுக்குக் கூடுதலாக நிலநீர் எடுப்பு இருப்பின் அதை கருமை நிறப் பகுதியாகவும், 65 முதல் 85 வரை இருந்தால் பழுப்பு நிறப் பகுதியாகவும், 65 விழுக்காடுக்கு குறைவாக இருப்பின் வெள்ளை நிறப் பகுதியாகவும் பிரிக்கப்பட்டது. இவ்வாறு ஆய்வு செய்ததில் 177 ஒன்றியங்கள் வெண்மை நிறப் பகுதிகளாகவும், 113 ஒன்றியங்கள் பழுப்பு நிறப் பகுதிகளாகவும், 80 ஒன்றியங்கள் கருமை நிறப் பகுதிகளாகவும் உள்ளன என்று கண்டறியப்பட்டது. 8 ஒன்றியங்கள் மலைப் பகுதியாக இருந்ததால் ஆய்வு செய்யப்படவில்லை. வெண்மை மற்றும் பழுப்பு நிறப் பகுதிகளுக்கு மட்டும் சிறுபாசனத் திட்டங்களுக்கு நிலநீர் அலகுகள் ஒதுக்கப்பட்டன.

இத்துறையால் நுண்ணிய நிலநீர் ஆய்வுப் பணி மேற்குறிப்பிட்ட 80 கருமை ஒன்றியங்களில் முன்னுரிமை கொடுத்து கிராம வாரியாக நிலநீர் ஆய்வு செய்யப்பட்டதில் 62 ஒன்றியங்களில் எந்தெந்த கிராமங்களில் நிலநீர் மேலும் எடுக்க வாய்ப்பு உள்ளது என்று கண்டறியப்பட்டுள்ளது. அதன்படி இப்போழுது தமிழ்நாட்டில் 352 ஊராட்சி ஒன்றியங்களில் சிறுபாசனத் திட்டங்களுக்கு நிலநீர் அலகு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மற்ற 18 ஒன்றியங்கள் தற்பொழுது கருமை நிறப்பகுதியாக அறிவிக்கபட்டுள்ளது.





கல்பாக்கம் அணு மின் நிலையத்திற்கு நீர் வழங்குதல் :

1968-ம் வருடம் ரூ. 56.85 இலட்சம் செலவில் சென்னைக்கு அருகே உள்ள கல்பாக்கம் அணு மின் நிலையத்திற்கும், குடியிருப்பிற்கும் நாள் ஒன்றிற்கு 30 இலட்சம் (3 எம். ஜி. டி.) காலன் தண்ணீரை பாலாற்றிலிருந்து நீர் மாற்றுக் குழாய் மூலம் வழங்கும் திட்டம் அரசால் அனுமதிக்கப்பட்டது.

ஆனால் 1983-ம் வருடம் தமிழ்நாட்டில் ஏற்பட்ட கடுமையான வறட்சி காரணமாக நிலநீர் மட்டம் பாலாற்றில் கூட குறைந்து விட்டது. எனவே, நாள் ஒன்றுக்கு 10 லட்சம் காலன் தண்ணீருக்கு மேல் கிடைக்கவில்லை. உடனே ரூ. 78 லட்சத்திற்கு இரண்டாம் கட்ட பணியாக 10 குழாய்க் கிணறுகளும் அதற்குத் தேவையான உபகரணங்களும் அரசால் அனுமதிக்கப்பட்டு ஏறத்தாழ பணிகளும் நிலநீர்துறையில் மேற்கொள்ளப்பட்டு முடிந்து விட்டன.

கடந்த இரண்டு ஆண்டுகளில் அணுமின் நிலையத்தினரின் தேவைக்கேற்ப 1984-ம் ஆண்டில் 74 கோடி காலன் நீரும், 1985-ம் ஆண்டில் 82 கோடி காலன் நீரும் வழங்கப்பட்டுள்ளது. தற்போது நாள் ஒன்றுக்கு 20 இலட்சம் காலன் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

விஸ்தரிப்புப்பணி :

அனல் மின் நிலையத்தின் விஸ்தரிப்புப் பணிகளுக்காக கூடுதலாகத் தேவைப்படும் 30 இலட்சம் காலன்கள் கிடைக்கக் கூடிய சாத்தியக்கூறு பனங்காட்டுச் சேரியின் மேல் புறமாக ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

இவைகள் தவிர, கீழ்க்கண்ட தனி ஆய்வுகள் இத்துறையின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1. தூய்மைக் கேடு ஆய்வு :

நில நீர் தூய்மைக்கேடு அதற்குரிய காரணம், இவைகளைக் கண்டறிவதற்காக வடஆற்காடு மாவட்டத்தின் ஒரு பகுதி மற்றும் செங்கல்பட்டு மாவட்டத்தை உள்ளடக்கிய பாலார் ஆற்றுப் படுகையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வின் மூலம் பாதிக்கப்பட்ட பகுதிகள் கண்டறியப்படுகின்றன. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதுபோன்ற ஆய்வுகள் மாநிலத்தின் உள்ள ஏனைய முக்கிய ஆற்றுப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும்.

[1986 ஏப்ரல் 30

**2. நில நீர் மற்றும் மேற்பரப்பு நீர் இணைந்து செயல்படும் திட்டம் :**

நிலநீர் மற்றும் மேற்பரப்பு நீர் இரண்டையும் இணைத்து
செயல்படுத்தும் ஒரு முன்னோடித் திட்டம், தர்மபுரி மாவட்
டம் கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்டப் பகுதியில் மேற்கொள்ளப்
பட்டு வருகின்றது. இந்த ஆய்வு மூலம் நல்ல பலன்கள்
கிடைத்துள்ளன. எதிர்காலத்தில் இவ்வித ஆய்வு ஏனைய
மாவட்டங்களில் உள்ள முக்கிய நீர்த்தேக்கத் திட்டப் பகுதி
களிலும் மேற்கொள்ளப்படும்.

**3. செயற்கை முறை நீர்ப் பெருக்கம் :**

நிலநீர் அதிகம் எடுக்கப்படுவதால் நீர்மட்டம் தாழ்ந்துள்ள
நீர்த்தாங்கிகளை வீணாக ஓடும் நீர் அல்லது தேவைக்கு மேலாக
உள்ள நீரைக் கொண்டு செயற்கை முறையில் நீர்ப் பெருக்கம்
ஏற்படுத்தப் பயன்படுகின்றது. மாநிலத்தில் நான்கில் மூன்று
பங்கு கடினப் பாறைகளால் அமைந்துள்ளது. இந்த கடினப்
பாறைகளில் நிலநீர் பாறைச் சிதைவுப் பகுதிகளிலும், வெடிப்பு
மற்றும் இறுக்கப் பகுதிகளிலும் அமைவதால் நில நீரின் வளம்
சம அளவாக இல்லாமல் உள்ளது. நிலநீரின் சேர்க்கை உப
யோகத்திற்கும் குறைவாக உள்ளதால் இதைக் கவனத்தில்
கொண்டு செயற்கை முறை நீர் பெருக்கும் திட்டம் வடஆற்காடு,
தென் ஆற்காடு, மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் மேற்
கொள்ளுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இருப்பினும், கசிவு நீர்க் குட்டைகளில் ஏற்படும் நிலநீரின்
ஊற்று வளத்தினைக் கண்டறிவதற்காக ஒவ்வொரு மாவட்டத்
திலும் குறைந்தது இரண்டு கசிவு நீர்க்குட்டைகள் தேர்ந்தெடுக்
கப்பட்டு ஆய்வுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்
றன.

**4. ஆலோசனைப் பணி :**

பொதுப் பணித்துறையில் நிலநீர்ப் பிரிவில் நிலநீர்
ஆலோசனைப் பணியின் கீழ் கிணறுகள் வெட்டவும், துளைக்
கிணறுகள் அமைக்கவும் மற்றும் கிணறுகளை ஆழப்படுத்துவ
தற்கும் நில பௌதிக ஆய்வின் மூலம் சாதகமான இடங்கள்
தெரிவு செய்யப்படுகின்றன. இவ்வாலோசனைப் பணிக்கு நல்ல
வரவேற்பு உள்ளது. இதனால் பெருவாரியான விவசாயிகள்
பயனடைகின்றனர். இந்த நிலநீர் ஆலோசனைப் பணி குறைந்த
செலவில் நடத்தப்படுகின்றது. இந்தப் பணி ஏழாவது ஐந்
தாண்டுத் திட்டக் காலத்தில் பெருமளவில் மேற்கொள்ளப்
படும்.



1986 ஏப்ரல் 30]

**5. கடல்நீர் உட்புகுதல் கண்காணிப்பு :**

இத்துறையின் நிலநீர் பிரிவு பம்பாய் பாபா அணுமின்
ஆராய்ச்சி மையத்துடன் இணைந்து, சென்னை மீஞ்சூர் கட
லோரப் பகுதிகளில் கடல்நீர் உட்புகுதல் நிலைமை குறித்து
ஆராய்ந்து வருகிறது. இதில் தொடர்ந்து நீர்மட்ட ஏற்றத்தாழ்வு
கள் மற்றும் நிலநீர்ப் பகுப்பு ஆய்வுகள் நடத்தப்படுகின்றன.
தற்பொழுது பாபா அணுமின் ஆராய்ச்சி மையம், இப்பகுதியில்
நீர் மாதிரிகளைச் சேகரித்து ஐசோடோப் ஆய்வு நடத்தி வருகி
றது.

**6. நீர் ஆய்வு நிலையம் :**

இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகத்தில்தான் முதன்
முதலாக நீர்வள மேம்பாடு சம்பந்தப்பட்ட பல்வேறு ஆய்வுகள்
மேற்கொள்ள நீர் ஆய்வு நிறுவனம் அமைக்கப்பட்டது. கிடைக்
கக் கூடிய நீர்வளத்தை நிர்வகித்தல் பற்றி இந்நிறுவனம் அர
சுக்கு ஆலோசனை வழங்குகிறது. வைகை ஆற்றுப் படுகையின்
நீர் வளங்களைக் கண்டறிய இந்நிறுவனத்திற்கு 2,74,000 டாலர்
நிதி உதவியை ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம் வழங்கியது.
தமிழக அரசு ரூ. 29.00 லட்சங்கள் வழங்கியது. 1983
அக்டோபரில் பணி தொடங்கப்பட்டது. முதல் இடைக்கால
அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் காலவரை
செப்டம்பர் 83-ல் முடிவுற்றது. ஐக்கிய நாடுகள் மேற்படி
திட்டத்தின் காலவரை 1–10–85-லிருந்து 31–12–86 வரை
நீட்டிக்க ஒப்புக் கொண்டுள்ளது. நீட்டிக்கப்பட்ட திட்ட
காலத்தில் தாமிரபரணி, பம்பாறு, கோட்டக்கரையாறு
மற்றும் கண்டாறு ஆற்றுப் படுகைப் பகுதிகளில் குடிநீர் வளங்
களை பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்படும். அவ்வாறு நீட்டிக்கப்
பெறும் காலத்துக்கு 1,94,000 டாலர் நிதி உதவி வழங்கவும்
இசைந்துள்ளது. இதற்கு மாநில அரசின் பங்குத் தொகை
ரூ. 27.70 இலட்சங்கள் ஆகும்.

**7. நீர்நிலை அறிக்கை வெளியீடு :**

நீர் ஆய்வு நிலையம், வைகை ஆற்றுப் பகுதியில் '' நீர்
இருப்பு '' பற்றி அக்டோபர் 1983-ல் ஆய்வு மேற்கொண்டது.
இதன்மூலம் இருப்பில் உள்ள மேற்பரப்பு நீர் மற்றும் நிலநீர்
வளம் கண்டறியப்பட்டது. இந்நிலையம் தாமிரபரணி ஆற்றுப்
படுகையில் உள்ள நீர் இருப்பு பற்றி ஆய்வு மேற்கொண்டுள்ளது.
மற்ற இரண்டு படுகைகளிலும் ஆய்வு மேற்கொள்ள உள்ளது.
ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நீர் பற்றிய பல்வேறு விவரங்
களைக் காட்டும் படத் தொகுப்பு ( Water Atlas ) தலை
மைப் பொறியாளர் (நிலநீர்) அவர்களால் தயாரிக்கப்பட உள்
ளது.

## தமிழ்நாட்டில் பாசன மேலாண்மை பயிற்சி நிறுவனம் :

இந்திய அரசு 1984–85 ஆம் ஆண்டில் அமெரிக்க நிதி உதவியுடன் தமிழ்நாடு உள்பட ஐந்து மாநிலங்களில் பாசன மேலாண்மைப் பயிற்சி திட்டத்தைத் தொடங்கியது.

அமெரிக்க உதவி ரூ. 5.60 கோடியும் சேர்த்து மொத்தம் ரூ. 10 கோடி மதிப்பீட்டுச் செலவில் 1983–84-லிருந்து 1989–90 வரையில் 7 ஆண்டுகளுக்கு தமிழ்நாட்டில் இந்நிறுவனம் இயங்க ஆணையிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் கீழ்வருமாறு :—

(1) மாநிலத்தில் பொதுப்பணித்துறை, வேளாண்மைத் துறை மற்றும் பாசன விவசாயம் தொடர்புடைய துறைகளிலுள்ள அலுவலர்களுக்கு நீர் நிர்வாகம் குறித்து பயிற்சி அளித்தல் மற்றும் பாசன முறையின் திறமையை மேம்படுத்தல்.

(2) ஆய்வுப் பகுதியில் உள்ள நீரை ஒழுங்கான முறையில் பாதுகாத்து பயன்படுத்த விவசாயிகளுக்கு கற்பித்தல்.

இத்திட்டத்தின் மூலம் கீழ்மட்டத்திலுள்ள பாசன குமாஸ்தாக்கள், லஸ்கர்கள், விவசாயத் துறையிலுள்ள கிராம விரிவாக்க அலுவலர்கள், நிலவள அலுவலர்கள் மற்றும் விவசாய பொறியியல் துறையைச் சார்ந்தவர்கள் ஆகியோர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. தவிர பாசன விவசாயத்தின் மூலம் முக்கியமாகப் பயன் அடைகின்ற விவசாயிகளுக்கும், பாசனத்திற்கு தண்ணீர் விநியோகிப்பதில் பொறுப்பானவர்களாக இருப்பவர்களுக்கும் இந்நிறுவனம் பயிற்சி அளிக்க உத்தேசித்துள்ளது. இப்பயிற்சி நிலையம் இத்தகைய பல்வேறு பயிற்சி வகுப்புகளை நடத்துவதுடன் காவேரிப் படுகையில் விவசாயிகள் பங்கேற்க செயல்முறைப் பயிற்சி திட்டத்தையும் உருவாக்கியுள்ளது. அண்ணா பல்கலைக் கழகம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் மற்றும் பெங்களூரிலுள்ள இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் மேனேஜ்மெண்டின் தொழில் நுட்பத்துடன் பல்வேறு பயிற்சித் திட்டங்களை இப்பயிற்சி நிறுவனம் தற்பொழுது நிறைவேற்றி வருகிறது.

## தமிழ்நாடு மாநிலக் குழாய்க் கிணறுகள் கழகம் :

தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனமாகத் தமிழ்நாடு மாநிலக் குழாய்க் கிணறுகள் கழகம் அமைக்கப்படடது. அங்கீகரிக்கப்பட்ட பங்கு முதலாக ரூ. 3 கோடியுடன் 1956-ம் ஆண்டைய நிறுமச் சட்டத்தின்கீழ், 19–3–1982 அன்று குழாய்க் கிணறுகள் கழகம் பதிவு செய்யப்பட்டது. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு பாசன வசதிகள் அளிப்பதற்கான



சமுதாயக் கிணறுகளை அமைத்தல், பராமரித்தல் மற்றும் இயக்கு தலைத் தலையாய நோக்கமாகக் கொண்டு குழாய்க் கிணறுகள் கழகம் நிறுவப்பட்டது. இக்குழாய்க் கிணறுகள் கழகம் ஓர் அலுவலரல்லாத தலைவரால் தலைமை தாங்கப்பட்டுள்ளது. குழாய்க் கிணறுகளின் கழகத்தின் இயக்குநர்கள் குழுமம், அலுவலர் மற்றும் அலுவலரல்லாதார்கள் கொண்டுள்ளது.

2. குழாய்க் கிணறுகள் கழகம், ஆதி திராவிட விவசாயிகள் பிற்பட்ட வகுப்புகளைச் சார்ந்த விவசாயிகள் மற்றும் இதர வகுப்புகளைச் சார்ந்த விவசாயிகளின் நிலங்களுக்கும் மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட வகுப்புகளைச் சார்ந்த விவசாயிகளின் நிலங்களுக்குக் கூட்டாகவும், பாசன வசதிகள் செய்து தருவதற்கான குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கான திட்டங்களை வகுப்பதற்கு ஆணைகள் 1982-ம் ஆண்டு அக்டோபர் திங்களில் வெளியிடப்பட்டன.

3. வண்டல் படிவான தமிழ்நாட்டின் கிழக்குப் பகுதிகளில் (செங்கல்பட்டு, தென்னாற்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில்) உள்ள ஆதிதிராவிட சிறு விவசாயிகளின் நிலங்களுக்குப் பாசன வசதி அளிப்பதற்கான திட்டங்களை, முதற்கட்டமாகத் தமிழ்நாடு மாநிலக் குழாய்க் கிணறுகள் கழகம் வகுத்துள்ளது. அத் திட்டங்கள் அரசின் சமூக நலத்துறையால் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. அத்திட்டங்களுக்கான நிதியும் அத்துறையால் வகை செய்யப்படுகின்றது. சமூக நலத்துறை குழாய்க் கிணறுகளின் திட்டங்களுக்கு முதலீட்டு செலவு ஓர் ஏக்கருக்கு ரூ. 6,000 என்ற வீதத்தில் நிர்ணயித்துள்ளது. இத்தொகையை ரூ. 10,000 ஆக அதிகரிக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. நிதியளிப்பு முறை கீழ்க்கண்டவாறு உள்ளது :—

| | |
|---|---|
| சிறப்பு மைய உதவி (மைய அரசின் மானியம்) .. | 50 சதவீதம் ஒரு ஏக்கருக்கு ரூ. 3,000 வீதம். |
| தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் ''மார்ஜின் தொகை'' | 25 சதவீதம் ஒரு ஏக்கருக்கு ரூ. 1,500 வீதம். |
| வங்கிக் கடன் .. | 25 சதவீதம் ஒரு ஏக்கருக்கு ரூ. 1,500 வீதம். |

4. இக்கழகத்தின் தொடக்க காலத்திலிருந்து ஒட்டு மொத்தமாக ரூ. 433.41 லட்சங்கள் மதிப்பீட்டுச் செலவில் 289 குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. இதனால் 7,861 ஆதி திராவிட விவசாயிகள் பயன் பெறுவர்.

[1986 ஏப்ரல் 30

